பூங்கொடி பதிப்பகம்

ராகவனின் சீமாட்டி

லக்ஷ்மி

ராதாவின் திருமணம்

"லக்ஷ்மி"

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை - 4.

தொலைபேசி : 4943074

நூல் விவரப்படியல

நூலின் பெயர்	ராதாவின் திருமணம்
நூலாசிரியர்	லக்ஷ்மி
மொழி	தமிழ்
நூலின் பொருள்	புதினம்
வெளியீடு	பூங்கொடி பதிப்பகம் 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு மயிலாப்பூர், சென்னை - 600 004
நூல் உரிமை	டாக்டர் கே. மகேஸ்வரன்
பதிப்பு ஆண்டு	முதற் பதிப்பு : டிசம்பர், 1985 இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட், 1989 மூன்றாம் பதிப்பு : ஜூன், 1994 நான்காம் பதிப்பு : டிசம்பர்
பக்கங்கள்	224
நூல் அளவு	1 x 8 கிரவுன
எழுத்து	11.5 புள்ளிகள்
நூல்	10.9 கி.கி. வெள்ளைத்தாள
பைண்டிங்	கார்டு போர்டு
ஒளி அச்சுக் கோர்வை	அமராவதி சென்னை - 600 083 செல் : 94441 69725
அச்சிட்டோர்	அமர் ஆப்செட் பிரிண்டர்ஸ் சென்னை - 600 005

விலை ரூ. 75-00

பதிப்புரை

இந்த நூலில், ''வசந்தத்தில் ஒரு நாள்'', ''குருவிக் கூடு'', ''ராதாவின் திருமணம்'' ஆகிய மூன்று குறு நாவல்கள் அடங்கியுள்ளன.

''வசந்தத்தில் ஒரு நாள்'' 'பூமுகம்' மாத இதழிலும், ''குருவிக் கூடு'' வேறொரு மாத இதழிலும், ''ராதாவின் திருமணம்'' 'பாமா' மாத இதழிலும் வெளி வந்தவை.

இதனை வெளியிட அனுமதியளித்த டாக்டர் கே. மகேஸ்வரன் அவர்களுக்கு நன்றி.

வே. சம்பையா
பூங்கொடி பதிப்பகம்.

"லக்ஷ்மி"யின்
'பூங்கொடி' வெளியீடுகளில் சில....

- அழகின் ஆராதனை 80.00
- அவள் தாயாகிறாள் 35.00
- அசோகமரம் பூக்கவில்லை 55.00
- அடுத்த வீடு 175.00
- அரக்கு மாளிகை 200.00
- அதிசய ராகம் 90.00
- அத்தை 75.00
- அவளுக்கென்று ஒரு இடம் 85.00
- அவள் ஒரு தென்றல் 75.00
- இரண்டாவது மலர் 150.00
- இவளா என் மகள் 65.00
- இரண்டு பெண்கள் 55.00
- இரண்டாவது தேனிலவு 55.00
- இனிய உணர்வே என்னைக் கொல்லாதே 105.00
- இருளில் தொலைந்த உண்மை 85.00
- இன்றும் நாளையும் 90.00
- உறவுகள் பிரிவதில்லை 50.00
- உயர்வு 80.00
- உறவின் குரல் 65.00
- ஊன்றுகோல் 75.00
- என் வீடு 55.00
- என் மனைவி 85.00
- ஒரு காவிரியைப் போல 150.00
  (சாகித்ய அகடமி பரிசு பெற்றது)
- ஒரு சிவப்பு பச்சையாகிறது 110.00
- கடைசி வரை 55.00
- கங்கையும் வந்தாள் 115.00
- கதவு திறந்தால் 115.00

வசந்தத்தில் ஒரு நாள்

அவர்களது திருமணம் திருத்தணியில் நடந்தது. வேண்டுதலை அங்கேதான் நடத்த வேண்டும் என்று ஆரம்பத்திலேயே அருணின் தாய் சொல்லிவிட்டிருந்தாள். சங்கரனைப் பொறுத்தவரை சென்னையை விட்டு எங்கேயாவது ஒரு கோவிலில் தம் மகளின் கல்யாணத்தை முடித்துவிடத் தயாராக இருந்தார். சென்னை என்றால் உறவினர் கூட்டம் தாங்க முடியாது போய்விடும் என்ற கவலை.

கல்யாணத்திற்கு வருகிறவர்களுக்கு பஸ் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். அவர் எதிர்பார்த்தது போல உறவினர்கள் படையெடுக்கவில்லை. மாப்பிள்ளை வீட்டவர்களும் பெண் வீட்டவர்களும் சேர்ந்து ஒரே பஸ்ஸில் பயணப்பட்டும் அதில் இன்னமும் சிலருக்கு இடமிருந்தது.

''கல்யாணத்தை சிக்கனமாகச் செய்து முடிக்க வேண்டும் என்பது என் மகனின் ஆசை'' சம்பந்தியம்மாள் மீனா சொல்லி விட்டிருந்தாள். இப்படிப்பட்டதொரு வரன் கிட்டியது தமக்குப் பெருத்த அதிர்ஷ்டம் என்றுதான் சங்கரன் எண்ணினார்.

ஆனால் சர்மிளாவுக்கு மனதிலே ஓர் உறுத்தல். கொஞ்சம் வருத்தமும் கூட. சென்னையில் உள்ள தன் கல்லூரித் தோழிகள் கண்டு வியக்கும்படி அப்பா அவளது

கல்யாணத்தை நகரத்துக் கல்யாண மண்டபமொன்றில் நடத்தி இருக்கலாம். போகட்டும் ரிஸப்ஷனையாவது சிறப்பாகச் செய்திருக்கலாம். விடியற்காலை முகூர்த்தம். மணமக்களுடன் உறவினர் புடைசூழ முருகனுக்கு அபிஷேக ஆராதனை. பகல் உணவு முடிந்ததும் திருமணத்தைப் பதிவு செய்துவிட்டு சென்னைக்குத் திரும்புவது. உடனடியாக மணமக்களை ஊருக்கு அன்று இரவு இரயிலுக்கு அனுப்பிவிடுவது. அப்பாவின் திட்டம் அவளுக்குப் பிடிக்கவேயில்லை.

கல்யாண மண்டபத்திலேயே உறவினர்களிடையே ஏற்பட்ட கிசுகிசுப்பு அவள் காதில் பட்டும் படாமலும் கேட்டு விட்டது.

'இரண்டு பேருக்கும் ஏற்கெனவே காதலாம். இது ஒரு காதல் கல்யாணம்.'

'இருக்கட்டுமே. அதுக்காகப் படிச்சவன் சொத்து இருப்பவன் வரதட்சிணை வேண்டாம் என்றால் என்ன அர்த்தம்?'

''இந்தக் காலத்தில் எந்த மாமியார் வரதட்சணை வேண்டாம்னு சொல்ல முன் வரா.''

''சிலபேர் இருக்காங்களே...

''அங்கே ஏதாவது காரணம் இருக்கும்.''

''மேடையில் வரதட்சணையைப் பத்தித் தாக்கிப் பேசுவாங்க. அவனவன் வீடுன்னதும் விஷயம் வேறாகி விடுமே?''

'நீ சொல்றபடி இதிலே ஏதோ ஒரு காரணம் இருக்கு. மாப்பிள்ளைக்கு ஏதாவது ஊனமா? பெண்ணுக்கு

மாமனார் இல்லையாம். இரண்டு வருஷத்துக்கு முன் தவறிப் போனாராம். என்ன வியாதியிலே மனுஷன் செத்தானோ? சில நோய்கள் பரம்பரையா வரதுண்டு தெரியுமில்லையா?'

பந்தியில் உட்கார்ந்து கணவனுடன் காப்பி, பலகாரம் சாப்பிட்ட சர்மிளாவின் காதுகளில் சில கேட்கவே அவளுக்குத் தொண்டை மட்டும் துக்கம் அடைத்துக்கொண்டது.

ஆமாம்! அவளுக்கு அருணின் குடும்பத்து விவகாரம் எதுவுமே தெரியாதே.

அருண் என்கிற அருணாசலம் தான் வீட்டுக்கு மூத்த பிள்ளை. இரண்டு தம்பிகள் இருவரும் திருச்சியில் படித்துக்கொண்டிருந்தனர். ஒரு தங்கை - விதவைத் தாய். போதாததிற்கு தந்தைவழிப் பாட்டி ஒருத்தி பெரிய குடும்பந்தான்...

காதலித்தபோது அது பெரியதொரு பாரமாகத் தெரியவில்லை.

உறவினர்களில் சிலர் கிசுகிசுத்ததைக் கேட்ட பின்பு மனதிலே பல சந்தேகங்கள்!

நெஞ்சில் என்னவோ கல் போன்றதொரு கடினமான உணர்வு கவ்விக் கொண்டிருப்பதை அறிந்தாள்.

மாலை காப்பி டிபனை முடித்துக் கொண்டு அவர்கள் கிளம்பி மந்தைவெளி மகாலிங்கத் தெருவி லிருந்த அவர்கள் வீட்டுக்குத் திரும்புவதற்குள் இருட்டத் தொடங்கிவிட்டது. அம்மா அவசரமாக சம்பந்தி வீட்டவர்களுக்கு சமைத்துப் போட்டு வழி அனுப்பி

விட்டாள். அவசர சமையல். வெந்ததும், வேகாததுமான காய்கள் பாயாசம் என்று பெயருக்காக ஓர் இனிப்பு

கூடத்தில் கிடந்த பழைய மேஜைமேல் இலைகளை விரித்து அம்மா பரிமாற... உணவு ஆறும் பொருட்டு அப்பா மின்விசிறியை சுழலவிட இலையில் வைத்த அப்பளங்கள் பறக்க, நாத்தி துளசி களுக்கென்று சிரிக்க கூட அனைவரும் சேர்ந்து சிரிக்க ஒரே கலகலப்பாகத் தான் விருந்து முடிந்தது.

சம்பிரதாயப்படி சொல்லிக்கொண்டு கிளம்பினார் கள். அம்மாவின் கண்களில் ஏராளமான கண்ணீர். ஒரு பக்கம் தன் மகளுக்குக் கல்யாணமாகிவிட்டதே என்ற திருப்தியும் கண்ணீர் இடையே தெரியத்தான் செய்தது.

அப்பாதான் பரபரத்தார். இரயிலை சம்பந்திகள் தவறவிட்டுவிடப் போகிறார்களே என்ற அச்சம் அவருக்கு. ''பெட்டியை எடுத்து வச்சுக்கொண்டு விட்டாயா'' மகளை லேசான அதட்டும் குரலில் கேட்டார்.

அவளது துணிகள் சோப்பு, சீப்பு, கண்ணாடி இத்யாதிகளைத் தவிர, வழக்கமான சீர்வரிசைகளான அண்டா குண்டா என்று எதையும் மாப்பிள்ளை வீட்டவர்கள் எதிர்பார்க்கவில்லை. 'நல்லதாப் போச்சு' என்று அம்மா அவைகளைப் பற்றி மறந்துபோய், கல்யாணத்துக்குக் கிளம்பும் முன்பே மகளின் பெட்டியைத் தயார்செய்து விட்டிருந்தாள். 'மறக்காம இதை எடுத்துக் கொண்டு போகணும்' என்றபடி காமாட்சி விளக்கு சின்ன செம்பு பித்தளைத் தட்டு என்று, மூன்று பொருள்களை மகளிடம் கொடுத்தாள்.

''பெட்டியிலேயே வச்சுடு'' என்று மாமியார் சொன்னதும், அவள் தன் பெட்டியைத் திறந்து அவைகளை

உள்ளே திணித்தாள். பெட்டிக்குள் இன்னும் சில சாமான்களைக் கூட வைக்கலாம். அத்தனை காலியாக அது இருந்தது. நாத்தனார் துளசி எட்டிப் பார்த்தபோது அவளுக்கு வெட்கமாகத்தான் இருந்தது.

தன் பிறந்த வீட்டிலிருந்து ரொம்பக் கொஞ்சமான சாமான்களுடன் மணப்பெண் புறப்படுகிறாள் என்பதைத் தெரிந்து கொண்டதும் பின்னர் சண்டை சச்சரவுகள் போது, முகத்தில் இதை எறிந்து பேச ஒரு வாய்ப்பு அவளுக்குக் கிட்டிவிட்டதே என்ற மருட்சி அவளுக்கு.

இரயில் வண்டியில் கூட அவளுக்குப் பெருத்த ஏமாற்றம். எல்லோருக்கும் சுகமாகப் பயணப்பட முதல் வகுப்பு டிக்கெட்டுகள்தான் அருண் வாங்கியிருந்தான். முன்னதாக ஒதுக்கப்பட்டு வைத்திருந்த பெட்டியில்தான் ஏறிக் கொண்டார்கள்.

தம்பிகள் இருவரும் அடுத்தப் பகுதியில் மேல் பலகையில் படுத்து விட்டனர். தங்கையும், அண்ணாவும் இந்தப் பக்கத்து மேல் பலகையில்தான் படுக்கையை விரித்துக் கொண்டனர். அவளும், மாமியாரும் கீழ்ப் பலகையில் படுக்க நேர்ந்தது. இரயில் புறப்பட்டுச் சிறிது நேரம் வரை எல்லோரும் நெருங்கி உட்கார்ந்து கொண்டு கலகலப்பாகப் பேசியபோது கூட அவளால் கணவனிடம் எதுவும் பேச முடியவில்லை. சம்பாஷணையை அவர் களது குடும்பம் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டிருந்தது. அவளைப் பற்றி யாரும் கவலைப்பட்டதாகத் தெரிய வில்லை. உரத்த குரலில் தங்கைகள் இருவரும் ஆர்ப்பரித்தனர். மாமியார், மகனுடன் வீட்டு சங்கதிகளை அலசிக் கொண்டிருந்தாள். தம்பிகள் தங்களது காலேஜின் பிரதாபங்களை அளந்து கொண்டிருந்தனர்.

யாரும் அவள் பேசுவாள் என்று எதிர்பார்க்க வில்லை. புது மணப்பெண் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தனரோ? அவளுக்குக் கோப மாக இருந்தது. பிறந்த வீட்டை விட்டுப் பழக்கமில்லாத ஒரு புதுக் கும்பலுடன் புறப்பட்டு விட்டிருக்கிறோமே வாழ்க்கை எப்படி இருக்குமோ என்றதொரு சந்தேகம்.

''உனக்கென்ன ரொம்பக் கொடுத்து வச்சவள் - உன் கல்யாணம் காதல் கல்யாணம் என்னுடையதைப் போலவா? பெரியவர்கள் பார்த்து செய்து வைத்த பழங்காலத்து சம்பிரதாயக் கல்யாணமில்லையே?'' சிநேகிதி திருமணத்திற்கு முன்னர் வந்திருந்தவள் சிறிது பொறாமையோடு சொன்னாள். கேட்க அப்போது ரொம்பப் பெருமையாகத் தானிருந்தது.

அவளது மற்றொரு சிநேகிதி திருமணத்திற்கு திருத்தணிக்கு அவர்களுடன் பஸ்ஸில் வந்தவள். தனது அலங்காரத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டு அந்தச் சிறு அறைக்குள் இருந்தபோது அருகில் வந்து மெல்லிய குரலில் சொன்னாள். ''என்னுடைய கல்யாணமும் காதல் கல்யாணம்தான். ஆனால் எத்தனை வித்தியாசம். என் மாமியார் குடும்பத்திலேயே ரொம்ப இடக்கு செய்தாங்க. இந்தக் கல்யாணத்திற்கு ஒப்புதல் தரவில்லை. மாமியாரின் சில திட்டங்களை என் தந்தை ஒத்துக் கொண்ட பிறகுதான் திருமணம் நடந்தது. போன மாதந்தான் அப்பா தாம் தருவதாகச் சொன்ன ஸ்கூட்டருக்குப் பணம் கொடுக்க முடிந்தது. அதற்குள் மாமியார் வீட்டவர்கள் பிடுங்கித் தின்று விட்டார்கள்.

''காதலாவது கண்ராவியாவது. என் கணவர் கல்யாணத்திற்கு முன்பு பேசிய பேச்சே வேறு. திருமணம்

கூடிவிட்ட பிறகு வரதட்சிணை சீர் - அது இது என்று என் மாமியார் கேட்டதற்கு இடையே புகுந்து தடுக்கவேயில்லை.

''அம்மாவும் வேண்டும். காதலியும் தேவை என்றதொரு ஆவல். மீசையைப் பத்திரமாக வைத்துக் கொண்டு கூழ் குடிப்பவர், கெட்டிக்காரர். ஆனால், உனக்கு வந்திருக்கும் மாப்பிள்ளை, ரொம்ப நல்லவர் போலிருக்கு.'' பொறாமை கண்களில் அருவியாக வழிய... தன் புகுந்த வீட்டைப்பற்றிக் கசப்போடு பேசினாள்.

மூன்றாவது தோழி... யசோதா; திருமணத்திற்கு வர இயலவில்லை என்று வாழ்த்து மடல் அனுப்பி, அத்துடன் ஒரு சிறு துண்டுக் கடிதத்தையும் வைத்திருந்தாள். சகல வசதிகளும் நிறைந்திருக்கும்போது ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே தோன்றும் பாசப்பிணைப்பை காதல் என்று சொல்லிவிட முடியாது. அது இளமையின் கவர்ச்சியால் ஏற்படும் ஈர்ப்பு. இல்லாமையால் இடர்கள் பல ஏற்பட்டும் வயோதிகத்திலே தளர்ந்தும், வியாதி யால் ஒடுங்கியும் போனபின்பு, ஆணுக்கு இன்னும் மனைவி மேல் நேசம் இருந்தால் அதுதான் காதல். ஒரு விளக்கத்தைத் தந்துவிட்டு தான் கல்யாணத்திற்கு வர முடியாததற்காக வருந்தி... ஒரு தகவல் அனுப்பி யிருந்தாள்.

''எல்லோரும் படுங்க. கொஞ்ச நேரமாவது தூங்கினால்தானே வீட்டுக்குப் போனதும் வேலைகளைச் சமாளிக்க முடியும்.'' மாமியார் ஒட்டு மொத்தமாக எல்லோரையும் அதட்டவே... அவர்களது பலகைக்குப் பிரிந்து சென்றனர்.

''நீயும் படும்மா... இன்னிக்கு உனக்கும் ரொம்ப அலைச்சல்'' மாமியார் கூறியதும் மறுக்க முடியாது பலகை மெத்தை மீது துப்பட்டி ஒன்றை விரித்துவிட்டு தலையணையை வைத்துக் கொண்டாள் மெல்ல சரிந்தாள். ''சரிம்மா குட்நைட்,'' என்றபடி மனைவியைப் பார்த்து ஒரு புன்னகையை வீசிவிட்டு அருண் தலைக்கு மேலிருந்த பலகையின் மேல் தாவி ஏறிப் படுத்து விட்டான்.

மெல்லியதாக நீல ஒளியைக் கக்கிக் கொண்டு விளக்கு எரிந்தது... மின் விசிறிகள் சுழன்றன. ஜன்னலின் கண்ணாடிக் கதவுகளை சாத்தி விட்டதினால்... ஓர் இறுக்க உணர்வு. அத்துடன் மனதிலே தோன்றியிருந்த பல சந்தேகங்களில் அழுத்தம் வேறு. வண்டி... கடக் கடக் கென்ற சத்தத்துடன்... வேகமாக விரைந்து கொண் டிருந்தது. கொஞ்ச நேரத்திலே... மாமியார் லேசாகக் குறட்டை விடுவது கேட்டது.

அவள் கணவன் உறங்கி விட்டாரா? தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தது. ஆனால் எழுந்திருந்து... எட்டி நின்றபடி அவனிடம் பேசப் பயமாக இருந்தது. தலைமீது போர்வையை வழிய விட்டுக்கொண்டு உறங்க முயன்றாள். உறக்கம் வந்தால்தானே?

உள்ளத்திலே... அந்த வசந்தத்தில் ஒரு நாள் நிகழ்ந்த சம்பவம்... ஒரு தொடர்கதை போல... அடுத்தடுத்து பக்கங்களைப் புரட்டுவது போல, மேலும் மேலும் என்று நகர்ந்து கொண்டிருந்தது.

மே மாதத்தின் இறுதியில் அவளும், அம்மாவும் பங்களூருக்குப் போக வேண்டி வந்தது.

அம்மாவின் சகோதரி லீலாவுக்கு உடம்பு சுக மில்லாது நர்ஸிங்ஹோமில் அனுமதிக்கப்பட்டிருந்தாள்.

லீலா, அம்மாவின் கடைக்குட்டி சகோதரி சின்ன வயதில் தன் குழந்தையைப் போல் அம்மா அவளை வளர்த்து விட்ட பாசம்.

'ஒரு பத்து நாள் போய்விட்டு வரணும். துணைக்கு சர்மிளாவைக் கூட்டிக் கொண்டு போகிறேன்' அம்மா ஒரே பிடிவாதமாகப் புறப்பட்டாள்.

அவர்கள் போய்ச் சேர்வதற்குள் லீலா அபாயகரமான நிலையைத் தாண்டி விட்டிருந்தாள். அதுதான் சர்மிளாவின் முதல் முறை வெளியூர் பயணம்.

அவளுக்கு பங்களூர் மிகவும் பிடித்தது. ''முன்பு போல் பங்களூர் இல்லை. மே மாதம் முடிவடைந்ததுமே ஜில்லென்று குளிர் காற்று வீசத் தொடங்கிவிடும். இப்போது ஜன நெருக்கமோ என்னவோ... உஷ்ணம் குறைவதில்லை,'' என்று சித்தப்பா அலுத்துக் கொண்டார்.

ஆனால், சென்னையைப் போல நெருப்பாக வெயில் எரிக்கவில்லை. மாலையில் வீசிய குளிர்ந்த காற்று உடலுக்கு ரொம்ப இதமாக இருந்தது.

எங்கு திரும்பினாலும் மலர்ச் செடிகள் மரங்கள். மே ஃபிளவர், ஃபிளேம் ஆஃப்தி பாரஸ்ட் என்று, ரோஜா வண்ணப் பூக்களும், நெருப்பாகச் சிவந்த பூக்களும்... மரங்களை நிறைத்தன. ஒவ்வொரு பங்களா தோட்டத்தி லும் எத்தனை எத்தனை மலர்கள்!

நடைபாதை மீது நின்று தோட்டங்களை ஆவலுடன் வெறித்துப் பார்த்து மகிழ்ந்தாள்.

சித்தப்பா வீட்டிலும் ஓர் அழகான சின்னத் தோட்டம் இருந்தது. ரோஜாவும் குரோட்டன்சுகளும் செழிப்பாக வளர்ந்து இருந்தன. சித்தப்பாவுக்கு தோட்டக் கலை மேல் ரொம்பத் தீவிரம். தோட்டத்து ரோஜா ஒன்றைக் கூட யாரும் தொடக்கூடாது.

பங்களூர் போன முதல் நாள் மாலை... தோட்டத்தைச் சுற்றி வந்தவள், அடுத்த வீட்டு மதில் சுவரைத்தாண்டி இந்தப் பக்கம் வளர்ந்திருந்த செண்பக மரத்திலே இங்கு மங்கும் பூந்திருந்த மலர்களை வியப்போடு ஆசையோடு பார்த்தாள்.

அடுத்த நாள் காலை - குளித்து மாற்றுடை அணிந்து கொண்டு தோட்டத்துக்குள் புகுந்தவள், மதிலுக்கு அப்பால் தலை நீட்டிய சண்பக மரத்துக் கிளையிலிருந்து சில பூக்களைப் பறிக்கத் தொடங்கினாள். அடுத்தவீட்டு அல்சேஷன் ஆக்ரோசமாகக் குறைத்தது.

பயந்து நடுங்கிப் போனாள். முன்னங்கால்களை மதில் சுவர் மீது வைத்துக்கொண்டு குரோதமாக அவளைப் பார்த்து ஆர்பாட்டம் செய்த நாயைக் கண்டு நடுங்கி விட்டாள். ஆத்திரப்பட்டு அது சுவற்றைத் தாண்டி அவள் மேல் குதித்து விட்டால்?...

'ஜானி!'... என்று அதட்டிக்கொண்டு உள்ளேயிருந்து வந்த வாலிபனைப் பார்த்து அவளுக்கு வெட்கமாகி விட்டது.

என்னதான் கிளை, சித்தப்பா வீட்டுத் தோட்டத்திற் குள் எட்டிப் பார்த்தாலும் மரம் அவர்களுடையதா யிற்றே?

கைநிறைய சண்பகப் பூவும், மனம் நிறைய வெட்கமுமாக முகம் சிவந்துபோய் அவள் நின்றாள். 'ஜானி உங்களை ரொம்ப பயமுறுத்தி விட்டது போலிருக்கு. இந்த வீட்டு வாசல் கேட்டின் மேல் ஒரு குருவி வந்து உட்கார்ந்தால் கூட சகிக்காது, பலமாகக் குரைப்பது வழக்கம்' 'ஸாரி... உங்ககிட்ட கேட்காமல் பறிச்சது தப்பு' என்ற போது அவளது முகமும், காதும் சூடாகிப் போயின. 'பரவாயில்லை... என் அத்தையும் அவர்கள் குடும்பமும் ஊரில் இல்லை. கல்கத்தா போயிருக்கிறார்கள். சண்பகப் பூ அத்தனையும் தனக்கு வேண்டும் என்று அழுது அட்டகாசம் செய்ய என் அத்தை மகளும் இல்லை. தாராளமா நீங்க பறிச்சிக்கலாம்...?'

'தாங்க் யூ!'... என்றபடி அவள் உள்ளே சென்று விட்டாள்!

மறுநாள் காலை... தோட்டத்திற்கு அவள் வந்த போது, அவள் வரவை எதிர்பார்த்தவன் போல் அவன் மரத்தருகே நின்று கொண்டிருந்தான். 'இந்தாங்கோ இந்தப் பக்கத்துக் கிளைகளில் பூத்திருந்தவைகளைப் பறித்துத் தயாராக வைத்திருக்கிறேன்' என்றபடி புன்னகைத்தவன் ஒரு பிளாஸ்டிக் பை நிறைய இருந்த பூ பொட்டலத்தை மதில் சுவருக்கு அப்பால் நீட்டினான்.

பூவை வாங்கிக் கொண்டவள் மனதை அவனுக்குத் தந்து விட்டாள்.

அம்மாவுக்கும், சித்தப்பாவுக்கும் தெரியாது, அவள் அடுத்த வீட்டிலிருந்த அவனுடன் நெருங்கிப் பழகத் தொடங்கினாள்.

அருண் என்ற அவனது பெயர் பிடித்திருந்தது. படித்தவன், பதவிசானவன், பார்க்க இலட்சணமானவன் -

பல காரணங்களால் அவளுக்கு அவனை ரொம்பப் பிடித்து விட்டது.

அவளைப் போல அவனும் அங்கே சில நாட்கள்தான் தங்கியிருந்தான்.

அந்த சில நாட்களில் ஏற்பட்ட காதல் பின்னர் அவன் தன் கிராமத்திற்குப் போன பின்பு... காதல் கடிதங்கள் மூலம் தொடர்ந்து முடிவில் திருமணத்தில் முடிந்தது.

அருண் அவளை ரொம்பவும் நேசித்தான். அவளும் அவனை மிகவும் காதலித்தாள்.

வகுப்புப் பிரச்சினை - ஜாதிப் பிரச்சினை இல்லாத, காதல் திருமணத்திற்குத் தடை சொல்லாது இருபக்கமும் ஒத்துப் போனார்கள்.

அவன் தன் குடும்பத்தினரைக் கடிதம் மூலம் தான் அவளுக்கு அறிமுகப்படுத்தியிருந்தான்.

அவளும் கடிதம் மூலம் தன் குடும்பத்தைப் பற்றிய உண்மை நிலைமையைத் தெரிவித்திருந்தாள்.

பலகாலம் வாழ்ந்த பின்னர் கூட கணவன் மனைவி ஒருவரையொருவர் புரிந்து கொண்டதில்லை.

பத்துநாள் பழக்கம் காதல் மயக்கத்தில் கடிதம் மூலம் தொடர்பு கொண்ட அனுபவந்தான் உண்டு.

அதைக்கொண்டு அவள் அருணை முழுதும் புரிந்து கொண்டு விட்டாள் என்று சொல்லிவிட முடியுமா?

அவனது பழக்க வழக்கங்கள் அனைத்தையும் அவள் அறிய மாட்டாள்.

அவனது குடும்பத்தாரைப் பற்றிச் சிறிதளவுதான் கடிதம் மூலம் தெரியும். அவர்களது குணம் எப்படியோ? பழகுவதற்கு எப்படி இருப்பார்களோ?

அவளிடம் ஏதும் பேசாது அம்மாவின் அதட்டலுக்கு அடங்கியவன் போல, அருண் மேல் பலகையில் ஏறிப்படுத்துக் கொண்டதை நினைத்தபோது அவளுக்கு... அழுகை நெஞ்சை அடைத்தது. களத்துப் பேட்டை கிராமத்திலே அவனுடன் தொடங்கப் போகும் மணவாழ்க்கை எப்படியிருக்குமோ...?

கணவனைச் சுற்றிலும் ஒருபெரிய குடும்பம். கல்யாணத்திற்கு வந்தவர்கள் போக, வயதின் தள்ளாமை யாலும், வீட்டைப் பார்த்துக் கொள்ளவும் தங்கி விட்டிருந்த பக்கத்து வீட்டுப் பாட்டி அகிலாண்டம்மாள் எப்படிப்பட்டவர்களோ... இத்தனை பெரிய குடும்பத்தை நிர்வகித்து சலித்து ஓய்ந்து போயிருக்கும் மாமியார், மூத்தவன் பெண்டாட்டி வீட்டிற்குள் வலது காலை எடுத்து வைத்து வந்துவிட்டாள் என்று கையில் கரண்டியைக் கொடுத்து விட்டால்...?

அம்மாவுக்குக் கூட ஒத்தாசை செய்ய அலுத்துக் கொண்டு, நாவலுடன் கைநகத்தைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்து பழக்கப்பட்டவள்... சென்னையில் நாகரிக வாழ்விலே ஒன்றி வளர்ந்தவள், பட்டிக்காட்டில்... ஒரு பெரிய குடும்பத்திலே... உழைத்து ஓடாக வேண்டு மென்றால்... அவளுக்குத் திகிலாக இருந்தது. துக்கமாக இருந்தது. ஓவென்று கூச்சலிட்டு ஓடிய இரயில் வண்டியுடன் கூடக் கூச்சலிட வேண்டும் போன்றதொரு உணர்வு... தாடை இறுகக் கண்ணீர்த் துளிகள் கழுத்தை நனைக்க... பலகையோடு ஒட்டிக்கொண்டு படுத்திருந்தாள்.

2

விடியுமுன்பே திருச்சியை வந்தடைந்து விட்டனர். அருணின் நண்பர் ஒருவர் காருடன் காத்திருந்தார். புளி மூட்டையாக அத்தனை பேரையும் அடைத்துக் கொண்டு ஐம்பது கிலோமீட்டர் தொலைவிலிருந்த களத்துப் பேட்டைக்குப் பயணமானார்கள்.

ஒரு வழியாகக் கார் ஊரை அடைந்து புழுதியாகத் தெரிந்ததொரு தெருவுக்குள் நுழைந்து கடைசி வீட்டருகே நின்றது.

அதற்குள் தெருவிலிருந்த அத்தனை வீட்டுப் பெண்களும்... வெளியே வந்துவிட்டனர். பகவதியம்மாளின் பட்டணத்து மருமகளைப் பார்க்க ஆசை. கோலம் போட்டு செம்மண் கட்டிய வாசலில் கணவனுடன் நின்றாள். சுமங்கலிப் பெண் ஒருத்தி உள்ளேயிருந்து வந்து ஆரத்தி சுழற்றிய பின்பு, மாமியாரின் உத்திரவுப்படியே வலது காலை எடுத்து வைத்து உள்ளே நுழைந்தாள்.

'வீட்டைச் சீர்திருத்தியிருக்கிறேன்' என்று கணவன் சொல்லியிருந்தான். அவள் எதிர்பார்த்தது போல் வீடு புதிய பாணியில் மாற்றப்பட்டிருக்கவில்லை. பழைய காலத்து கிராமத்து வீடு... தெருவிலிருந்த மற்றவைகளை விடக் கொஞ்சம் பெரிதாகத் தோன்றியது.

சுவற்றுக்குப் புதிதாக சாயமடித்து... சிவப்பு சிமெண்டில் வீட்டுத் தரை இருந்தது. அதுதான் சீர்திருத்தம் போலும்!

வாயிலில் இரண்டு பெரும் திண்ணைகள்; பச்சை சாயமடித்த தூண்கள். அன்னப் பறவைகள் கொஞ்சிக்

கொண்டிருந்த கோலத்தை சித்தரித்த பழைய காலத்து தேக்குக் கதவு உள்ளே சற்று இருளாகத் தெரிந்த நடை, அதிலும் ஒரு திண்ணை - பின்னர் பளிச்சென்று வெளிச்சம் வீசிய கம்பி போட்ட முற்றம் நாலுபுறம் தாழ்வாரம். ஒவ்வொன்றின் முடிவிலும் அறைகள் பின்னர் இரண்டாவது கட்டு... என்ற பழைய சம்பிரதாயத்தை ஒட்டிக் கட்டப்பட்ட வீடு.

''என் பாட்டன் காலத்து வீடு... கல்கோட்டை போல இருக்கும்...'' நாத்தி துளசி காதருகில் வந்து சொன்ன போது, முகத்தை லேசாகச் சுளித்துக் கொண்டாள். பணவசதியுடன் வாழ்கிற அவள் கணவன்... பழைய காலத்து வீட்டை இடித்துத் தள்ளி... மிகவும் நாகரிக மானதொரு பங்களாவாக ஏன் கட்டியிருக்கக் கூடாது?

தொலையட்டும். கிராமத்து வீடு அப்படியே இருக்கட்டும். அவரது தம்பிகள் இருவரில் யாராவது எடுத்துக் கொண்டு வாழட்டும். அருண் படித்த படிப்பையெல்லாம் உதறிவிட்டு இந்தக் கிராமத்திலே வாழவேண்டிய நிர்பந்தம் என்ன?

அவளைத் தேடிக்கொண்டு சிநேகிதிகள் யார் இந்தக் கிராமத்திற்கு வரப்போகிறார்கள்?

வந்தாலும் இந்தப் பழங்காலத்து வீட்டைப் பார்த்து விட்டு அவளைப் பரிகசிப்பார்களே?

கல்லூரித் தோழி கனகவல்லிக்கு சில மாதங்களுக்கு முன்புதான் திருமணம் நடந்தது. சென்னையிலேயே புக்ககம் அமைந்து போனது.

ஒரு தடவை அவள் தோழிகளையெல்லாம் அழைத்து ஒரு பார்ட்டி வைத்தாளே - எத்தனை அமர்க்களமாக இருந்தது.

வீட்டைச் சுற்றி எல்லோருக்கும் பெருமையுடன் காட்டினாளே. டெலிவிஷன், வீடியோ, டூ-இன் ஒன் பிரிட்ஜ் என்று எத்தனை சாமான்கள்? ஒவ்வொரு அறையும் எப்படி அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மந்தைவெளி மகாலிங்கத் தெருவில் ஓட்டுக்கூரை வீட்டிலே வசித்தது போதும்... என்று அலுத்துப் போய் வாழ்க்கையில் பல கனவுகள் கண்டு கொண்டிருந்தவள் அவள்.

பண வசதியில்லாத புக்ககம் என்றால் போகட்டும் என்று அந்த ஆசையை ஒதுக்க வேண்டியதுதான். வசதி யுள்ள அருண் கட்டுப்பெட்டித்தனமாக... பழங்காலத்து வீட்டையே கட்டிக்கொண்டு வாழ நினைத்தால்... அடி வயிற்றிலிருந்து புறப்பட்டது ஏக்கம்...

நெஞ்சுவரை எட்டி நாவில் வேப்பங்காயாக வழிந்தது.

அதற்குப் பின்னர்... அவளுக்கு... ஒரு நிமிஷம் கூடத் தனிமையில் அவகாசம் கிடைக்கவில்லை.

குளியலறை என்று பின்கட்டு முற்றம் ஒதுக்கப் பட்டிருந்தது. மரத்தில் ஆன தடுப்புகளை வைத்து அருண் அதைக் குளியலறையாக மாற்றி விட்டிருந்தான்.

வெந்நீர்ப் பானையில் காய்ந்து கொண்டிருந்த நீரை எடுத்துப் பெரிய பித்தளை அண்டாவில் யாரோ ஒரு பெண் விளாவிக் கொடுக்க, அவள் தடுப்புக்குள் மறைந்து குளிக்க முயன்றாள்.

அதற்குக் கூடப் பெருத்த சிரமம். குளிக்கறீங்களா?... சோப்பு இருக்கா?... துவாலை வேண்டுமா? என்று அந்தத்

தடுப்புக்குள் நாத்தியும், உறவுக்காரப் பெண்ணும் பல தடவை எட்டிப் பார்க்க அவளுக்கு ரொம்பவே கூச்சமாக இருந்தது.

கதவை சாத்திக் கொண்டு... நிம்மதியாக ஷவரைத் திறந்து விட்டு, பூவாகக் கொட்டும் நீரில் குளிக்க முடியாது இதென்ன அவஸ்தை. அவர்களது மந்தைவெளி வீடே தேவலை போலிருக்கே!

கீல்கள் பெயர்ந்து கதவு ஆடிக்கொண்டிருந்த போதிலும், தரையெல்லாம் பாசி படர்ந்து வழுக்கிக் கொண்டிருந்த போதிலும் அது ஒரு தனி குளியலறை.

இங்கு எல்லாம் பொதுவான சங்கதியாக இருக்கிறதே. ஒரு வழியாக மாற்றுடையில் வந்தவளை மாமியார் உடனேயே பூஜை விளக்கை ஏற்றும்படிக் கட்டளையிட்டார்.

கூடத்தின் ஒரு பக்கத்திலிருந்த அறையில் சுவற்றில் அத்தனை தெய்வங்களும் படமாகக் குடியேறியிருந்தனர். ''வெள்ளி, செவ்வாயில் அறையைப் பெருக்கித் துடைச்சி, படங்களைத் துடைச்சி, குத்து விளக்கைக் கழுவி, அன்னை காமாட்சி விளக்கையும் கழுவி சுத்தப்படுத்தி, திரி போட்டு எண்ணெய் விட்டு ஏத்தணும் மத்தநாள், படங்களுக்குப் புதுசா பூ மாலை போட்டு விளக்கேத்தினால் போதும்'' மாமியார் சொன்னதைக் கேட்டு அவளுக்குத் தலை சுற்றியது.

''விளக்கேத்திட்டு சீக்கிரமா நீயும், அருணும் போய்ப் பாட்டியை வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக்கோங்க.'' மாமியார் உசுப்பினாள். அப்பொழுதுதான் அவளுக்கு நினைவுக்கு வந்தது. அருணுடைய சகோதரி இரு

சகோதரர்கள் தாய் இவர்களைத் தவிர முந்திய தலை முறையின் மிச்சமாக அருணது தந்தை வழிப் பாட்டி இருக்கிறாளே. இந்த வீட்டில் மாமியார் மட்டுமல்ல அவளது மாமியாரும் இருக்கிறாள் என்பதை மறந்து விட்டாளே?

பூஜையறை விளக்கைப் பொருத்தித் தன்னுடைய காமாட்சி விளக்கையும் ஏற்றி கணவனுடன் விழுந்து கும்பிட்டு விட்டு... தாழ்வாரத்தின் மறுகோடிக்கு விரைந்தாள்.

சமையலறைக்கு எதிர்ப்பக்கமாக... இருந்த அந்த கடைசி அறையில்தான் அகிலாண்டம்மாள்... தள்ளாமை யுடன் ஒரு கட்டிலின் மீது படுத்துக் கிடந்தாள்.

கல்யாணத்திற்கு வர முடியாது போய்விட்டதால் பேரனின் மனைவியைப் பார்க்க ஆசையுடன் காத்திருந்தாள்.

''பாட்டி... நாங்க வந்திருக்கிறோம்.'' குரல் கொடுத்துவிட்டு அருண் குழல் விளக்கைப் போட்டான். மக்கல் வாசனையும் - மருந்து நெடியுமான கலவை மணம் வீசிய ஓர் அறைக்குள் புகுந்தாள் சர்மிளா.

கட்டிலின் மீது நிமிர்ந்து உட்கார்ந்திருந்தாள் கிழவி. வயோதிகத்தில் உடல் தளர்ந்து விட்டிருந்தவள், தோளின் மீது அவிழ்ந்து புரண்ட கூந்தலைக்கூட அள்ளிச் சொருகிக் கொள்ள முடியாது பலவீனமாக இருந்தவள்... தொங்கிய தன் நரைத்த புருவங்களை உயர்த்தி அவளை ஏற இறங்கப் பார்த்தாள்.

''வாம்மா... வா...'' என்று பொக்கை வாய் புன்னகை செய்தாள்.

''விழுந்து கும்பிடறோம் பாட்டி!'' இரைந்து சொன்னான் அருண். மனைவிக்குச் சைகை செய்துவிட்டு... அவளுடன் சேர்ந்து தரையில் குனிந்து வணங்கினான்.

''மகாராசங்களா இரண்டு பேரும் இருங்கோ... சின்ன மருமக வந்தாச்சு... என்னை நல்லா கவனிப்பான்னு தெம்பா இருக்கு.'' கிழவி முனகியதைக் கேட்டு அதிர்ந்துபோனாள் சர்மிளா. ''இதென்ன கூத்து... இந்தக் கிழவிக்கு அவள் நர்ஸ் வேலை செய்ய வேண்டுமா...?''

''பாட்டி பத்தியமா சாப்பிடறவங்க - அவங்களுக்குத் தயார் செய்து வச்சிருக்கிற கஞ்சியையும், ஊறுகாயையும் உன் கையால் முதல்லே கொண்டுவந்து கொடுத்துடு... பிறகு நாம் சாப்பிடலாம்...'' அருண் உத்தவிட்டான்.

புது மருமகள் என்றதும் அவளை வீட்டில் எல்லோரும் கொண்டாடிக் கொள்வார்கள் என எதிர்பார்த்தாள்.

இராணியைப் போன்ற வரவேற்பும், உபச்சாரமும் இருக்கும் என்று எண்ணிய அவளது கனவு சிதைந்தபோது எதிர்த்து எதுவும் சொல்ல முடியாது உள்ளே சென்றாள்.

''பாட்டிக்கு உன் கையாலே முதல்லே ஒரு வாய்ப் பாயசம் கொடு. உன் வரவு இனிப்பாகவே இருக் கட்டும்.'' உறவுக்காரி ஒருத்தி பாயசத்தைக் கிண்ணத்தில் ஊற்றி அவளிடம் தந்தாள்.

''அவங்க சாப்பாடு ரொம்பப் பத்தியமா இருக்கணும். அதிக உப்பு உறப்பு ஆகாது... இன்னிக்கு காட்டிக் கொடுக்கிறேன். நாளையிலிருந்து அவங்களை கவனிக் கிறது உன் பொறுப்பு'' என்றாள் மாமியார் பகவதி...

பாட்டியின் உணவுப் பாத்திரங்களை ஒரு தட்டில் வைத்து பாயசக் கிண்ணத்துடன் உள்ளே வந்தாள்.

அவளுக்கு நல்ல பசி... காலையில் வழியில் ஒரு ஹோட்டலில் கும்பலோடு கும்பலாக இறங்கி, புக்ககத்தார் போட்ட கூச்சலின் நடுவில் ஒரு இட்லியும், அரை டம்ளர் காப்பியும்தான் சாப்பிட்டிருந்தாள்.

வீட்டுக்குள் நுழைந்ததுமே சமையலறையிலிருந்து எழுந்த மசாலா வாசனை நாக்கில் நீர் ஊறச் செய்தது. சாப்பிட்டு விட்டு, களைப்புப் போகக் கொஞ்ச நேரம் தூங்க வேண்டுமென்று உடம்பு துவண்டு கொண்டிருந்தது.

பாட்டி அருகில் கிடந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அதில் அமர்ந்து, பாட்டி மெல்ல சாப்பிடும் வரைப் பொறுமையுடன் உபசரிக்க நேர்ந்தது.

கையைத் தட்டிலே கழுவி வாயைத் துடைத்துக் கொண்டாள் கிழவி. ''சித்த தலைகாணிகளை உயரமா அடுக்கி வச்சு என்னை சாத்திப் படுக்க வச்சுட்டுப் போ. விளக்கை அணைக்க மறக்காதே. ஜன்னலை லேசா திறந்து வை. விசிறியை நிதானமா ஓட விட்டுட்டுப் போ'' மள மளனவென்று உத்திரவிட்டாள்.

பொங்கி எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு அவள் எல்லாவற்றையும் செய்து முடித்தாள். 'வரேன் பாட்டி, என்று அடிக்குரலில் முணுமுணுத்துவிட்டு வேகமாக வெளியே வந்தாள்.

''முதல்ல எல்லாருக்கும் மருமக பரிமாறட்டும். அவதானே இனி வீட்டுக்குப் பொறுப்பாளி...'' என்று யாரோ உறவுக்காரி ஒருத்தி குரல் கொடுக்க...

கைதட்டலும் சிரிப்புமாக... அந்த வேலை அவள் தலை மீது சுமத்தப்பட்டது.

அந்த வீட்டின் பெரிய கூடத்திலே... பளபள வென்று மின்னிய தேக்கு மர ஊஞ்சல் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதற்கு இருபுறம் தரையில்தான் இலை பரப்பி எல்லோரும் சாப்பிடத் தயாராக உட்கார்ந் திருந்தனர். சுவர் ஓரமாக ஒரு சிறு மேஜையும், ஒற்றை நாற்காலியும் போடப்பட்டிருந்தன.

''கடையைத் திறக்கக் கிளம்பும்போது அருண் சட்டை பாண்ட்டோட கீழே உட்கார முடியாட்டா நாற்காலியிலே உட்கார்ந்து சாப்பிடட்டும். இன்னிக்கு மாப்பிள்ளையா இலட்சணமா பந்தியில் உட்கார்ந்து சாப்பிடட்டும்.'' என்றாள் தங்கை துளசி.

எல்லோரும் சிரித்தார்கள். சர்மிளாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டுதான் வந்தது. ஆனால் வாயைத் திறக்க முடியுமோ... முதல் நாள் வீட்டிற்குள் புகுந்திருக்கும் மருமகள் அவள்!

ரொம்ப ஆத்திரக்காரி... என்ற பட்டத்தை உடனடியாகக் கொடுத்து விடுவார்களே!

அவர்கள் எல்லோருக்கும் பரிமாறி விட்டு, அவர்கள் சாப்பிட்டு எழுத்ததும், வேலைக்காரியுடன் எச்சில் இலை களை எடுத்துப் பின்னாலிருந்த தோட்டத்தில் வெட்டி யிருந்த குழிக்குள் போட்டு விட்டு, இடத்தைச் சுத்தம் செய்து முடித்துப் பின்னர் அவள் சாப்பிட உட்கார்ந்தாள்.

தாழ்வாரத்தில் விரித்திருந்த பட்டுப்பாயில் அம்மா தம்பிகளுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தான் அருண்.

தன்னந்தனியே அவள் - ஆறிப்போன சோற்றையும், குழம்பையும் யாரோ பரிமாற சாப்பிட்டாள்.

கண்ணில் நீர் புரண்டது. துக்கம் நெஞ்சை அடைத்தது.

வந்ததும் வராததுமா அவளை வேலைக்காரி போல ஒதுக்கிவிட்டார்களே. என்ன அநியாயம். மனம் குமுறியது.

அதற்குப் பின்னர் அவளுக்கு மூச்சுவிட நேரமின்றி ஒரே வேலை... வேலை... என்று மூழ்கிப் போனாள்.

வந்திருந்த உறவுப் பெண்களுக்கு அவளது கல்யாணப் புடவைகள், நகைகளைப் பெட்டியிலிருந்து எடுத்து வந்து காட்ட வேண்டியிருந்தது.

''சீதனமா நான் வேண்டாம்னு சொல்லிட்டேன். இங்க கிடக்கிற பாத்திரம் பண்டம் ஏழு தலைமுறைக்கு ஆகுமே'' ஒவ்வொரு தடவையும் மாமியார் பெருமை யாகச் சொன்னபோது அவள் தலையில் அடித்தது போன்ற வேதனை.

சீதனம் வேண்டாம் என்றதும் அவள் தாய் சட் டென்று மணிபர்சை மூடிக் கொண்டுவிட்டது அக்கிரமம். புகுந்த வீட்டில் உறவினர் முன் அவள் மானம் பறி போகிறதே? ஒரு வெள்ளித்தட்டு - சந்தனக்கும்பா - பன்னீர்ச் செம்பு இத்யாதிகளையாவது வாங்கித் தந்திருக்கலாம். கட்டின புடவையுடன் அனுப்பி விட்டார்களே, பின்னால் எத்தனை ஏச்சுக்கு இது இடமாகும்?

''எல்லோருக்கும் வெற்றிலை பாக்கு கல்யாணப் பலகாரம் எல்லாம் எடுத்துக்கொடு'' மாமியார் மேலே உத்தரவிட்டாள்.

வீட்டை இரண்டு படுத்திக்கொண்டிருந்த உறவினர்கள் காப்பி, டிபனையும் சாப்பிட்டுவிட்டு வெற்றிலை, பாக்கு முதலிய சம்பிரதாயத்துடன் வீட்டைவிட்டு அகன்றனர். இரவு சமையலுக்கு உள்ளே புகுந்த மாமியார் பகவதி தன் புது மருமகளைக் கூப்பிட்டாள்.

''இரவு சமையலை மிகச் சாதாரணமாக, எளிமையாக சமைத்தால் போதும். வீட்டில் யாரும் இரவில் கனமாகச் சாப்பிட மாட்டார்கள். என்று வீட்டின் நடைமுறையைப் போதிக்கத் தொடங்கினாள்.

விளக்கு வைத்த பின்னர் மறுபடி பாட்டியை அவள் சென்று கவனிக்க வேண்டியிருந்தது.

இரவு சாப்பாட்டை எல்லோருக்கும் பரிமாற வேண்டிய வேலையும் அவளுடையதாக இருந்தது.

சமையலறையை ஒழுங்கு செய்துவிட்டு, அவள் படுக்கக் கிளம்புவதற்குள் மணி பத்தாகி விட்டது. அருணுக்குப் பசும் பாலைக் காய்ச்சித் தம்ளரில் நிறைத்து மிதமாக சர்க்கரை போட்டுக் கலக்கிக் கையில் எடுத்துக் கொண்டு அவள் தங்களது அறைக்குள் சென்றாள்.

பாட்டியின் அறைக்குள் இடதுபுறமாக பின் பக்கத்துத் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அறைதான் அருணுடைய படுக்கையறையாக இருந்தது.

''வந்ததும் வராததுமாக உனக்கு இந்த வீட்டில் ஏகப்பட்ட வேலை. பழகிவிட்டால், இது ஒரு பாரமாகத் தெரியாது'' அருண் சொல்லிக்கொண்டு அவளது கரத்திலிருந்து தம்ளரை வாங்கிக் கொண்டான்.

''நீ பாதி சாப்பிடு...'' உபசரித்தான் அவன்.

''வேண்டாம்'' என்று கூறிவிட்டு அவள் திரும்பிக் கண்களை ஓட விட்டாள்.

திருமண வாழ்க்கையைப் பற்றி அவள் கொண்டிருந்த கனவுகள் எத்தனையோ? அவளும், அன்புக் கணவன் அருணும் திருமணத்திற்குப் பின்னர் தேன் நிலவுக்குக் கேரளாவுக்காவது, பம்பாயிற்காவது போக வேண்டும் என்ற ஆசை இருந்தது.

அவளது தோழி யசோதா கல்யாணத்திற்குப் பின்னர் தேன் நிலவுக்கு மைசூருக்குப் போய் வந்தாள்.

அவள் கோவாவுக்குப் போய் வர வேண்டும். ஊரைச் சுற்றிப் பார்த்து வந்து விட்டு, தோழியைப் பார்த்துக் கதைகள் பல அளக்க வேண்டும் என்றெல்லாம் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

மூக்கணாம் கயிற்றைப் போட்டு மாட்டை நேரே கொட்டிலில் கொண்டு வந்து அடைத்து விட்டதைப் போல், புதுமணப் பெண்ணை நேரே கிராமத்திற்கு இழுத்து வந்து, வீட்டுக்குள் புகுந்ததும் கரண்டியைக் கையில் தூக்கிக் கொடுத்து இடுப்பு முறிய வேலை வாங்க... கோபத்துடன் கொதித்தபடிக் கண்களை ஓடவிட்டாள்.

அறையில் போட்டிருந்த கட்டிலில் கிடந்த பஞ்சு மெத்தை மீது சுத்தமானதொரு புது விரிப்பைப் பரத்தி வைத்திருந்தார்கள். ஜன்னலில் கூட புது திரை மெல்ல ஆடியது. ஆனால் அறைக்கு மூலையில் அரிசி மூட்டைகளும், பருப்பு மூட்டைகளும் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.

புது மணத் தம்பதியரின் படுக்கையறையா அது... வீட்டின் உக்கிராண அறையா?

தாடை இறுகக் கணவனை உற்றுப் பார்த்தாள்.

''நாளைக்கு இதுகளைக் கொண்டு பின்பக்க மிருக்கும் கிடங்கில் வைக்கச் சொல்லிடறேன். அவசரத்தில் இவைகளை யாரோ இங்கே கொண்டு வந்து வச்சிருக்காங்க.'' சொல்லிக்கொண்டே அவளது கரத்தைப்பற்றித் தன் அருகே இழுத்துக் கொண்டான்.

''ஒன்று சொல்ல நான் மறந்து விடக்கூடாது. என்னைத் தினமும் நீ விடியு முன்பே எழுப்பி விடணும். கொட்டிலில் கட்டியிருக்கும் மாடுகளைக் கறக்க ஆள் வருவார். கூட நின்று பாலைக் கறந்து வாங்கிக் கொண்டு வந்து உள்ளே வைக்கிற முக்கிய வேலை எனக்கு உண்டு. அதுக்குள்ளே நீ வெந்நீர் போட்டுக் குளிக்க தண்ணியெடுத்து வச்சுட்டு, நீயும் குளிச்சு முடிச்சுத் தயாராகிடணும். அம்மா பாவம் இத்தனை ஆண்டுகளா இந்த வீட்டுப் பொறுப்பை ஏத்துக் கொண்டு ரொம்பக் கஷ்டப்பட்டாங்க. இனியாகிலும் ஓய்வா இருக்க அவளுக்கு நீ தான் உதவணும்.''

'இவ்வளவுதானா? இன்னும் ஏதாவது சொல்லப் போறீங்களா?'' கேட்கவேண்டும் போன்றதொரு ஆத்திரம். மௌனமாக அவள் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள்.

''உங்க வீட்டு சமையல் பக்குவ முறைகள் வித்தியாசமாக இருக்கலாம். நீ அம்மாகிட்ட சமைக்கக் கத்துக்கணும். வீட்டை நிர்வகிக்கிற பொறுப்பை முழுசா

ஏத்துக்கணும். ஏன்னா நீதான் வீட்டுக்கு மூத்த மருமகள்.'' அவன் சொல்லிக் கொண்டே போனான்.

''நீயும், நானும் ஈருயிர் ஒருயிராக வாழ வேண்டும். தனியே வெளியூர்களுக்கு சுற்றுப்பணம் போக வேண்டும். சினிமா, டிராமா முதலியவற்றிற்கு ஜோடியாக சென்று கண்டு களிக்க வேண்டும். என்று எதையும் சொல்லாது, இந்த வேலை உன்னுடையது, அந்த வேலை உன் பொறுப்பு என்று பேசிய அவன் தோரணையை அவளால் தாங்க முடியவில்லை. அழுகை தொண்டையை எட்டியது. சமாளிக்க முடியாது அவள் திடீரென்று விம்மி விட்டாள்.

''சர்மிளா? எதுக்கு அழுகிறே? ஏன்?'' பதறிப் போனான் அவன்.

வீட்டுக்குத் தலைவனாக, குடும்பத்தைக் காக்கும் பொறுப்புடையவனாக இருக்கிறவன், படித்தவன் அவளைப் புரிந்துகொள்ளாது பத்தாம் பசலித்தனமாகப் பேசுகிறானே...

கைக்குட்டையால் அவளது கண்ணீரைத் துடைத்து ஆறுதல்கள் பல சொன்னான்.

''வீட்டு நினைவு உன்னை வாட்டுகிறது, புரிகிறது. கொஞ்ச நாள் ஆனதும் இந்த வீட்டின் நினைவு உன்னை எங்கும் போகாமல் ஈர்த்துக் கொண்டுவிடும். சர்மிளா அழாதே. நீ அழுதால்... என்று கொஞ்சினான்.

அவனது மார்பில் முகத்தைப் பதித்துக் கொண்டு சிறிது நேரம் அவள் விசும்பினாள்.

3

ஆரம்பத்தில் தான் விடியலுக்கு முன் எழுந் திருப்பது மிகவும் சிரமமாக இருந்தது. மந்தைவெளி மகாலட்சுமி தெருவில் அவள் பெற்றோர்களுடன் வசித்தபோது விடிந்த பின் வெகுநேரம் சென்றுதான் எழுந்திருப்பது வழக்கம்.

'தம்பி காலேஜிற்குப் போகணும் எழுந்திரு' அம்மா பலமுறை குரல் கொடுப்பாள்.

'போகட்டும். நான் எதுக்கு எழுந்திருக்கணும்' அரைத் தூக்கத்திலே முனகுவாள்.

''அவனது புத்தக அலமாரிக்கிட்ட தரையில் படுத்துக் கொண்டிருக்கிறியே. உன்னைத் தாண்டி அவன் தன் புத்தகங்களை எடுத்து வச்சுக்கணும். என்ன பொண்ணு நீ, அப்பா கூட காய்கறி மார்க்கெட்டிலிருந்து திரும்பியாச்சு. இன்னுமா தூங்கறே?'' அம்மா மறுபடி குரல் கொடுப்பாள்.

''எந்திரியம்மா, இப்படி தூங்கினா மாமியார் வீட்டுலே எப்படி வாழப்போறே?'' வீட்டு வேலைக்காரி துடைப்பமும், வாளியுமாக தலைமாட்டில் வந்து நிற்பாள்.

''எழுந்திரு அம்மா'' அப்பா அதட்டிய பின்புதான், மெல்ல எழுந்து உட்காருவாள்.

பி.ஏ. படிப்பு முடிந்த பின் கல்லூரிக்குப் போக வேண்டிய அவசரமும் இருக்கவில்லை.

பொழுது அவள் முன் நீண்டு கிடந்தது. அதைக் கழிப்பது எப்படி என்றுதான் அவள் அப்போதெல்லாம் கவலைப்பட்டாள்.

ஆனால் இப்போது...

கோழி அடுத்த வீட்டுக் கூரையிலிருந்து கூவத் தொடங்கியதும் தானே விழிப்பு ஏற்பட்டது. அதற்குப் பின் படுக்கையில் இருப்புக் கொண்டதில்லை.

கணவன் எழுந்திருக்கு முன்பே அவளது காரியங்கள் ஆரம்பாயின. வெந்நீருக்குக் காத்திராது பச்சைத் தண்ணீரிலேயே குளித்து, மாற்றுடை அணிந்து, பூஜை விளக்கை ஏற்றி, வீட்டு சமையலறைக்குள் புகுந்து... மூச்சு விடவும் நேரம் இருக்கவில்லை. எரியும் அடுப்பைத் தணித்துவிட்டு இடையே ஓடி கணவனுக்கு வெந்நீர் எடுத்து வைத்து உபசரிக்கவும், இருமிக் கொண்டே அவளைக் கூவி அழைக்கும் பாட்டியை ஓடிக் கவனித்து அவள் ஏவிய சில பணிகளைச் செய்து முடிக்கவும், பின்னர் எல்லோருக்கும் கூடத்தில் இலை விரித்து இட்டிலி, சட்டினி பரிமாறி காப்பியை டம்ளரில் நிறைத்துக் கொண்டு வந்து வைப்பதற்குள் மணி காலை எட்டைத் தாண்டிவிடும்.

கடைக்குச் செல்ல ஆயத்தமான கணவன் பின், நிழலாகத் தொடர்ந்து வாசல்வரை வழி விட்டுவிட்டு உள்ளே திரும்பினால் இன்னொரு மூச்சு வேலை காத்துக் கிடந்தது.

முதல்நாள் வீட்டு வேலைகள் மிக பிரமிப்பைத் தந்தன. இரவு படுக்கப்போகுமுன் முதுகு பாளமாக இருக்கிக் கொண்டு வலித்தது. வெளியே சொல்லிக்

கொள்ள முடியாது அவள் இரகசியமாகக் கண்ணீர் உகுத்தாள்.

ஆனால், சில நாட்களுக்குப் பின்னர் எண்ணை யிட்ட சக்கரம் போல அவளால் வேகமாக எல்லா வற்றையும் கவனிக்க முடிந்தது. வீட்டு வேலைகள் அத்தனையும் ஒரு பாரமாகத் தெரியவில்லை.

ஆனால், அவளது எதிர்பார்ப்புத்தான் ஏமாந்து சுருங்கிப் போனது. என்னென்னவோ எதிர்பார்த்து ஆசையில் பூரித்துப் போயிருந்த உணர்வுகள் - அதிர்ச்சியில், வேதனையில் துவண்டு போயின. 'என் உயிருக்கும் இனியவள் நீ. உன்னை விட்டு ஒரு கணம் கூடப் பிரிய என் மனம் ஒப்பாது. வெகு விரையில் நம் பெற்றோர்களை அணுகி திருமணத்தை முடித்துக் கொண்டு, உன்னை என் வீட்டின் தலைவியாக என் இதயத்தின் ராணியாக வைத்து வாழும்போது வாழ்க்கை... என்றும் நமக்கு வசந்தமாகி விடும்.' அவன் எழுதிய கடிதங்களில் ஒன்றை எடுத்துப் படிக்கும்போது அவளுக்குக் கோபம்... நெஞ்சு வரையில் குமுறிக் கொண்டுதான் வந்தது.

நின்று நிதானித்துப் பேசக் கூட அவனுக்குப் பொழுதில்லாமல் ஓடிக்கொண்டிருந்தான்.

காதல் என்ற உணர்வில் மயங்கி கனவு உலகிலே மிதந்து கொண்டிருந்த போது, அவளுக்கு அவனது கடிதங்கள் தபாலில் வந்து விட்டாலேபோதும். அவை களைப் பலமுறை படித்து மகிழ்ச்சியில் திளைத்தாள். அவனுடைய மனைவியாக வாழ்க்கை அவளுக்கு அளிக்கப்போகும் போக பாக்கியங்களை எண்ணி ஆனந்தப்பட்டாள்.

ஆனால், உண்மையாகவே அவன் மனைவி என்ற அந்தஸ்தை அடைந்து விட்டபோது... வாழ்க்கை அவளுக்கு என்ன அளித்தது?...

காலையில் எழுந்ததும்... தோட்டத்திலே பல் விளக்கிக் கொண்டு பால் கறப்பவரை மேற்பார்வை யிடுவது, அவசரமாகக் குளித்துக் காப்பி பலகாரத்தை முடித்துக் கொண்டு, அடுத்த டவுனில் அவன் நடத்திக் கொண்டிருக்கும் மின்விசை உபரிப் பொருள்கள் கடையைத் திறக்க ஓடுவது, பகல் சாப்பாட்டிற்குக் கூட வீடு திரும்ப முடியாது... கடையில் வேலை. வேலை யாளிடம் டிபன் செட்டிலே மனைவி கொடுத்தனுப்பும் சாப்பாட்டை உண்டு விட்டு, இரவு ஒன்பது மணிக்குக் களைத்துச் சோர்ந்து போய் வீடு வருவது, குளிப்பது, கோயிலுக்குப் போய் வருவது. சாப்பிடுவது, உறங்குவது...

யந்திரமாக அவன் உழைத்தான். சின்ன வயதிலேயே பெரிய குடும்பத்தை விட்டுப்போன அப்பாவின் ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டு, பொறுப்பை வாரித் தலை மேல் போட்டுக் கொண்டு உழைத்தான்.

பற்றாக்குறையின்றி எல்லோரும் சுகமாகத்தான் வாழ்ந்தார்கள். ஆனால் அவள் அந்த வாழ்க்கையை எதிர்பார்க்கவில்லை. பெரிய கூடம். நாலு பக்கம் தாழ்வாரம். இரண்டாவது கட்டு, பின்னால் பெரிய காய்கறித் தோட்டம், கொட்டிலில் மாடுகள் என்ற வாழ்க்கைக்குப் பதில்... நகரத்திலே ஒரே ஓர் அறையில் மட்டும் வாழ்ந்து கொண்டிருந்த போதிலும் கணவன், மனைவி என்ற இரண்டு பேர் மட்டும் உள்ளதொரு தனிக் குடித்தனமாக இருந்து விட்டிருந்தால்... காலையில்

குறித்த நேரத்துக்கு வேலைக்குப் போய்விட்டு... ஐந்து மணிக்குப் பின் வீடு திரும்பும் கணவனை அவள் எத்தனை ஆவலுடன் வரவேற்பாள்?

இரவு உணவை ஏதாவது ஒரு ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு ஸ்கூட்டரில் அவன் பின்னால் தோளைத் தொட்டுக் கொண்டு நகரத்தைப் பவனிவரும் சுகம்... ஒன்பது மணிக் காட்சிக்கு, க்யூவில் நின்று டிக்கெட் வாங்கி சினிமா பார்க்கும் சுவாரஸ்யம், கடற்கரையில் உலாவிவிட்டு பின்னர் ஸ்கூட்டரில் சவாரி செய்து, நெடுஞ்சாலை மூலையில் வடக்கத்திக்காரர் ஒருவர் வைத்திருக்கும் உணவுக்கடை முன் எல்லோரும் நின்று கொண்டு சமுசாவும், புதினா சட்டினியும், சன்னா பட்டோராவும் வாங்கி ஆளுக்குப் பாதியாகப் பங்கிட்டுக் கொண்டு நின்றபடியே ஒரு தட்டில் வைத்து சாப்பிட்டுவிட்டு... கை விரல்களை சப்பிக் கொண்டு, ஒருவர் மேல் ஒருவர் இடித்துக் கொண்டு... தங்களைப் புதுமணம் புரிந்த தம்பதியர் என்று தமுக்குக் கொட்டிக் கொள்வதின் அலாதி சுகம்...

இந்தக் கிராம வாழ்வில் ஏது? எண்ணி ஏக்கப் பெருமூச்சு விட்டாள்... ஒருநாள் இரவு தனியாக இருவரும் தங்கள் அறையில் இருந்தபோது அவள் மெல்ல சொல்லிப் பார்த்தாள்.

''நீங்க படிச்ச படிப்புக்கு நகரத்தில் ஏதாவது வேலை கிடைக்காதா?''

''சட்டுனு கிடைக்காது கொஞ்சம் நாலு கம்பெனி ஏறி இறங்கினால் ஒரு சமயம் வேலை ஏதாச்சும் கிடைக்கலாம்.

''நீங்க ஒரு வேலை தேடிக்கொண்டு நாம் இருவரும் ஏன் பட்டணத்தில் வசிக்கக்கூடாது?''

''நீ என்ன சொல்றே சர்மிளா?''

''நாம ஏன் தனிக்குடித்தனம் செய்யக்கூடாதுன்னு கேட்கிறேன்.''

ஒரு கணம் அருண் முகத்திலே கோபம் மின்னலடித்து மறைந்துவிட்டது.

''ஆரம்பத்திலேயே நான் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன்னு உனக்கு என்னைப் பற்றி விவரமா சொல்லியிருக்கேன் இல்லையா?''...

'பெரிய குடும்பம் என்றால் ஒரு கௌரவமான குடும்பம்னு புரிஞ்சு கொண்டேன் இரண்டு தம்பிகள் கல்யாணத்திற்கு இருக்கும் ஒரு தங்கை நோயாளிப் பாட்டி விதவைத் தாய் என்ற ஒரு பெரிய குடும்பம் என்று நான் நினைக்கலை' பட்டென்று பதில் சொல்லத் துடித்தாள். ஆனால் பேசத் துணிவில்லை. அடுத்தடுத்து வார்த்தைகள் தடித்து பெருத்த சண்டையாகி விட்டால்?

சுபாவத்தில் சர்மிளா ரொம்பப் பயந்தவள் வீட்டிலேயே தம்பியுடனோ அக்காவுடனோ அவள் சண்டை போட்டுக் கொள்ள விரும்புவதில்லை. விளையாடும்போது அவர்களது கை ஓங்கிப் போனால் மெல்லப் பின்வாங்கி விடும் சுபாவம். சுற்றத்தாரைத் துறந்து வெளியூரில் முன்பின் பழக்கமில்லாத ஒரு கிராமத்து வாழ்க்கையில் புகுந்து விட்டிருக்கும்போது, அவளுக்குத் துணையாக அவள் பக்கம் பேசக்கூடிய அன்பான ஒருவன் கணவன்தான்.

அவனையே பேச்சுக்கு இழுத்து விரோதித்துக் கொள்ள முடியாதே? ''உங்கள் தம்பிகள் இருவரும் கல்லூரிப் படிப்புக்கு வந்துவிட்டவர்கள். அவர்களில் ஒருவர் இந்தக் குடும்பத்தை நிர்வகிக்கலாம்.

''இன்னும் அவர்கள் இருவரும் படிப்பை முடிக்கவில்லை. அம்மா தன்னந்தனியா கிராமத்தில் என் உதவி இல்லாமல் இருக்க முடியாதே. தங்கைக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும்... மேலும் நான் நகரத்தில் ஒரு கடை ஆரம்பித்து சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கேன். இன்னும் அதை விருத்தி செய்து வியாபாரத்தை அதிகரிக்கச் செய்யணும்னு ஆவலாக இருக்கிறேன். நம்ப வீட்டுப் பின் பக்கத் தோட்டத்திலே விளைகிற காய்கறிகளால் நமக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. இங்கே இருக்கிற அமைதியும், சுகமும் பட்டணத்திலே கிடைக்காது. பத்துநாள் போய் மாறுதலுக்கு வேணுமானால் தங்கலாம். நிரந்தரமா இருக்க எனக்கு நான் பிறந்த ஊர்தான் பிடிக்கும்.''

''வைத்திய வசதிகள் அதிகம் இங்கே கிடையாதே?''

''நமக்கு அப்படி பெரிய வியாதிகள் வரணும்னு ஏன் எதிர்பார்க்கணும்? இந்தக் கிராமத்திலே கைராசியான எங்க குடும்ப டாக்டர் சிவசாமி இருக்கார். அதுக்கு மேலே கஷ்டமான நோயாக இருந்தா, அதுக்குப் பக்கத்து டவுனில் தனியார் மருத்துவமனை, அரசு ஆஸ்பத்திரி எல்லாம் இருக்கு. அதுக்கு மிஞ்சினா பட்டணம். அதுக்கு மேலே'' என்று கையை கூரை முகட்டுப் பக்கம் சுட்டிக் காட்டி சிரித்தான்.

பொங்கி வந்த கோபத்தை அவள் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். ''நான் வந்ததிலிருந்து வெளிவாசல் எங்குமே போனதில்லை'' ஆதங்கமாகச் சொன்னாள்.

''உனக்குத் தெரியுமா... என் தாய் எனக்கு விவரம் தெரிஞ்ச ஓர் இருபது வருஷமா எங்கேயும் போன தில்லை. வீடும் நாங்களுமே அவங்களுக்கு எல்லாம்னு இருந்தாங்க. குறைப்பட்டுக்கவே மாட்டாங்க.''

'உங்கம்மா என்னைப் போலப் பட்டணத்துப் பெண் இல்லை. படித்தவளும் அல்ல! பிறந்தது ஒரு கிராமம். வாழ்க்கைப்பட்டது இந்தக் கிராமத்தில். சினிமாவில் வேணுமானால் பட்டணத்தைப் பார்த்திருப் பாங்க. மற்றப்படி இந்த வீடும், கொட்டில் மாடுகளும், பிள்ளை குட்டிகளும் தான் அவங்களது உலகம். அவங்களையும், என்னையும் சமப்படுத்திப் பேசலாமா?' ஆத்திரமாகக் கேட்க வாயெடுத்தாள்.

அருணுக்கு அம்மாதான் தெய்வம் என்பதை வந்த நாளே புரிந்து கொண்டு விட்டாள். மாமியாரைப் பற்றி மட்டமாகப் பேசினால் அவனால் பொறுத்துக் கொள்ள முடியாது. வீண் சண்டைதான் மிஞ்சும்.

''நீ வந்து பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு அம்மா ரொம்ப நிம்மதியா இருக்காங்க. நீ வீட்டை ரொம்பத் திறமையாக நிர்வகிக்கிறேன்னு என்கிட்டே சிலாகிச்சுப் பேசினாங்க. எனக்குப் பெருமையாக இருந்தது. வீட்டை விட்டு நகரமுடியாது போனதால அம்மா இதுவரை ஒருநாள் கூடப் பக்கத்து கிராமத்தி லிருக்கும் தன் தங்கையைக் கூடப் போய் பார்த்ததில்லை. அவங்கள்ளாம் தான் இங்கே வர பழக்கம்.

'இப்போதுதான் நிதத்துக்கும் வண்டியைக் கட்டிக் கொண்டு கோவில், குளம், பக்கத்தூர் உறவினர்களைப் பார்க்கணும்னு கிளம்பிடறாங்களே; இன்னும் என்ன குறை' பட்டென்று கேட்க வேண்டும் போல்தான் இருந்தது. ஆனால் வாயைத் திறக்க முடியாது உணர்ச்சிகள் உள்ளத்தில் குமுறத் தவித்தாள்.

''நாளைக்கு ஓய்வு நாள்தானே? நான் உன்னை பக்கத்து டவுனில் ஓடுகிற திரைப்படத்துக்கு அழைச்சுக் கொண்டு போறேன். கவலைப்படாதே'' என்றான் முடிவில்...

கடை விடுமுறை தினத்தன்றுதான் அருணுக்கு வீட்டில் ஏகப்பட்ட வேலை. காலையில் ஒரு டம்ளர் காப்பியுடன் அவன் தோட்டத்திற்குள் நுழைந்து விடுவான். தலையில் துண்டை முண்டாசு போலக் கட்டிக் கொண்டு, வேட்டியை மடித்து இடுப்பில் கட்டிக் கொண்டு, கூடை சாக்குகளுடன் அவன் தோட்டக் காரனுக்குச் சமமாக வேலை செய்வதைக் கண்டு மனம் இறுகிப் போனாள் அவள்.

வியர்வையில் நனைந்து ஈர மண் முழங்கால் வரை அப்பிக் கொள்ள, கூடை கூடையாகக் காய்களை அவன் சுமந்து கொண்டு... அவன் கடுமையாக உடலால் உழைக்கத் தேவையா? பாண்ட் நலுங்காது சட்டை மடியாது கடையில் உட்கார்ந்தபடியே காரியத்தைக் கவனிக்கலாமே...

அருண் ஒருவன் உடல் வருத்தி வேலை செய்யாவிடில், அருகிலிருந்த நகரத்துக் கல்லூரியில் படித்துக் கொண்டு ஹாஸ்டலில் தங்கிக் கொட்டமடித்துக் கொண்டிருந்த இரண்டு தம்பிகளின் கதி?

அம்மாவின் பின்னால் கன்றுக்குட்டி போல ஓடிக் கொண்டு இருக்கும் தங்கையின் வருங்காலம் எப்படி வளமாக இருக்கும்?

கணவன் கொண்டு வந்து கூடத்தில் நிரப்பிய கூடைகளை உக்கிராண அறைக்கு வேலைக்காரனுடன் அப்புறப்படுத்திக் கொண்டே உள்ளூரக் குமைந்தாள். அருணும், அவளும் மட்டும் வாழ நினைத்தால் அத்தனை பெரிய வீடு தேவையில்லை. அத்தனை உழைப்பு தேவையில்லை. அத்தனை அவதி தேவையில்லை. யார் அவனுக்கு எடுத்துச் சொல்ல முடியும்?

அன்று பகல் உணவுக்குப்பின் அவன் மனைவியை சினிமாப் பார்க்கப் புறப்படச் சொல்லி உசுப்பினான்.

அப்பாடா! இன்று ஒரு நாளாவது தனியே கணவனுடன் பேசி மகிழலாம் என்ற ஆறுதலுடன், அவன் தன் கல்யாணத்தின் போது, தன் பரிசாக எடுத்துக் கொடுத்த ஆரஞ்சு வண்ண மைசூர் சில்க்கை எடுத்து அணிந்து கொண்டாள். தோட்டத்தில் ஒரு மூலையில் பூத்துக் சொரிந்து கொண்டிருந்த ஆரஞ்சு வண்ண கனகாம்பர மலர்களைத் தானே பறித்துத் தொடுத்து தலை நிறைய சூட்டிக் கொண்டாள்.

அலங்காரத்தை முடித்துக் கொண்டு அவள் புறப்படுமுன் பட்டுக்கரை வேட்டியும், சட்டையுமாக அவன் கிளம்பி விட்டான்.

வாசலில் வில் வண்டி தயாராக நின்றது. திண்ணை ஓரத்திலே காஞ்சிபுரப் பட்டுச் சேலையில் அம்மாவும், அமெரிக்கன் ஜார்ஜெட்டில் துளசியும் அலங்காரமாக நின்றுகொண்டிருந்தனர்.

''வீட்டை யார் பார்த்துக் கொள்ளப் போகிறாங் களாம்'' ஆத்திரத்துடன் கேட்டாள் சர்மிளா.

''வீட்டு வேலைக்காரி நாம் வரும்வரை பத்திரமா பார்த்துக் கொள்வா. பாட்டியையும் கவனிச்சிப்பா கிளம்பு'' என்றான் அருண்.

புடவை நசுங்க மூச்சுத் திணற வண்டிக்குள் அடைபட்டுக் கொண்டு, அவர்கள் ஒரு வழியாக சினிமா கொட்டகையை அடைந்தபோது படம் ஆரம்பித்துப் பத்து நிமிஷங்கள் கழித்து விட்டிருந்தன. திரும்பி ஓடி வண்டியில் ஏறி வீட்டுக்கு வந்துவிட வேண்டும் போல அவள் ஆத்திரப்பட்டாள்.

பத்திரிகையைக் கையில் எடுத்து முதல் பக்கத்தி லிருந்து கடைசி வரை அவள் படித்து முடித்து விடுவாள். இல்லாவிட்டால் மனம் சங்கடப்படும். அதுபோல சினிமா பார்க்கப் புறப்பட்டால் அவள் திரை விலகுவதற்கு முன்னர் ஆசனத்தில் இருக்க வேண்டும். ஒரு நிமிஷ தாமதத்தைக் கூட அவள் ஏற்கமாட்டாள்.

பற்களைக் கடித்துக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்தவள் இருட்டில் மெல்லத் திரும்பிப் பார்த்தபோது இன்னொரு அதிர்ச்சி. அவள் கணவன் ஓரத்தில் உட்கார்ந்திருக்க அவன் அருகே தங்கையும், அதற்குப் பின்னர் அவளும் அவளது, மறுபக்கத்தில் திரைப்படம் முடியும்வரை குறுக்கே பேசித் தொலைக்க மாமியாரும் அமர்ந்திருந்தனர்.

இப்படி ஒரு படம் பார்க்கா விட்டால் தான் என்ன? அவளுக்குக் கோபம் எல்லை மீறவே அழுகையே வந்து விட்டது.

வீட்டுக்கு வந்ததும் அருண் கேட்டான் ''படம் நல்ல இருந்ததா?''

'உம்' என்று கூறிவிட்டு உள்ளே திரும்பினாள்.

''எனக்குப் பிடிக்கவேயில்லை. ஒரே தலைவலி. வீட்டோட இருந்து ஏதாவது ஒரு நல்ல கதையைப் படிச்சிருக்கலாம். நீ ஆசைப்பட்டியேன்னு அழைச் சிட்டுப் போனேன்.''

'நான் இனி ஆசைப்பட மாட்டேன். இந்த மாதிரி இரண்டு பக்கமும் வேட்டை நாய்களைப் போல மாமியார், நாத்தனார் அணி செய்ய எனக்குப் படம் பார்க்கவே தேவையில்லை' கத்த வேண்டும் போன்ற கோபத்தை அடக்கிக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

இத்துடன் மட்டும் என்றிருந்தால் கூட அவள் பற்களைக் கடித்துக் கொண்டு இருப்பாள்.

திருச்சி நகரத்தில் ஹாஸ்டலில் தங்கிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அவளது மைத்துனர்கள் சந்திரனும், மாலனும் வார இறுதியில் வீட்டுக்கு வரத் தொடங்கினர்.

அந்த இரண்டு நாட்களில் வீடு இரண்டு பட்டது. ''அண்ணி'' என்று குழைந்து கொண்டு அவள் பின் ஆட்டுக்குட்டிகளாக ஓடி வந்தனர்.

''என்ன சமைக்கிறீங்க? அடடா! எனக்குப் பிடிச்ச சங்கதி... காரக்குழம்புன்னா எனக்கு உசிராச்சே.'' நாக்கைத் தட்டிக்கொண்டு சமையலறையில் பின்னால் வந்து நிற்பான் மூத்தவன் சந்திரன்.

''அண்ணி நான் ஒண்ணு எடுத்துக்கறேன்'' என்றபடி அவள் பொரித்து வைக்கும் அப்பளங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு, கூடத்து நாற்காலியில் உட்கார்ந்து நொறுக்கி விழுங்குவான் இளையவன் மாலன்.

கோபிக்கவும் முடியாத, கொஞ்சவும் முடியாத இளவயதினர் இருவரும்.

பெரியவனுக்குப் பெரும் குரல். வாசலிலிருந்தே 'அண்ணி' என்று எட்டு வீடு கேட்கக் கூவிக் கொண்டு வருவதை அவள் வெறுத்தாள். திண்ணையிலிருந்தபடியே ''இன்னிக்குப் பகல் டிபனுக்குத் தயிர் வடை வேணும், மறந்திடாதீங்க' என்று உத்திரவிட்டபோது அவளுக்குக் கோபமாக இருந்தது.

அவள் அந்த வீட்டில் எல்லோருக்கும் அடிபணிந்து கேட்டதைச் செய்து போட்டுக்கொண்டு, அடங்கி ஒடுங்கி வாழும் மருமகள் என்று அக்கம் பக்கத்தவர்களுக்குத் தெரிய வேண்டியது அவசியமா?

துளசி தன் இளைய சகோதரர்களைக் கண்டு விட்டால் பச்சைக் குழந்தையாகிக் கொட்டமடிப்பாள். அம்மாவின் பேச்சுக்கு அடங்கி சாதாரண நாட்களில், அண்ணிக்கு உதவியாக சமையலுக்குக் காய்கள் நறுக்கித் தருதல், துவைத்த துணிகளை உலர்த்தல் போன்ற சில்லரைக் காரியங்களைச் செய்தாள்.

அண்ணன்மார்களைக் கண்டதும், அவர்களுடன் கூடிக் கொண்டு பேச்சும், கூச்சலுமாக நேரத்தை ஓட்டினாள். நாடகம் பார்க்கக் கிளம்ப நினைத்தால் இப்போது பெருத்த கூட்டமாகி விட்டது.

வாய் ஓயாது குறுக்கே நாடகத்திற்கிடையே விமர்சனம் செய்து கொண்டிருந்த மைத்துனர்கள் ஒரு புறம் அவள் மாமியார் பக்கத்தில் இன்னொரு புறம் என்ற சூழ்நிலையில் அவளுக்கு நாடகம் அலுப்பாகத் தெரிந்தது. 'நேற்று நாடகத்துக்கு அழைத்துக்கொண்டு போனேனே? திருப்தி தானே' என்று கேட்ட கணவனுக்கு என்ன பதில் சொல்வாள்? 'சந்தை இரைச்சலில் குடியிருந்து கெட்டேனே' என்றா கூற முடியும். மௌனமாகப் புன்னகைப்பதைத் தவிர வேறு வழி. ''அம்மா கோவிலுக்கு உன்னையும் கூட்டிக் கொண்டு போகிறாங்களாமே?'' வேடிக்கையாக கணவன் ஒரு நாள் கேட்டபோது அவள் மனம் வேதனையில் வெகுண்டது. தேங்காய், பழம் நிறைந்த கூடையை மருமகள் கையில் கொடுத்துவிட்டு... மகளுடன் பகவதி நடக்க, பின்னால் அடிமையைப் போல அடக்கமாக தலை குனிந்து கொண்டு தெருப் பெண்கள் அத்தனை பேரும் பார்க்க அவள் நடக்க வேண்டியிருந்தது.

கோவிலில்தான் நிம்மதி உண்டோ? காற்றோட்ட மாக வெளிப்பிரகாரத்தில் சிறிது நேரம் உட்காரலாம் என்று ஒதுங்கினால் போதும்... ''இவதான் உன் மரு மகளா? மகன் கல்யாணத்தப்போ நான் மதுரையிலிருந் தேன். முந்தா நேத்திதான் வந்தேன். பட்டணத்துப் பொண்ணுன்னு சொன்னாங்க உன் அடக்கத்துக்கும், உன் குணத்துக்கும் ஏத்தபடி...'' என்று முடிக்காது அவளை ஏற இறங்கப் பார்த்தாள் மூன்றாவது வீட்டுப் பெரியம்மா.

'மருமக எப்படி இருக்கா படிச்ச பொண்ணுன்னு ரொம்ப நெட்டா இருக்காளா?' சர்மிளாவின் காதில் படும்

படியே போக்கிரித்தனமாகக் கேட்டாள் வம்புக்காரத் தெருக்கிழவி ஒருத்தி. ''புது மருமக வீட்டுக்கு வந்த சந்தடியிலே நான் கேட்கலை நகை நட்டு ஏதும் அவங்க வீட்டிலே போடலையாமே. நீ எதுக்கு ஒத்துக்கிட்டே? உன் மகன் - அப்படி மலிஞ்சு நடுவாசலிலா கிடக்கிறான். அவன் அறிவுக்கும் வியாபார சாமத்தியத்துக்கும், அழகுக்கும், சின்னப்பட்டி பெரியதனக்காரர் தன் மகளைக் கொடுக்க ரொம்ப பிரயாசைப்பட்டாராமே. இதோ பார் பகவதி. ஒண்ணும் கேக்காட்டி நம்மைப் பத்தி பெண் வீட்டிலே இளப்பமா நினைச்சுக்குவாங்க. தீபாவளிக்கு, பொங்கலுக்குன்னு ஏதாச்சும் கணிசமா வரிசை வாங்கிக்க.'' தூண்டிக் கொடுத்தாள் ஒரு வேலையற்ற வம்புக்காரி.

அவள் என்ன, கடையில் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும் பொம்மையா?

மாமியாருக்குத் தெரிந்த பெண்கள் எல்லாம் அவளை ஏற இறங்கப் பார்த்து விமரிசிக்கணுமா? பற்களைக் கடிப்பதைத் தவிர பதில் சொல்ல முடியாத சங்கடம்.

கோவிலிருந்து கொண்டு வந்த பிரசாதத்தை எடுத்துக் கொண்டு பாட்டியிடம் கொடுத்துவர மாமியார் ஏவியபோது... பாட்டி அவளது கையைப் பிடித்துக் கொண்டு தொண தொணக்கத் தொடங்கி விடுவாள்.

''சர்மிளா! நீ வந்த வேலை போலிருக்கு. எனக்கு இப்பக் கொஞ்சம் நல்லா எழுந்து உட்கார முடிகிறது. கையைப் பிடிச்சு நிக்கவை அம்மா.. இப்படி கொஞ்ச நாள் பழகினா என்னால் முன் போல் நடக்க முடியும். பகவதி நல்ல பொண்ணுதான். ஆனால், உன் போல சித்த

பொறுமையா எனக்குப் பணிவிடை செய்யறது இல்லை. எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. என் பேரன்களிலே எனக்கு உன் புருசனைத்தான் ரொம்பப் பிடிக்கும்.

''பாட்டி பிறகு வந்து உங்ககிட்ட பேசறேன், அடுப்பிலே காரியம் அப்படியே நிக்குது.''

''நிக்கட்டும் - அந்த துளசி ஏன் சும்மா இருக்கணும்? எழுந்து செய்யட்டும். நீ இப்படி உட்கார்ந்து என் காலைக் கொஞ்சம் பிடிச்சு விடு.'' பாட்டி அவளை லேசில் விடமாட்டாள். அவள் கேட்ட பணிவிடைகளைச் செய்து முடித்துவிட்டு அவளிடமிருந்து கழன்று கொள்வதற்குள்... போதும் என்றாகி விடும்.

வாழ்க்கை மிகவும் ஏமாற்றத்துடன் உற்சாகமின்றி நகர்ந்து கொண்டிருந்தது.

வாரத்திற்கு ஒரு கடிதம் பிறந்த வீட்டிலிருந்து வந்து கொண்டிருந்தது ஆரம்பத்தில். பின்னர் மாதம் ஒரு கடிதமாகி... இரண்டு மாதங்களுக்கு ஒரு கார்டு வருவதே அபூர்வமாகி விட்டிருந்தது.

அன்று அவர்கள் கோவிலுக்குப் போய்த் திரும்பிய போது தபால்காரர் அவர்கள் தெருவில் நுழைவதைக் கவனித்தாள். நெஞ்சு பக்பக்கென்று அடித்துக் கொண்டது.

'அம்மா கடிதம் எழுதியிருக்க மாட்டாங்களா?' என்ற ஆதங்கத்தில் வேகமாக நடந்தாள்.

''எங்க வீட்டுக்குக் கடிதாசி வந்திருக்கா?'' துளசி முந்திக்கொண்டு கூவியபடி தபால்காரரை அணுகிக் கையை நீட்டினாள்.

''ஒரே ஒரு கடிதாசிதான் வந்திருக்கு. என்று புன்னகைத்தபடி ஒரு கவரை அவளிடம் நீட்டினார்.

இந்தச் சங்கதியும் சர்மிளாவுக்குப் பிடித்ததே இல்லை. அவளுக்கு ஊரிலிருந்து பெற்றோர்கள் எழுதும் கடிதத்தை நேரிடையாக அவளிடம் யாரும் கொடுப்ப தில்லை. இதென்ன அநியாயம்? கார்டாக இருந்து விட்டால் துளசி கொஞ்சமும் மரியாதை இல்லாமல் அதை உரக்கப் படித்து எல்லோருக்கும் சொல்லிவிட்டு, பிறகு அண்ணியிடம் கொண்டு வந்து தருவாள்.

கவரை மட்டும் கிழித்துப் படிக்க அவளுக்கு இதுவரை துணிவு ஏற்பட்டதில்லை. ஆனால், பதிலுக்கு ''உங்க அப்பா என்ன எழுதியிருக்கார். அம்மாகூட எழுதியிருக்காளா?'' என்று சங்கதியைத் தெரிந்துகொள்ள நச்சரிப்பாள்.

சர்மிளாவுக்குத் தன் பெற்றோர் எழுதும் கடிதங் களைக் கூட அந்தரங்கமாகப் படித்துத் தெரிந்து கொள்ள உரிமை இல்லையா?

துளசியின் அடாத செய்கையைப் பற்றி அவள் தன் கணவனிடம் முறையிட்டாள். பதிலுக்கு அவன் அதை ஒரு வேடிக்கையாகத்தான் எடுத்துக் கொண்டான். ''விவரம் தெரியாத பெண் அவள். கடிதத்தைப் படித்து விட்டால் என்ன? அதில் வீட்டுக்குத் தெரிய வேண்டாத இரகசியங்கள் ஏதும் இல்லையே? இந்த வீட்டில் யாரும் எதையும் ஒளித்து மறைத்து வாழ்வதில்லை'' என்றான்.

கோபத்தில் உள்ளூர வெடித்துப் போனாள். ''பெட்டிக்குள்ளே என்ன வச்சிருக்கீங்க?'' என்று அறைக்குள் வந்து அவளது பெட்டியையும்- அலமாரியை

யும் ஆராய்வது போதாதுபோல இந்த அசட்டுப் பெண் அதிகப் பிரசங்கித்தனமாக அவளது கடிதங்களையும் படிக்கப் புறப்பட்டால்... 'அந்தக் கடிதாசியை இப்படிக் கொடு... என்று திடீரென்று அதட்டியபடி தன் கையில் வாங்கிக் கொண்டாள்.

கடிதம் அவளது பெற்றோரிடமிருந்து வரவில்லை. அவளது அன்புத்தோழி... யசோதாவிடமிருந்துதான் வந்திருந்தது. உள்ளே எடுத்துச் சென்று தனியாக உட்கார்ந்து படிக்க அவசரப்பட்டாள். யசோதா என்ன எழுதியிருக்கிறாள்? அவளுக்கு மிக்க ஆவலாக இருந்தது.

கடிதத்தை அவள் பிரித்துப் படித்தாள்.

''அன்புள்ள சர்மிளாவுக்கு, நீ எங்களை விட்டு கிராமத்திற்குச் சென்று ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டது. கிராமத்தின் அழகில் மயங்கி, எங்களையும் சென்னையையும் நீ மறந்து விட்டாய் போலிருக்கிறது. போன வாரம் யதேச்சையாக உன் அக்கா வித்யாவை நான் கடைத் தெருவில் சந்தித்தேன். பம்பாயிலிருந்து இரண்டு நாட்களுக்கு முன்தான் வந்தாளாம். பிறந்த வீட்டில் ஒரு மாதகாலம் தங்கியிருக்க வந்திருக்காளாம். ஆமாம்! உனக்கு இது மாதிரியான வாய்ப்புக் கிட்டாதா? கொஞ்ச நாட்கள் பெற்றோருடன் தங்கியிருக்க உன் புக்ககத்தார் அனுமதிக்க மாட்டார்களா? நாங்கள் வசித்துக் கொண்டிருந்த பங்களாவை என் மைத்துனருக்கு விற்று விட்டோம். இப்போது அடையார் கல்பனா நகரில் ஒரு புது வீட்டை வாங்கியிருக்கிறோம். ரொம்பப் புது மாடலில் கட்டப்பட்ட வீடு. பார்த்தால் ரொம்ப ஆனந்தப் படுவாய். முகவரியும் தொலைபேசி எண்ணும் தந்திருக்கிறேன். சென்னைக்கு வந்தால் என்னை உடனடி

யாகத் தொடர்பு கொள்ள வேண்டும்... நீ வந்து என் புது வீட்டில் சில நாள் என்னோடு தங்க வேண்டும் என ஆசைப்படுகிறேன்.''

உன் அன்புள்ள தோழி
யசோதா.

மாமியாரின் முகத்தில் வழிந்த கேள்விக்கு சுருக்கமாகப் பதிலளித்தாள். ''என் தோழி கடிதம் போட்டிருக்காள். உங்களையெல்லாம் விசாரித்திருக் கிறாள்.'' சொல்லிவிட்டு வேகமாக உள்ளே சென்று விட்டாள்.

அன்று முழுவதும் அவளுக்கு வேலையே ஓட வில்லை. அக்கா வித்யா பிறந்த வீட்டுக்கு வந்திருக் கிறாளாமே. அப்பா ஒரு கார்டுகூடப் போட்டு தெரிவிக்க வில்லை. ஆமாம் அக்கா எதற்காக வந்திருக்கிறாள்? அம்மா அன்போடு அழைத்தார்களா?... தானாகவே ஆசைப்பட்டு வந்தாளா?

ஒருமாத காலம் காம்ப் போடுமளவு அவளுக்கு ஏன் இந்த ஓர வஞ்சனை? சின்ன மகளைப் பிறந்த வீட்டுக்கு வரச் சொல்லி ஏன் அழைக்கலை? அம்மா அழைக்கா விட்டால் என்ன... அவளே கிளம்பிப் போக முடியாதா? பிறந்த வீட்டுக்குப் போய் வர அவளுக்கும் உரிமை உண்டே? யசோதா இன்னொரு புதுவீட்டுக்குக் குடி போயிருக்கிறாளே... அதைப் பார்க்க வேண்டாமா? அவள் கணவர் கூடை கூடையாக அல்லவா சம்பாதிக்கிறார்?

பலவும் எண்ணிப் புழுங்கிக் கொண்டிருந்தாள். தோழியிடமிருந்து வந்த கடிதத்தைப் பற்றிக் கணவனிடம்

அவள் மேலெழுந்தவாரியாகத்தான் சொன்னாள். ஒவ்வொன்றையும் அவனிடம் ஒப்புவித்தாக வேண்டுமா என்ன? என்று பிடிவாதம்.

உடனடியாகப் பிறந்த ஊருக்குப் போக விருப்பம் தெரிவித்தால் அருண் அனுமதி தரமாட்டான் என்பதை அவள் அறிவாள்.

புக்ககம் வந்து இரண்டு மாத காலம் சென்ற பின் அவள் மெல்ல அவனிடம் கேட்டுப் பார்த்தாள். ''ஒரு வார இறுதியில் என்னோடு கூட சென்னைக்கு ஒரு பயணம் நீங்க வர முடியாதா?''

''இப்போ அங்கே எனக்கு என்ன வேலை?'' அதிசயமாகக் கேட்டான் அருண்.

''அம்மா அப்பாவைப் பார்க்கணும்போல இருக்கு.''

''அதுக்குள்ளேயா உனக்கு வீட்டு நினைவு? அவங்களைப் பத்தி நினைச்சி வாடுகிறாப்பல என்ன குறை வச்சிருக்கோம்? இன்னும் இந்த வீட்டு நிலைமை எங்க பழக்க வழக்கங்கள் எல்லாம் உனக்குப் புரியலை அதுக்குள்ளே ஊருக்குப் போக ஆசைப்படுகிறாயே?'' சொல்லியபடி செல்லமாக அவள் கன்னத்தைத் தட்டினான். மேலே அவள் பேசவில்லை.

பெற்றவர்களை விட்டுப் பிரிந்து ஆறு மாதத்துக்கும் மேலாகிறது. தோழி யசோதா கொடுத்து வச்சவள் சென்னையிலேயே பிறந்த வீடு... நினைச்சபோது போய்ச் சீராட முடியும். அக்காகூடப் பரவாயில்லை. பம்பாயி லிருந்த போதிலும் புறப்பட்டுப் பெற்றோரைப் பார்க்க வந்திருக்கிறாள் அக்காவுக்குக் கல்யாணமாகி ஒரு ஆண்டுதானே முடிந்திருக்கும்.

எப்படி அருணிடம் இதைப்பற்றிப் பேசுவது? ஓயாது மனம் சிந்தித்த வண்ணம் இருந்தது.

இரண்டு தினங்கள்... இதே எண்ணத்தில் மனம் அலைபாய குழப்பத்துடன் வளைய வந்துகொண்டிருந்தாள்.

அவளது தோழி கமலா கையாண்டதொரு வழி... சட்டென்று மூளையில் பளிச்சிட்டது. கமலாவின் கணவர் கொஞ்சம் கடுமையான ஆசாமி. தன்னோடு அல்லாமல் மனைவி வேறு எங்கேயும் தனியே போவதை அனுமதித்ததில்லை. தன் பிறந்த வீட்டில் பத்து நாள் போய் இருக்க, கமலாவுக்கும் மிக்க ஆவலாக இருந்தது. உடனடியாக ஒரு திட்டம் போட்டு விட்டாள். தனக்கு உடம்பு சுகமில்லை என்று படுத்து விட்டாள். பிறந்த வீட்டிலே போய்ச் சில நாள் இருந்தால்தான்... இந்த முதுகு வலி குறையும் என்று ஒரேயடியாகச் சொல்லி, பிறந்த வீட்டிக்குக் கிளம்பி விட்டாள்.

அந்தத் தந்திரத்தை ஏன் அவளும் கையாளக்கூடாது.

கணவனிடம் பொய் சொல்லி ஏமாற்றப் பிரியம் இருக்கவில்லை. ஆனால் அருண் அவளை சட்டென்று சென்னைக்கு அனுப்ப மாட்டானே!

'பாட்டியை யார் பார்த்துக் கொள்வார்கள்? அம்மாவால் இனி வீட்டை நிர்வகிக்க முடியாதே?' என்றெல்லாம்... பல முட்டுக் கட்டைகள் போடுவான் பொய் சொல்லித் தான் அவள் கிளம்ப முடியும். வேறு வழி?

அடுத்த நாள் மாலை அவள் தலையில் ஒரு துவாலையை இறுக்கக் கட்டிக்கொண்டு படுக்கையில்

சுருண்டு கொண்டு விட்டாள். முடுக்கி விட்ட யந்திரமாகக் காலையிலிருந்து இரவு வரை உழைத்துக் கொண்டிருந்த மருமகள் படுத்து விட்டாள் என்றதுமே பகவதி பயந்து போய்விட்டாள்.

கடையிலிருந்து வீடு திரும்பிய அருண் வாயிலில் நின்று வரவேற்கும் மனைவி படுக்கையில் முனகிக் கொண்டு கிடப்பதைப் பார்த்துப் பதறிப் போனான்.

''என்ன சர்மிளா? என்ன ஆச்சு...'' என்று விசாரித்தபடி வேகமாக அறைக்குள் நுழைந்தான்.

தலைவலி தைலத்தின் நெடி... மூக்கைத் தாக்கியது. முனகியபடியே படுக்கையில் புரண்டாள் அவள்.

''எனக்கு அடிக்கடி ஒத்தைத் தலைவலி வர பழக்கம். கொஞ்ச நாளா அது வராது நின்னிருந்தது. மறுபடியும் ஆரம்பிச்சுடுச்சு'' மெல்லிய குரலில் முணுமுணுத்தாள். ''டாக்டரைக் கூட்டி வரட்டுமா?'' தவித்தான் கணவன்.

''எங்க தெருவிலே ஓர் ஆயுர்வேத வைத்தியர் இருக்கார்... அவர் ஒரு கஷாயம் தயாரிச்சுத் தருவார் அதை ஒரு மண்டலம் சாப்பிட்டா... கொஞ்ச காலம் தலைவலியே வராது.''

''அது என்ன மருந்து... அதைத் தயாரிச்சு அனுப்பச் சொல்லு. நாம் பணம் அனுப்பிடலாம்'' பரபரத்தான் அருண்.

''கொஞ்சம் ஓய்வா இருந்து மருந்தைச் சாப்பிட்டா... குணமாகும். அதனாலே நான் இரண்டு வாரம் என் பிறந்த வீட்டிலே இருந்து ஓய்வு எடுத்துக்கிட்டு... அந்த வைத்தியம் செய்துகிட்டா...'' மேலே பேச முடியாது திணறினாள்.

அருணுக்கு மனைவியைப் பிறந்தகம் அனுப்பப் பிரியம் இல்லை. குடும்ப டாக்டர் வந்து பார்த்துக் கொடுத்த மருந்துக்கு நோய் குணமாவதாகத் தெரிய வில்லை.

''இடமாற்றம் ஒரு சமயம் குணப்படுத்தலாம் - இது பயப்படும்படியான நோய் இல்லை. என்னைக் கேட்டால்.., இது தலைவலியே இல்லை. மனக் குழப்பத்தால் தலைவலி போலப் பிரமை.'' டாக்டர் சொல்லிவிட்டார்.

அரை மனதுடன் மனைவியைப் பிறந்த வீட்டுக்கு அனுப்ப முடிவு செய்தான். ''என்னை இனி யார் பார்த்துக்கப் போறாங்க. புலம்பினாள் பாட்டி அகிலாண்டம்.

கொஞ்ச நாள் ஓய்வாக இருந்த பகவதி வீட்டு வேலையின் பளுவை எண்ணிக் கவலைப்பட்டாள்.

''அண்ணி ஊருக்குப் போறாங்களா... வர நாளாகுமா?'' அரற்றினார்கள் மைத்துனர்கள்.

உள்ளூர அவளுக்கு மிக்க ஆனந்தம் தந்திரம் பலித்தது என்று மட்டிலா மகிழ்ச்சி.

மனைவியை அன்று இரவு இரயிலுக்கே அழைத்துச் சென்று பிறந்த வீட்டில் விட்டுவிட்டு, கணிசமாக அவள் கையில் செலவுக்குப் பணம் தந்துவிட்டு... கவலையுடன் பிரியாவிடை பெற்றுக்கொண்டு உடனேயே ஊர் திரும்பி விட்டான் அருண்.

4

எதிர்பாராத அவளது வரவினால் அப்பா திடுக்கிட்டுப் போய்விட்டார். ''ஒற்றைத் தலைவலி வந்து ரொம்பச் சிரமப்பட்டாள்'' என்று மருமகன் சொன்ன போது அம்மாவுக்கு அதிசயமாக இருந்தது. காய்ச்சல் மண்டையிடி என்று ஒருநாள் கூடப் படுத்தவள் அல்ல அவளது மகள் சர்மிளா.

''உங்களையெல்லாம் பார்க்கணும் போல இருந்தது. ஏதோ சாக்குச் சொல்லிவிட்டு வந்தேன் அம்மா.'' மகள் மகிழ்ச்சியுடன் சிரித்தாள்.

திருமணமான இரு பெண்களும் வீட்டுக்கு வந்து விட்டதால் ரொம்ப வேலை. பால், சர்க்கரை என்று எல்லாப் பொருள்களையும் தாராளமாக வாங்க வேண்டியிருந்தது. வட்டிப் பணத்திலே வாழ்ந்து கொண்டிருந்த குடும்பம். அம்மா செலவைச் சமாளிக்க இயலாது திணறினாள்.

விருந்தும், மருந்தும் மூன்று நாள்தானே?

நான்காவது நாளே அம்மா ஆரம்பித்து விட்டாள். ''அக்கா வித்யாவைப் போல நீ பற்றாக்குறை பட்ஜெட்டில் ஓடுகிற வீட்டில் வாழ்கைப்படாமல்... சொந்த பிசினஸ் செய்து கைநிறைய சம்பாதிக்கிறவனைக் கட்டிக் கொண்டிருக்கே உன் கணவர் ரொம்பத் தாராள மனசுக் காரர்ன்னு தெரிஞ்சது உன்னை விட்டுட்டுப் போறதுக் குள்ள பர்சிலிருந்து நூறு ரூபாய் நோட்டாக எடுத்து உன் கையில் அடுக்கிட்டுப் போறதைப் பார்த்தேன்...

போகட்டும் நீயாவது நல்லா இரு'' என்று கூறிவிட்டுக் குரலைத் தாழ்த்தினாள்.

''சர்மிளா, தப்பா நினைச்சுக்காதேயம்மா இப்போ இருக்கிற விலைவாசியிலே என்னால ஒருவர் வந்தாக்கூட சமாளிக்க முடியலை... பத்து நாள் இங்கே நீ இருக்கப் போகிற இல்லியா...? உன்னால ஏற்படப் போற செலவுக்கு நீ ஏதாவது கொடுத்துடும்மா.''

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அம்மா அவளுக்கு சாப்பாடு போடக் காசு கேட்கிறார்களே?

வெட்கத்தை விழுங்கிக்கொண்டு பெட்டியைத் திறந்து, பர்சிலிருந்த தொகையில் ஐநூறு ரூபாய்களை எடுத்து அம்மாவிடம் கொடுத்தாள்.

வித்யா சுபாவத்தில் பொறாமைக்காரி. தங்கை தன்னைவிட நிறத்தில் கூடுதலாக இருக்கிறாள் என்று சின்ன வயதிலிருந்தே காய்ந்தவள் அவள். தன்னைவிட உயர்ந்த இடத்தில் அவளுக்குக் கணவன் அமைந்து விட்டானே என்ற ஆத்திரத்தில் உள்ளூரப் புழுங்கிக் கொண்டிருந்தவள், தங்கையிடம் தானே வந்து மிகவும் ஒட்டிக் கொண்டாள். அதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை.

தங்கை பெட்டியைத் திறந்ததும் எட்டிப் பார்த்த அக்கா பெருமூச்சு விட்டாள். ''இது மாதிரி ஒரு ஆரஞ்சு வண்ண பட்டுச் சேலை வாங்க ஆசைப்பட்டேன், முடியலை'' என்றாள் ஆதங்கமான குரலில்.

தங்கை எதுவும் பேசுமுன் அக்கா அந்தப் புடவையை எடுத்துத் தன் கையில் வைத்துக்கொண்டாள். ''சர்மிளா உன் ஞாபகமாக இதை நான் எடுத்துக்கிறேன்''

என்று கூறி விட்டுப் புடவையுடன் எழுந்து போய் விட்டாள்.

இதென்ன பகல் கொள்ளை? அவளது கணவன் வாங்கித் தந்த பரிசு அந்தப் புடவை. அக்கா எடுத்துக் கொண்டு விட்டாளே. கிராமத்திற்குத் திரும்பியதும் அவள் கணவனுக்கு என்ன பதில் சொல்லுவாள்...? பயந்து போய் விட்டாள். இன்னும் மற்றவைகளை அக்கா எடுத்துக் கொள்ளுமுன் பெட்டியை நன்றாகப் பூட்டிவிட வேண்டும் என்று அவசரமாக மூடிப் பூட்டினாள். அக்காவின் பேராசை அவளை விரட்டி விட்டது.

கோரிக்கைகள் தொடர் சங்கிலி போலத் தொடர்ந்தன.

அடுத்த நாள் காலை அப்பா அவள் அருகில் வந்து அன்புடன் அமர்ந்து கொண்டார். ''இப்போ தலைவலி எப்படி அம்மா இருக்கு ஆயுர்வேத மருந்து என்னவோ வாங்கப் போறேன்னு சொன்னியே வாங்கி சாப்பிட்டியா? மாப்பிள்ளைக்குக் கடிதம் போட்டியா?'' அனுசரணையாக விசாரித்தார்.

அவள் பதில் அளிக்கு முன் அப்பா தொண்டையை செருமிக் கொண்டார். ''சர்மிளா... வித்தியாசமா நினைக்காதே இந்தக் காலத்திலே பெத்தவனுக்குப் பெண்ணும் ஆணும் சரிசமானந்தான். உன்னையும் தம்பியைப் போல நான் படிக்க வச்சேன். பாவம் உன் தம்பி சின்ன பிள்ளை - இன்னும் படிப்பை முடிக்கலை - பிறகு வேலை தேடணும் பிறகுதானே குடும்பத்துக்கு உதவ முடியும். வித்யா இங்கே எதுக்காக வந்திருக்கா தெரியுமா? அவ கணவனுக்கு நான் ஸ்கூட்டர் வாங்கித்

தரதாக கல்யாணத்தின்போது சொன்னேன்... முடியலை... அதனாலே அந்தப் பணத்தை வசூலிச்சுக் கொண்டு வரும்படி அவ புருசன் அவளை அனுப்பியிருக்கான். அத்தனை பணத்துக்கு நான் எங்கே போவேன். நல்லவேளை நீ வந்தே. எனக்கு ஓர் உதவி செய்யம்மா உன் புருசன் கிட்டே கேட்டு... ஒரு ப்த்தாயிரம் ரூபா கை மாத்தா நீ வாங்கி எனக்குத் தந்துடு, ரொம்ப உபகாரமா இருக்கும்... அப்பா தனியாக நயமாகக் கேட்டார்.

திடுக்கிட்டுப் போனாள்... மருமகனிடமே கடன் கேட்கும் மாமனாராக இருக்கிறாரே அப்பா! இதென்ன கூத்து? அவள் பிறந்த வீட்டுக்கு வந்தது பெருந் தவறாகிவிட்டதே.

''என்னம்மா யோசிக்கிறே?''

''அவரைக் கேட்கணும் அப்பா... அவர் கொடுத்தா நான் வாங்கித் தரேன்'' சட்டென்று அங்கிருந்து எழுந்து உள்ளே சென்று விட்டாள். அப்பொழுதுதான் அவளுக்குத் தோழி யசோதாவின் நினைவு வந்தது. பிறந்த வீட்டவர்களின் கோரிக்கையிலிருந்து தப்ப... அதுதான் வழி என்று தீர்மானித்தாள்.

மூலைக்கடை தொலைபேசி மூலம் தோழியைத் தொடர்பு கெண்டாள்.

''வந்துட்டியா? ஏன் உடனே சொல்லலை. பரவாயில்லை.. இப்பவே கார் எடுத்துக் கொண்டு நான் வரேன். உன் வீட்டில் சொல்லிவிட்டு, பெட்டியை தூக்கிகிட்டு என்னோடு புறப்படு. என் வீட்டிலே பத்துநாள் தங்கிட்டுப் போகலாம்'' உற்சாகமாகத் தோழி பேசினாள்.

அரைமணி நேரத்திற்குள்ளே தோழி தங்கள் வீட்டு பென்ஸ் காரில் வந்து அவளை அழைத்துச் சென்று விட்டாள்.

யசோதாவின் புது வீடு... உண்மையாகவே மிக அழகாக இருந்தது. இந்த ஜென்மத்தில் இப்படி ஒரு வீட்டில் நாகரிகமாக அவளால் வாழ சாத்தியப்படுமா என்று ஏக்கம் மனதைக் குடைந்தது!

தனக்குத் தோழி தங்கக் கொடுத்திருந்த அறைக் குள்ளே வேலையாள் பெட்டியைக் கொண்டு வைத்ததும் கதவைத் தாளிட்டுக் கொண்டு பிரமிப்புடன் சுற்றிப் பார்த்தாள்.

அறை நடுவே கிடந்த பெரிய கட்டிலின் மீது மிருதுவான மெத்தை அறைக்குள்ளேயே அடங்கி விட்டிருந்த பெரிய குளியலறையில் உட்கார்ந்து குளிக்க, கண்ணைப் பறித்த ரோஜா வண்ணக் குளியல் தொட்டி டெலிபோன் ஷவர் - அருகில் மேனி மேல் போட பவுடர் சோப்பு சீப்பு இத்யாதி...

அப்பாடி என்ன சுகம், என்ன சுகம் என்று தனக்குள்ளே வியப்புடன் முணுமுணுத்துக் கொண்டாள்.

மலர் போன்று ஷவரில் தூவலாக விழுந்த நீரில் வெகு நேரம் குளித்தாள்.

பளபளத்த ஸ்டீல் தட்டுகளில் சமையல்கார ஆள் பவ்யமாக உணவு வகைகளைப் பரிமாறத் தோழியுடன் உட்கார்ந்து சுவைத்து சாப்பிட்டாள். பகலில் கொஞ்ச நேரம் படுத்து உறங்கினாள். மாலை பென்ஸ் காரில் பவனி வந்தாள். கலர் டி.வி. பார்த்தாள் வீடியோவில் ஆங்கில அடிதடி படங்களைப் பார்த்தாள். மிருதுவான

படுக்கையில்... உடல் நோகாது... ஆழ்ந்து உறங்கினாள். நாட்கள் சில நாசூக்காக இனிமையாக... தோழியின் உபசரிப்பிலே உல்லாசமாகக் கழிந்தன.

அன்று காலை... காபி பலகாரத்திற்குப் பின்தான் யசோதா அந்தக் குண்டைத் தூக்கிப் போட்டாள். "என் கணவர் கூட ஊரில் இல்லை என்பதைக் கவனித் திருப்பாய்" மெல்ல ஆரம்பித்தாள் அவள்.

"கேட்க நினைத்தேன் நீயே சொல்லிட்டே, அவர் எங்கே?"

"ஒரு மாதமாக கல்கத்தாவிலே இருக்கார். அவர் அண்ணன்கிட்டே பண விஷயமா போயிருக்கார். எங்க பிசினஸ் இப்போ கொஞ்சம் சிரமமான நிலையிலே இருக்கு... கொஞ்சம் கடன் ஏற்பட்டு விட்டது."

"கேட்க வருத்தமா இருக்கே...

"உன்கிட்டே நான் ஒரு உதவி கேட்கலாம்னு நினைக்கிறேன். உன் கணவர் கொஞ்சம் வசதியான வர்னு கேள்விப்பட்டு இருக்கேன். நானும், நீயும் ரொம்பப் பழகின தோழிகள்' எனக்குக் கட்டாயம் நீ உதவுவேன்னு தெரியும், ரொம்ப ஒண்ணும் வேண்டாம். இந்த வீட்டு மேலே ஏற்பட்ட கடன் தொகையைக் கட்ட... உன் கணவர் மூலம் எனக்கு ஒரு ஐம்பதாயிரம் கடன் வாங்கித் தர முடியுமா?"

அதிர்ந்து போனாள் சர்மிளா... இதென்ன வேடிக்கை... அம்மா ஐநூறு கேட்டாள் அப்பா பத்தாயிரம் கேட்டார். இவள் ஐம்பதாயிரத்துக்குப் போய் விட்டாளே. இன்னும் இரண்டு நாள் தங்கினால் இலட்சம்

கேட்டாலும் வியப்படைவதற்கில்லை என எண்ணி முறுவலித்தாள்.

''அதுக்கென்ன என் கணவரிடம் கேட்டுப் பார்க்கிறேன். கொடுத்தால் கட்டாயம் உதவி செய்கிறேன்'' என்றாள்.

அதற்குப் பிறகு அவளுக்கு அந்த பங்களா வாசம்... தாங்க முடியாத வேதனையாக இருந்தது.

தோழி பரிந்து உபசரித்த பாயசம் நாக்கில் கசந்தது. படுக்கை முள்ளாக உறுத்தியது. வீட்டைச் சுற்றிப் பார்க்கப் பார்க்க அவள் உள்ளத்தில் அருவருப்புத்தான் மிஞ்சியது.

இதென்ன போலியான கவுரவம் வரட்டு ஜம்பம். கையில் காசில்லாதபோது கடன்பட்டு வீட்டை வாங்க வேண்டுமா?...

அவளுக்குத் தன் புக்ககத்தின் நினைவு வந்து விட்டது. அவள் கணவன் அருண்... கடன் வாங்கல் கொடுக்கலில் ரொம்பக் கண்ணடிப்பானவன். அவர்களது கிராமத்து வீட்டில் ஏ.சி. அறை இருக்கவில்லை. படுக்கையில் ஃபோம் மெத்தை இல்லை. ஆனால், சுற்றிலும் கடன் வைத்துக்கொண்டு அந்தத் திகிலில் அவர்கள் வாழ வில்லை.

வாசலில் கிடந்த மிதியடியைக் கூட அருண் தன் வியர்வையை வடித்து உழைத்து சம்பாதித்த காசில் வாங்கியிருந்தான். வீட்டில் எந்தப் பொருளும் கடன் பட்டு வாங்கியவையே அல்ல...

நாளைக்குக் கடன்காரன் வாசலில் வந்து நின்பான் என்ற அச்சமின்றி அருண் இருந்தான். அவள் பணத்தின்

கவலை தெரியாது விலைவாசிகளைப் பற்றி அரண்டு போகாத எத்தனை நிறைவுடன் வாழ்ந்தாள்.''

இவைகளை அவள் ஏன் இதுவரைத் தெரிந்து கொள்ளவில்லை?

அதிக நாள் தோழி வீட்டில் தங்குவது ஆபத்து என்ற வரை அவள் மெல்ல அடுத்த இரண்டு தினங்களில் அங்கிருந்து புறப்பட்டு விட்டாள்.

வீட்டிற்குள் நுழைந்தவளுக்கு ஒரு தந்தி காத்திருந்தது. ''சந்திரன் வருவான் உடனடியாக அவனுடன் புறப்பட்டு வரவும். அவசரம் பகவதி...''

தந்தியைப் படித்துப் பதறிவிட்டாள் அவள். அவசரம் என்றால் என்ன? ஏன் மாமியார் தந்தி கொடுத்திருக்கிறாள். அப்படியென்றால் அவள் கணவனுக்கு என்ன நேர்ந்து விட்டது? ஆபத்து - அவசரம் என்றபோதுதான் அவள் பூரணமாகப் புரிந்து கொண்டாள்.

அவள் அருணை எவ்வளவு ஆழமாகக் காதலிக் கிறாள் என்பதை அப்பொழுதுதான் அவள் அறிந்து கொண்டாள்.

என்ன முட்டாள்தனம்? பிறந்த வீட்டில் என்னவோ சுகம் கிடைக்கப் போகிறது என்று எண்ணி அன்பான கணவனை விட்டுவிட்டு... ஐயோ, அவருக்கு என்ன வந்து விட்டது... ஆண்டவனே! என எண்ணித் தாங்க முடியாது அவள் விம்மி அழுதுவிட்டாள்.

5

அருணின் தம்பிகளில் சந்திரன்தான் பெருத்த வாயாடி. கல்லூரி விடுமுறைக்கு வீட்டுக்கு வந்து விட்டால் வீடு கலகலத்துப் போகும். அண்ணியிடம் வேடிக்கையாகப் பேசி சிரிப்பு மூட்டிக்கொண்டிருப் பான். பஸ்ஸில் பயணப்பட்டு அன்று மாலை அங்கு வந்து சேர்ந்தவன், பயணக் களைப்பில் முகம் சோர்ந்து இருந்தான். மிகவும் பயந்தவன் போலக் காணப்பட்டான்.

வந்தவனுக்கு சாப்பிடக் கொடுக்க அதுசமயம் அந்த வீட்டில் எதுவும் இருக்கவில்லை, காப்பிக்குப் பால் இருக்கவில்லை. அருகிலிருந்த ஹோட்டலுக்கு அவனை அழைத்துச் சென்று காப்பி, தோசை வாங்கித் தந்து உபசரித்தாள் சர்மிளா

''என்னப்பா தம்பி! என்ன சங்கதி'' கேட்பதற்குள் அவளுக்குப் பீதியால் வாய் உலர்ந்து போனது.

பதில் பேசாது... கண் கலங்கிப் போனான். ''அண்ணா நேத்துக் காலை... தோட்டத்து வேலை செய்யும் போது... கிணற்றடியிலே கல் தடுக்கி... விழுந் துட்டா... திணறினான் சந்திரன். தோசை விள்ளலை விழுங்க முடியாது தவித்தான்.

''ரொம்பக் காயமோ?'' பதறிவிட்டாள் அவள்.

''சுமாரான காயம். அத்தோட காய்ச்சலும் வந்து விட்டது. அம்மா ரொம்பக் கவலைப்படறாங்க. பாட்டிக் கும் உடம்பு நல்லா இல்லை... உங்களைக் கையோடு கூட்டிவரச் சொன்னாங்க.''

''யார் அழைச்சிட்டு வரச் சொன்னாங்க?''

''அம்மா தான் ரொம்பக் கவலைப்பட்டு உங்களை கூட்டி வரச் சொல்லி தந்தி அடிக்கச் சொன்னாங்க. உடனே புறப்பட்டு பஸ்ஸிலே வரச் சொன்னாங்க. அண்ணாவுக்கு காயத்துல மூஞ்சி ரொம்ப வீங்கிப் போயிருக்கு.

''டாக்டர் பார்க்கிறார் இல்லையா அவர் என்ன சொன்னார்?''

''காய்ச்சலுக்கு ஊசி போட்டார். இரண்டு வாட்டி வந்து போனார்... அண்ணி, எனக்கு அண்ணாவைப் பார்க்கவே வேதனையா இருக்கு...'' மேலே பேச முடியாது அவளை இரக்கமாகப் பார்த்தான்.

''உயிருக்கு ஆபத்து ஒண்ணும் இல்லையே.''

''காய்ச்சலில் அண்ணன் வேதனையோடு முனகிறதைப் பார்த்தால் ரொம்பக் கஷ்டமாயிருக்கு. எனக்குத் தெரிஞ்சி அண்ணன் நோய் நொடின்னு படுத்ததே கிடையாது. அண்ணனையும், பாட்டியையும் ஒரே சமயம் கவனிக்க முடியாம அம்மா திண்டாடறாங்க. வீடுவீடாகவே இல்லை. அண்ணி, ஒரே குழப்பம். மாலனும், நானும் கல்லூரிக்கு ஒரு வாரம் லீவு போட்டுவிட்டு கடையையும், மத்த சங்கதிகளையும் கவனிச்சுக் கொள்றோம்.

அவள் வீடு அவள் கணவன்... என்ற கடமை உணர்வு நெஞ்சை அமுக்கியது. ஒரு கணம் கூட அவள் தாமதிக்கக் கூடாது. இரயிலில் டிக்கெட் கிடைக்காவிடில் இரவு பஸ் பிடித்தாவது ஊர் போய்ச் சேரவேண்டும். கீழே விழுந்த காயங்களுடன் காய்ச்சலில் கிடக்கும் கணவனைக் கவனிக்காது, வீட்டைக் ஒழுங்கு

செய்யாது... இங்கே வெட்டியாக அவளுக்கு இனி வேலை என்ன...?

நெடுமரம் போன்ற கணவன் துணை நிழலில் வாழ்கின்ற அவள், அந்த மரத்தைத்தானே பாதுகாத்துப் பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும்...

இருக்கும் போதே பிறந்தகத்தில் வரவேற்பு இப்படி இருக்கிறது. கையில் காசில்லாது... கணவன் இல்லாது... அங்கே வந்து விட்டால்... என்ன விதமான வரவேற்பிருக்கும்?

உடல் பயத்தில் நடுங்குவதை உணர்ந்தாள். அவளது வாழ்க்கை வருங்காலம் என்ற நினைவுகள் அவளை உசுப்பி விட அவள் பரபரத்தாள்.

''தம்பி! நாம உடனேயே கிளம்பி விடுவோம். தாமதம் செய்ய வேண்டாம்'' என்றாள்.

அம்மா ஒப்புக்காகச் சொன்னாள்.

''பாவம் சந்திரன். பஸ் பயணத்திலே அலண்டு போயிருக்கான். ஒரு நாள் கழிச்சு ஊருக்குப் போகப் படாதோ?''

''காயம் அப்படி ஒண்ணும் பலமானதாக இல்லையே - ஏன் அவசரப்படறே. போகிறதுக்கு முந்தி... உன்கிட்டே மீதி பணம் இருந்தால் ஒரு இருநூறு ரூபாய் கைமாத்து கொடுத்துட்டுப் போம்மா. நாளைக்கு மளிகை சாமான் கடனைக் கட்டாயம் அடைக்கணும். நீயும் அக்காவும் வந்ததாலே இந்த மாசம் எனக்கு மளிகை சாமான் அதிகமா செலவாகி விட்டது.''

இதற்குமேல் கேட்கப் பிடிக்காது... பர்சிலிருந்து இரண்டு நூறு ரூபாய் தாள்களை இழுத்து அம்மா கையில் அழுத்தினாள்.

அப்பா அருகில் வந்து தாழ்ந்த குரலில் இரகசியம் பேசினார்.

''டாக்டர் வந்து கவனிக்கிறாரே ஏன் கவலை?'' என்று லேசாக அதட்டிவிட்டு ''மறக்காதேயம்மா... மாப்பிள்ளைக்குக் கொஞ்சம் குணம் ஏற்பட்டதும், நான் கேட்ட பணத்தைப் பற்றி சொல்லி சீக்கிரம் ஏற்பாடு செய்.''

உள்ளேயிருந்து வந்த அக்கா வித்யா அவளை விட்டு வைக்கவில்லை. ''சர்மிளா... நேத்து உன் பெட்டியைத் திறக்கும் போது பார்த்தேன். மேலே வச்சிருந்த வங்காள நூல் புடவை புதுசா இருந்தது. எனக்கு அதைக் கொடுத்துடு. பணம் பிறகு அம்மாகிட்டே கேட்டு வாங்கித் தரேன்.'' என்று குழைந்தாள்.

அம்மா பணத்துக்கு எங்கே போவாள்? அவள் பிழைப்பு கடனில் மூழ்கிக் கிடக்கிறதே... என்று வெறுப்பாக எண்ணியபடி புடவையை எடுத்து அக்காவிடம் கொடுத்தாள். அப்பா இத்தோடு ஊர் போய்ச் சேர்ந்தால் போதும் என்றவரை அவள் மனம் கசந்து போனாள்.

இரயிலுக்குப் புறப்படும் சமயம்... அடுத்த வீட்டு போனில் தோழி யசோதா அழைத்தாள்.

''ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறாயா? உனக்காக நான் நாளை டிராமாவுக்கு ரெண்டு டிக்கெட் வாங்கி வச்சிருக்கேனே, வரமுடியாதா? அட பாவமே! உன் கணவருக்கு ரொம்ப ஆபத்து ஏதும் இல்லையே? சரி உடனே போய்க் கடிதம் போடு... நான் கேட்டதை மறக்காதே எவ்வளவு சீக்கிரம் உன்னால் முடியுமோ அவ்வளவு விரைவாகப் பணத்துக்கு ஏற்பாடு பண்ணு.

போனை வைத்துவிட்டு வீட்டுக்காரிக்கு நன்றி தெரிவித்துவிட்டு, நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டாள். அப்பா... அம்மா அக்கா தோழி எல்லோருமே எத்தனை சுயநலக்காரர்களாக இருக்கிறார்கள்? எரிகிற வீட்டில் பிடுங்குவது ஆதாயம் என்பார்களே அதைப் போல அவளது கவலையையோ, மனக் குப்பத்தையோ பற்றி அக்கறை கொள்ளாமல் அவரவர்களுக்கு அவரவர் தொல்லைதான் பெரிதாக இருக்கிறதே.

சில நேரங்களில் மனிதர்கள் சிலர் எத்தனை சுயநலவாதிகளாக இருக்கிறார்கள்... வெறுப்பும் கசப்புமாக... அவள் பிறந்த வீட்டை விட்டுக் கிளம்பினான்.

இரண்டாவது வகுப்பில்... உட்கார்ந்து கொண்டே தான் பயணம். இரவு முழுவதும் அவள் தூங்கவேயில்லை.

வீட்டையும் கணவனையும் நினைத்தபோது அவளது கண்ணில் நீர் பொங்கியது.

அவள் செய்தது மிகவும் தவறு - அவள் வீட்டையும், கணவனையும் விட்டு... பிறந்தகம் வந்ததும் ரொம்பவே தவறு...

ஒரு பெண்ணுக்குத் திருணம் ஆன பின்பு... அவள் கணவனது வீடுதான் இல்லம். அவனுடன் சேர்ந்த வாழ்க்கைதான் வாழ்வு...

இதைத் தெரிந்து கொள்ளவா... அவளுக்கு இப்படி ஒரு சோதனை?

துயரமாகப் பெருமூச்செறிந்தாள். இரவு முழுவதும் கண்களை மூடவே இல்லை... எப்பொழுது ஊர் போய்ச் சேர்வோம் என்ற நினைப்பு மனதை விட்டு அகலவே இல்லை.

6

திருச்சிலியிருந்து சேலத்துக்கு விரைந்த முதல் பஸ் அவர்களைக் களத்துப் பேட்டை நிறுத்தத்தில் இறக்கி விட்டுப் போய்விட்டது. பொழுது புலர்ந்து லேசாக வெளிச்சம் பரவிக் கொண்டு வந்த நேரம், காவிரி ஆற்றில் ஸ்நானம் செய்துவிட்டு இடையில் ஈரவேட்டியும், தோளில் ஈரத் துண்டுமாக கிராமத்து ஆண்கள் சிலர் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவர் அவளை அடையாளம் கண்டு விசாரித்தார். ''பகவதி அம்மாள் மருமகதானே? பட்டணத்திலிருந்து வரியா? பிறந்த வீட்டுக்குப் போயிருப்பதாகக் கேள்விப் பட்டேன்'' புன்முறு வலித்தார்.

தலையை அசைத்தாள் சர்மிளா. அவரிடம் கணவனது உடல் நலனைப் பற்றி விசாரிக்கலாமா? அவளைப் பற்றித் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும் அந்தப் பெரியவருக்கு அருண் கீழே விழுந்து காயமடைந்து விட்டிருப்பது தெரியாமலா இருக்கும்.

நாக்கு வரை எழுந்த கேள்வியை அடக்கிக் கொண்டாள். சுற்றும் முற்றும் பார்த்தாள்.

வழக்கமாக அந்த இடத்தில் பயணிகளை கிராமத்துக்கு அழைத்துச் செல்ல வாடகை மாட்டு வண்டிகள் சில நின்று கொண்டிருக்கும். அன்று சோதனையாக ஒன்றைக்கூடக் காணவில்லை. நல்லா விடிஞ்ச பிறகுதான் வண்டிக்காரர்கள் வருவார்கள்.

பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடக்கத் தயாரானான் மைத்துனன் சந்திரன்.

வண்டி ஒன்று வருவதற்காக அங்குக் காத்துக் கொண்டு நிற்க அவளுக்குப் பொறுமை இல்லை.

நெடுங்சாலையினின்று உள்ளே இரண்டு கிலோ மீட்டர் தொலைவு கிராமத்தை நோக்கி ஓடிய மண் பாதையில், கால் புதைய - நடை தடுமாற அவள் சந்திரன் பின்னால் பரபரப்புடன் நடந்தாள். முன் போலிருந்தால் அவள் அந்தச் சங்கடத்தைத் தாளாது முணு முணுத்திருப்பாள்.

இப்போது அவள் மனம் ஓரேயடியாக மாறி விட்டிருந்தது. காயம்பட்டுக் காய்ச்சலுடன் கிடக்கும் கணவனைக் காணவேண்டும். அவனருகில் ஆதரவாக இருந்து உதவ வேண்டும் என்றதொரு ஆவேசமான ஆவல்.

அவர்கள் வீட்டு வாசலில் அன்றாடம் அவள் செய்த வேலையைத் துளசி செய்து கொண்டிருந்தாள்.

வாசலுக்கு நீர் தெளித்துப் பெருக்கி துளசி கோலம் போட்டுக்கொண்டு இருந்தவள் நிமிர்ந்து பார்த்தாள், 'அண்ணி வந்துட்டீங்களா?' மகிழ்ச்சியுடன் வரவேற்ற படி எழுந்து நின்றாள்.

வாசலில் சந்தடியைக் கேட்டு பகவதி ஓடிவந்து எட்டிப் பார்த்தாள் 'வாம்மா சர்மிளா' முகமெல்லாம் புன்னகையால் மலர அவளை வரவேற்றாள். ''எப்படி அத்தை அவர் இப்போ இருக்கார் ? ரொம்பக் காய்ச்சலா?'' கேட்டபடி கால் செருப்புகளை நடையில் கழற்றி வைத்து விட்டு முற்றத்தில் இறங்கிக் கால்களைக் கழுவிக்

கொண்டு, தாழ்வாரக் கோடியிலிருந்த தங்களது அறைக்கு விரைந்தாள்.

ஒருக்களித்துக் கிடந்த கதவைத் தள்ளித் திறந்து உள்ளே நுழையும் முன் பதட்டத்தில் மூச்சு நின்று விடும்போல அவளுக்கு ஒரே கலவரம்.

'யார் அது?' என்று முனகிய அருண் மெள்ள படுக்கையினின்று எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தான். ''நான் தான் சர்மிளா வந்திருக்கேன்'' என்று கூறியபடி அருகே சென்று, கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

கைகளை நீட்டி அவளது கரங்களை ஆர்வமாகப் பற்றிக் கொண்டான் அருண். அந்த அன்பு வரவேற்பு, அவள் நெஞ்சில் ஆனந்தத்தையும், அழுகையையும் ஒருங்கே உண்டாக்க... அவள் பேசமுடியாது கண்ணீர் பொங்க, எத்தனையோ ஆண்டுகளாக அவனைப் பிரிந்து விட்டவள் போலப் பதட்டமாக அவனது கரங்களைத் தன் கன்னங்களுடன் பொருத்திக் கொண்டாள்.

பொலபொலவென்று கண்ணீர்த் துளிகள் கொட்டின.

''என்னத்துக்கு அழுகிறே? எனக்கு ஒண்ணும் நேர்ந்துடலை. நீ வீட்டிலே உதவிக்கு இல்லாததால் காய்க் கூடையைத் தூக்கிக் கொண்டு கிணற்று மேடை வழியே இந்தப் பக்கம் வர முயன்றபோது...''

''நான் இருந்திருந்தால்... கனமான கூடையைத் தூக்கிக் கொண்டு அப்படிக் குறுக்கே வரவேணாம்னு தடுத்திருப்பேன் - நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம்... எனக்கு நல்லாவே புரிஞ்சுப் போச்சு!''

''நீ இருந்தா... தினமும் கிணற்று மேடையைச் சுத்தி வேலைக்காரியை சுத்தமா தண்ணிவிட்டுத் தேய்ச்சுக் கழுவச் சொல்லியிருப்பே.''

''புரிகிறது. கிணற்று மேடை ஓரத்திலே தண்ணி தேங்கி பாசிகட்டிப் போயிருக்கு... நீங்க பார்க்காம அதிலே காலை வச்சு வழுக்கி, அப்படியே தோய்க்கற கல் மேலே சாஞ்சு விழுந்து... அதன் கூர் நெற்றியிலே பட்டு... குடமா இரத்தம் கொட்டி... மயங்கிப் போய் விட்டீங்க... ஆமாம் டாக்டர் தையல் போட்டாரா? நான் ஊருக்குப் போனது எத்தனை பிசகு?'' சொல்லியபடி அவன் வலது நெற்றி ஓரத்திலே... ஒட்டப்பட்டிருந்த பிளாஸ்திரி துண்டத்தை விரல்களால் மெல்லத் தடவினாள்.

''இரண்டு நாள் கடைக்குப் போகாம தம்பிகளை அனுப்பிவிட்டு நான் வீட்டோட இருக்கவேண்டி வந்துட்டது. ஆமாம் உன் தலைவலி இப்போ எப்படி இருக்கு? அம்மா கிட்ட சொன்னேன். சர்மிளாவுக்குத் தகவல் ஏதும் அனுப்ப வேண்டாம் என்றேன். அவங்க எனக்குத் தெரியாம தந்தி அனுப்பிச்சு, தம்பியையும் அனுப்பிட்டாங்க. நேத்துக் காலையிலேதான் எனக்கு உண்மையைச் சொன்னாங்க... எனக்கு ஆபத்து ஒண்ணு மில்லே... பெத்தவங்க இல்லையா? காயம்பட்டு காய்ச்சல் வந்ததும் பயந்துட்டாங்க... கட்டிக் கொண்டவ நீ... அதனால... கலவரப்பட்டு ஓடி வந்து விட்டே'' புன்னகைத்தபடி அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டான்.

அதற்குள் வீடு அவளது வருகையால் அமர்க்களப் பட்டுப் போயிற்று. 'அண்ணி வந்து விட்டாங்களா?' கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த சின்ன மைத்துனன் ஈரத்துவாலையில் தலையைத் துவட்டியபடி உள்ளே ஓடி வந்தான்.

''சின்னம்மா வந்துட்டாங்களா?'' வேலைக்காரி பொன்னம்மாள் பல்லைக் காட்டினாள்.

''சர்மிளா வந்துட்டாளா? அப்பாடி நான் பிழைச்சேன்.'' என்று அறைக்குள் முடங்கிக் கிடந்த பாட்டி மகிழ்ச்சியுடன் எழுந்து உட்கார்ந்தாள்.

தோட்டத்துக் கொட்டிலில் கட்டியிருந்த பசுக்களுக்குக் கூட அவள் வரவு புரிந்து விட்டதுபோல 'அம்மா' என்று குரல் கொடுத்தன.

தன்னை எல்லோரும் கொண்டாடிக் கொள்வதைக் காண சர்மிளா மனம் நெகிழ்ந்து போனாள்.

அவள் வீடு அவள் கணவன் அவள் வாழ்க்கை என்ற உரிமை உணர்வில் ஒன்றிப்போய், அவள் மிக உற்சாகத்துடன் தன் வீட்டு வேலைகளையும், நோயாளிக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளையும் கவனித்தாள்.

வாழ்க்கையின் உண்மைத் தத்துவத்தைப் புரிந்து கொண்ட அவள் மனதில்தான் எத்தனை நிம்மதி!

ஒரு சில நாட்களில் அருண் பூரண குணமடைந்து விட்டான். காயத்தின் மீது டாக்டர் போட்ட தையலை எடுத்த பின்பு - அவன் கடையை கவனிக்கப் புறப்பட்டான்.

பாட்டி அகிலாண்டம் உடல் நலன் தேறி கைத்தடியை ஊன்றிக்கொண்டு மெல்ல நடக்கத் தொடங்கினாள்.

அன்று மாலை அவள்... தனக்குப் பத்திய உணவு பரிமாறிவிட்டு பாத்திரங்களை எடுத்துப் போக வந்த பேரன் மனைவியைப் பரிவுடன் தன் அருகே அழைத்தாள்.

''இந்தச் சாவியால் அந்த அலமாரியைத் திறந்து அடித்தட்டில் வைத்திருக்கின்ற சின்ன மரப்பெட்டியை

எடுத்துக் கொண்டு வா'' என உத்திரவிட்டாள். சர்மிளா தன்னிடம் கொடுத்த மரப்பெட்டியை மெல்லத் திறந்தாள் கிழவி.

''எனக்கு வயசும், வியாதியும் அதிகமாகிறதுக் குள்ளே என் சொத்துக்களையும், நகைகளையும் வித்து... எலலோருக்கும் சமமா அவங்க அவங்க பேரிலே வங்கியிலே கட்டிட்டேன். ஆனால், இந்தப் பெட்டியிலே என் சொந்த நகைகள் சிலதை மட்டும் பத்திரமா வச்சிருந்தேன். எனக்குப் பிடிச்சவங்களுக்கு இதைக் கொடுத்துடரதுன்னு என் முடிவு.''

தன்னிடம் பாட்டி நீட்டிய நகைப் பெட்டியை வாங்கிய அவள் கரங்கள் நடுங்கின.

''என்ன பாட்டி இது?'' வியப்பும், பிரமிப்புமாகக் கேட்டாள். ''நீ என்னை ரொம்ப நல்லா கவனிச்சுக்கிறே படுக்கையிலே நாராக் கிடந்த நான் இப்போ எழுந்து நடக்கிறேன். என் உயிர் பிரியு முன் நல்ல நினைவோட இருக்கச்சே உன்கிட்ட கொடுக்கணும்னு நினைச்சுக் கொண்டிருந்தேன். நாளைக்கு உன் புருசனோட பிறந்த நாள். அதனால் இதுகளை நாளைக்கு நீ போட்டுக்கோ... ஒரு நல்ல நினைவா இருக்கட்டும்...''

நெஞ்சுருகிப் போனாள் சர்மிளா. வீட்டுக்குக் கிழவி இன்னொரு பாரம் என ஆரம்பத்தில் நினைத்து, அரை மனதாகத்தான் பணிவிடைகளைச் செய்தாள். ஆனால், அகிலாண்ட பாட்டி அதைப் பெரியதொரு சேவையாக எடுத்துக் கொண்டு...

''பாட்டி!... எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை... மத்தவங்களுக்குக் கொடுக்காமே...'' என்று உணர்ச்சி வசத்தால் தடுமாறினாள்...

''இது என் பிரத்யேகமான பரிசளிப்பு - இதைப்பத்தி யாரும் குறை சொல்ல முடியாது. உனக்கு இதுகளைப் போட்டுக் கொண்டு வந்து எனக்குக் காட்டணும்'' பாட்டி உத்தரவிட்டபோது, நன்றி உணர்வில் நெகிழ்ந்து போய் கிழவியின் கரங்களைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

அன்று இரவு வீட்டுக்கு வந்ததும் அவளை ஒருறமாக அழைத்து மகிழ்ச்சியாகச் சொன்னான் அவள் கணவன்.

''நாளைக்குக் கடை விடுமுறை நாள் என் பிறந்தநாள் கூட. அதனாலே நான் டவுனிலே நடக்கிற ஒரு சினிமாவுக்கு உன்னைக் கூட்டிக்கொண்டு போகத் தீர்மானிச்சிட்டேன். நீயும், நானும் தனியாகப் போகப் போறோம். சரிதானே?'' என்றான்.

''நான் ஒத்துக்க மாட்டேன் - நம்ப வீட்டிலிருக்கும் எல்லாரும் சினிமாவுக்குப் போறதுனா நான் வரேன். பாட்டிக்குத் துணை வச்சுட்டுப் போகணும், மறக்கக் கூடாது'' என்றாள் புன்முறுவலுடன்.

''நீ தன்னந்தனியா என்னோட வரப் பிரியப்படு வேன்னு நினைச்சேன்?''

''ஆரம்பத்திலே அப்படி நினைச்சேன். ஆனால் இந்தக் குடும்பத்தவர்களைப் புரிஞ்சுகொண்ட பிறகு... அவங்க யாரையும் விட்டு எங்கேயும் தனியே போக மனசில்லே... பாசத்திலே பிணைஞ்சிருக்கும் இந்தக் குடும்பத்தைப் பிரிக்க எனக்கு விருப்பமே இல்லை.''

''உண்மையாவா சொல்றே?''

''உண்மையா சொல்றேன்... உங்களை நான் எவ்வளவு நேசிக்கிறேன். அதைப் போலவே இந்த வீட்டை நேசிக்கிறேன்... இந்தக் கிராமத்தையும் நேசிக்கிறேன்... போதுமா...?''

''போதாது''... என்று மகிழ்ச்சியுடன் கூவியபடி அவளைத் தன்னருகே இழுத்து அணைத்துக் கொண்டான்.

''அண்ணி எங்கே இருக்கீங்க. இங்கே வாங்கோ ஒரு சங்கதி'' என்று மைத்துனர்கள் இருவரும், துளசியும் கத்திக் கொண்டு உள்ளே வந்தனர். 'நாளைக்கு... அண்ணனது பிறந்த நாளுக்கு... பெரிய விருந்து தயாரிக்கணும் தெரியுமா...? உங்களுக்குக் கூட உதவ நாங்க மூவரும் தயார்'' என்று கத்தி அமர்க்களப்படுத்திய அந்தக் குடும்பத்தினரின்... பாசப் பிணைப்பில் ஒன்றிப்போன அவள் கண்கள் பனித்துப் போயின. வசந்தத்தில் ஒரு நாள் போது... அவள் அருணைச் சந்தித்தாள். ஆனால் இப்போது அந்தக் குடும்பத்தைப் புரிந்து கொண்ட மகிழ்ச்சியில் அவளது வாழ்க்கை நிரந்தரமான வசந்தமாகப் போகிறது என்பதில் சந்தேகம் இல்லை.

''கூச்சல் போடாதீங்க, வந்துட்டேன்'' என்று கணவனது பிடியிலிருந்து விலகி... கூடத்திற்குச் சிரித்தபடி ஓடினாள்.

★

குருவிக் கூடு

1

அலங்கார மேஜையின் ஆளுயரக் கண்ணாடி முன் அர்ச்சனா நின்று கொண்டிருந்தாள்.

ஞாயிற்றுக்கிழமை காலை வேலைக்கு விரைய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருக்கவில்லை.

கஞ்சி மொடமொடப்புடன் பெட்டி போட்ட ஆரஞ்சு வண்ணச் சேலையும், அதற்கேற்ற ரவிக்கையும் அணிந்து கெண்டு தலை முடியை வாரிக் கட்டிக் கொண்டு அவள் வெளியே புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள்.

ஆரஞ்சு வண்ண வாயில் புடவை அவளுக்கு மிகவும் எடுப்பாகத் தானிருந்தது.

சில தினங்களுக்கு முன் அவள் தனது அலுவலகத்திற்கு இதே சேலையைக் கட்டிக் கொண்டு போனபோது கௌதம் சொன்னது நினைவுக்கு வரவே தனக்குள் மெள்ளச் சிரித்துக் கொண்டாள்.

''இந்த நிறம் உனக்கு ரொம்பப் பொருத்தமாக இருக்கு - நீ அலுவலகத்தின் முன் பக்கத் தோட்டத்திற்குள் நுழையும்போது மாடியிலிருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தேன். நெருப்புப் பிழம்பு நடந்து வந்து கொண்டிருந்ததைப் போன்றதொரு பிரமிப்பு ஆமாம்! உண்மையில் நீ நெருப்புக்குச் சமமானவள் உன்னை யாரும் எளிதில் அணுகவே முடியாது கண்டிப்பும் கறாருமாக நீ நடந்து கொள்ளும் முறை எனக்கு ரொம்பவே பிடித்திருக்கு.''

அவள்... தன் உருவத்தைக் கண்ணாடியில் மேலும் கீழும் பார்த்தபடி லேசாக முறுவலித்துக் கொண்டாள். அவனோடு ஒப்பிடும்போது நிறத்தில் அவள் கொஞ்சம் மட்டந்தான். நிழலில் அமர்ந்து வேலை செய்தாள். அதனால் அவளது மாநிற மேனி வெய்யிலில் கருக்காது வெளுத்திருந்தது.

ஓங்கி உயரமாக, ஒடிசலாக இருந்தாள் அத்துடன் வயது தெரியாத ஓர் இளமைத் தோற்றம் அது அவர்கள் வீட்டுப் பரம்பரைச் சொத்து.

வரைந்து வைத்தது போன்ற புருவங்கள் வரிசைப் பற்கள், இடைவரை தொங்கிய வழவழவென்ற நீண்ட கூந்தல், அவளது தோற்றத்திற்குக் கவர்ச்சி ஊட்டின.

கௌதம் அவளைவிட உயரமாக இருந்தான். கொஞ்சம் பருமனான உடல் வாகு. சிரிக்கும் பொழுது தெரிந்த சிங்கப் பற்கள் முகத்திற்குக் களைகட்டின. தன் சுருண்ட கிராப்பு முடியை அவன் மேலே வழித்துவாரிக் கொண்டிருந்த விதம் அவளுக்கு ரொம்பவே பிடித் திருந்தது. எந்தவித உடை அணிந்தபோதிலும் அவனது

தோற்றம் நிறத்தில் எல்லாமே பொருத்தமாக இருப்பதாக அவளுக்குத் தெரிந்தது.

அவள் வேலை செய்த நிறுவனத்தில்தான் கௌதம் வேலை பார்த்து வந்தான்.

உமா கெமிகல்ஸ் என்னும் அந்தக் கம்பெனிக்கு கல்கத்தாவிலிருந்த தலைமை அலுவலகமும்-பெங்களூர், சென்னை இரண்டிலும் கிளை அலுவலகங் களும் இருந்தன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்தான் அவன் கல்கத்தாவிலிருந்தும் மாற்றலாகி உத்தியோக உயர்வுடன் சென்னைக்கு வந்து சேர்ந்திருந்தான். கம்பெனியின் விற்பனைப் பகுதியில் தலைமை அலுவலராக வந்து சேர்ந்த அவனைப் பற்றி மெல்லப் பல கிசுகிசுக்கள் காற்று வாக்கில் அவள் காதுகளில் விழுந்தன.

வேலைக்கு வந்து ஓர் ஆண்டுகாலம் ஆகியும் அவன் அவளை சந்திக்கும்போது வலியப் பேசவோ - யார் எனத் தெரிந்து கொள்ளவோ முற்பட்டதில்லை. அந்த அலுவலகத்திலிருந்த யாரிடமும் அவன் நெருங்கிப் பழக முயன்றதேயில்லை. பட்டும் படாமலுமாக மிகவும் விட்டேத்தியாகத்தான் இருந்தான்.

அவளைவிட உயர் அதிகாரியாக இருக்கிறோம் என்ற கர்வம் போலிருக்கிறது எனத்தான் எண்ணினாள்.

அந்த ஆண்டு கம்பெனியின் வருஷ விழாவின் விருந்தின் போது அவன் பக்கத்தில் அவள் அமர நேரிட்டது.

''என் பெயர் கௌதம்... நான் விற்பனைப் பகுதியில் போன ஆண்டுதான் வந்து சேர்ந்தேன்...'' என்று தன்னை அவன் அறிமுகம் செய்துகொண்டான்.

'எனக்குத் தெரியும் உங்களைப் பற்றிச் சில கிசுகிசுக்களைக் கூடக் கேள்விப்பட்டிருக்கிறேன்' என அவள் சொல்ல முடியாதே!

''என் பெயர் அர்ச்சனா நான் அக்கௌண்ட் செக்ஷனில் வேலை பார்க்கிறேன்... இந்த நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது...''

''நான் சென்னையைச் சேர்ந்தவன்தான்... கல்கத்தாவிலும், பெங்களூரிலும் வேலை காரணமாகக் கொஞ்ச காலம் தங்கியிருந்தேன்.''

''நானும் சென்னையைச் சேர்ந்தவள்தான்... இங்கேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறேன். காஞ்சிபுரத்தைத் தாண்டி வெளியூர் பக்கம் சமீபத்தில் போன நினைப்பே இல்லை.'' அவள் லேசாகச் சிரித்தாள். அவனும் சிரிப்பில் கலந்து கொண்டான்.

இப்படி மெள்ள ஆரம்பித்த சிநேகம்.

பின்னர் அவளைக் கம்பெனியின் வாயிற்புறத்துப் பெரிய தோட்டத்திலோ, மாடிப்படிகளிலோ, லிப்ட்டிலோ எங்கே கண்டபோதிலும் நேச பாவத்துடன் புன்னகைத்தான்.

அவளும் பதிலுக்கு முறுவலித்தாள்... பின்னர்... உணவு நேரத்தின் போது...

அவள் வேலை செய்த பகுதிக்கு எதேச்சையாக வருவது போல வரத் தொடங்கினான். அவள் மேஜை எதிரே வந்து உட்கார்ந்து பேச்சுக் கொடுத்தான்.

அவர்களது நட்பு வேகமாக விருத்தியடைந்தது.

ஒரு நாள் அவளைத் தன்னுடைய காரில்... அருகிலிருந்ததொரு ஓட்டலுக்கு டிபன் சாப்பிட அழைத்தான்.

நான்கு ஆண்டு அலுவலக அனுபவத்தில் அவள் எந்த ஆணுடனும் நெருங்கிப் பழக முயன்றதில்லை.

தோழமையில் மனம் கரைந்து போனதில்லை.

ஆனால் அவளுக்கு ஏனோ கௌதமிடம் ஓர் ஈர்ப்பு.

அவன் கேட்டதும் மறுக்காது துணிவாக, அவன் காரில் ஏறிக் கொண்டு அவனுடன் ஹோட்டலுக்கு டிபன் சாப்பிடச் சென்றாள்.

பின்னர் பலமுறை தொடர்ந்து பகல் உணவுக்கு அலுவலகத்தின் அருகிலிருந்த ஓட்டலுக்கு இருவரும் சேர்ந்து சாப்பிடச் சென்றனர்.

இன்னும் கொஞ்ச நாள் சென்றதும், துணிவு அதிக மானதும், காரில் கடைத்தெருக்களுக்குச் சென்று வந்தாள். பின்னர் தினசரி அலுவலகத்திற்கு வரும் போதும் வீட்டிற்குத் திரும்பும் போதும் அவனது காரிலேயே பயணப்பட்டாள்.

அலுவலகத்து மற்ற ஊழியர்கள் வாயை மூடிக் கொண்டு இருப்பார்களா? பேச ஆரம்பித்தனர்.

அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல ஒரு நாள் அவன் தன் பிறந்த நாளுக்குத் தன் பகுதி ஊழியர்கள் அனைவருக்கும் ஹோட்டலில் விருந்தளித் தான்.

அப்போதுதான் துணிவாகச் சொல்லிவிட்டான்.

''நானும் அர்ச்சனாவும் சில மாதங்களில் திருமணம் செய்து கொள்ளப் போகிறோம். உங்களது நல்லாசிகள் தேவை.''

அவ்வளவுதான். அதுவரை காரசாரமாக இருந்த வம்பு சப்பென்று போய்விட்டது.

'ஒருவரையொருவர் விரும்புகிறாங்க கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாங்க- இரண்டு பேரும் சம்பாதிக்கிறாங்க. குடும்பத்தைச் சமாளிக்க முடியும்... என்றவரை பேச்சு அடங்கிப் போனது. ஆனாலும் அவளது அத்தைக்கு அந்த சங்கதி தெரியாது. அவள் மறைத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

2

அத்தை அலமேலு அந்தக் காலத்து மனுஷியாகவே இன்னமும் இருந்து கொண்டிருந்தாள்.

சின்ன வயதிலேயே விதவையாகிப் போனவள்.

கணவன் விட்டுப் போன கணிசமான சொத்துடன் பிறந்தகத்திற்குத் திரும்பி வந்தாள். அண்ணன் குடும்பத்திற்குப் பெரிய ஆலமரமாக நின்றாள்.

அர்ச்சனாவின் சகோதரிகள் திருமணத்திலிருந்து, அம்மாவின் நோய்க்கு ஆஸ்பத்திரிச் செலவு வரை அத்தையின் கைப்பணம் தான் கரைந்தது. அவர்கள் வசித்த வீடே அத்தையின் சொத்து.

பெற்றோர்களின் மறைவுக்குப் பின் தன்னந் தனியாகிவிட்ட அர்ச்சனாவுக்குப் பெருத்த துணையாக அத்தை தான் அரவணைத்துக் கொண்டிருந்தாள்.

தான் பெற்ற மகளைப் போலப் பாசமும், பரிவுமாகத் தான் அவளைக் கவனித்துக் கொண்டாள்.

அலுவலகம் கிளம்பும் முன்... காப்பி பலகாரம் தந்து வாசல்வரை வந்து தினமும் வழி அனுப்பினாள்!

திரும்பி வந்ததும்... குளிக்க வெந்நீர் போட்டுத் தந்து சூடான சாப்பாட்டைப் பரிமாறி எத்தனை உபசாரம் செய்தாள்?

இத்தனைக்கும் வீட்டுச் செலவுக்கு என்று அவள் எதையுமே அர்ச்சனாவிடம் கேட்டதில்லை.

அர்ச்சனாவுக்குத்தான் அவமானமாக இருந்தது.

உழைப்பை வாங்கிக் கொள்வது போதாதது போல அத்தையின் சொத்தையும் சிறுகச் சிறுக அப்படி வாங்கிக் கொள்வது முறையல்லவே...

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை அத்தையிடம் அவள் தன் சாப்பாட்டுச் செலவிற்காகத் தந்து கொண்டிருந்தாள். அத்தை ஆரம்பத்தில் வாங்க மறுத்தாள்.

பின்னர் பொருள்களின் விலைவாசி உயர ஆரம்பித்தபோது தன் வட்டிப் பணத்திலே குடும்பத்தை நிர்வகிக்க முடியாது... அரை மனத்துடன் ஏற்றுக் கொண்டாள். கணவன் விட்டுப் போன பணத்திலே அந்தக் காலத்தில் வாங்கிய சின்னஞ்சிறு வீடு. காரைக் கட்டிடம் அது.

ஒரு காலத்தில் சாதாரணமானதொரு தெரு வீடாக இருந்தது.

இப்பொழுது பக்கத்திலேயே பல ஃபிளாட்டுகளும் - சிறப்பு அங்காடி ஒன்றும் தோன்றி விட்டதில் தெருவின் அந்தஸ்தும், வீடுகளின் தரமும் உயர்ந்து போனது.

அத்தை அலமேலு தன் வீடு - தோட்டம் - கோவில் என்ற மூன்றைத் தவிர... அதிகம் வெளியில் அலைகிறவள் இல்லை. அக்கம்பக்கத்தாருடன் நெருக்கமாகப் பழகி வம்பை விலைக்கு வாங்கிக் கொள்ளும் பழக்கமும் இல்லை. எனவே... அவளுக்கு அர்ச்சனாவின் நடவடிக்கையைப் பற்றி எதுவுமே தெரியாதிருந்தது ஆச்சர்யமே இல்லை.

நீண்ட நாட்கள் கௌதமைப் பற்றி அத்தையிடம் ஒளித்து வைக்க அர்ச்சனாவுக்கு மனமே இருக்கவில்லை.

அர்ச்சனா பிறந்தபோது அவள் தாய்க்கு உடல் நிலை ஆபத்தாகிவிடவே ஆஸ்பத்திரியில் சில நாட்கள் அதிகம் தங்க நேர்ந்தது. பிறந்த குழந்தையை வாரி தன் மடியில் போட்டுக் கொண்ட நாளிலிருந்து அத்தைதான் அவளை வளர்த்து ஆளாக்கியவள்.

அவளை ஏமாற்றுவது போல... உண்மையை ஒளித்து வைப்பது முறையா? என்ற குற்ற உணர்வு நெஞ்சை ரம்பமாக அறுக்க...

சொன்னால் அத்தை ஒப்புதல் தருவாளா? என்ற அச்சம் வாயைக் கட்டிப்போட,

அத்தைக்கு எதிராக அவள் திருமணத்தைத் தானே முடித்துக் கொண்டால், தள்ளாத வயதில் அலமேலு அந்த அதிர்ச்சியைத் தாங்குவாளா என்ற கவலையில்...

அவள் சில நாட்களாகத் தத்தளித்துக் கொண்டிருந் தாள்.

விதவையாகி வீட்டுக்கு வந்ததுமே அலு மேலுவைப் படிக்கச் சொல்லி அண்ணா வற்புறுத்தினார்.

ஆனால் அத்தை அடுப்பங்கரையை ஆக்கிரமித்துக் கொள்வதிலே சிந்தையாக இருந்தாள் அதன் பயன்?

அவளை ஒத்த அந்தக் காலத்துப் பெண்கள் படித்துப் பட்டதாரிகளாக இருந்த சமயம் அத்தை ஏனோ நாலு வார்த்தை படிக்கவும், எழுதவும் மட்டுமே தெரிந்து கொண்டு நிம்மதியாக இருந்து விட்டாள்.

லேசாகப் பவுடரை முகத்திலே ஒத்திக் கொண்டு, கண்ணாடியில் மீண்டும் அழகு பார்த்துக் கொண்டு நின்றவளை அத்தை... கூப்பிட்டாள்.

''அக்காவைப் பார்க்கப் போகணும்னு சொன்னியே நேரத்தோட காப்பி, பலகாரத்தை முடிச்சுக் கொண்டு வெய்யிலுக்கு முன் கிளம்பக் கூடாதா?'' அன்போடு கடிந்து கொண்டு அறைக்கள் எட்டிப் பார்த்தாள்.

தன் சகோதரனின் வேண்டுகோளுக்குட்பட்டு அலமேலு வெள்ளைப் புடவை அணிவதில்லை.

வண்ணப் புடவையும் வெள்ளை ரவிக்கையும் விபூதி நெற்றியுமாக வீட்டில் வளைய வந்து கொண்டிருந்தாள்.

''காப்பி ஆறிப்போகுது... எத்தனை தடவை கூப்பிடுவேன்...'' அலுப்பு தெரிந்த குரலில் அத்தை அதட்டியதும், பரப்பரப்புடன் தன் அலங்காரத்தை முடித்துக் கொண்டு சாப்பாட்டறைக்கு வந்தாள்.

அர்ச்சனா சம்பாதிக்கத் தொடங்கிய பின்னர் வாங்கிப் போட்ட நான்கு நாற்காலிகள் கொண்ட சின்ன மேஜை.

அத்தை எப்பொழுதும் தரையில்தான் அமர்ந்து சாப்பிடுவது வழக்கம்.

வேலைக்குப் போகும் பெண் நீ- புடவை நசுங்கி விடாமல் இருக்க, மேஜை முன் அமர்ந்து சாப்பிடணும் என்றால், பழக்கமில்லை என்று முரண்டு பிடிப்பாள்.

ஒரு சிறு சங்கதிக்கே... மறுப்பு தெரிவிக்கும் அத்தை, அவளது திருமணத்திற்கு ஒப்புதல் தருவாளா?

அத்தை அந்தக் காலத்துப் பெண்மணி தன் தனிமையைப் பற்றித் தீவிரமாக சிந்திக்காது... காலத்தைக் கட்டுப்பாட்டுடன் எப்படியோ ஓட்டிவிட்டாள்.

ஆனால் அர்ச்சனா... இந்தக் காலத்துப் பெண்.

இளமை இன்னமும் அழியாத வயது.

அவளை ஒத்தவர்கள்... கல்யாணம் செய்து கொண்டு கணவனும், மனைவியுமாக ஜோடியாகக் கடற்கரையில் உலாவுவதைப் பார்க்கும்போது எத்தனை முறை அவள் மனம் சங்கடப்பட்டிருக்கிறது.

அலுவலகம் போவதும் வீட்டுக்கு வருவதுமாக நாட்கள் நகர... இளமை கழிந்து, தலை நரைத்து, உடல் தளர்ந்து அத்தையின் வயதை எட்டி விடும்போது அத்தையும் காலமாகி அவள் தன்னந்தனியாக விடப்பட்ட போது... வாழ்க்கையை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும். மீதிக் காலத்தை எப்படிக் கழிக்க முடியும்.

இரவும் பகலும் இதே சிந்தனைதான்.

பஸ் நிலையத்தில் அன்றாடம் அவளைக் காரில் ஏற்றிக் கொண்டு சென்று, திரும்ப அலுவலகம் முடிந்ததும் காரில் அழைத்து வந்து தெரு முனையிலே இறக்கி விட்டுப் போய்க் கொண்டிருந்த கௌதமை, வீட்டுக்கு அழைத்துச் சென்று ஒருநாள் அத்தைக்கு அவள் அறிமுகம் செய்தாக வேண்டும்.

ஆண் வாடையே இல்லாத அவர்கள் வீட்டில்... அவனை வரவேற்பறையில் உட்காரவைத்து காப்பி உபசாரத்திற்குப் பின், அத்தை கௌதம் என்னோடு வேலை பார்க்கிறவர். இவரை நான் கல்யாணம் செய்துக்கப் போகிறேன் இந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு, நீங்கள் எங்களோடு இவரது வீட்டில் வந்து வசிக்கப் போகிறீங்க... சரிதானே என்று கேட்க வேண்டும்.

அத்தையின் முகம் குங்குமமாகச் சிவந்து போகும்.

கண்கள் நீரில் பளபளக்க வார்த்தைகள் வராது. உணர்ச்சி வசத்தில் தடுமாறிப் போவாள்.

'என்ன சொன்னே? கல்யாணம் பண்ணிக்கப் போகிறீயா?' நெருப்பை மிதித்து விட்டவள் போலத் திகைப்புடன் கேட்பாள். பின்னர்... பலவிதமான குழப்பங்கள். அத்தை கண்ணீருடன் பின் அறைக்குள் முடங்கிக் கொள்வாள். இப்படி ஒரு சிக்கலா என்று கௌதம் கலங்கிப் போவான். இதையெல்லாம் தவிர்க்க அக்கா சண்பகத்திடம் அவள் முன்னதாகப் பேசி... அவளது அபிப்பிராயத்தைக் கேட்டு, அத்தைக்கு ஆலோசனை சொல்ல அவளை ஏவிவிட வேண்டும்.

அவளது இரண்டு சகோதரிகளில் பெரிய அக்கா சண்பகம் உள்ளூரிலே வசதியாக வாழ்கிறவள்.

பத்தாண்டுக் காலம்தான் அவளது திருமண வாழ்வு நீடித்திருந்தது. எஸ்டேட் ஏஜன்சியில் வாரிக் குவித்துக் கொண்டிருந்த அவளது கணவர் மாரடைப்பில் திடீரென்று போய்விட்டார். ஆனால் அவளுக்கு அழகான தொரு பங்களாவையும், போக, வர உபயோகத்திற்குக் காரையும்- கணிசமானதொரு தொகையை வங்கியிலும்... வாடகைக்கு விட்டு வாழ இரண்டு ஃபிளாட்டுகளையும் விட்டுப் போய் விட்டிருந்தார்.

பிள்ளை குட்டியில்லாத தனிக்கட்டைதான் சண்பகம். செலவழிக்கப் பணம் ஏராளமிருந்தும் அவளுக்குத் தாராள மனம் இல்லை.

சின்ன அக்கா ரேவதி பம்பாயில் வாழ்ந்து கொண்டிருந்தாள். அவளது கணவன் நிறையத்தான் சம்பாதித்தார். இரண்டு குந்தைகள்; பம்பாய் வாசம்; அவளது பணத்துக்கு நாசம் விளைவித்துக் கொண் டிருந்தன. ஆனாலும் அவளுக்கு ரொம்பவே தாராள மனம். எப்பொழுதாவது அவர்களைப் பார்க்க பம்பாயிலிருந்து வந்தால் வெறும் கையுடன் வரவே மாட்டாள்.

"அர்ச்சனா! உனக்கு உள் பாவாடைகள் தேவையாக இருக்கும் என்று ஆறு வெள்ளைப் பாவாடைகள் வாங்கி வந்தேன். விலை மலிவுதான் ஆனால் உயர்ந்த ரகம். இங்கே கிடைக்காது. அத்தை உங்களுக்குப் பூனா புடவை ஒண்ணு என் பரிசாகக்கொண்டு வந்து இருக்கேன்."

''அக்கா... இவை எல்லாம் எதற்கு? வீணாகப் பணத்தை ஏன் அப்படி பாழாக்குகிறீங்க'' அவள் கடிந்து கொள்வாள்.

''பணம் இன்று வரும் நாளை போகும் உறவு அப்படியா? இரத்த பாசத்துக்கு முன் பணம் எம்மாத்திரம்'' எனத் தர்க்கிப்பாள்.

அவள் தந்தை, பெண் கல்வியில் மிகவும் மதிப்பு உடையவராக இருந்தார். பெண்கள் எல்லோரும் படித்துத் தொழில் கல்வி பயின்று, தம்மையே தாம் காத்துக் கொள்ளும் திறன் உடையவர்களாக இருக்க வேண்டும் என்று தீவிரமாக எண்ணியவர்.

சகோதரி படிக்க மறுத்துவிட்டாள் என்ற மனத்தாங்கல் அதற்கு ஈடு செய்யும் வகையில் தமது மூன்று மகள்களையும் அவர் பட்டதாரியாக்கினார். அதில் மூத்த அக்கா மிக்க அறிவாளியாகி அவ்வப்போது குடும்பத்திற்கு ஆலோசனை சொல்லுமளவு புத்திசாலி எனப் பெயர் எடுத்தாள்.

சின்ன அக்கா படித்தும் பெருத்த கட்டுப் பெட்டியாக இருந்தாள். சாஸ்த்திர சம்பிரதாயங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பம்பாயின் நாகரிக வேகத்தில் எதிர் நீச்சல் போட்டபடி வாழ்ந்து கொண் டிருந்தாள்.

அவளைக் கேட்டால் ஆபத்துக்கு ஐம்பது ரூபாய்களை தாராளமாக அனுப்பி வைப்பாள்.

நல்ல ஆலோசனை எதுவும் அவளிடமிருந்து அடைய முடியாது.

''நமது குலத்துக்கு அடுக்குமா? இப்படி நீ நினைக்கலாமா?'' என்றெல்லாம் பதறிப் போவாள்.

பெரிய அக்கா அறுந்த விரலுக்கு சுண்ணாம்பு தர மாட்டாள். ஆனால் ஆலோசனைகளை அள்ளி வீசுவாள்.

அவளைத்தான் முதலில் கேட்க வேண்டும்- அவள் ஒப்புதல் தந்தால் பின்னர் அத்தையை அணுக வேண்டும்.

அவளுக்கு நினைக்க நினைக்க மனதில் ஒரு மூலையில் சுள்ளென்று கோபம் பற்றிக்கொண்டுதான் வந்தது.

அவள் நிலையில் ஓர் ஆண் மகன் இருந்தால், இப்படி மீன - மேஷம் பார்த்துக்கொண்டு தயங்குவானா?

நேரே அத்தையிடம் போய் விஷயத்தை வெளிப் படையாகச் சொல்லி... தானே விரைவில் காரியத்தை முடித்துக் கொண்டிருப்பான். உரிமை என்று வரும்போது ஆணுக்கு ஒரு தனிப்பட்ட சலுகை, பெண்ணுக்கு சில கட்டாயங்கள்.

படித்திருந்து என்ன பயன்? உத்தியோகம் செய்து என்ன பலன். ஆணும், பெண்ணும் என்றுதான் இந்த சமூகத்தின் பார்வையில் சரி சமானமாக நிற்கப் போகிறார்கள்?

உதட்டைக் கடித்துக் கொண்டு கடைசியாகக் கண்ணாடியில் தன்னைப் பார்த்துவிட்டு... வேகமாக வந்து சாப்பாட்டறை மேஜையருகே உட்கார்ந்து கொண்டாள்.

அத்தை ஆவி பறக்கும் இட்டலிகளைத் தட்டில் பரிமாறி வெங்காய சாம்பாரைக் கிண்ணத்தில் நிரப்பி அருகில் வைத்தாள்.

''நெய் கொஞ்சம் ஊற்றட்டுமா? என்ன ஒரே யோசனையாய் இருக்கே. அக்கா வீட்டுக்குப் போக அத்தனை குஷி உனக்கு.

''மகராஜி அடி நிலத்திலே வாழ்கிறாள். கார் வசதி இருக்கு. நம்மை வந்து எட்டிப் பார்க்கிறாளா? நமக்குப் போன் கிடையாது. போகட்டும். ஒரு கார்டு போட்டாவது விசாரிக்கிறாளா? அவளைப் போய் இன்னிக்கு என்ன பார்வை? வார முழுவதும் உழைக்கிறாய். ஞாயிற்றுக் கிழமையன்னிக்காவது சித்தே ஓய்வா வீட்டிலிருந்தால் என்ன?'' முணுமுணுத்தபடி காப்பி டம்ளரைக் கொண்டு வந்து வைத்தாள்.

அத்தைக்கு அக்காவை வேறு ஒரு வகையில் பிடிக்காது என்பது அவளுக்குத் தெரியும்.

பிறந்த வீட்டில் இருந்த காலத்திலும் சரி புகுந்த வீட்டிற்குப் போன பின்பும் சரி. அக்கா சண்பகம் தன் ஆலோசனைகளை அந்தக் குடும்பத்திற்கு வழங்கிய போது மிகவும் கண்டிப்பும் கறாருமாகப் பேசி அந்த ஆலோசனையை அவர்கள் கட்டாயம் மேற்கொள்ள வற்புறுத்தி வெற்றியடைவது வழக்கம். ''போய்ட்டு சட்டுனு திரும்பிடு. உன் அக்கா தனக்கு மட்டும் சமைச்சு வச்சிருப்பா. அந்தக் கருமிக்குத் தங்கை விருந்தாளியா வந்துட்டா கூட குக்கரை அடுப்பில் மறுபடி தூக்கி வைக்க மனம் வராது. சீரகரசம் பருப்புத் துவையல் புடலங்காய் பொரிச்ச கூட்டுன்னு இன்னிக்கு நம்ப வீட்டு சமையல்... அதனாலே அங்கே பசியோட உட்கார்ந்து இருக்காதே சீக்கிரம் வந்துடு...'' அத்தை அன்போடு கடிந்து கொண்டாள். 'சரி' என்று அவள் தலையை ஆட்டினாள்.

3

பெஸன்ட் நகர் செல்லும் பஸ்ஸிற்காக அர்ச்சனா காத்திருந்தாள். காலையில் மூடிக்கொண்டிருந்த கருமேகங்கள் எங்கேயோ மறைந்துபோக... வானம் பளிச்சென்று தெரிந்தது. சூரியன், எரிச்சலுடன் வீசத் தொடங்கிவிட்டது. உதட்டோரத்தில் பூத்த வியர்வையை கை குட்டையால் ஒத்திக்கொண்டு பஸ்ஸின் வரவை எதிர்நோக்கி நின்று கொண்டிருந்தாள்.

நேரம் யுகம் போலப் பிரமிப்பாக நீண்ட கனத்தது.

கொஞ்ச நாட்களாக ஏற்பட்ட பயண சுகத்தில் அவளுக்கு பஸ்ஸிற்குக் காத்து நிற்பது பெரிய சங்கடமாகத் தெரிந்தது. காலையிலும் மாலையிலும் கௌதமுடைய காரில் சவாரி செய்து பழக்கப்பட்டுப் போனவளுக்கு பஸ் பயணம் பெருத்த அலுப்புத் தரும் சமாச்சாரமாகத்தானிருந்தது.

தெரு மூலையிலிருந்த பெட்டிக்கடையில், வரும் போதே ஒரு பாக்கெட் பிஸ்கட்டை வாங்கிக் கொண் டாள். வழியில் எதிர்ப்பட்ட தள்ளு வண்டிக்காரரிட மிருந்து நான்கு சாத்துக்கொடிப் பழங்களை வாங்கித் தோள் பையில் போட்டுக் கொண்டிருந்தாள்...

அவள் போக வேண்டிய பஸ் பெருத்த குலுக்கலுடன் நிலையத்தில் வந்து நின்றது.

ஞாயிற்றுக்கிழமையில், அந்த வேளையில் கூட பஸ்ஸில் ஒரே கூட்டம். எங்கேயாவது கிளம்ப மாட்டோமா, எனத் தவிப்பவர்கள் போல ஆணும்,

பெண்ணும், குழந்தைகளுமாகப் புறப்பட்டு விட்டிருந்த கூட்டத்தில் திணறிக் கொண்டிருந்தது பஸ். ஒரு சிலர் இறங்கி முடிப்பதற்குள் இரட்டிப்பு மடங்கு கூட்டம் உள்ளே தன்னைத் திணித்துக் கொள்ள அதில் மூச்சுத்திணற எப்படியோ ஏறிவிட்டாள்.

அவளது அதிர்ஷ்டம் - பெண்கள் உட்காருமிடத்தில் ஜன்னல் ஓரமாக ஒரு காலியிடம் தென்பட முதலில் நகர்ந்து தொப்பென்று உட்கார்ந்து விட்டாள்.

இனி பஸ் எப்போது வேணுமானாலும் புறப் படட்டும் - எங்கே வேணுமானாலும் நிற்கட்டும்- எப்படி வேணுமானாலும் குலுங்கித் தொலையட்டும் என்ற விரக்தியில் டிக்கெட்டுக்கு சில்லறையைக் கொடுத்து விட்டு நிம்மதியாகச் சாய்ந்து கொண்டாள்.

மனதிலே எண்ணங்கள் அலைபாய்ந்து கொண் டிருந்தன.

அக்கா சண்பகம், பெஸண்ட்நகர் ஆரம்ப சாலையிலேயே...

பிரதான சாலையை ஒட்டியதொரு அழகான பங்களாவில் வசித்துக் கொண்டிருந்தாள்.

அவளது கணவர் தமது சொந்த உபயோகத்திற்காக அழகு பார்த்துக் கட்டிய வீடு அது.

அக்கா அதை மேலும் சீர்திருத்தி படு சுத்தமாகக் கண்ணாடி போல வைத்துக் கொண்டிருந்தாள்.

முன்னாலிருந்த சிறு தோட்டத்திலே... எத்தனை மலர்ச் செடிகள்?

பின்னாலிருந்த பூமியில்... சிறு காய்கறித் தோட்டம் போட்டிருந்தாள்.

ஒரு கொத்து கறிவேப்பிலையைக் கூட மரத்தி லிருந்து யாரும் பறித்துக் கொள்ள அனுமதிக்க மாட்டாள் அக்கா.

அதைப் போலவே வீட்டுக்குள்ளே முன்னறையில் அலங்காரமாகப் போடப்பட்டிருந்த சோபாக்களை, விருந்தாளிகளின் குழந்தைகள் அழுக்குப் பண்ண குதித்து கூத்தாடி நாசம் செய்யப் பொறுக்க மாட்டாள். குழந்தை குட்டிகளுடன் யாராவது அவளைப் பார்க்க வந்துவிட்டால்... வாசல் வராந்தாவில் போட்டு வைத்திருக்கும் பிரம்பு நாற்காலிகளிலே உட்கார வைத்துப் பேசி... பிரிஜ்ஜிலிருந்த குளிர் தண்ணீரை தம்ளரில் நிறைத்துக் கொடுத்து, சர்க்கரையாகப் பேசி சடுதியில் அனுப்பி விடுவாள். பூதம் காத்துக் கொண்டிருப்பது போல யாருக்காக அந்த வீட்டையும், மற்ற சொத்தையும் அவள் காத்து வருகிறாளோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்? பெருமூச்செறிந்தபடி அர்ச்சனா, பஸ் நிறுத்தத்தில் இறங்கி... குடையை விரித்துக் கொண்டு மெல்ல நடந்தாள்.

கேட்டை மெல்லத் திறப்பதற்குள்... அக்கா வீட்டு பொமரேனியன் ஆக்ரோஷமாகக் குரைத்துக் கொண்டு ஓடி வந்தது.

''ஸ்வீட்டி சும்மா இரு - என்னைத் தெரியலையா,'' என்று அதட்டி விட்டு கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே சொன்றாள்.

குரலைக் கேட்டதும்... குரைப்பதை விட்டு, நாய் மெல்ல வாலை ஆட்டிக் கொண்டு அவளைப் பார்த்தது.

அக்காவின் வீட்டுக்குள் அவள் வந்து சில மாதங்கள் ஆகிவிட்டிருந்தன.

அலுவலகத்தில் நேரம் கிடைத்தபோது வசதி கிட்டிய சமயம் அக்காவுக்குப் போன் செய்வதோடு... சரி.

அக்கா தானே வலிய போன் செய்து விசாரித்து விட மாட்டாள்; அப்படி ஒரு தனித்தன்மை.

முன்பு வந்தபோது... அக்காவின் நாய்க்குக் கூட ஒரு பொட்டலம் பிஸ்கட் வாங்கி வந்திருந்தாள்.

அத்தனை பிஸ்கட்டையும் லபக் லபக் கென்று கௌவிக் கடித்து விழுங்கிய அந்த நாய் அவளை இப்போது மறந்துபோய் விட்டு இருக்கிறதே?

வரவர உலகம் ரொம்பவே கெட்டுத்தான் விட்டிருக் கிறது. நாய் கூட நன்றியை மறந்து விடுகிறதென்றால்... என்று எண்ணிச் சிரித்தபடி...

அவள் வராந்தாவைத் தாண்டி அழைப்பு மணியை மெல்ல ஒரு தரம் சிணுங்க விட்டாள்.

ஸ்நானம் செய்த கூந்தலை... காய வைத்து வாரி முடித்துக் கொண்டு, சுத்தமானதொரு நூல் சேலை அணிந்து கொண்டு, தோட்டத்தை மேற்பார்வையிடக் கிளம்பிக் கொண்டிருந்த சண்பகம் கதவைத் திறந்தாள்.

''புதுத் தோட்டக்காரன்தான் வந்து விட்டான். ஸ்வீட்டி கோபத்துடன் குலைக்கிறதுன்னு நினைச்சேன்... வா... வா...'' என்று அழைத்தாள் அக்கா.

''நேத்தே ஆபீசிலிருந்து போன் செய்தேனே அக்கா. மறந்து போயிட்டீங்களா?'' செல்லமாக சிணுங்கிக் கொண்டு உள்ளே நுழைந்த அர்ச்சனா, காலணிகளை

ஓரமாகக் கழற்றி வைத்துவிட்டு, அக்கா சுட்டிக்காட்டிய ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.

''ஞாயிற்றுக்கிழமை கட்டாயம் வரேன்- போகன்வில்லாவைக் கத்தரித்து ஒழுங்கு செய்கிறேன்னு சொன்னான் தோட்டக்காரன். படு சோம்பேறி. மட்டம் போட்டு விட்டிருக்கிறான். இனிமேல் வரமாட்டான்'' என்று சலிப்பாகப் பேசியபடி நாயை உள்ளே அழைத்துக் கொண்டு வாயிற் கதவைத் தாளிட்டாள்.

பின் வராந்தாவில் நாயைத் தள்ளிக் கதவை மூடிவிட்டு, சகோதரியுடன் பேச எதிரே உட்கார்ந்து கொண்டாள்.

''காப்பி... ஜூஸ் ஏதாவது சாப்பிடறியா?'' அக்கா அருமையாகக் கேட்டாள்.

அத்தையின் எச்சரிப்பு நினைவில் நிழலாடியது.

''வேண்டாம்! இப்பதான் காப்பி, பலகாரம் சாப்பிட்டு கிளம்பினேன். கொஞ்சம் ஜில்லுன்னு தண்ணி கொடுத்தால் போதும்'' என்றாள்.

சண்பகத்தின் முகத்திலே நிம்மதி தெரிந்தது.

காலையில் காப்பி பலகாரம் தயாரித்து விட்டு பகல் உணவை சமைத்து மேடைமீது வைத்துக் காஸ் அடுப்பை மூடின பிறகு மாலை தேநீர் தயாரிக்கத்தான் மறுபடி திறப்பாள்.

இடையில் யாராவது வந்து தொலைந்து விட்டால், அவள் முகம் எரிச்சலில் நெருப்பாகி விடும்.

அக்காவின் போக்கு அர்ச்சனாவுக்கு ரொம்ப பழக்கமான சங்கதியாச்சே!

பிரிட்ஜைத் திறந்து தண்ணீர் பாட்டிலையும், சமையலறை மேடையிலிருந்து ஒரு தம்ளரையும் கொண்டு வந்து தாராளமாகக் காப்பி மேஜைமீது வைத்தாள் சண்பகம்.

தண்ணீர் பாட்டிலைத் திறந்து மெல்ல தம்ளரை நிறைத்தபடிக் கேட்டாள்.

''என்னவோ முக்கியமான சங்கதியை என்னிடம் பேசணும்னுதான் வரப்போரேன்னு சொன்னே. என்னன்னு தெரிஞ்சுக்கலாமா?''

தோள் பையிலிருந்த சாத்துக்குடி, பிஸ்கட் பொட்டலம் முதலியவற்றை எடுத்து மேஜையின் ஒரு பக்கம் வைத்தாள்.

''இதெல்லாம் என்னத்துக்கு... அதட்டினாள் அக்கா.

''வந்து பார்த்துக் கொஞ்ச நாளாகிறது வெறுங்கை யோட போகக் கூடாதுன்னு அத்தைதான் சொன்னாங்க.''

அத்தை அலமேலுவை அக்காவுக்கு அவ்வளவாகப் பிடிக்காது. சுத்த கட்டுப்பட்டி - ஊதாரி - உலக விவகாரம் தெரியாத பத்தாம் பசலி எனப் பல மட்டமான எண்ணங்கள் அவளைப் பற்றி உண்டு.

''அக்கா, தங்கைக்குள்ளே இந்தச் சம்பிரதாயங்கள் எதுக்கு. நீ சம்பாதிக்கின்ற காசைக் கெட்டியா பிடிச்சு வைச்சுக்கத் தெரியாம அத்தையைப் போல ஊதாரியா இருக்காதே'' அதட்டினாள்.

''அத்தை கிட்ட சொல்றதுக்கு முந்தி உங்ககிட்டே சொல்லி ஆலோசனை கேட்கணும்னுதான் வந்திருக்கேன் அக்கா. நான் கல்யாணம் செய்துக்க ஆசைப்படறேன்...''

சொல்லி முடிப்பதற்குள் அர்ச்சனாவின் முகம் சிவந்து போனது.

திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள் சண்பகம்.

எதிரே இருந்த தங்கையை ஏற இறங்கப் பார்த்தாள்.

இருபத்தேழு வயது... ஒரு வயதா?... இந்தக் காலத்தில் நாற்பது வயதுப் பெண்கள் கூட மாப்பிள்ளை தேவை என்று விளம்பரப்படுத்துகிறார்களே இந்த வயதில்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று பெண்ணுக்குத் திருமண வயதைக் குறிப்பிட்டு வைப்பது கட்டுப் பட்டித்தனம் தான்...

''என்னக்கா... பதிலே காணும்''... மெலிதாக முறுவலித்தாள் அர்ச்சனா.

''நீ விரும்பினால் நான் மறுப்புச் சொல்ல மாட்டேன். மாப்பிள்ளை பத்தி கொஞ்சம் சொல்ல முடியுமா?''

''என் அலுவலகத்தில் உயர்மட்ட அதிகாரியாக வேலை செய்கிறவர். கௌதம்னு பேர்.''

''வயது?'' அக்கா வியப்புடன் கேட்டாள்.

''முப்பத்தாறு வயசு. பார்க்க ரொம்ப இளமையாகத் தெரிகிறார்.''

''முப்பத்தாறு வயது வரை கல்யாணமாகாமலா இருக்கிறார்?''

''இல்லை அக்கா! கல்யாணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கிறவர். மூத்த பையனுக்குப் பன்னிரெண்டு வயதாகிறது. பெண்ணுக்குப் பத்து வயது.''

''மனைவியை இழந்தவரா?... இரண்டாந் தாரமாக உன்னை மணந்து கொள்ளக் கேட்டாராக்கும்... உனக்கும் வயசாச்சு - இந்த வயதில் சட்டுனு முதல் தாரத்துக்கு வரன் கிடைக்கிறதே கஷ்டம் மேலும் உன் நிலையில்...'' அக்கா முடிக்காது தங்கையைப் பார்த்தாள்.

அர்ச்சனா நெஞ்சம் துணுக்குற்றாள். விழுங்க முடியாத ஒரு வேதனை நெஞ்சை அடைத்தது. உண்மை ரொம்பவே கசந்தது.

''நம்ம வீட்டுப் பெண்களில்... ரேவதியைத் தவிர நாம் மூவரும் துர் அதிர்ஷ்டக்கட்டைகள். நம் அத்தை அலமேலு புருஷன் வீட்டுக்குப் போனவள். வெகு சீக்கிரம் விதவையாகிப் பிறந்த வீட்டுக்குத் திரும்பி விட்டாள்.

''என்னைக் கட்டிக் கொடுக்கும்போது அப்பா ரொம்பக் கை சளைச்சுப் போயிருந்தார்.''

''வரதட்சணை வேண்டாம் என்ற இடத்தில் இரண்டாம் தாரமாகத் தள்ளி விட்டார்.''

''பத்து வருஷம் கூட நான் வாழவில்லை?'' அக்காவின் குரலில் நடந்து போனதைப் பற்றி ஆங்காரம் தொனித்தது.

'அக்கா அப்பா ரொம்பவே வரன்களை உங்களுக்கு சல்லடை போட்டுச் சலிச்சுப் பார்த்தார் ஒண்ணும் சரிகட்டி வரவில்லை.

'மேலும் நீங்கள் கல்யாண வயதைத் தாண்டி விட்டிருந்தீங்க அதனால இரண்டாம் தாரத்தைத் தவிர, வேறு வரன் கிடைக்கவில்லை. இரண்டாவது

மனைவியாக நீங்கள் வாழ்ந்ததில் என்ன குறைஞ்சு போயிட்டீங்க.

'வசிக்க வீடும் போக்குவரத்துக்குக் காரும் எடுத்து செலவழிக்கக் கணிசமா வங்கியில் பணமும் அத்தான் வச்சுட்டுப் போயிருக்கிறார். என்னைப் போலவா?' என்று சொல்ல நாக்கு துடித்தது... தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு புன்னகைத்தாள்.

''உனக்கும், ரேவதிக்கும் அப்பா வரதட்சணை, சீர் எல்லாம் கொடுத்து அமர்க்களமா கல்யாணம் செய்தார். அப்பாவுக்கு ஆனாலும் ஓரவஞ்சனை ஆகாது...'' அக்கா கடந்து போன சங்கதிகளைப் பற்றி கசப்பு வழியப் பேசினாள்.

அர்ச்சனா, லேசாகச் சிரித்தாள்.

''அக்கா, அத்தை தன் பணத்தை வாரி இறைத்து எங்களுக்குக் கல்யாணம் செய்து வைக்க உதவினாள்.''

''உங்களுக்குக் கல்யாணம் நிச்சயமானபோது அத்தைக்குக் கணவன் வீட்டு சொத்து கையில் வந்து சேரவில்லை. அப்பாவின் ஆதரவில் தங்கியிருந்தாள் ஞாபகமில்லையா?''

''இருக்கு. தன் அண்ணன் மகள்களுக்கு அமர்க்களமாகக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்கிற வீண் பெருமை.''

''வரதட்சணை சீர் என்று வகையாக அப்பா எனக்காகச் செலவழித்தார். என்ன பயன் அக்கா?''

''கல்யாணத்தன்னிக்கே நான் விதவையாகிப்போய் விட்டேனே'' சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு

அழுகை தொண்டையை அடைத்தது. அவளது வாழ்க்கையில் ஏற்பட்ட அந்தத் துயரமான சங்கதியை யார் தொட்டுப் பேசினாலும் அவளுக்குத் துக்கம் தாங்க இயலாது. முள்ளைப் போல மனசை நெருடிய அந்தத் துயர சம்பவத்தைப் பற்றி அக்கா இப்போது ஏன் இப்படிக் கடுமையாகப் பேசவேண்டும். உதட்டைக் கடித்துக் கொண்டாள் அர்ச்சனா. டம்ளரில் நிறைத்து வைத்திருக்கும் தண்ணீரை வேகமாகப் பருகினாள். இன்னும் கொஞ்சம் தண்ணீரைப் பாட்டிலிருந்து தம்ளரில் நிரப்பி வைத்துக் கொண்டாள்.

நினைவில் நீர்வீழ்ச்சியாகக் கடந்து போன அந்தச் சங்கதி... வேகமாக வந்து நின்றது.

அவளுக்குப் பத்தொன்பது வயது தொடக்கத்தில் தான் திருமணம் ஏற்பாடாகியது. ஜாதகப் பொருத்தம் பார்த்து... வரதட்சணை - சீர் இத்யாதிகளுடன் சம்பிரதாயமாக அப்பா செய்து வைத்த திருமணம்.

அர்ச்சனாவுக்கு அமைந்திருக்கும் மாப்பிள்ளை பார்க்க அழகாகவே இருக்கிறான் இன்ஜினியருக்குப் படித்திருக்கிறானாம் கை நிறைய சம்பாதிக்கிறான். பத்தாயிரம் வரதட்சணையாம்... ஏன் கொடுக்கக்கூடாது? பையன் பின்னால் சம்பாதித்துக் கொட்டுவானே? என்றெல்லாம் உறவினர்களிடையே பேச்சு அடிபட்டது.

பெரியக்கா மாப்பிள்ளையைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள்.

எனக்கு அப்பா ரொம்பவே மோசம் செய்து விட்டார் நாற்பது வயதுக்கு மேலே... தலை நரைச்சு தாடி நரைக்கத் தொடங்கின மனுஷனைப் பார்த்துக் கட்டி வச்சார்.

கல்யாண வீட்டிலே சண்பகம் ரொம்பப் பொரிந்து கொண்டிருந்தாள்.

அப்பவே அத்தைக்கு ஒரு மாதிரியாகத்தான் இருந்தது.

இந்தப் பொறாமைக்காரி, கண்பட்டுத் தொலைக்கப் போகிறது... என்று கவலைப்பட்டாள்.

மாப்பிள்ளையை இந்திரன் சந்திரன்னு வந்தவங்க போனவங்கிட்ட ஏன் புகழ்ந்து தள்ளுறீங்க அண்ணா. ஒருத்தர் கண் போல இருக்காது. ஒட்டு மொத்தமாகச் சொல்லி வைத்தாள்.

கூடப் பிறந்த சகோதரியின் வாழ்க்கையைக் கண்டு வயிற்றெரிச்சல் படும் அகங்காரி சண்பகம் என்பது அத்தையின் தவிர்க்க முடியாத அபிப்ராயம்.

கல்யாணம் விமரிசையாகக் காமாஷி மண்டபத்தில் நடக்க ஏற்பாடாகியிருந்தது.

அதைப் பற்றியும் அக்கா... முணுமுணுத்தாள்.

இரண்டாம் தாரம் என்று அசட்டையாக திருநீர் மலையில் வச்சுக் காதும் காதும் வச்சாப் போல என்னை அப்பா கட்டிக் கொடுத்தார்.

உன் கல்யாணம் எத்தனை அமர்க்களப்படறது. ரிஸப்ஷனுக்கு மெல்லிசை கச்சேரியாம் தேனிலவுக்கு பெங்களூருக்குப் போகிறீர்களாமே! அதிசயப்பட்டாள் அக்கா.

தாலியைக் கட்டி முடித்தான் மாப்பிள்ளை மற்ற சம்பிரதாயச் சடங்குகள் முடிவடையும் முன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு பந்தலிலேயே சாய்ந்து விட்டான்.

நகருங்கள்! மாப்பிள்ளை மயக்கமாகி விட்டார் போலிருக்கு பலர் கத்த ஒரே கூச்சலும், குழப்பமுமாகி விட்டது.

யாரோ ஒருவர் ஓடிச் சென்று அருகிலிருந்த தொரு டாகடரை அழைத்து வந்தா.

மாப்பிள்ளையை அப்படியே தூக்கி சம்பந்திகள் தங்கியிருந்த அறை ஒன்றில் கட்டிலின் மீது கிடத்தி னார்கள்.

'அம்மா... அப்பா வலிக்குதே' என்று அலறினான் மாப்பிள்ளை.

அப்பண்டிசைட்டிஸ் போலத் தெரிகிறது உடனடி யாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் மாப்பிள்ளையை உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டும். டாக்டர் வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார். அப்பா கையைப் பிசைந்து கொண்டு இங்குமங்கும் அலைந்தார். அத்தை புடவைத் தலைப்பை வாயில் அடைத்துக் கொண்டு அப்பவே அழ ஆரம்பித்து விட்டாள்.

கழுத்தில் மாலையும் மஞ்சள் கயிறுமாக நின்ற அர்ச்சனாவின் உடல் வெடவெடவென்று நடுங்கியது.

முதல் நாள்வரை யாரோ என்றிருந்த மாப்பிள்ளை மூன்று முடிச்சை அவள் கழுத்தில் போட்டுவிட்டு... இன்பம் துன்பம்... ஆரோக்கியம் நோய் என்ற எல்லாவற்றையும் அவளுடன் பகிர்ந்து கொள்ளும் உரிமையை அடைந்து விட்டிருந்தான்.

தனியார் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் மாப்பிள்ளையை அழைத்துச் சென்றனர்.

பின்னர் கல்யாண மண்டபம் களை இழந்து கவலையில் மூழ்கிப் போனது. நாயனக்காரர் அவசரமாக மூட்டையைக் கட்டினார். தாலி கட்டி முடிந்ததும் மலர் இதழ்களை இடத்திலிருந்து தூவி விட்டு சாப்பாட்டு ஹாலை நோக்கி விரைந்தவர்கள் செய்தியைக் கேட்டு பாயசத்தை ஒரே வாயாகக் குடித்து விட்டு மோருக்குக் காத்திராது கையை உதறிக் கொண்டு எழுந்து விட்டனர்.

ஒரு சில நிமிஷங்களில் மண்டபம் காலியாகி விட்டது. நெருங்கிய உறவினர்களும், கவலை படிந்த முகத்துடன் சமையல் ஆட்களும், மற்றும் சிலரும் மட்டுமே இருந்தனர்.

அப்பா மருத்துவமனைக்குக் கூடப் போயிருந்தவர் வரும்வரை பச்சைத் தண்ணீரைக் கூடக் குடிக்காத கலவரத்தில் கண்ணீர் உகுத்தபடி கூடத்துச் சுவர் மீது சாய்ந்த படி உட்கார்ந்து இருந்தாள் அர்ச்சனா.

அவளைச் சுற்றி உறவுப் பெண்களின் கும்பல் நின்று... கிசுகிசுவென்று பேசியபடி புடவைத் தலைப் பால் கண்களை ஒத்திக் கொண்டு காத்துக் கொண் டிருந்தனர்.

''என்னத்துக்கு அழறே ஏதோ உடம்பு சரியில்லை ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டு போயிருக்காங் களே. நல்ல சேதி வரும் அழாதே'' என்று ஒருத்தி அதட்டினாள்.

''கல்யாணப் பொண்ணு கண்ணீர் விடக் கூடாது.'' என்று கடிந்து கொண்டாள் இன்னொருத்தி, ஆளுக்கு ஒரு விதமாகப் பேசிக்கொண்டு நேரத்தை நகர்த்திக் கொண்டிருந்தார்கள்.

பந்தலுக்கு வெளியே டாக்சி வந்து நிற்பதைக் கண்டு அக்கா சண்பகம்தான் விரைந்து சென்று பார்த்தாள்.

அப்பா இறங்கித் தள்ளாடியபடி உள்ளே வந்ததைக் கண்டதுமே பயந்து போனாள்.

''என்னப்பா... என்ன ஆச்சு'' சண்பகத்தின் ஓங்கிய குரல் எல்லோருக்கும் கேட்டது.

ஆண்களும், பெண்களும் பரபரப்பாக வாசல் பக்கம் ஓடினார்கள். ''போய்ட்டான்'' அப்பா போட்ட கூச்சலில் திடுக்கிட்டு எழுந்து நின்றாள் அர்ச்சனா. அவள் நெஞ்சு படபடத்தது. உடல் முழுவதும் நடுங்கியது. நா வறண்டு போனது. ''அர்ச்சனா! இந்தக் கஷ்டம் வரவேணாம் அம்மா நானாவது பத்து வருஷம் வாழ்ந் தேன்னு பேர் பண்ணினேன். தாலி கட்டியவுடனேயே உன் புருஷனுக்கு எமன் வந்துட்டானே.''

''இது என்ன கொடுமை... அக்கா'' சண்பகம் ஓங்கிய குரலில் அலற பெண்கள் எல்லோரும் கூடக் கூக்குரலிட்டு அழ... அக்கா ரேவதி அவளைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டு அழுது மயங்கி விழ.

அப்பப்பா... அந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்க்க முடியாத கோரம்...

''நல்ல பெண் இவள் நாகதோஷம் இருந்திருக்க வேண்டும் - பாவியின் கழுத்தில் மஞ்சள் கயிற்றைக் கட்டி முடிக்கு முன் யமன் தன் பாசக் கயிற்றைப் பிள்ளை யாண்டான் கழுத்திலே போட்டுட்டானே?

''ரொம்பத் துக்கிரி. இந்த மாதிரியான கோராமையை நான் கேள்விப்பட்டதே இல்லை.''

என்று பலர் இடித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

மாப்பிள்ளை அப்பெண்டிசைடிஸினால் இறக்க வில்லை. அர்ச்சனாவின் துர் அதிர்ஷ்டத்தில் இறந்து போனான் என்பது போல பலர் தூற்றினார்கள்.

அதைக் கேட்டுத் துயரம் தாளாது அவள் மனம் வெடிக்கும் வரை அழுத அழுகை கொஞ்ச நஞ்சமல்ல.

ஆனால் மாப்பிள்ளை வீட்டார்கள் மிகவும் நாசுக்காகவே நடந்து கொண்டனர்.

அப்பா தந்த வரதட்சணை சீர் எல்லாவற்றையும் திருப்பி விட்டனர்.

ஆனால் விதவை என்று அவளுக்கு ஏற்பட்டு விட்டிருந்த அவலத்தை அழிக்க இயலவில்லை.

அப்பா தம் மகள் விஷயத்தில் மிகவும் கண்டிப்பாகி விட்டார்.

எந்தக் காரணம் கொண்டும் அர்ச்சனா விதவைக் கோலம் ஏற்கக் கூடாது என்பது அவரது கடுமையான உத்திரவு.

பூவும், பொட்டும் பிறந்தவுடனேயே பெண்ணுக்குக் கிடைக்கும் உரிமைகள்.

அவைகளைக் கணவன் மறைவு எப்படி அபகரிக்க முடியும் என்பது அவரது வாதம்.

அப்பாவின் சொற்படி அர்ச்சனா தன் பெயரை மிஸ். அர்ச்சனா என்று தொடர்ந்து வைத்துக் கொண்டாள்.

எப்பொழுதும் போல வண்ணச் சேலைகளைத் தான் அணிந்து கொண்டாள். நெற்றியில் குங்குமப் பொட்டும், தலையில் பூவுமாக அவள் காட்சி அளித்தாள்.

அதற்குப் பின்னர் பாதியில் போன பட்டப் படிப்பைத் தொடர்ந்தாள்.

ஆரம்பத்தில் அவள் விதவைக் கோலம் ஏத்துக்காது இருப்பதைப் பற்றி உறவினர்களிடையே காரசாரமான பேச்சுக்கள் அடிப்பட்டன. பின்னர் தானே வம்புகள் அடங்கிப்போய் விட்டன.

பி.ஏ. பட்டம் பெற்றதும் அப்பா அவளை டைப்பிங் ஷார்ட் ஹாண்ட் பயிற்சிக்கு அனுப்பி வைத்தார். அவைகளில் தேர்ந்த பின்னர் தமக்குத் தெரிந்த இடத்தில் பகுதி வேலையில் அமர்த்தினர். இரண்டு ஆண்டு களுக்குப் பின்னர் ஒரு பெண்கள் பள்ளியில் தட்டெழுத்தராக வேலை பார்த்தாள். அப்பா தொடர்ந்து முயன்று தமது நண்பர் ஒருவரின் பலத்த சிபாரிசின் மூலம் உமா கெமிக்கல்சில் கணக்கு வழக்குப் பகுதியில் அவளை வேலையில் சேர்த்து விட்டார். ஆரம்பத்தில் தற்காலிக மான வேலையாக இருந்தது. மூன்றாண்டு காலத்திற்குப் பின்னர் நிரந்தரமாக்கப்பட்டது. ஆனால் அப்பா அந்த முன்னேற்றத்தைப் பாராது மகளுக்கு ஏற்பட்ட மகத்தான சோகத்தை எண்ணி உருகி மனம் புண்ணாகி ஒரு நாள் ஏற்பட்ட மாரடைப்பில் மறைந்து போய் விட்டார்.

''என்ன நான் கேட்டதிற்கு முழுதும் பதில் சொல்லலையே?''

அக்காவின் குரல் அவளை சிந்தனையினின்று விழிப்புறச் செய்தது.

''அவர் மனைவி உயிருடன் இருக்கிறாள். இங்கே சென்னையில் தான் இருக்கிறாள்.''

''அப்படின்னா?'' அக்கா திகைப்படன் கேட்டாள்.

''அவளை விவாகரத்து செய்து விட்டார்.''

''எதுக்கு விவாகரத்து செய்தாராம்.

''இருவரும் மனமொத்து வாழ முடியாத காரணத்தால். அலுவலகத்தில் உள்ள எல்லோருக்கும் இதைப் பற்றித் தெரியும்.''

''உன் சங்கதி தெரிஞ்சிருக்கும். ஆனால் நேரே கேட்க யாருக்கும் துணிவிருக்காது பரிதாபப்பட்டு வாயை மூடிக் கொண்டிருப்பார்கள். ஆனால் நீ அவருக்கு உன் நிலையை சொல்லிவிட்டியா?''

''எனக்கு அவரைப் பார்த்தபோது அவருக்கு என் மேல் விருப்பம் ஏற்பட்டது. நெருங்கிப் பழக ஆரம்பித்ததும் ஒருநாள் அவர் என்னிடம் எதையும் மறைக்காது தமது நிலையைப் பற்றி விளக்கமாகச் சொன்னார்.''

''உடனே நீ... உன் நிலையை அவருக்குச் சொன்னாயாக்கும்.''

''நானும் என்னைப் பற்றிச் சொன்னேன் - அவருக்கு அதைப் பற்றி மறுப்பு இல்லை.

''எப்படி மறுப்புச் சொல்லமுடியும். கௌதம் மனைவியோடு இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனாகி, பின் விவாகரத்து பெற்றுத் தனியாகி விட்டிருக்கிறவன் பெயருக்கு கல்யாணம் என்று நடந்து மணப்பந்தலிலேயே விதவையாகிக் போனவள் நீ. உன்னைக் கட்டிக்க ஒப்புவது பரந்த மனசோடு எடுத்துக்கொண்ட முடிவு இல்லை. ஒன்றும் அறியாத விதவை. இவளைக் கட்டிக் கொள்வதில் தப்பில்லை என்ற எண்ணம்தான். நீயும்

இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி விட்டிருந்தால் அப்போது மனிதன் கொஞ்சம் யோசித்திருப்பார்.''

''அக்கா நீங்க அவரைப் பார்த்தா இப்படிக் கடுமையாகப் பேசமாட்டீங்க.''

''மொத்தத்தில் நம் சமூகத்தில் ஆண்களுக்கு ஒரு நீதி, பெண்களுக்கு ஒரு நீதி என்ற முறை இன்னமும் வழக்கில் இருக்குது. போகட்டும். கௌதம் உன்னை மணந்து கொள்ள முன் வந்திருக்கிறார் நீயும் ஆசைப்படுகிறாய். நான் உன் பக்கமிருந்து கல்யாணத்தை முடித்துக் கொடுக்கத் தயார். நம் அத்தைதான் கட்டுப் பெட்டித் தனமாக ஏதாவது இடைஞ்சல் பண்ணலாம்.''

''அதே கவலைதான் எனக்கு அக்கா.''

''கவலைப் படாதே நான் வந்து கிழவிக்கு சரியான டோஸ் கொடுக்கிறேன்.''

''இன்னும் அவங்ககிட்டே நான் சொல்லலை பயமாயிருக்கு.

''நான்ஸென்ஸ் நீ என்ன பச்சைக் குழந்தையா இந்தக் கிழவி பொட்னு தலையைப் போட்டுட்டா நீ எப்படித் தனியா வாழமுடியும்?''

''அதுக்காக நான் கௌதமைக் கல்யாணம் செய்ய ஒத்துக்கல்லை. அக்கா.''

''புரிகிறது! நாங்க ரெண்டு பேரும் காதலிக்கிறோம் என்று சொல்ல வர. எனக்கு இந்தக் காதல் சமாச்சாரங்களில் நம்பிக்கை இல்லை. போகட்டும்.''

''காதலுக்கோ கட்டாயத்துக்கோ கௌதம் உன்னை மணந்து கொள்ள ஆசைப்படறார் நீயும் விருப்பறே.

இனி மேலே மீன மேஷம் எதுக்குப் பார்க்கணும்... சீக்கிரம் வருகிற முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை ஜாம் ஜாம்னு நடத்தினா போச்சி. ஆமா! டைவர்ஸ் வாங்கி மறுகல்யாணம் செய்துக்க வேண்டியதுக்கு உரித்தான காலம் வந்தாச்சா?''

''டைவர்ஸ் ஆகி... நாலு வருஷத்துக்கு மேலாச்சுதே.''

''பேஷ்! அப்படின்னா விரைவில் கல்யாணத்தை முடிக்க வேண்டியதுதான்.''

''இரு, இந்தச் சந்தோஷமான செய்தியைச் சொன்னதுக்கு உனக்கு இனிப்புக் கொண்டு வரேன்'' என்று எழுந்தாள் சண்பகம்.

சண்பகம் சமையலறை வலை பீரோவைத் திறந்து பத்திரமாக அலுமினிய டப்பாவில் வைத்திருந்த மைசூர் பாகு கட்டிகளில் இரண்டை ஒரு தட்டில் எடுத்து வைத்துக் கொண்டு வந்தாள்.

அவளது கணவர் உயிருடன் இருந்த காலத்தில் அந்த வீட்டில் இனிப்புகளுக்கு இடம் இருக்கவில்லை.

எக்கச்சக்கமானதொரு டயபிடிஸ் நோயில் மிகவும் சிரமப்பட்டார் அவர்.

'சர்க்கரை டப்பாவையே தூக்கி எறிந்துவிட வேண்டும்' என்று கண்டிப்பாக டாக்டர் உத்திரவிட்டிருந்தார்.

கணவனுக்காக சண்பகம் வாயைக் கட்டிக் கொண்டு வாழ்ந்தாள்.

அவளுக்கு இனிப்பு ரொம்பப் பிடிக்கும். மைசூர் லட்டு, ஜாங்கிரியென்றால் உயிர். கணவன் மறைந்த

பின்னர் அவள் அத்தனை நாளும் சாப்பிடாத இனிப்பு வகைகளை ஒட்டு மொத்தமாகத் தின்று முடிப்பவள் போல் அடிக்கடி ஏதாவது இனிப்புப் பண்டத்தை செய்து அலமாரியில் வைத்துக் கொண்டு காபி, டிபனுடன் சாப்பிட்டு மகிழ்ந்தாள்.

தனக்கென்று செய்து வைத்துக் கொண்ட மைசூர் பாகை தாராளமாகத் தங்கைக்கு வழங்கியதற்குக் காரணம் இருந்தது.

அவளுக்கு தன் கடைசி தங்கை அர்ச்சனாவைப் பற்றிக் கொஞ்ச காலமாகப் பெருத்த கவலை ஏற்பட் டிருந்தது உண்மையே.

அத்தை அலமேலு திடீரென்று செத்து வைத்தால் தனியாகி விட்ட அர்ச்சனா அக்கா நீங்கள்தான் வைத்து ஆதரிக்கணும். தன்னந்தனியாக இந்த வயதில் நான் எப்படி வாழ்வேன் என்று புலம்பிக் கொண்டு வந்து ஒட்டிக் கொண்டு விட்டால் என்ற கிலி.

எவனோ ஒருவன் அவளைக் கட்டிக் கொள்ள முன் வந்ததால் தொலையட்டும் நமக்குத் தொல்லை விட்டது... என்று உள்ளூர நிம்மதி.

அந்த நிம்மதியையும் மகிழ்ச்சியையும் கொண்டாடிய அவள் - மனம் உவந்து மைசூர் பாகையும், குளிர் பானத்தையும் தந்து உபசரித்தாள்.

விரைவாக வீட்டுக்குத் திரும்ப விரும்பினாள் அர்ச்சனா. பகல் உணவை முடித்துக் கொண்டு, அடுக்களையில் பாத்திரங்களைக் கழுவித் துடைத்து அலமாரித் தட்டுக்களில் வைத்து விட்டு, அதன் முன்னறையில் வந்து உட்காரும்போது அவள் கட்டாயம்

விஷயத்தைச் சொல்லிவிட வேண்டும். ஒத்திப் போடுவதில் பயன் இல்லை என்று எண்ணிக்கொண்டே பஸ் நிலையத்திற்கு நடந்தாள்.

நடுப்பகல் நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சூரியன் எரிச்சலோடு வெய்யிலை வாரி இறைத்துக் கொண் டிருந்தது. மகிழ்ச்சியில் பூரித்துப் பொங்கிக் கொண்டிருந்த அர்ச்சனா நிலாவில் நடப்பதுபோல கையிலிருந்த குடையைப் பிரித்துக்கொள்ள மறந்து வேக வேகமாக நடந்தாள்.

4

பஸ்ஸுக்கு வெகு நேரம் காத்திருக்க அவளுக்கு இப்போது பொறுமை இருக்கவில்லை. வீட்டுக்கு விரைய வேண்டும் என்று எண்ணியபடி கைதட்டி ஆட்டோவில் ஏறிக் கொண்டாள்.

எப்பொழுதும் போல அத்தை மேஜையைச் சுற்றி வந்தபடி பலமாக உபசரித்த வண்ணம் பகல் சாப்பாட்டைப் பறிமாறினாள். "கூட்டு எப்படி இருக்கு? ஒன்றுமே சொல்லாம சாப்பிடறியே" மனத்தாங்கலுடன் கேட்டாள்.

"ரொம்ப நல்லா இருக்கு அத்தை. இப்போ நான் உங்களுக்குச் சொல்லப்போற சங்கதியைக் கேட்டா ரொம்பப் பூரிச்சுப் போயிடுவீங்க. பூடகமாகச் சொல்லிப் புன்முறுவலித்தாள்.

''சொல்லு கேட்கிறேன்'' என்றபடி அத்தை மேஜையருகே ஒட்டியபடி வந்து நின்றாள்.

''நீங்களும் சாப்பிடுங்க. கூட பாத்திரங்கள் கழுவித் தர நான் உதவுகிறேன். பிறகு அந்தச் சங்கதியைப் பத்தி இரண்டு பேரும் மனம் விட்டுப் பேசுவோம்.''

''இப்படி ஒரு தொங்கல் சங்கதியை சொல்லிவிட்டு சாப்பிடுங்கோன்னா சாதம் தொண்டையில் கூட எனக்கு இறங்காது.

அன்போடு கடிந்து கொண்டதை அவள் பாராட்டாது போல இருந்து விட்டாள்.

ஈரக் கைகளைத் துண்டில் துடைத்துக் கொண்டு சமையலறைக் கதவை இழுத்துச் சாத்திவிட்டு முன்னறைக்கு வந்தாள் அத்தை.

சாப்பாட்டுக்குப்பின் தமிழ் நாளேடு ஒன்றுடன், களைப்புடன் தூங்சி வழிந்தபடி அத்தை உட்காரும் பழக்கம்.

''அத்தை! தூங்குகிறீர்களே - போய்ப் படுக்கையிலே நல்லா சாஞ்சுக்குங்கோ'' என்று தட்டி எழுப்புவாள் அர்ச்சனா.

''அட உட்கார்ந்த இடத்திலே தூங்கிட்டேன்...'' என்று அசட்டுப் புன்னகையுடன் எழுந்து தன் அறைக் கட்டிலின் மீது போய்ப் படுத்து விடுவாள்.

ஓய்வு நாட்களில் மாலை நேரத்துத் தேநீரை... அர்ச்சனாதான் தாயரிப்பாள்.

''என்னைக் கூப்பிடக் கூடாதா... உனக்கு ஏன் இந்த சிரமம்.

அத்தை முணகிக் கொண்டுதான் எழுந்திருப்பாள்.

தான் இருக்கும் வரை அர்ச்சனா... உடம்பை அலட்டிக் கொண்டு வீட்டில் எதுவும் செய்யக்கூடாது என்ற கண்டிப்பு.

இன்று அவளை, உண்ட களைப்பின் கோழித் தூக்கம் எட்டிப் பார்க்கவில்லை.

மனம் பரபரத்தது. என்ன சங்கதி அது? தெரிந்து கொள்ள ஆவல் அதிகமாகியது.

எதிரே அமர்ந்து கொண்ட அத்தையின் கையை ஆதரவுடன் பற்றிக் கொண்டாள் அர்ச்சனா.

''அத்தை, உங்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.''

''எதுக்கு ஒன்று? இதெல்லாம் என்ன பேச்சு?''

''அப்பாருக்குப் பின் என்னை ரொம்பவே கட்டிக் காத்து அரவணைச்சுக் கொண்டு வரீங்க.''

''இதைச் சொல்லத்தானா இத்தனை... தடபுடல் பண்ணினே?''

''இல்லை... இன்னொரு முக்கியமான சங்கதியைச் சொல்லத்தான் அத்தை! நான் கல்யாணம் பண்ணிக்கத் தீர்மானிச்சுட்டேன்!''

நிமிர்ந்து உட்கார்ந்தாள் அத்தை அலமேலு.

''இப்படி ஒரு நல்ல வார்த்தை உன் வாயில் எப்போ வரும்னு நான் காத்துக் கொண்டிருந்தேன்.''

''அத்தை! உண்மையா சொல்றீங்களா? உங்களுக்கு மறுப்பு இருக்கும்னு நான் பயந்து போய்... அக்காகிட்டே ஆலோசனை கேட்டேன்.''

''பயித்தியக்காரப் பெண்ணே, எனக்கு எதுக்கு மறுப்பு. நான் வெளிப் பார்வைக்கு கட்டுப்பட்டியாகத் தெரிகிறேன். ஆனால் மனசிலே நான் காலத்தோட ஒன்றிப் போயிருக்கிறவ. மத்தவர்களைப் போல என் கருத்துகளை நான் யார்கிட்டேயும் சொல்லிக்கற தில்லை. கல்யாணம் என்கிறது உன் வரை ஒரு நாடகமாப் போச்சு- நாலு குழந்தையைப் பெத்துக் கொண்டபின் நாற்பது வயதிலே கூட இந்தக் காலத்திலே சில பெண்கள் மறு விவாகம் செய்திருக்கிறார்கள். உன் போல ஒண்ணுமறியா சிறுசுகள் மறு கல்யாணம் பண்ணிக்கிறதிலே என்ன தப்பு?''

''அத்தை நீங்க ஏன் மறு கல்யாணம் செய்துக்கலே.''

அலமேலு உதட்டை சுழித்தாள். ''நான் கொஞ்ச காலம் என் கணவரோடு வாழ்ந்துவிட்டு வந்தவ சொத்தும் சுகமும் கொடுத்துட்டுப் போனாரே மகராசன்னு அவர் மேல ஓர் அன்பு அதனாலே, அண்ணா வற்புறுத்தியும் நான் பண்ணிக்கலை மறு கல்யாணத்தைப் பற்றி சிந்திக்கலை மேலும் என் காலம் வேறே, உன் காலம் வேறே இந்த பாகுபாடுகள் தெரியாத மட்டி முண்டம்னு தானே நீ நினைக்கிறே.

''அத்தை இப்படி சுலபமா என் ஆசைக்கு நீங்க ஒப்புதல் தருவீங்கன்னு எனக்குத் தெரியாது போச்சு.

''உன் அக்கா சண்பகம் வேணும்னா பொறாமைப் பட்டு உன் மறு விவாகத்தைப் பத்தி மட்டமாகப் பேசலாம். ஆனா நான் என்னைக்கும் உன் நலனையே நினைக்கிறவ. முந்தாநேத்தி கோவிலில் என் சிநேகிதி மங்களத்தோட பேசிக்கிட்டிருந்தேன்.

''அவகூட சொன்னாள். அர்ச்சனா ஏன் மறுபடி கல்யாணம் செய்துக்கக் கூடாது கால முச்சூடும் அந்தப் பெண் தனியாவா இருப்பாள்னு வருத்தப்பட்டா, உன் கிட்டே சொல்லி பத்திரிகையிலே மணமகன் தேவைன்னு ஒரு விளம்பரம் கொடுக்கணும்னு நான் நினைச்சேன். மங்களம் என்னைப் போலத்தான் படிச்சவ இல்லை. ஆனா என்னைப் போல் காலத்தை ஓட்டி வாழ்கிறவ...

அத்தை அலமேலுவின் கையைத் தன் கன்னத்தோடு பொருத்திக் கொண்டாள் அர்ச்சனா.

''அத்தை நான் கல்யாணம் செய்துக்க விரும்பற வரை இங்கே அழைச்சுக்கொண்டு வந்து உங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்பறேன். அவர் ரொம்ப நல்லவர்.'

''நீயும் ரொம்ப நல்ல பெண் ஆச்சே உன்னைக் கல்யாணம் செய்துக்க அவர் கொடுத்து வச்சிருக்கணும், அழைச்சுக் கொண்டு வா. ரெண்டு பேரையும் உட்கார்த்தி வச்சு பிரமாதமான விருந்து சாப்பாடு போடறேன்.''

''அத்தை!...'' பேச முடியாது உணர்ச்சி வசத்தில் தடுமாறினாள்.

அர்ச்சனா ''நன்றி அத்தை! உங்களுக்கு ரொம்ப நன்றி'' எனத் தழுதழுத்தாள்.

அன்று இரவு தாங்கமுடியாத சந்தோஷத்தில் அர்ச்சனா உறங்கவே இல்லை.

5

மறுநாள் அவள் பஸ் நிலையத்தில் கௌதமைச் சந்தித்துக் காரில் ஏறிக் கொண்டபோது மெள்ளச் சிரித்தாள்.

''என்ன நான் தெரிஞ்சுக்கலாமா'' வேடிக்கையாக அவன் கேட்டான்.

''இனி இப்படி பயந்து கொண்டு நான் பாதி வழியில் வந்து ஏறிக் கொள்ளத் தேவையில்லை. ராஜா போல நீங்க என்னை வீட்டு வாசலிலேயே இறக்கி விட்டுப் போகலாம்.

''எப்படி?'' வியப்புடன் கேட்டான்.

''அத்தையிடம் சொல்லி விட்டேன். நான் திருமணம் செய்து கொள்வது பற்றி அவங்களுக்குப் பூரண சம்மதம்.

''அச்சா? இன்னிக்கு சாயங்காலம் திரும்பும்போது உங்க வீட்டுக்கு வந்து அத்தைக்கு என் நன்றியைத் தெரிவிக்கலாமே.''

''அவசரப்படாதீங்க. அத்தை கொஞ்சம் நாள், நட்சத்திரம் பார்க்கிறவங்க. நல்ல நாளில் நல்ல நேரத்தில் நீங்க எங்க வீட்டுக்கு வரணும்னு எதிர்பார்ப்பாங்க.

''சரி, பஞ்சாங்கத்தைப் பார்த்துட்டு நீயே சொல்லிடு; என்னைப் பொருத்தவரை நான் இவைகளையெல்லாம் நம்புகிறதில்லை.

''நானும் நம்புகிறதில்லை. ஆனால் பாவம் அத்தையோ நாள், நட்சத்திரம் பார்க்கிறவங்க அவங்க மனசுப்படி செய்திடலாமே.

''நான் நினைச்சேன் வாசல்வரை வந்து உன்னை விட்டுப் போவதற்குப் பதில் உள்ளே வந்து உங்க அத்தை கையால ஒரு கப் காப்பியைச் சாப்பிட்டுட்டுப் போகலாம்னு ஆசைப்பட்டேன்.''

''ஒரு கப் என்ன? பல கப் காப்பிகளை இனி நீங்க எங்க வீட்டில் சாப்பிடப் போறீங்க. நான் வேணா ஒண்ணு சொல்கிறேன். இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட இன்று ஹோட்டலுக்குப் போய் டிபன் சாப்பிடுவோம் என்னுடைய ட்ரீட்டாக இருக்கட்டும்... ஓ.கே.

''ஓ.கே.'' என்றான் மகிழ்ச்சியுடன் கௌதம்.

அத்தை நாள் காட்டியைப் பார்த்து விட்டுச் சொன்னாள்.

''இந்த ஞாயிற்றுக்கிழமை நாள் நல்லா இருக்கு. அந்தப் புண்ணியவானை நம்ம வீட்டுக்கு வரச்சொல்லி விருந்து கொடுப்போம். அப்புறம் தினம் வரப்போக இருக்கலாம். ஆனால் ஒண்ணு, நல்ல காரியங்களை சீக்கிரம் செய்து முடிக்கணும்னு சொல்வாங்க. இந்தக் கல்யாண மாசத்திலேயே ஒரு நல்ல நாள் பார்த்து ஏதாவது கோவிலிலே நம்ப சக்திக்குத் தக்கபடி முடிச்சுடலாம்.''

அந்த ஞாயிற்றுக்கிழமை அத்தையின் வேண்டு கோள்படி கௌதம் காலை பத்து மணி அளவில் தன் காரை ஓட்டிக் கொண்டு வந்து கதவு அழைப்பு மணியை அழுத்தினான்.

அத்தைதான் சென்று கதவைத் திறந்தாள்.

வேட்டி சட்டை அலங்காரத்தில் பளிச்சென்று தெரிந்த அவனைப் பார்த்து அத்தை வியந்து போனாள்.

பார்க்க நல்லாவே இருக்கிறான் - நல்ல பதவியிலும் இருக்கிறான். இள வயசுக்காரன் போலத் தென்படு கிறான். அர்ச்சனா நன்றாகத் தேர்ந்தெடுத்திருக்கிறாள். மனதிற்குள் எண்ணியபடி ''வாங்கோ... உள்ளே வந்து உட்காருங்கோ'' என்று இனிமையாக வரவேற்றாள்-

கண்ணாடி முன் ஒருமுறை தன் அலங்காரத்தைப் பார்த்து விட்டு அர்ச்சனா வேகமாக ஓடி வந்தாள்.

''உங்களைப் பார்த்துப் பேசணும்னு அத்தை ரொம்ப ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாங்க உட்காருங்கோ'' என்று உபசரித்தாள்.

குளிர் பானத்தை டம்பளரில் நிறைத்து அத்தை கொண்டு வந்து முன்னறை மேஜைமேல் வைத்தாள்.

''சாப்பாடு ரெடியாகிக் கொண்டிருக்கிறது. தாகத்துக்குச் சாப்பிடுங்கோ. அர்ச்சனாவுடன் பேசிக் கொண்டிருந்தால்... நான் விரைவில் எல்லாருக்கும் பரிமாற முடியும்...'' என்று கூறிவிட்டு உள்ளே மறைந்து போனாள்.

''அர்ச்சனா! உங்க. அத்தையை எனக்குப் பார்த்ததுமே பிடிச்சுப் போச்சு.''

''உங்களை அத்தைக்குப் பிடிச்சுப் போச்சாம். உள்ளே போகுமுன் என்னிடம் அரைக்குரலில் சொன்னாங்க.

''இனி உங்கபாடு ரொம்பக் குஷிதான். அத்தை உங்களுக்குத் தினசரி விதவிதமான டிபன் செய்து வச்சுக் கொண்டு காத்திருப்பாங்க. ஞாயிற்றுக்கிழமை காப்பி பலகாரத்திலிருந்து இராத்திரி சாப்பாடு வரை இங்கே இருக்கட்டும்னு பிடிவாதம் செய்வாங்க.

''உடம்பு கொஞ்சம் பருமனாகிட்டான்னு நீங்க டயட்டிலே இருக்கீங்க. காலையிலே வாக்கிங் பண்றீங்க. அத்தை போடப்போர சாப்பாட்டில் உடம்பு ஊதிப் போகப் போரது... என்ன செய்யப் போறீங்களோ தெரியலை...'' களுக்கென்று சிரித்தாள்.

''எனக்கு இப்பவே பயமாத்தான் இருக்கு'' வேடிக்கையாகப் பேசிய கௌதம், கூடச் சிரித்தான்.

'மனம் விட்டு அர்ச்சனா சிரித்ததைக் கேட்டு எத்தனை காலமாச்சு. இனியாவது அவள் சிரித்துப் பேசி நல்லா வாழட்டும்' என்று எண்ணியபோது கண்கள் கலங்கிப் போனாள். புடவைத் தலைப்பால் கண்களை ஒத்திக் கொண்டு பரபரவென்று செயல்படத் தொடங் கினாள் அத்தை.

அர்ச்சனா சொன்னது அத்தனையும் உண்மை என்பதை உணர்ந்து கொண்டான் கௌதம்.

அலமேலு அம்மாளின் சமையல் மிகவும் பிரமாதமாகவே தான் இருந்தது.

வாழ்க்கையில் அவன் தனியான பின்னர் சாப்பாடு, தூக்கம், மன அமைதி அத்தனையும் இழந்து விட்டிருந்தான்.

சமையலறையில் விருந்து தயாரிப்பதில் மும்முர மாக இருந்த அத்தையின் காதில் அவர்களது பேச்சும், சிரிப்பும் லேசாகக் கேட்டன.

அர்ச்சனாவை சந்தித்த பின்னர் மனதிலே ஆனந்தம் வந்து குடி புகுந்து கொண்டது.

ஆனால்... அன்றாடம் அவன் வேலையாள் சமைத்துப் போட்ட அரைகுறை சாப்பாட்டைத் தின்று நாக்கு செத்துப் போயிருந்தது.

கப்பிலே ஊற்றி அத்தை உபசரித்துக் கொடுத்த எலுமிச்சம் பழ ரசத்தை இரண்டுமுறை கேட்டு வாங்கி ருதித்துக் குடித்தான். கோவைக்காய்த் துவையலை ருசித்தபடி மெல்லிய குரலில் தன் எதிரே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த அர்ச்சனாவிடம் கேட்டான்.

''இதுபோல உனக்கு நிச்சயமாக சமைக்கத் தெரியுமா?''

''புரிகிறது... ஒரு கணவனின் அன்பை வெறும் காதலால் மட்டும் பெற முடியாது. அவன் வயிற்றுக்கு வேண்டியதை சமைத்துப் போட்டுத்தான் அடைய முடியும்னு சொல்ல வர்ரீங்க'' சிரித்தாள் அர்ச்சனா.

சமையலறைப் பக்கம் திரும்பிக் கொண்டிருந்த அத்தை மெல்ல மேஜை முன் வந்து நின்றாள்.

''அர்ச்சனாவைப் பத்தி அலுவலகத்திலே உழைக்கிற பெண் அவ்வளவுதான் என்று தப்பா கணக்குப் போட்டு விடாதீங்க.''

''சமையலில் என்னை விட ரொம்பக் கெட்டிக்காரி. வீட்டை நேர்த்தியா வச்சுக்கத் தெரிஞ்சவ. இது ரொம்ப பழைய கட்டடம். ஆனா பார்த்ததும் உங்களுக்கு அப்படித் தோணியிருக்காது. ஏன்னா அர்ச்சனா சுவற்றுச் சாயத்திலிருந்து சன்னல் திரைவரை பார்த்து வாங்கி, என் கூட வீட்டை நீட்டா பண்ண உதவியிருக்கா!''

''அப்படியா'' புன்னகைத்தான் கௌதம்.

''அத்தோடு மட்டுமல்ல. உங்ககிட்ட பழகினா ளேன்னு தப்புக் கணக்குப் போட்டு விட முடியாது. அவளுடலைக் கூட யாரும் தொட முடியாதபடி ரொம்ப ஜாக்கிரதையா வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்.

''நாங்க ரொம்ப சாதாரணப் பட்டவங்க. ஆனால் எங்களுக்கு சில கொள்கைகள் உண்டு. எப்படி வாழணும்னு சில உறுதியான எண்ணங்கள் உண்டு.''

''அர்ச்சனாவை நான் நல்லாவே புரிஞ்சு கொண் டிருக்கேன். அவளை நான் ரொம்ப மதிக்கிறேன்.''

''ரெண்டு பேரும் விரும்புகிறீங்க. சேர்ந்து வாழுங்கோன்னு நான் வாழ்த்தறேன்.'' என்று தழுதழுத்த அத்தை சமையலறைக்குள் சட்டென்று புகுந்து கொண்டாள்.

பாயாசக் கிண்ணங்களை தட்டில் வைத்துக் கொண்டு வந்தவளின் கண்கள் சிவந்து காணப்பட்டன.

சட்டென்று உணர்ச்சி வசப்பட்டுப் போகும் குணமுடைய அத்தை அழுது விட்டிருக்கிறாள். அர்ச்சனா துணுக்குற்றாள்.

சிறிது பொழுதில் அவன் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

''அத்தையும், நீயும் அடுத்த வாரம் என் வீட்டுக்கு வரணும். சமையல் ஆள் ஒருவன் துணையோடு நான் வாழ்கிற கோலத்தை நீங்க பார்க்க வேண்டாமா?'' சிரித்தான்.

''அதுக்கென்ன அடுத்த ஞாயிற்றுக்கிழமை வருகிறோம்.''

''நான் வந்து அழைச்சுக் கொண்டு போறேன். நீங்க ரெண்டு பேரும் என் வீட்டிலே சாப்பிடறீங்க.'' சொல்லி விட்டுக் கிளம்பினான்.

உண்மையில் அர்ச்சனாவுக்கு அந்த வீட்டைப் பார்க்க வேண்டும் என்று உள்ளூர ஆசையாக இருந்தது.

கம்பெனி தந்திருக்கும் வீடு - வசதியாக வாழ்கிறான் என்று அவளுக்குத் தெரியும். ஆனாலும் திருமணமான பின், போய் அவனுடன் வாழப் போகிற வீட்டை முன்னதாகப் பார்க்க விரும்பினாள். ஏதாவது அவளுக்கு சௌகர்யக் குறைவாக அமைந்திருந்தால் அதை இப்பொழுதே சரி செய்யச் சொல்லலாமே என்பதுதான் எண்ணம்.

6

அந்த ஞாயிற்றுக்கிழமை வந்தது. விடியும் முன்பே எழுந்து இருவரும் தயாராகி விட்டனர்.

அன்று அவளுக்கு ஏற்பட்டிருந்த உற்சாகத்தில் காப்பி பலகாரம் சாப்பிடப் போவதில்லை. வெறும் காப்பியை ஒரு வாய் சாப்பிட்டு விட்டு முதல் நாளே கடைத்தெருவிலிருந்து வாங்கி வந்த மிட்டாய் பெட்டியுடன் எளிமையான அலங்காரத்தில் புறப்படத் தயாராகி விட்டாள்.

குறிப்பிட்டது போலப் பத்து மணி அளவில் காருடன் கௌதம் வந்தான்.

வீட்டைப் பூட்டிக் கொண்டு இருவரும் கிளம்பினர்.

நகரத்தில் புதிதாக உருவாகியிருந்த முருகன் காலனியில், தெருவின் முன்னதாகவே அவன் கம்பெனி வாடகைக்கு எடுத்திருந்த வீடு அமைந்திருந்தது.

சின்னஞ்சிறு பங்களா. வாசலில் பூந்தோட்டம். மொசைக்கில் பளபளத்த வராந்தா. அலங்காரமான வரவேற்பறை இத்யாதி. அவள் எதிர்பார்த்தது போலத் தனியாகப் பெண் உதவி இல்லாத வீடு போல அலங்கோலமாகத் தெரியவில்லை.

கௌதமுக்கு சுத்தமான பழக்க வழக்கங்கள் உண்டு என்பது புரிந்தது. வீட்டின் வெளியும், உள்ளும் படு சுத்தமாகக் காணப்பட்டன.

கண்களை நாலாபுறமும் ஓட விட்டபடி முன்னறையின் ஆசனத்தில் அமர்ந்தாள் அவள். அத்தை பிரமிப்புடன் பார்த்தபடி ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். சமையல் ஆள் ஏதோ மும்முரமாகத் தயாரித்துக் கொண்டிருந்தான். பின் வராந்தாவிலே துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்த வேலைக்காரி, அவள் செய்த வேலையில் கருத்தாக இருந்தாள். யாரும், அறியும் ஆவலுடன் வாசலில் வந்து எட்டிப் பார்க்கவில்லை. கௌதம் தன் வேலையாட்களிடம் அப்படி ஒரு கண்டிப்பாக நடந்து கொள்கிறான் போலும். சிந்தித்தபடி வரவேற்பறையைச் சுற்றிலும் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். ''கொஞ்சம் இருங்கள். நான் ஸ்நானம் செய்துவிட்டு வருகிறேன். ஞாயிற்றுக் கிழமைகளில் நான் எழுந்து

மெள்ளமாகத்தான் என் காரியங்களைக் கவனிப்பது'' என்று புன்னகைத்து விட்டு குளியலறைக்குள் மறைந்து விட்டான்.

குழாயிலிருந்து தண்ணீர் கொட்டும் சத்தம் கேட்டதும், துணிவுடன் அர்ச்சனா எழுந்தாள். வீட்டின் மற்ற பகுதிகளைப் பார்க்க ஆவல் அவளுக்கு. அத்தைக்கு சமையல் ஆள் என்ன செய்கிறார் என்று கவனிக்க ஆர்வம்.. அத்னத எழுந்து சமையலறைப் பக்கம் சென்றதும், அர்ச்சனா எதிரே தெரிந்த அறைக்குள் சென்று கண்களை ஓட விட்டாள். இரண்டு படுக்கை அறைகள் கொண்ட வீடு அது. பெரியதாக இருந்ததை அவன் தன் உபயோகத்திற்கு வைத்துக் கொண்டிருந்தான். கொஞ்சம் சிறியதாக இருந்ததை உபயோகப் படுத்தாது மூடி வைத்திருந்தான். அறையின் நடுவில் ஒரு கட்டிலும் ஓரத்தில் ஒரு மேஜையும் இருந்தன. மற்றப்படி அறை களையாகத் தெரிந்தது. ஏதோ யோசனையுடன் மேஜையின் இழுப்பறையைத் திறந்தாள். போட்டோ ஆல்பம் ஒன்று உள்ளே இருப்பதைக் கண்டு ஆவலுடன் எடுத்துப் பார்த்தாள். முதல் பக்கத்திலிருந்த புகைப்படம் அதிலிருந்து பெயர்க்கப்பட்டிருந்தது. என்னவாக இருக்கும் என்ற ஆவல் நெஞ்சு படபடக்கக் குற்ற உணர்வுடன் இழுப்பறையை நன்றாக ஆராய்ந்தாள். ஒரு பழுப்புக் காகித உறைக்குள்ளிருந்த புகைப்படத்தை அதிலிருந்து நீக்கி எடுக்கப்பட்டது என்று புரிந்தது... ஆவலுடன்... படத்தைப் பார்த்தாள். திடுக்கிட்டுப் போனாள். அன்புள்ள கணவருக்கு உங்களது பிறந்த நாள் நினைவாக... என்று பின்னால் எழுதி ''ராதிகா'' என்று கையெழுத்திட்டிருந்தாள் படத்தில் தெரிந்தவள்.

அர்ச்சனாவுக்கு யாரும் விளக்கம் தரத் தேவையிருக்க வில்லை கையெழுத்தின் அடியில் காணப்பட்ட தேதியைப் பார்த்தாள். கௌதமின் மாஜி மனைவியின் போட்டோ அது. இருவரும் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் எடுக்கப்பட்டது. வண்ணப்படத்தில் அழகாக மலர்ச்செடி ஒன்றின் அருகே சொகுசாக நின்று கொண்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம். மிக அழகாகக் காணப்பட்டாள் அவள். நேர்த்தியாக ஒப்பனை செய்து கொண்டிருந்தாள். ஒடிய உயரமாகக் கொடிபோன்ற தோற்றம். அணிந்து கொண்டிருந்த நீல வண்ணக் காஞ்சிபுரச் சேலையில்... மாடல் அழகி போல... கண்களுக்கு விருந்தாகத் தெரிந்தாள்.

இளமையும் அழகும் ரசனையும் உள்ள அவளிட மிருந்து கௌதம் பிரிந்ததின் காரணம்?

ராதிகாவுக்கு அவரைப் பிடிக்கவில்லையா?

கௌதமுக்கு அவள் மேல் மனத்தாங்கல் ஏற்பட்டதா?

தொண்டை செருமும் சத்தம் கேட்டது. குழாயி லிருந்து நீர் கொட்டுவது அடங்கிப் போயிருந்தது.

சட்டென புகைப்படத்தை உறைக்குள் வைத்து ஆல்பத்தை இழுப்பறையில் வைத்து மூடிவிட்டு, ஓசைப்படாது வரவேற்பு அறைக்குள் வந்து அமர்ந்து கொண்டாள்.

நாளேடு ஒன்றைக் கையில் எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தாள் அர்ச்சனா.

மனதிலே ஒரு கலவரம் குழப்பம்.

கௌதம் தமது முதல் மனைவியைப் பிரிந்த காரணத்தை அவளிடம் இன்னமும் சொல்லவில்லையே?

கட்டாயம் அவள் தெரிந்து கொண்டாக வேண்டும். இதில் தவறு யாருடையது என்று அவள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிற்றே.

ஒரு சமயம் கௌதமிடம் வெளியே புலப்படாத சில கெட்ட குணங்கள் உள்ளனவோ என்னவோ.

அதைப் பொறுத்துக் கொள்ள முடியாது ராதிகா ஒதுங்கி விட்டாளோ?

அல்லது?...

அத்தை பேசிக் கொண்டே உள்ளே வந்தாள்.

''சமையல் ஆள் அறையை எத்தனை ஒரு நீட்டா வச்சுக் கொண்டிருக்கார் தெரியுமா? எனக்குக் கூட அத்தனை சாமர்த்தியமிருக்காது. அத்தனை ஜோரா வெச்சிருந்தார். சமையலிலும் கெட்டிக்காரராகத்தான் இருக்கணும். இன்னிக்கு நமக்கு விஜிடபிள் புலாவும், தயிர் பச்சடியும், உருளைக்கிழங்கு பொடிமாஸ் ஸாலட் எல்லாம் பண்ணிக் கொண்டிருக்கார்'' அத்தை மெனுவைத் தெரிந்து கொண்டு வந்திருந்தாள்.

சுத்தமான வெள்ளை வேட்டி சட்டையில், கிராப்பு முடியைப் படிய வாரிவிட்டுக்கொண்டு ஷேவிங்லோஷன் மணக்க உள்ளே வந்தான் கௌதம்.

களங்கமற்ற புன்னகையில் மலர்ந்த அவனது முகத்தைப் பார்த்ததுமே மனம் கரைந்து போனாள் அர்ச்சனா.

பழகுவதற்கு மிக இனியவனாக இருக்கும் கௌதம் மேல் பிசகு இருக்க முடியாது.

தவறு, ராதிகாவிடம் தான் இருக்க வேண்டும்.

எனினும் அதைத் தெரிந்து கொள்வது நல்லது... என்ற எண்ணியபடி பதிலுக்கு முறுவலித்தாள்.

அதற்குப் பின் பொழுது இனிமையாகவே கழிந்தது.

''எங்கள் வீட்டு சமையலை ரொம்பப் புகழ்ந்தீங்களே. உங்கள் வீட்டு சமையல் ஆள் நன்றாகவே சமைக்கிறார்'' அத்தை சொன்னதைக் கேட்டு அவன் மெள்ள சிரித்தான்.

''ஆனாலும் வீட்டில் ஒரு பெண் இருந்து மேற்பார்வை செய்தால் வாழ்க்கை, சமையலிலிருந்து எல்லா வகையிலும் சுவாரஸ்யமாக இருக்கும் அல்லவா...'' என்றாள்.

பின்னர் அவர்கள் பலவும் பேசி மகிழ்ந்தனர்.

நகை, சீர் எதையும் அவன் எதிர்பார்க்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட அத்தைக்கு மனதில் பெருத்த நிம்மதி.

இப்படி அலங்காரமான வீட்டில் அர்ச்சனாவை வைத்து வாழப் போகிறான் அவள் கல்யாணத்திற்குப் பின்னர் வேலை செய்ய வேண்டிய அவசியமில்லை. அத்தைக்கு மறுப்பு இல்லை என்றால் அவர்களுடன் வந்து தங்கிக் கொள்ளலாம் பலதரம் அவன் பேசியதைக் கேட்டு அலமேலு மனம் பூரித்துப் போனாள். அர்ச்சனாவுக்கு மறு விவாகத்திற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுமோ தனிக்கட்டையாக அவள் காலம்

முழுவதும் இருக்க நேருமோ என்றெல்லாம் அலட்டிக் கொண்டிருந்த அத்தையின் மனப்பாரம் இறங்கி உள்ளம் லேசாகிப் போனது.

உற்சாகமாக வெகுநாள் அவனுடன் பழகியவள் போலப் பேசினாள், சிரித்தாள். பொழுதை இனிமையாகக் கழித்து விட்டு அவன் காரில் வீடு திரும்பினாள். ஆனால் அர்ச்சனா மனதில் ஒரு சிறு உறுத்தல் ராதிகாவைப்பற்றி இருந்து கொண்டேயிருந்தது.

7

அன்று அர்ச்சனா தன் அலுவலகத்தினின்று பஸ்ஸில் தன் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தாள்.

கம்பெனி காரியமாக மூன்று நாட்கள் கௌதம் கல்கத்தா போய்வர நேர்ந்தது.

எப்பொழுதும் போல பஸ்ஸில் பயணப்பட்டு வீடு திரும்பிய அவளுக்கு நிலையத்தில் இறங்கியபோது தான் நினைப்பு வந்தது. அந்த நெடுஞ்சாலையிலே இருந்த சூப்பர் மார்க்கெட்டிலிருந்து ஊதுவத்தியும், மறுநாள் கடவுளுக்குப் படைக்க வெண் பொங்கல் தயாரிப்புக்குக் கொஞ்சம் முந்திரிப் பருப்பும் அத்தை வாங்கி வரச் சொல்லியிருந்தாள்.

உடனடியாக அவைகளை அவள் வாங்கிச் செல்லாவிடில் அத்தை முகத்தைச் சுளிப்பாள் என்று அவளுக்குத் தெரியும்.

மாலை வேளையில் சூப்பர் மார்க்கெட்டில் கூட்டம் திமுதிமுக்கும் என்பது அர்ச்சனாவுக்குத் தெரியும்.

பஸ் நிலையத்தினின்று மெல்ல நடைபாதை மீது மோதிக் கொள்ளாது எச்சரிக்கையுடன் நடந்து சூப்பர் மார்க்கெட்டை அடைந்தாள்.

அறுபத்து மூவர் திருவிழாவைப் போல அன்று மாலை அங்கே ஏகக்கூட்டம்..எப்படியோ உள்ளே புகுந்து அத்தை கேட்டவைகளை வாங்கிக் கொண்டு வெளி வந்து விட்டாள். வராந்தாவில் வந்து நின்றவளுக்கு மூச்சை அடைத்தது. நெற்றியில் வியர்வை பூத்து வழிந்தது. வாங்கச் சென்ற பொருள்களின் விலைவாசி உயர்வைக்கண்டு அஞ்சிவிட்டதால் ஏற்பட்ட பாதிப்பு அல்ல அது.

முந்திரிப் பருப்புப் பொட்டலங்களைக் கையில் எடுத்து அதன் மீது ஒட்டப்பட்டிருந்த கடிதத் துண்டத்தில் கண்டிருந்த விலையைப் படித்துக் கொண்டிருந்தவள் காதில், இருவரின் பேச்சு துல்லியமாகக் கேட்கவே திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள்.

நடுத்தர வயதை எட்டி விட்ட இரண்டு பெண்கள் ரவைப் பொட்டலங்களின் விலையைப் பார்ப்பது போல நின்று கொண்டு - அடிக்குரலில் பேசிக் கொண்டிருந்தனர்.

அர்ச்சனாவின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

உயரமும், பருமனுமாக இருந்த நடுத்தர வயதுப் பெண்மணிதான் முதலில் பேச ஆரம்பித்தவள்.

''உமா கெமிக்கல்ஸில் வேலை பார்க்கிற கௌதமைத் தெரியுமில்லையா?''

''என் கணவருடன் நான் லயன்ஸ் கிளப் மீட்டிங் போயிருந்தபோது இரண்டடொரு தடவை பார்த்திருக்கிறேன்''... ஒல்லியாக இருந்த இரண்டாவது பெண்மணி பட்டையாக முன் நெற்றி முடி நரைத்துப் போனவள் மிகவும் தாழ்ந்த குரலில் பதிலளித்தபடியே... கொத்துக் கடலைப் பொட்டல மொன்றை எடுத்துத் தன் பிளாஸ்டிக் வாளியில் போட்டுக் கொண்டாள்.

''அவன் தன் மனைவியை விவாகரத்து செய்து விட்டவன் இரண்டு குந்தைகள் இருக்கு எதுக்காக அப்படிச் செய்தான்னு யாருக்கும் தெரியாது.''

''காரணமில்லாமலா இருக்கும். இப்போ மறுபடி கல்யாணம் செய்துக்கப் போறானாக்கும்.''

''ஆமாம்! எவளோ ஒருத்தி அவன் கம்பெனியிலேயே வேலை பார்க்கிறவள் அவளைப் பிடிச்சுக் கொண்டிருக்கான்.''

அர்ச்சனாவுக்கு மூச்சு முட்டியது. காதும் முகமும் சூடாகிப் போயின.

''எத்தனை காலம் பாவம் அவன் தனியாக இருப்பான்? செஞ்சுக்க வேண்டியது நியாயந்தானே?''

''அதோ போராளே... அவதான் அவனுடைய மாஜி மனைவி ராதிகா.''

''எவ? கௌண்டர் கிட்டே பணம் கட்ட கியூவோட போய் நிக்கப் போராளே... சிவப்புப் புடவைக்காரி?''

''ஆமாம்! அவளேதான். நன்னா பார்த்துக்கோ இரண்டு பேரும் நல்லா வாழ்ந்துகிட்டு இருந்த காலத்திலே நான் பல தடவை பார்த்திருக்கேன். ரொம்ப

அழகா ஒடிசலா, மூக்கும் விழிகளுமா ரொம்ப நல்லா இருப்பா. விவாகரத்தாகி சில ஆண்டுகளுக்குள்ளே ஆள் எப்படி மாறிப் போயிட்டா பார்த்தியா? கருத்துப்போய் ஏதோ சீக்காளி போல கண்களில் ஏக்கமும், முகத்திலே சோகமுமா பாவம்!''... ச்சூ கொட்டினாள் முதலில் பேசியவள்.

''ஓரம் நைந்து போன, சாயம் இழந்த புடவையைக் கட்டிக் கொண்டிருக்கிறாளே. நீ அடையாளம் காட்டாட்டா, நான் யார் வீட்டு வேலைக்காரியோ தன் எசமானிக்கு சாமான் வாங்கக் கடைக்கு வந்திருப்பதாக நினைச்சிருப்பேன்.''

''ஒரு காலத்திலே சீரும் சிறப்புமா இருந்தவள்தான். எப்படி ஜம்முனு உடுத்திக் கொண்டு கிளம்புவா தெரியுமா? இப்போ பிச்சைக்காரி போல.''

''கௌதம் குழந்தைகளின் போஷனைக்காவது ஏதாவது பணம் தருகிறானா?''

''தெரியாது. மொத்தத்தில் ராதிகா ரொம்பக் கஷ்ட நிலையில் இருக்கிறாள்.''

அவர்களின் பேச்சை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த அர்ச்சனாவின் உடல் சில்லிட்டுப் போனது. மெள்ள சிரமப்பட்டுத் திரும்பி, அவர்கள் சொன்ன அந்தத் திசையைப் பார்த்தாள். தன் முறை வந்ததும் சாமான்கள் கொண்ட கூடையை மேஜை மீது வைத்துவிட்டு, சில்லரையை எடுக்கத் தன் கையில் பிடித்துக் கொண்டிருந்த சிறு பையைத் திறந்து துழாவினாள் ராதிகா. அப்பொழுது அவளது முகத்தை அர்ச்சனாவால் நன்றாகப் பார்க்க முடிந்தது.

அந்தப் புகைப் படத்தில் அன்று பார்த்தாளே கௌதமின் மாஜி மனைவியை அவளா இவள்? எத்தனை ஒரு மாறுதல். கணவனைப் பிரிந்த துயரத்தின் சுவடா அவள் முகத்தில் தெரியும் அந்த வேதனை? சில வருஷங்களுக்குள் இளமை அழிந்து இப்படி ஒடுங்கி விட்டிருக்கிறாளே?

வேதனை நெஞ்சை அமுக்க அவள் மெல்ல முந்திரிப் பருப்புப் பொட்டலமும், ஊதுவத்திக் கத்தையு மாகப் பெருத்த சிந்தனையோடு கௌண்டரை அடைந்தாள்.

சில்லரையையும் - பார்சலையும் பெற்றுக் கொண்டு அவள் வெளியே வந்து சற்று நேரம் வராந்தாவில் கூட்டத்தோடு கூட்டமாக ஒரு புறம் நின்றாள். முகத்திலே வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு, வேதனையில் குமுறிய தன் உணர்வுகளைச் சமாளித்துக் கொண்டு அர்ச்சனா மெள்ளத் தன் வீட்டை நோக்கி நடந்தாள்.

அன்று இரவு அவளுக்கு சாப்பிடவே பிடிக்க வில்லை. கௌதமின் மாஜி மனைவி பிச்சைக்காரி போலப் பற்றாக் குறையில் அலைகிறாள் என்றால், அவளது பாதுகாப்பில் இருக்கும் அந்த இரண்டு குழந்தைகள் எப்படி வளர்கிறார்கள்? அவர்கள் மூவரும் பட்டினியில் தவிக்க அவளுக்குச் சேர வேண்டிய சுகபோகங்களை அர்ச்சனா அனுபவிக்கத் துணிவது முறையா?

''என்ன யோசனையா இருக்கே?'' அத்தை வந்து அருகில் பாயை விரித்துக் கொண்டு சாய்ந்தாள்.

"ஒண்ணுமில்லை. அந்த மூலையிலே என்ன குப்பை போலக் கிடக்குன்னு பார்த்தேன்" அர்ச்சனா சமாளித்தாள்.

"அதா சொல்றேன் இன்னிக்கு எனக்கு நம்ம வேலைக்காரி மேலே ரொம்பக் கோபம் வந்துட்டது. சில நாளா... நம்ம வீட்டுக் கூடத்து மேல் பக்கத்து மூலையிலே, குருவி ஒன்னு கூடு கட்ட முயன்று கொண்டிருந்தது. நீ கவனிச்சியோ..." அத்தை எழுந்து அந்த மூலையை சுட்டிக் காட்டினாள்.

"இதெல்லாம் கவனிக்க எனக்கு நேரம் ஏது அத்தை காலையில் எழுந்ததும் ஆபீசுக்கு ஓடற வேலை. வந்ததும் சாப்பிட்டு கொஞ்ச நேரம் ஏதாச்சும் படிச்சிட்டு, அலுப்பில் படுக்க வேண்டியதுதானே. சுத்தம் பார்க்க நேரம் ஏது?"

"குருவி தன் கூட்டைக் கட்ட முயன்று கொண் டிருந்தது. அதை நம்ம வேலைக்காரி ஒட்டடை தட்டரப்போ குச்சியால் உடைச்சுக் கீழே தள்ளிட்டா... அந்தக் குருவிக் கூட்டைக் கலைக்கக் கூடாதுன்னு உத்திரவு போட்டிருக்கேன். பாடுபட்டு அந்தக் குருவி கொண்டு வந்த வைக்கோல், புல் இத்யாதிகளை அப்படியே அந்த மூலையிலே போட்டு வச்சேன். ஓர் அதிசயத்தைப் பார்... அந்தக் குருவி மனம் கொஞ்சமும் சலிக்காம, மறுபடி எப்படியோ அலைஞ்சு திரிஞ்சு காய்ந்த புல்லைக் கொத்திக்கிட்டு வந்து, நாள் முழுவதும் கூடு கட்டுவதில் மும்முரமா இருந்தது... அதோ பார் கூடு அநேகமாக நாளைக்குள்ளே கட்டி முடிச்சிடும்னு நினைக்கிறேன்.

"குருவி கூடு கட்டினா வீட்டில் உள்ளவங்களுக்கு நல்லதுன்னு சொல்வாங்க..." அத்தை... கொட்டாவி

விட்டபடி தலையணை மீது சாய்ந்தாள். சிறிது நேரத்தில் உறங்கிப் போனாள்.

ஆனால் அர்ச்சனாவுக்குத் தூக்கம் வரவில்லை. வேலைக்காரி குருவிக் கூட்டைக் கலைத்ததற்குப் பொங்கி எழுந்த அத்தை, அர்ச்சனா அது மாதிரியான ஒரு குடும்பம் சிதறிப் போகும்படி கௌதமின் வாழ்க்கைக்குள் புகுந்து கொள்வதைப் பற்றி ஏன் சிந்திக்கவில்லை. ஏற்கனவே சிதைந்துபோன வாழ்க்கை அதை நீ ஒழுங்காக்கப் போகிறாய் அதில் தவறு என்ன? என்று அத்தை விவாதிப்பாள். கோழித் தூக்கம் கண்களை அழுத்தியது... சிவப்புச் சேலையில் தலையை விரித்துப் போட்டுக் கொண்டு ராதிகா... கையில் ஓர் அலுமினியத் தட்டுடன் வீட்டு வாசலில் வந்து நிற்பதைப் போன்றதொரு கனவு திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள் சே! என்ன பாவம்? எழுந்த தன்னையே கடிந்துகொண்டு மீண்டும் உறங்க முயன்றாள்.

அடுத்த நாள் வேலையினின்று திரும்பிக் கொண்டிருந்த அர்ச்சனா பஸ் நிலையத்தில் இறங்கிய போது யாரோ தன் தோளைத் தோடுவதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினாள்.

''உங்களோடு நான் பேச விரும்புகிறேன்'' என்றபடி ராதிகா எதிரில் நிற்பதைக் கண்டு பதறிப் போனாள்.

''உங்களை நான் நேற்று கனகா சூப்பர் மார்கெட்டில் பார்த்தேன்.''

அர்ச்சனா அதிர்ந்துபோனாள். அவளுக்கு, எப்படித் தெரியும் என்ற வியப்பு!

''உங்களை நான் கௌதமின் காரில் பலமுறை பார்த்திருக்கிறேன். அவர் என்னைக் கவனித்ததில்லை.

ஆனால் அவரை அடிக்கடி எங்கேயாவது எதேச்சையாகப் பார்ப்பதுண்டு - உங்களை அவர் காரில் பார்த்தபோது என் சந்தேகம் உறுதியாயிற்று. என் சிநேகிதிகள் சிலர் என்னிடம் சொன்னதை முதலில் நம்பவில்லை.''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் அர்ச்சனா-

''அவர்கள் என்ன சொன்னார்கள். தணிவான குரலில் கேட்டாள்.

''கௌதம் உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார் என்று சொன்னார்கள், உண்மையா?''

''உண்மைதான் - இதைத் தெரிந்து கொள்ளவா என் பின்னால் இத்தனை அவசரமா ஓடிவந்தீங்க.''

''நேரில் கேட்டுத் தெரிஞ்சுக்கணும்னு ஆசையா இருந்தது, அது உண்மையானால் உங்களிடம் ஓர் உதவி கேட்க விரும்பினேன்.''

''உதவியா?''

''ஆமாம். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறாங்க. இரண்டு பேரும் மேஜர் ஆகும்வரை என் பாதுகாப்பில் இருப்பாங்க. கௌதம் விவாகரத்தின்போது அதற்கு ஒப்புதல் கொடுத்திருக்கிறார். குழந்தைகளின் பராமரிப்புக்கு மாதம் இவ்வளவு என்று அனுப்ப சம்மதித்து, தொடர்ந்து அனுப்பி வருகிறார்.''

''அது போதவில்லை மேலும் கொஞ்சம் கூடுதலாகத் தரவேணும் என்று சிபாரிசு செய்யச் சொல்றீங்களா?'' அர்ச்சனா சற்று எரிச்சலுடன் கேட்டாள்.

''இல்லை. விவாகரத்தின்போது அப்படி எந்தவித மான நிபந்தனைகளையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை, குழந்தைகளை நானே வளர்த்து ஆளாக்குகிறேன்னு

சொல்லிவிட்டுத்தான் பிரிந்தேன்- ஆனால் அவர் இரக்கத்தோடு தாமே குழந்தைகளுக்குப் பணம் அனுப்பி வைக்கிறார்.''

''அதனால்?'' சற்று நகர்ந்து கொண்டு ராதிகாவை மேலும் கீழும் பார்த்தாள்.

''எனக்குப் பெற்றோர் கிடையாது. ஒரு அண்ணன் இருக்கிறார். அவர் எனது அந்தரங்க வாழ்க்கையில் தலையிட மறுத்து ஒதுங்கிக் கொண்டிருக்கிறார். மற்ற உறவினர்களும் என்னைக் கண்டுகொள்வதில்லை. விவாகரத்திற்குப் பின்னர் நான் வேலைக்குப் போகத் தொடங்கினேன். இரும்புக் கம்பி குழாய் விற்பனைக் கம்பெனியில் தட்டெழுத்தராக வேலை பார்க்கிறேன். எனது சம்பாத்தியம் வாடகைக்கும், சாப்பாட்டிற்குமே போதவில்லை.''

''இதை என்னிடம் சொல்வதின் நோக்கம்?''

''குழந்தைகளுக்குக் கௌதம் அளித்து வரும் உதவியைத் தாங்கள் நிறுத்திவிட முயலக்கூடாது. அவர்கள் படித்துத் தலை நிமிரும் வரை உதவி செய்தால் போதும். அதைக் கேட்க உன்னை நேரில் சந்திக்க விரும்பினேன். கௌதமனின் விருப்பு வெறுப்புகளில் நான் தலையிட மாட்டேன்.''

''அவ்வளவுதானே...'' என்று கேட்டு விட்டு, சட்டென்று வேகமாக நடக்க ஆரம்பித்தாள் அர்ச்சனா.

மனதிலே பலவகையான உணர்ச்சிகளின் போராட்டம்.

ஆங்காரப்படுவாள் ஆத்திரமாகப் பேசுவாள் பொறாமையில் கொதிப்பாள் என்றெல்லாம்

ராதிகாவைப் பற்றி எதிர்பார்த்துக் கவலைப்பட்டவளுக்கு பெருத்த வியப்பு.

ராதிகா இத்தனை சாதுவான பெண்ணா இருக்கிறாளே.

பார்க்க அழகாக, பதவிசாகப் பேசத் தெரிந்த ராதிகாவை, கௌதம் ஏன் பிரிந்தார்.

காரணம் என்னவாக இருக்கும். அவளையே கேட்டு விட்டிருக்கலாம். சே! அவளைக் கேட்கக் கூடாது. கௌதம் ஊரிலிருந்து திரும்பி வந்ததும், கடற்கரையில் தனியாக ஒரு பக்கம் அமர்ந்து பேசும்போது மெள்ளக் கேட்டுவிட வேண்டும்.

பலவும் எண்ணிக்கொண்டு குழம்பிய மனதுடன் வீட்டை நோக்கி நடந்தாள்.

கௌதம் ஊரிலிருந்து திரும்புவதற்குள் இன்னும் என்னென்ன அனுபவங்கள் ஏற்படப் போகின்றனவோ?

கௌதம் வெளியூர் சென்ற மறுநாளே அவள் ராதிகாவை சூப்பர் மார்க்கெட்டில் சந்திக்க நேர்ந்தது. இரண்டு பெண்களின் பேச்சைக் கேட்டு உடல் கூசவும் நேர்ந்தது.

அடுத்த நாளே ராதிகா அவளைச் சந்தித்து தன் கவலையைச் சொல்லி ஆதரவு கேட்டு விட்டாள். இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் அவளைக் கலவரப்படுத்தி விட்டன. கௌதம் ஊரிலிருந்து வருவதற்குள் இன்னும் என்னென்ன நடக்கப் போகிறதோ...? என்ற கவலையில் அவள் மனம் குழைந்தபடி மெள்ள வீட்டுக்குத் திரும்பினாள்.

8

இரண்டு தினங்களுக்குப் பின்னர் கௌதம் ஊர் திரும்பி விட்டிருந்தான்.

அலுவலகத்திலிருந்து கிளம்பிய காரை கடற்கரை ஓரம் நிறுத்தினான்.

''கல்கத்தா கடைத்தெருவில் அலைந்து உனக்கு நான் என்ன கொண்டு வந்திருக்கிறேன் தெரியுமா!'' மோகனமாக அவன் முறுவலித்தபோது வேதனையில் சுருங்கிப் போனாள் அர்ச்சனா.

''இங்கே நான் கடைக்குள் புகுந்து சாமான் வாங்கப் போன இடத்தில் என்ன சங்கதி சேகரித் திருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?'' கேட்க நினைத்தாள். ஆனால் கேட்காது மௌனமாகக் கடலை வெறித்துப் பார்த்தாள்.

''என்ன ஒரு மாதிரி இருக்கிறே அர்ச்சனா? என்ன நடந்தது?'' கவலையுடன் சட்டென்று விசாரித்தான் அவன்.

அலுவலகத்திலேயே உணவு நேரத்தின்போது அவன் கவனித்து விட்டிருந்தான்.

வழக்கமான உற்சாகம் அவளிடம் காணப்பட வில்லை. கவலை கப்பிய முகத்துடன் அவள் சோர்ந்து காணப்பட்டாள்.

என்ன? ஏது? என்று உணவு நேரத்தில் அவளைத் தூண்டித் துருவிக் கேட்க மனமில்லாது மௌனமாகி விட்டிருந்தான்.

கடல்காற்று இதமான குளிர்ச்சியில் முகத்தைத் தழுவியது.

கம்பெனி காரியங்களை மறந்து சொந்த விஷயங்களை அமைதியாகக் கவனிக்கும் நேரம் அது. மெள்ளக் கேட்டு விட்டான்.

''ஆமாம். அர்ச்சனா. நான் வந்ததிலிருந்து பார்க்கிறேன் - ஏதோ கவலையா இருக்கிறாயே. எனக்குத் தெரிவிக்கக்கூடாதா?'' தணிவான குரலில் கேட்டான்.

அர்ச்சனா அவனிடம் இதுவரை பொய் ஏதும் பேசியதில்லை.

தன் வாழ்க்கையில் நேர்ந்த துயர சம்பவத்தை ஒளிவு மறைவின்றி சொல்லி விட்டிருந்தாள். தனது விருப்பு வெறுப்பிலிருந்து, வங்கியில் உள்ள பணம்வரை அவள் எதையும் இரகசியமாக வைத்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அவன் தன் மனைவியிடமிருந்து விவாகரத்து பெற்றதின் காரணத்தை இதுவரை சொல்லவில்லையே ஏன்?

ராதிகாவை நேரில் கண்டதிலிருந்து - அவள் பேசிய பின்னர்... அவள் மனதை அந்தக் கேள்வி குடைந்து கொண்டிருந்தது உண்மை.

தொண்டையை லேசாகச் செருமிக் கொண்டாள்.

''என் பெரிய அக்கா சண்பகத்திடமிருந்து கடிதம் வந்தது.''

''அப்படியா சந்தோஷம். நமது திருமணத்தைப் பத்தி மகிழ்ச்சி தெரிவிச்சி எழுதியிருப்பாங்க. அப்படித் தானே?''

''அதுதான் இல்லை. உங்க மனைவியை நீங்க விவாகரத்து செய்ததின் காரணத்தைக் கேட்டுத் தெரிஞ்சுக் காம, நான் மௌனமா இருப்பது தவறுன்னு ரொம்பச் சாடி எழுதியிருந்தாங்க. மனசுக்கு வேதனையா இருக்கு.''

கௌதம் சட்டென்று பதில் பேசவில்லை. அவன் முகம் மாறிப் போனான். சிறிது நேரம் ஏதோ யோசனை யாகப் பேசாது இருந்தான்.

''மன்னிச்சுக்கோங்க - நான் அக்கா எழுதியிருந்ததை உங்ககிட்ட சொன்னது தவறு போல இருக்கு'' அர்ச்சனா முணகினாள்.

''உன் அக்கா கேட்பதில் தவறு இல்லை. என்னைப் பற்றிப் பூரா விவரமும் உன்னிடம் சொல்ல வேண்டியது கடமைதானே. சொல்லத்தான் மனம் கூசுகிறது.''

''கஷ்டமாக இருந்தால் சொல்ல வேண்டாம்.''

''இல்லை! நான் சொல்லிவிடுவதுதான் நல்லது, பிறகு யாராவது வந்து இல்லாததையும் சேர்த்து சொன்னால் உன் மனம் ரொம்ப வருத்தப்படும். ராதிகா எனக்குத் துரோகம் செய்யத் துவங்கினாள். அதனால் மனம் உடைந்து போனேன். எங்களுக்குள் மனத்தாங்கல் ஏற்பட்டது. ஆனால், நல்ல முறையில் நிலைமையை அசிங்கப் படுத்தாமல் விவாகரத்து கொடுத்துவிட்டேன்.''

''குழந்தைகள்?''

''குழந்தைகளைத் தாயிடமிருந்து பிரிக்க மனம் துணியவில்லை.

''வியாபார காரணமாக நான் அடிக்கடி வெளியூர் சென்று கொண்டிருந்தேன். அந்தச் சமயம் குழந்தைகளை

யார் பத்திரமாகப் பார்த்துக் கொள்வார்கள். வளர்கின்ற பிஞ்சுப் பருவத்தில் ஒரு தந்தையை விடத் தாய் மிகவும் அவசியம் என்று கருதி, அவளது கோரிக்கைப்படியே அவளிடம் விட்டுவிட்டேன். ஆனால் அவர்கள் செலவிற்கு மாதா மாதம் பணம் அனுப்பிக் கொண்டு வருகிறேன். சட்டப்படி ஏற்பட்ட கட்டாயமல்ல. கருணையினால் அனுப்புகிறேன்.''

நெஞ்சைப் பந்து ஒன்று அடைத்துக் கொண்டது போன்ற இறுக்கம் அவள் மனதை நோகச் செய்தது.

''உங்கள் குழந்தைகளை நீங்கள் எப்பொழுதாவது பார்ப்பது உண்டா?''

''முன்பு மாதம் இருமுறை பார்த்துக் கொண்டு வந்தேன் சமீப காலத்தில் நான் பார்ப்பதில்லை.''

''உங்களுக்கு உங்கள் குந்தைகள் மேல் ஆசை யில்லையா?''

''கஷ்டமான கேள்வி இது. எனக்கு என் மகன் மேல் கொள்ளை ஆசை. மகனை நான் ரொம்ப நேசிக்கிறேன். ஆனால், நிலைமை எக்கச்சக்கமாக இருப்பதால்... அவர்களைப் பாராது இருப்பது நல்லதுன்னு விலகிக் கொண்டிருக்கேன்.''

''ராதிகா என்ன வகையில் துரோகம் செய்தாள்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''ஓ! தாராளமாகத் தெரிஞ்சிக்கலாம். தெரிஞ் சுக்கிறது ரொம்ப முக்கியம் கூட. நாளைக்கு நீ என் மனைவியான பின், இதே மாதிரியான அசம்பாவிதம் என் வாழ்விலே மறுபடி நடக்கக் கூடாது பார்...

படபடப்புடன் காரமாகப் பேசினான். அவனது முகம் சிவந்து போய் விட்டிருந்தது. கண்களிலே கோபம் தெரிந்தது.

''சொன்னால் புரிஞ்சுக்கிறேன்'' அர்ச்சனா மெல்லிய குரலில் கூறினாள்.

''எங்களுக்குத் தூர உறவினன் என் வயதை ஒத்தவன். குடும்பத்து நண்பனாகப் பழகினான் - அடிக்கடி வீட்டுக்கு வருவான். அவனுக்கும், ராதிகாவுக்கும் இடையே நெருக்கமான நட்பு உருவாகிவிட்டதுன்னு சந்தேகம் வந்துவிட்டது எனக்கு.

''நேரில் ஏதாவது பார்த்திங்களா?''

''என் கண்ணால் பார்க்கலே ஆனால் என்னோடு வேலை பார்த்த நண்பன் ஒருவன் சொன்ன சில சங்கதிகளை வைத்துக்கொண்டு அவளை மிரட்டிக் கேட்டபோது மௌனம் சாதித்தாள். மௌனம் உண்மை என்பதின் அறிகுறிதானே?''

''அன்பான கணவன் இப்படி அசிங்கமா சந்தேகிக்கிறாரே என்று ஏற்பட்டதின் அதிர்ச்சியாக இருக்கலாம் இல்லையா?''

''ராதிகாவுக்குப் சப்பைக்கட்டு கட்டிப் பேசாதே அர்ச்சனா விவாகரத்து வழக்கு வந்தபோது அவள் தான் நிரபராதி என்று ஏன் ஒப்புக் கொள்ளவில்லை.''

''சந்தேகப்படும் கணவனுடன் இனி வாழ்வது சாத்யப்படாதுன்னு நினைச்சிருக்கலாம் இல்லையா? துரோகம் செய்கிறாள் மனைவி என்று சந்தேகம் வந்தவுடனேயே உங்கள் பார்வை பேச்சு நடத்தை

எல்லாம் மாறி விட்டிருக்கும். அன்பு ஒரு குடம் பாலைப் போல. சந்தேகம் என்கிற விஷம் ஒரு துளி அதில் பட்டு விட்டால் போதாதா? அத்தனையும் விஷமாகி விடுமே. உங்கள் அன்பில் களங்கம் வந்ததும் அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை போலிருக்கு. விவாகரத்து பெற்றாவது நம் கணவர் வேறு ஒரு பெண்ணோடு வாழட்டும் என்று முழு மனதுடன் பிரிந்து போயிருக்கலாம்.''

''ராதிகாவின் வக்கீல் கூட இப்படி வாதாட வில்லையே?''

''மனம் ஒப்பி ஏற்றுக் கொண்ட விவாரகத்து. அதனால் விவாதம் எதுவும் இருக்கவில்லை. அவள் உங்களுக்கு துரோகம் செய்தவளாக இருந்தால், விவாகரத்து ஏற்றதும் அந்த மனிதனைக் கல்யாணம் செய்து கொண்டிருப்பாள் இல்லையா? தனியாகத்தானே வாழ்கிறாள்?''

''அவன் ஒத்துக்கொண்டு இருக்கமாட்டான். உனக்கு ஆண்களின் மனம் எப்படிப் புரியப் போகிறது. சுலபமாக ஒரு பெண்ணின் உறவு கிடைத்தால் அதை அடைந்து மகிழ்ச்சியடையத் தயங்காதவன், அதைப் பின்னர் உறவு முறையில் பல சிக்கல்களிடையே ஏற்க விரும்பமாட்டான். மாற்றான் தோட்டத்து மல்லிகை மணத்தது. அதைக் கொண்டு வந்து தன் தோட்டத்தில் வைத்துக் கொள்ளப் பிரியமில்லை நழுவி விட்டான்.''

''அந்த மனிதனைப் பற்றியும் உங்கள் கருத்து தவறானது என நினைக்கிறேன். நட்பு உரிமையோடு நெருங்கிப் பழகியதில் எத்தனை பெரிய அநியாயம்

நடந்துவிட்டது ஒரு குடும்பத்தைக் கலைச்சுட்டோமே என்று வருந்தி நகர்ந்து கொண்டிருக்கலாம்.''

''நீ யார் கட்சின்னு தெரியலை... எல்லாருக்கும் வாதாடறே'' வரட்சியாகச் சிரித்தான் கௌதம்.

''நான் நியாயத்தின் கட்சி. அவ்வளவுதான். குளிர ஆரம்பிச்சுட்டது போகலாமா'' என்றாள்.

மேலே விவாதத்தைத் தொடராது கௌதம் பேசாது வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றான்.

வீட்டிலே அவளுக்கு சின்ன அக்காவிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. பிரித்துப் படித்தாள்.

''உனக்கு விரைவில் திருமணம் நடக்க விருக்கிறது என்பதை அறிந்து மகிழ்ச்சி. முடியுமானால் நானும், அத்தானும் சில நாட்கள் முன்னதாக வந்து உதவிசெய்ய முயலுகிறோம். முதல் மனைவியிடமிருந்து விவாகரத்து பெற்றவர் என்கிறாய்... அது என்ன காரணமோ? எதுவாக இருந்தாலும் உன்னைப் பொருத்தவரை, கண்ணியமாக நேர்மையாக உண்மை உணர்வுடன் மனசாட்சிக்கு மதிப்புக் கொடுத்து வாழத் தெரிந்து கொண்டால், கட்டாயம் நீ வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பாய் மற்றவை நேரில். அக்கா ரேவதி.''

அக்காவின் கடிதம் மனத்திற்குத் தெம்பைக் கொடுத்தது. ரேவதிக்குத் தங்கை மீது ரொம்பவே பிரியம். அவளது வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படாதா என ஏங்கியவள் இப்போது சந்தோஷப்படுகிறாள். ஆனால் பெரிய அக்கா இந்தக் கல்யாணத்திற்குப் பலதும் சொல்லி இடக்கு செய்வாள் அவள். ஏன் இன்னமும் கடிதம் போடவில்லை?

அக்கா எழுதிய கடிதத்தின் தெம்பு இரண்டே நாளிலே குறைந்து போனது. மனதின் மூலையில் எங்கேயோ ஒரு சிறு நெருடல் கண்ணில் பட்ட மண்ணைப் போல உறுத்திக் கொண்டிருந்தது.

கல்யாண ஏற்பாடுகள் துரிதமாக நடந்து கொண்டிருந்தன.

பத்திரிகையை அச்சடித்துக் கொண்டு வந்து கௌதம் அவளிடம் கொடுத்து விட்டிருந்தான்.

''எனக்கு வேண்டியவர்களின் முகவரியை இந்தக் காகிதத்தில் டைப் அடித்திருக்கிறேன்.

''உனக்கு வேண்டியவர்களுக்கு நீ அனுப்பும் போது இந்த முகவரியில் உள்ளவர்களுக்குச் சேர்த்து அனுப்பி விடு'' என்று கேட்டுக் கொண்டிருந்தான்.

அவனுடன் கடைக்குக் கூடச் சென்று தனக்குப் பிடித்தமான வண்ணத்தில் கூரைச் சேலையைத் தேர்ந்தெடுத்தாள்.

அலமேலு அம்மாளின் வேண்டுகோள்படியே அவளது மாதர் சங்கத்து சுமங்கலிப் பெண், மண நாள் பார்த்து கடைக்குச் சென்று மாங்கல்யத்தை வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்திருந்தாள்.

புடவைகளுக்கு வேண்டிய ரவிக்கைகளைத் தைத்துத் தயாராக வைத்துக் கொண்டு விட்டாள் அர்ச்சனா.

கௌதம் தேன் நிலவுக்குக் கிளம்ப ஏற்பாடுகள் அனைத்தும் பரப்பரப்பாகச் செய்து கொண்டிருந்தான்.

கல்யாணத்திற்கு இன்னமும் சில நாட்கள் தானிருந்தன.

அன்று காலை அலமேலு அம்மாள் தங்கள் மாதர் சங்கத்துத் தோழி ஒருத்தியுடன் காரில் காஞ்சிபுரம் புறப்பட்டுப் போயிருந்தாள். காமாட்சியை தரிசித்துக் கொண்டு பின்னர் தன் பரிசாக அர்ச்சனாவுக்கு இரண்டு பட்டுச் சேலை வாங்கித் தர வேண்டும் என்ற ஆசையுடன் தான் கிளம்பியிருந்தாள்.

கம்பெனி யூனியன் காரியமாக இரண்டு நாள் வேலையாகப் பெங்களூருக்குப் போயிருந்தான் கௌதம். கல்யாணத்தை முன்னிட்டு அவள் ஒரு மாத லீவு எடுத்துக் கொண்டு வீட்டில் தங்கியிருந்தாள்.

முந்திய இரவு மிகவும் பொறுமையுடன் முகவரி எழுதித் தபால் தலை ஒட்டி, தபாலில் போடத் தயாராக திருமண அழைப்பிதழ்களை எடுத்து மேஜை மேல் கட்டி வைத்திருந்தாள்.

புறப்படும் முன் அத்தை சமைத்து வைத்து விட்டுப் போயிருந்தாள். தனியே உட்கார்ந்து ஆர அமர சாப்பிட மனமின்றி சமையலறையில் அடுப்பு மேடையருகே தட்டைப் பிடித்தபடி நின்று கொண்டே சாதத்தையும், சாம்பாரையும் அள்ளிப் போட்டுக் கொண்டு குழைத்து அவசரமாக சாப்பிட்டாள். வேறு பதார்த்தங்களை சாப்பிடப் பிடிக்காது - எல்லாவற்றையும் எடுத்து ஒழுங்கு படுத்திவிட்டு, கைகளைக் கழுவித் துடைத்துக் கொண்டு கூடத்திற்கு வந்தாள். மீண்டும் ஒரு முறை திருமண அழைப்பிதழ்களின் எண்ணிக்கையைச் சரி பார்த்துவிட்டு அவைகளைத் தானே எடுத்துச் சென்று தபாலில் சேர்க்க

விரும்பினாள். அழுக்காகிப்போன புடவையைக் களைந்து விட்டு, வேறு ஒன்றை உடுத்திக் கொண்டு, முடியை வாரிக் கொண்டையிட்டுப் பொட்டிட்டு பவுடர் பூசி கண்ணாடி முன் பார்த்தபடி நின்றபோது.

வாயிற் கதவு வேகமாகத் தட்டப்பட்டது.

''யாரது... என்று அதட்டியபடி சென்று கதவைத் திறந்தவளுக்கு ஒரே வியப்பு.

வெள்ளை லக்னோ குர்த்தா பைஜாமாவில் வாசலில் நின்ற சிறுவனை எங்கேயோ பார்த்த நினைவு மூளையில் பளிச்சிட்டது.

அந்த கூர் மூக்கும், சிமிழ் போன்ற உதடுகளும், சுருட்டை முடியும், ரொம்பவே பழக்கமானதொரு முகத்தை நெஞ்சுக்குள் நினைவூட்ட முயன்றன.

''யார் அப்பா நீ? என்ன வேணும்... மெல்லிய குரலில் கேட்டபடி புன்னகைத்தாள்.

''உள்ளே வந்து பேசலாமா?'' சிறுவன் கேட்டதும், திகைத்துப் போனாள்.

''வா. தாராளமா வாப்பா என்ன பேசணும்.

கதவை சாத்திக்கொண்டு கூடத்திற்கு வந்து நின்றான் சிறுவன்.

அவளை மேலும் கீழும் பார்த்தான் கண்களில் நீர் கோர்த்துக் கொண்டு விட்டது.

''என்னப்பா? என்ன சங்கதி? ஏன் அழுகிறே?'' திகைப்புடன் கேட்டபடி அருகில் வந்து ஆதங்கத்துடன் அவனைப் பார்த்தாள்.

அவள் ஊகித்தது உண்மையாகி விட்டது.

''என் பெயர் உதயகாந்தன். உதயான்னு கூப்பிடு வாங்க. என் தங்கை பெயர் சசிகலா. நீங்கதானே எங்க அப்பாவைக் கல்யாணம் செய்துக்கப் போற அர்ச்சனா அம்மா.''

''ஆமாம். நீங்க ரெண்டு பேரும்.. கௌதமின் குழந்தைகள். புரிஞ்சுது... சொல்லி முடிப்பதற்குள் அவள் வெட்கத்தில் குறுகிப் போனாள்.

பன்னிரண்டு வயது நிரம்பாத பாலகனிடம், ஆமாம் நான் உன் அப்பாவின் இரண்டாவது மனைவி. உன் சித்தி என்று அறிமுகப் படுத்திக் கொள்ள அவளுக்கு அவமானமாக இருந்தது.

''கொஞ்சம் எங்களுக்கு ஒரு உதவி செய்ய முடியுமா? நான் அம்மாவைக் கூடக் கேட்காமல் புறப்பட்டு வந்திருக்கேன் எனக்கு உங்க முகவரி உங்க ஆபீசிலிருந்து கிடைச்சது. ஆபீசுக்குப் போன் பண்ணி விசாரிச்சேன் ரிசப்ஷனிஸ்ட் கொடுத்தாங்க.'

என்ன துணிச்சல் சின்னஞ்சிறு பையனுக்கு ரொம்பவே சாமர்த்தியம் இருக்கிறது. ''எதுக்காக விசாரிச்சே? என்ன உதவி தேவை?''

''அப்பா பெங்களூருக்குப் போயிருக்கார்னு தெரியும். அவர் இன்னிக்குப் பிருந்தாவனில் வந்துடு வார்னு சொன்னாங்க வந்தால் நாளை காலை மோதி நர்ஸிங்ஹோமுக்கு வரச் சொல்ல முடியுமா? நீங்க சொன்னா கேட்பார்.''

சிறுவன் மேலே பேச முடியாது அவளைக் கலங்கிய கண்களால் பரிதாபமாகப் பார்த்தான்.

''நர்ஸிங்ஹோமில் யார் இருக்கா? கொஞ்சம் விவரமா சொல்ல முடியுமா? அழாதே அப்பா. கண்களைத் துடைச்சுக்கோ உட்கார்ந்து நிதானமா சொல்லு - நான் உனக்குப் பாதாம் பால் கலக்கிக் கொண்டு வரேன்.''

''அதெல்லாம் வேண்டாம். அப்பா வந்து என் தங்கச்சியைப் பார்த்துப் பேசினா போதும். ரெண்டு நாளா அப்பாவைப் பார்க்கணும்னு அழறா.''

''உன் தங்கச்சிக்கு உடம்புக்கு என்ன? ஒண்ணுமே புரியலையே.''

''முந்தா நேத்து என் தங்கச்சி பள்ளிக்கூடத்தி லிருந்து வந்தவ, எங்க ஃபிளாட்டு கிட்ட ஓட்டிலே வந்து தொத்திக் கொண்ட ஒரு பட்டத்தை எட்டிப் பிடிக்க எம்பி அப்படியே குப்புற விழுந்துட்டா. நல்ல வேளையா தரையில் விழாம... கீழே வளர்ந்து கிட்டிருந்த ஒரு பூச்செடிப் புதரில் விழுந்ததாலே உசிரோட இருக்கா கால் எலும்பிலே முறிவு தலையிலே காயம் - ஒரு நாள் முழுக்க நினைப்பே இல்லே அம்மா பயந்து போயிட்டாங்க. முந்தா நேத்து இராத்திரியிலிருந்து அப்பாவைப் பார்க்கணும்னு அழறா.''

''உன் அம்மா என்ன சொன்னாங்க.''

''அவங்க என்ன செய்வாங்க. எங்களைத்தான் அப்பா விட்டுப் பிரிஞ்சுட்டாரே. அப்பா வருவார் அழாதேன்னு அம்மா பொய்யாக ஆறுதல் சொல்லிக் கிட்டிருக்காங்க. எனக்குத் தெரியும். அம்மா அவரைப் பார்த்துப் பேசமாட்டாங்க. இரண்டு பேரும் சண்டை யாச்சே'' சிறுவன் பேச முடியாது தேம்பி அழுதான்.

அர்ச்சனாவின் நெஞ்சு துயரத்தில் விம்மியது. விழிக் கடையோரம் ஈரமாகியது.

இத்தனை புத்திசாலித்தனமான அன்பான பிள்ளையை வைத்து வாழக் கொடுத்து வைக்காது, கௌதம் என்ன காரியம் செய்து விட்டார்? அவள் மனதில் பெருத்த வேதனை.

''ரொம்ப வேண்டாம் ஒரே ஒரு தடவை அப்பா வந்து தங்கச்சியைப் பார்த்து, தொட்டு அவள் முதுகைத் தட்டிக் கொடுத்து பயப்படாதே எல்லாம் சரியாகிடும்னு சொல்லிட்டு வந்தா போதும். அவள் காயங்கள் சீக்கிரம் குணமாகிவிடும்.''

''மோதி நர்ஸிங்ஹோம் ரொம்ப பிரபலமானதாச்சே - ரொம்ப பணம் பிடிக்குமே.''

''பரவாயில்லே குழந்தை பிழைச்சா போதும்னு அம்மா அழுதாங்க. அதனால்தான் பக்கத்து வீட்டு அம்மா காரில் ஏத்திகிட்டுப் போய் அங்கே வச்சாங்க.''

''பணம் ஏதாவது கொடுக்கட்டுமா மருத்துவ மனைக்குத் தேவைப்படுமே.''

''நான் இங்கே வந்ததே அம்மாவுக்குத் தெரியாது. தெரிஞ்சா கோபிப்பாங்க பணம் தேவையில்லை. அம்மா தன் கழுத்துச் சங்கிலியை அடமானம் வச்சு, பணம் எடுத்துட்டு வந்து ஆஸ்பத்திரிக்குக் கட்டி யிருக்காங்க.''

முரட்டுக் கரம் ஒன்று குடலைப் புரட்டி அழுத்து வது போன்ற சங்கடத்தில் அர்ச்சனா துடித்தாள்.

''மோதி நர்ஸிங்ஹோம் - ரூம் நம்பர் பதினெட்டா... கவலைப்படாதே. நாளைக்குக் காலை உன் அப்பா

கட்டாயம் உன் தங்கச்சியைப் பார்க்க வருவார்...'' என்றாள் புன்னகையுடன்.

''நன்றி...'' என்று கைகூப்பி விடை பெற்றுக் கொண்டு, தலையை நிமிர்த்தியபடி நடந்த அந்தச் சிறுவனிடம் காணப்பட்ட கட்டுப்பாடான குணம் அவளைப் பெரிதும் கவர்ந்தது.

தெருவிலே நடந்து சாலைக்குள் சிறுவன் மறையும் வரை எட்டிப் பார்த்துக் கொண்டு வெகுநேரம் நின்று விட்டாள்.

தாகமும், பசியுமாக வெய்யிலில் ஓடி வந்திருக்கும் குழந்தை ஒருவாய் தண்ணீர் கூடக் குடிக்காது போய் விட்டானே என்று பெரிதும் அவதிப்பட்டாள். அதற்குப் பின்னர் அவள் மேஜையிலிருந்த திருமண அழைப்பிதழ் களை இழுப்பறைக்குள் தள்ளிவிட்டு தொப்பென்று நாற்காலியில் சாய்ந்து கொண்டாள்.

அன்று பொழுது எப்படித்தான் போனதோ தன் நிலையை மறந்து அவள் துயரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

இருட்டியபின் வீடு திரும்பிய அலமேலு... மூச்சு விடாது உற்சாகத்துடன் பேசியது ஒன்றுகூட அவள் காதுகளில் விழவே இல்லை.

''உன் கல்யாணத்திற்கு என் பரிசாக இவைகளை வாங்கி வந்தேன். பிடிக்கிறதா?'' என்று புடவைப் பொட்டலத்தைப் பிரித்து மேஜை மேல அத்தை வைத்தது கூட அவள் கண்களில் படவில்லை.

''தாங்யூ அத்தை!'' என்று கூறிவிட்டு அவைகளைப் பீரோவுக்குள் வைத்தாள். நெஞ்சை அமுக்கிய சோகத்தின்

சுமையைத் தாங்க முடியாது... அவள் சட்டென்று தன் படுக்கை மீது சாய்ந்து கண்களை முடிக்கொண்டாள் உள்ளம் வெடித்து விடும் போலக் குமுறிக் கொண்டு வந்த துயரத்தில் உடல் முழுவதும் நடுங்கியது.

மறுநாள் காலை அவள் சீக்கிரம் பல்துலக்கி குளித்து மாற்றுடை அணிந்து கொண்டு, காப்பி பலாரம் சாப்பிடு முன் அவசரமாகப் பக்கத்து வீட்டுத் தொலை பேசி மூலம் கௌதமை அழைத்தாள். படுக்கையிலே களைப்புடன் இன்னமும் புரண்டு கொண்டிருந்தான் அவன். ''அவசரமா வரணுமா? அலுவலகம் போகிறதுக்கு முன் வீட்டுக்கு வரச் சொல்றியா?.. நீ சொன்னால் நான் கேட்க வேண்டியவன் தானே...'' மோகனமாக சிரித்து, போனை வைத்தான்.

''காப்பி மட்டும் சாப்பிட்டா... வேலைக்கு ஓடும்போதுதான் அவசரப்பட்டே. வீட்டிலிருக்கும் போது கூட ஏன் இந்தப் பரபரப்பு?''

அத்தை கத்தியதைக் காதில் போட்டுக் கொள்ளாது வெளியே செல்ல ஆயத்தமானாள்.

எங்கே போறேன்னு கேட்கக் கூடாது... ஆனாலும் அத்தை ஆவலை அடக்க முடியாது மென்று விழுங் கினாள்.

''ஏதோ ஒரு காரியமாத் தன்னோடு கொஞ்சம் வெளியிலே வரணும்னு கௌதம் போனில் சொன்னார். சரின்னுட்டுக் கிளம்பறேன்.'' விளக்கம் அதிகம் கொடுக்காது, தோள் பையை எடுத்துக் கொண்டு விரைவாகக் காலணிகளை அணிந்து கொண்டு தயாராகி விட்டாள்.

''அவரை உள்ளே கூப்பிட்டு ஒரு வாய் காப்பி கொடுக்கக் கூடாதோ? என்ன பெண் இவள்... ஆதங்கத்துடன் அத்தை பின் தொடருமுன் வெளியில் நின்ற காரில் சட்டென்று ஓடி ஏறிக்கொண்டாள்.

''என்ன இத்தனை அவசரம் இப்போது எங்கே போகிறாய். ஒரே மூடுமந்திரமாக இருக்கே...'' கேட்டபடி, காரை செலுத்தினான் கௌதம்.

''நேரே மோதி நர்ஸிங் ஹோமுக்குப் போகிறோம். எட்டாம் நம்பர் அறையிலே உள்ள நோயாளியைப் பார்க்கணும்.''

''உன்னுடைய தோழி யாருக்காவது உடம்பு சரியில்லையா?''

''அப்படித்தான் வச்சுக்கோங்க. சொல்லிச் சிரித்தாள் அவள்.

மருத்துவ மனையின் வரவேற்பறையில் அந்த ரிசப்ஷனிஸ்ட்டைத் தவிர யாரும் காணவில்லை.

எட்டாம் நம்பர் அறை நோயாளியைப் பார்க்கப் போகிறோம் என முந்திக்கொண்டு சொல்லி விட்டு, கௌதம் பின் தொடர அர்ச்சனா வராந்தா மீது விரைந்தாள்.

அறைக்குள் நுழைந்த கௌதம் திடுக்கிட்டுப் போய் நின்றான். 'அப்பா வந்துட்டீங்களா? உங்களை தங்கச்சி பார்க்கணும்னு ரொம்ப அழுதுச்சு...' என்றபடி ஓடி வந்து கௌதமை இறுகக் கட்டிக் கொண்டான் உதயன்.

''அப்பா!'' என்று முணங்கியபடி எழுந்திருக்க முயன்ற சசிகலா அருகில் குனிந்த கௌதமின் கழுத்தை, தன் இரு கைகளால் அணைத்துக் கொண்டாள்.

''என்ன ஆச்சு? என்ன சங்கதி'' பதற்றத்துடன் கேட்டபடி சசிகலாவின் முகத்தைத் தடவிக் கொடுத்தவன், வாயிற்படி அருகே நின்ற அர்ச்சனாவை மறந்து விட்டவன் போலக் காணப்பட்டான்.

வலது பக்கம் மகனும், இடது பக்கம் ராதிகாவும் நடந்ததைச் சொல்லக் கேட்டு... மகளைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு... கன்னத்திலே முத்தமிட்ட காட்சியைப் பார்த்ததும் அர்ச்சனா அதிக நேரம் நிற்கவில்லை.

ரிஸப்ஷன் மேஜையருகே வந்து தன் பையிலிருந்த தொரு கடிதத் துண்டை எடுத்து அவசரமாக எழுதினாள்.

''அன்புள்ள கௌதம்! பிரிய வேண்டியவர்கள் இனி நாம் என்பதை உணர்ந்து கொண்டேன். உடைந்து போன உங்கள் குடும்பம் ஒன்றாக நிற்பதைக் கண்டு மனம் நெகிழ்ந்து போனேன். இந்த அழகான குடும்பம் ஒன்று சேராது சிதறிப்போக நான் காரணமாக இருக்கக்கூடாது என்ற முடிவு ஏற்பட்டு விட்டது. ராதிகாவை மறுபடி ஏற்று குழந்தைகளுடன் நீங்கள் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பது என் கோரிக்கை. என் பிறந்த நாளுக்கு ஒரு பரிசு தரப் போவதாக சொன்னீர்களே ஞாபகம் இருக்கிறதா? உங்கள் குடும்பத்துடன் நீங்கள் ஒன்றாகி வாழும் அந்தக் காட்சிதான் நீங்கள் எனக்குத் தரப்போகும் பரிசு. நான் திருமண அழைப்பிதழ்களை யாருக்கும் அனுப்பவில்லை. ஏன் எனில் இந்தத் திருமணம் நடக்கப் போவதில்லை. எனக்குத் தேவையில்லை, என்று விலகிக் கொண்டு விடுகிறேன். தங்கள் நட்பிற்கும், அன்புக்கும் நன்றி. அர்ச்சனா.''

கடிதத்தை எடுத்துக் கொண்டு வேகமாக வெளியேறி- கௌதமின் காரை அணுகி சிறிதளவு கீழே இறக்கி விட்டிருந்த கண்ணாடி வழியே அவனது

ஆசனத்தின் மீது விழும்படிப் போட்டு விட்டு... ஆட்டோ ஒன்றைப் பிடித்துக் கொண்டு வீடு திரும்பி விட்டாள்.

அர்ச்சனா சொன்னதைக் கேட்டு அலமேலு இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

''கல்யாணத்தை நிறுத்திட்டியா? இத்தனை கோடிச்ச பிறகு இப்படிச் செய்யலாமா?''

''இப்படி செய்கிறதுதான் நியாயம் அத்தை! அந்தக் குருவிக் கூட்டை வேலைக்காரி கலைச்சப்போ நீங்க எத்தனை பதைச்சுப் போனீங்க. ஐயோ பாவம்னு அலறினீங்க. குருவிக்கூடு போன்ற ஓர் அழகான குடும்பத்தை நான் சிதைச்சா... எத்தனை பாவம்? இதுக்கு ஏன் அலறமாட்டேங்கறீங்க... அத்தை! என் கல்யாணம் நின்னுபோயிட்டா என்ன? பெரிய அக்கா கேலியாக விஷமமாக கடிதம் எழுதுவாங்கன்னு பயமா? என் அலுவலகத்திலே கிசுகிசுப்பாங்கன்னு அச்சமா? நான் எதுக்கும் கவலைப்படலை. இந்தக் கல்யாணம் நடந்திருந்தாதான் நான் அமைதியை இழந்து ரொம்ப துன்பப்பட்டிருப்பேன். இப்போ என் மனம் சமாதான மடைஞ்சிருக்கு... இதை மறக்க கொஞ்ச நாள் ஆகும். பரவாயில்லை... இந்தக் காலத்திலே முப்பது-நாற்பது வயசுக்குக் கூட ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடிக்க முடியும். அப்படியே கல்யாணம் ஆகாதவளா நான் தனிக்கட்டையா நின்னுட்டா குடிமுழுகிப் போகாது அத்தை. நான் கல்யாணம் செய்துகொண்டு இரண்டு குழந்தை பெற்று ஏற்கனவே மக்கள் பெருக்கத்திலே தவிக்கிற இந்த நாட்டுக்கு சுமை கூட சேர்க்காம... தனியா இருந்தா நாட்டுக்கு ஒரு சேவை செய்தவளாவேன்... இல்லையா அத்தை...? கேட்டுவிட்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்... சிரித்தாள் அர்ச்சனா அழுது கொண்டே சிரித்தாள்.

ராதாவின் திருமணம்

அவள் வேலை செய்த நிறுவனத்தின் தலைவர் மகளது திருமணம், நகரத்தில் பிரபலமான அபிராமி கல்யாண மண்டபத்தில் நடந்து கொண்டிருந்தது; காலை முகூர்த்தம். நிறுவன ஊழியர்கள் அனைவரும் வந்திருந்தனர். எல்லோரும் பணம்போட்டு வாங்கின வெள்ளிக் குத்து விளக்குப் பரிசை, வண்ணக் காகிதத்தில் சுற்றிக் கையில் பிடித்துக் கொண்டு ஒரு பக்கமாக உட்கார்ந்திருந்தார் தலைமைக் கணக்கர் தாமோதரன். காஞ்சிபுரப் பட்டும், சைனா சில்க்குமான அலங்காரத்தில் வந்திருந்த பெண்கள் பக்கத்தில் அவள் உட்கார்ந் திருந்தாள். தாலி கட்டி முடிந்ததும் பந்திக்கு முந்திக் கொண்டு உடனடியாக அலுவலகத்திற்கு அத்தனை பேரும் போய்ச் சேர்ந்தாக வேண்டும். சாப்பாட்டுக்கு விழுந்தடித்துக்கொண்டு ஓடி இடம் பிடிக்கும் சங்கதி அவளுக்குப் பிடிக்காது. என்ன செய்வது? அன்று அப்பாவுக்கு மட்டும் கொஞ்சம் சாதம் வடித்து வைத்துவிட்டு... அவள் காலைக் காப்பியுடன் கல்யாணத் திற்குப் புறப்பட்டு வந்திருந்தாள். வயிறு பசியால் குடையத் தொடங்கியது.

கட்டாயம் என்றில்லாவிட்டால் அவள் திருமணத் திற்குப் போவதே இல்லை.

அந்தக் கசப்பான சம்பவத்திற்குப்பின் அவளுக்குக் கல்யாணம் என்பதே பெருத்த அலர்ஜியாகி விட்டிருந்தது.

கொட்டுமேள சத்தம்... மூச்சை அடைத்தது போன்றதொரு உணர்வை உண்டாக்கியது. மலர்களும் சந்தனமும் மணந்த கல்யாணக் கூடம்... என்னென்னவோ எண்ணங்களை உண்டாக்கி அவளைத் திக்குமுக்காடச் செய்தது. அந்தக் கசப்பான நிகழ்ச்சிகள், ஏமாற்றங்கள்... அடிவயிற்றினின்று... வேதனையாக நெஞ்சை அடைத்தது. தலைவர் வீட்டுக் கல்யாணம்.

அலுவலகமே திரண்டு வந்திருக்கும்போது அவள் வராவிடில் நன்றாக இருக்காதே.

''ஹலோ! இப்பத்தான் வந்தியா?... நான் இன்னொரு முகூர்த்தத்துக்கு ஓடிக் கொண்டிருக்கேன். இந்தப் புடவை எங்கே வாங்கினே?'' என்று ஒருவரையொருவர் விசாரித்து சிரித்துக் கொண்டிருந்த கலகலப்பான பெண்கள் கூட்டத்திலே, அவள் முகம் இறுகிப் போய் தன்னந் தனியாக யாருடனும் பேசாது உட்கார்ந்திருந்தாள்.

சில ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி நெஞ்சில் நிழலாட அவள் வேதனையுடன் எங்கேயோ வெறித்துக் கொண்டிருந்தாள். கொட்டுமேளம் கொட்டுமேளம்... யாரோ குரல் கொடுக்க... மேள சத்தம் மண்டபத்தைக் கிடுகிடுக்கச் செய்தபோது அவள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். கல்யாண வீட்டுப் பெண் ஒருத்தி தட்டை நீட்டியபோது கையில் அள்ளி வைத்துக் கொண்டிருந்த பூவிதழ்கள் வியர்வையால் கசங்கி விட்டிருந்தன.

இருந்த இடத்திலிருந்து அவள் தூவிய மலர்கள் அவளுக்கு முன்னே உட்கார்ந்திருந்தவர்கள் தலைமீது விழுந்தன.

அதற்குப்பின் கூடியிருந்தவர்களிடையே பெருத்த குழப்பம். ஒருவரையொருவர் நகர்த்திக் கொண்டு மேடைக்குச் சென்று, தம்பதியரைத் தனிப்பட்ட முறையில் கைகுலுக்கி வாழ்த்த விரைந்தவர்கள் சிலர். தம் குழந்தைகளையும், மனைவியையும் தள்ளிக் கொண்டு சாப்பாட்டு ஹாலை நோக்கி விரைந்தனர் சிலர்.

டயட்டில் இருக்கேன் வேண்டாம் என்று, அழைத்தவரிடம் நாசுக்காகக் கூறிவிட்டு வாசலில் நின்ற பெண்கள் கொடுத்த வெற்றிலைப் பாக்குப் பையுடன் வெளியேறியவர் சிலர்.

''இது நம்ப வீட்டுக் கல்யாணம் சாப்பிடவா'' என்று தட்டெழுத்தர் சரசா தோளைத் தொட்டு உலுக்க அவள் எழுந்திருந்தாள்.

சரசா வெகு சாமர்த்தியக்காரி. முன்னதாகவே அவள் கணவர் கஸ்தூரியிடம் ஏற்பாடு செய்து விட்டிருந்தாள்.

அவர் தாலி கட்டி முடித்தவுடன் சாப்பாட்டு ஹாலுக்குத் தாவி முன் பக்கத்து வரிசையான நாற்காலிகளைப் பிடித்துக் கொண்டு, தாம் உட்கார்ந்த இடத்துக்கு அடுத்ததாக இருந்த மூன்று நாற்காலிகளில் தமது கைகுட்டை, கைப்பை... ஸ்கூட்டர் சாவி முதலியவற்றை அடையாளமாக வைத்து விட்டார்.

''விழாக்களில் நண்பர்களுக்கு இடம் பிடித்து வைப்பது போல, இங்கே சோத்துக்கும் இடம் பிடிச்சுட்டான் தடியன்...'' யாரோ ஒரு வயதானவர் தம்மை வைததை அவன் பொருட்படுத்தவில்லை.

சாப்பாடு மிகவும் பிரமாதமாக இருந்தது.

இரசித்துச் சாப்பிட்டாள் சரசா.

''நாம் கொடுத்த பரிசுப் பணத்துக்கு மேலே சாப்பிட்டு விட்டோம்'' என்று அடிக்குரலில் கூறியபடி சிரித்துக் கொண்டு எழுந்தாள். ராதா மௌனமாகப் பின்னால் நடந்து கையைக் கழுவ குழாயருகில் கியூவில் நின்றாள்.

கைகழுவி வாயைத் துடைத்துக் கொண்டு வெற்றிலை - பாக்கை அள்ளிக் கொண்டு வெளியே வந்து, மலையாகக் கிடந்த செருப்புக் குவியலில் தன்னுடைய வைகளைத் தேடி... அவசரமாகத் திணித்துக் கொண்டு, வெற்றிலை, பாக்குப் பையைப் பெற்றுக் கொண்டு வெளியே செல்லத் திரும்பியபோது, மின்விசை தந்த அதிர்ச்சி போல... அவள் திகைத்துப் போய் நின்றாள்.

''ஹலோ!'' என்று சிரித்துக் கொண்டு அருகில் வந்து நின்ற லோகநாதனைப் பார்த்து வியர்த்து விறுவிறுத்துப் போனாள்.

2

முன்னைவிட அவன் சற்றுப் பருமனாகக் காணப்பட்டான். சுருண்ட கிராப்பு முடியிலும் காதோரமும் லேசாக நரை தெரிந்தது. அதைத் தவிர அவன்... அப்படியே தானிருந்தான். ''இப்போ நான் சென்னையிலேதான் இருக்கேன் நீ எங்கே வேலை செய்கிறாய்?...'' அவன் சகஜமாகக் கேட்டபோது அவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

அடாத காரியத்தைச் செய்து விட்டும் ஆண்பிள்ளை என்ற துணிச்சலில் அவளிடம் வந்து தாராளமாகப் பேசுகிறானே? இதே தவறை அவள் செய்திருந்தால்... திடீரென்று இப்போது சந்திக்க நேர்ந்தால்... எத்தனை பயந்து போயிருப்பாள்? அவள் தவறு செய்யாதிருந்தும், அவனது சொற்படி நடந்து அவமானப்பட்டும்... இப்போது அவனைக் கண்டு நடுங்குகிறாளே.

''அப்படியா?'' என்று கேட்டுவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''யாரது அந்த மன்மதன்?'' சரசா வேடிக்கையாகக் கேட்டபோது அவள் மனம் நெருப்பாக எரிந்தது.

மன்மதன் என்றுதான் அவனைக் கண்டு அவள் ஒரு சமயம் மயங்கிப் போய் விட்டிருந்தாள்.

அந்த வேஷம் கலைந்து வில்லனாகி வெகுகால மாயிற்றே.

''எங்க ஊர்க்காரர்... என்று சுருக்கமாகக் கூறிவிட்டு, சரசாவுடன் வேகமாக வெளியே நடந்து

விட்டான். கொஞ்ச தூரம் சென்றபின் மெல்லத் திரும்பிப் ப்ார்த்தபோது அவன் அந்தத் திக்கையே பார்த்துக் கொண்டு நிற்பதை உணர்ந்து மனம் பதைத்தது.

அன்று முழுவதும் அவளுக்கு வேலையே ஓடவில்லை.

சதாசிவம் அண்ட் கோவில் அவள் ஒரு கணக்கராகச் சேர்ந்து ஆண்டுகள் சில சென்று விட்டிருந்தன.

தலைமைக் கணக்கர் தாமோதரனுக்கு அவளது வேலையில் மிகவும் நல்ல அபிப்ராயம் இருந்தது.

அங்கு வேலை பார்த்த மற்றப் பெண்களில் அவள் வித்தியாசமானவளாக இருந்தாள்.

நேரத்தோடு அங்கு போனாள். கொடுத்த வேலையைச் சட்டென்று தவறுகள் ஏதுமின்றி முடித்துக் கொடுத்தாள். ஒப்பனைகள் அதிகமில்லாத போதிலும் பார்க்கப் பளிச்சென்று இருந்தாள்.

சக ஊழியரிடம் மிக்க மரியாதையாக நடந்து கொண்டாள்.

ஆனால் ஏனோ அவளது முகத்திலே இனம் காணாத ஒரு சோகம் அப்பிக் கொண்டிருந்ததை அவர் கவனிக்கத் தவறவில்லை.

பெற்ற தாய் கொஞ்ச காலத்திற்கு முன் இறந்து போனாள் என்று கேள்விப்பட்டிருந்தார்... அந்த இழப்பின் துயரமோ...

அவளது ஒரே அண்ணன்... காமாலைக் காய்ச்சலில் இறந்து விட்டான் என்று சொன்னார்கள். அந்தப் பேரிழப்பின் துக்கமோ...?

என்று எண்ணி உள்ளூர அனுதாபப்பட்டார்.

அன்று அவள் செய்த வேலையில் பல தவறுகள் காணப்பட்டன.

உடனடியாக மேனேஜர் பார்வைக்கு அனுப்ப வேண்டிய ஃபைல்களை அடியில் வைத்துவிட்டு தேவையற்றவைகளை மேலே அடுக்கி அனுப்பி விட்டிருந்தாள்.

சிறிய கணக்குகளில் கூடத் தவறு காணப்பட்டது.

அடிக்கடி எங்கேயோ பிரமிப்புடன் வெறித்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

இந்தப் பெண்ணுக்கு இன்று என்ன வந்துவிட்டது

மற்ற எல்லோரும் தலைவர் வீட்டுக் கல்யாணத் தைப் பற்றி விமர்சித்துக்கொண்டு... மகிழ்ச்சியாகக் காணப்படும் சூழ்நிலையில், இவள் முகத்தில் ஏன் இந்தத் துயரம் வேலையில் ஏன் தவறுகள்?...

''ஏம்மா உடம்புக்கு என்ன?'' அனுசரணையாக வந்து கேட்டார்.

''ஒன்றுமில்லை ஸார்...'' பதட்டமாகப் பதிலளித் தாள்.

''உடம்புக்கு ஏதாச்சும்னா, அரைநாள் லீவு போட்டு விட்டுப் போம்மா... தாத்தாவுக்குத் தலைநோவு பாட்டிக்குப் பல்வலின்னு லீவு போடற பழக்கம் உனக்கு கிடையாதே... கனிவுடன் அவர் சொன்னபோது அவள் மறுத்தாள்.

''ஒன்றுமில்லை லேசாக உடலில் அசதி. இரவு நல்ல தூக்கம் இல்லை. எங்கப் பக்கமெல்லாம் ரொம்பக்

கொசு உபத்திரவம்'' என்று கூறிவிட்டுப் பரபரப்புடன் ஃபைல்களைப் புரட்டினாள்.

அன்று மாலை வீட்டிற்குப் போகப் புறப்பட்டவள் மனதிலே சட்டென்று ஒரு நினைவு வந்தது.

3

அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் அவள் எந்த ஒரு குழப்பம் ஏற்பட்டாலும்... சாரதா அம்மாவிடம் ஆலோசனை கேட்பது வழக்கம்.

பெருத்த ஆபத்திலிருந்து அவளைக் காப்பாற்றிய வள் அந்த அம்மாள். அத்துடன் மட்டுமா... அந்த நிறுவனத்தில் வேலை தேடிக் கொடுத்து... உதவியவள். அவளுக்குப் பலரைத் தெரிந்திருந்தது - எந்த உதவியையும் தயங்காது, செய்ய முன் வந்த ஒரு பரோபகார சிந்தையுடையவளாக இருந்தாள்.

தாங்கள் வசித்த இராயப்பேட்டை தாக்கூரப்பன் தெருவுக்குப் போகுமுன் வழியில் இறங்கி... சர் சதாசிவம் நெடுஞ்சாலைக்குள் புகுந்து... காவேரி நர்மதா மான்ஷனை அடைந்தாள். மூச்சிறைக்க மூன்றாவது தளத்திற்குப் படியேறி... அந்த எண் ஃபிளாட்டின் முன் வந்து அழைப்பு மணியை அழுத்தமாக அமுக்கினாள்.

கதவைத் திறந்த சாரதாவின் முகமெல்லாம் ஒரே சிரிப்பு...

''வாம்மா! பார்த்து ரொம்ப நாளாச்சு...'' என்று கதவை அகலத் திறந்து அவள் நுழைய இடம் விட்டு ஒதுங்கி நின்றாள். அவள் உள்ளே நுழைந்தவுடன் கதவைத் தாளிட்டுக்கொண்டு முன் அறைக்கு வந்தாள்.

''என்ன சங்கதி ஏதோ சொல்ல வந்திருக்கேன்னு தெரியுது உட்கார்'' என உபசரித்தபடி சோபா ஒன்றில் சாய்ந்து கொண்டாள் சாரதா.

''பதறாமல் சங்கதியை நிதானமாகச் சொல், கேட்கிறேன்'' பரிவுடன் சொன்னாள் சாரதா.

நெற்றி மீது பூத்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள் ராதா.

'வாயைத் திறக்குமுன் தொண்டை காய்ந்து விட்டது போன்றதொரு உணர்வு.

''எங்க முதலாளி வீட்டுக்கு கல்யாணத்திலே நான் லோகநாதனைப் பார்த்தேன்.'' சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு மூச்சு முட்டியது.

''அதனால் என்ன? அவன் பேயா, பிசாசா? பயந்து போவதற்கு?'' சாரதா சிரித்தாள்.

''அந்தப் பழைய சங்கதி அப்படியே குபீருன்னு நெஞ்சிலே ஒரு நீர் வீழ்ச்சி போல நினைவில் எழவே, மனம் ரொம்ப வேதனைப் பட்டது. ஹலோன்னு அவன் ஒண்ணுமே நடக்காதது போல என்கிட்டே பேச வந்தான்.''

''நீயும் ஹலோன்னு பதில் சொல்லி யிருக்கலாமே...?''

''அதுதான் முடியலை... அவனைப் பார்த்ததும் அவமானமும் ஆத்திரமும் நெஞ்சை அடைத்தது. அழுகை வந்தது... ரொம்ப சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன். லோகநாதன் இங்கே சென்னைக்கு வந்திருக்கான் போலத் தெரிகிறது. அவன் எங்கள் முதலாளி வீட்டுக் கல்யாணத்திற்கு வந்ததைப் பார்த்தால்... அவங்களுக்கு வேண்டியவனாக இருப்பான் போல இருக்கு. ஒரு சமயம் அவன் என்னை அலுவலகத்திலே வந்து சந்திக்க நேர்ந்தால்... என்னோடு பேசினால்... நான் எப்படி நடந்து கொள்வதுன்னு தெரியலை. எங்கள் நிறுவனத்தில் உள்ள மற்ற ஊழியர்களுக்கு அந்தப் பழைய சங்கதி தெரிந்து போனால்... என் மானம் சிந்திப் போகுமே... சாரதா அம்மா... எனக்கு அவனைப் பார்த்ததும் அவமானம் தாங்கலை. ஒரே நடுக்கமாப் போயிட்டது'' சொல்லிவிட்டுத் தாங்க முடியாது... ராதா விசும்பினாள்.

''உன்னைப் பார்த்த லோகநாதன் பழைய சங்கதியை நினைச்சுக் கொஞ்சம் வெட்கப்பட்டிருக்கணும் அதுக்கு மாறாக அவன் சிரித்துப் பேச முயற்சித் திருக்கான். இது தான் ஒரு வேடிக்கை. தவறான காரியங்களில் ஓர் ஆணும், பெண்ணும் ஈடுபடும்போது... ஆண் எப்பவுமே நிலைமையை சமாளிச்சுக்கிறான். பெண்தான் அப்படியே மனசு ஒடிஞ்சு போரா... இது ஒரு பைத்தியக்காரத்தனம். நீ பழசை உதறிவிட்டு... நிமிர்ந்து நடக்கணும். அவனைப் பார்த்தால் பதிலுக்குப் புன்னகைத்து... ரெண்டு வார்த்தை பேசணும்...

''அது அவசியமா சாரதாம்மா?''

''எனக்குத் தோணறது அந்த லோகநாதன் உன்கிட்டே பேச மறுபடி முயல்வான். உன்னை ஒரு சமயம் உன் அலுவலகத்திலே வந்து பார்த்தாலும்... வியப்படைவதற் கொன்றுமில்லை...''

''என்னை இனி ஏன் தொடர்பு கொள்ளணும்...?''

''ஒரு சபலம்... சின்ன வயதிலே துணிவில்லாம வீட்டை விட்டோடிட்டமே, இப்போ முயன்று பார்க்கலாமென்கிற அல்ப ஆசை.''

''ரொம்பவே துணிச்சல்தான்... அப்படி அவன் என்னைப் பார்க்க வந்தால்? பேசினால்?''

''உன்னைப் பார்க்க வந்தால் தாராளமா வரட்டும். பேசினால்... பதில் அழகாக சொல்லு ஏதேனும் சிக்கல் ஏற்பட்டா நான் இருக்கேன். வந்து என் கிட்டே சொல்லிக்கோ. தீர்த்து வைக்கிறேன்'' சாரதா சிரித்தாள்.

சிறிது நேரத்தில் விடைபெற்றுக்கொண்டு ராதா கிளம்பினாள். அவள் வீட்டுக்குள் வருவதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. வாசலிலேயே அப்பா வந்து நின்று கொண்டிருந்தார். ''என்னம்மா இன்னிக்கு ரொம்ப நேரமாயிட்டது?'' என்றார்.

அவள் ''ஆமாம் அப்பா. பஸ் இன்னிக்கு ரொம்ப லேட்டாதான் கிடைச்சது'' என்றாள்.

ராயப்பேட்டை தாக்கூர் தெரு நெடுஞ்சாலைக் குள்ளே ஓடிய ஒரு சந்து.

இன்னமும் கட்டட விற்பனையாளர்கள் கண்களில் படாது பத்து ஓட்டுக்கூரை வீடுகளை நெருக்கமாகத் தன்னுள் அடக்கிக் கொண்டிருந்த ஒரு மொட்டை சந்து அது.

கடைசியாக இருந்த அவர்களது வீடு நிறையவே பழுதடைந்து விட்டிருந்தது.

அப்பா வேலையினின்று ஓய்வடைந்தபோது கிடைத்த பிராவிடன்ட்பண்ட் தொகையைப் போட்டு வாங்கிய வீடு.

பழுது பார்த்து வைத்துக் கொள்ள முடியாத பற்றாக் குறை பட்ஜெட்டில் ஓடியது அவர்கள் வாழ்க்கை.

அண்ணன் விட்டுப்போன இன்ஷூரன்ஸ் தொகை... அப்பாவின் சேமிப்பு... இவைகளில் கிடைத்த வட்டியும், அவளது சம்பளமும்தான் அவர்களது வாழ்க்கையைப் பாதுகாத்தன.

அக்காவுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே திருமணமாகி விட்டிருந்தது. பம்பாயில் அவள் வசித்துக் கொண்டிருந்தாள்.

ஓரளவு வசதியாகத்தான் வாழ்ந்தாள் அக்கா. ஆறு மாதத்திற்கு ஒரு தடவை ஒரு கார்டு போட்டாலே அதிகம். பண்டிகை, பிறந்தநாள் என்று எதற்கும் ஒரு இரண்டு ரூபாய் காசை அவளிடமிருந்து ராதா எதிர்பார்க்க முடியாது. அக்காவுக்குப் பிறந்த வீட்டைப் பற்றி அக்கறை குறைவு. ஆனால் ஆலோசனைகள் அதிகம் சொல்ல வந்து விடுவாள் தாராளமாக. அண்ணனுக்குப் பின்... வீடு... பிற்காலத்தில் பெண்கள் இருவரைத்தான் சேரும் என்பது அவளுக்குத் தெரியும். அந்த ஒரு காரணத்திற்காக... அவள் பிறந்தகத்தின் தொடர்பை... விடாது பற்றிக் கொண்டிருந்தாள்.

வீட்டுக்குள் நுழைந்தவள் நடையில் செருப்பு களைக் கழற்றி வைத்து விட்டு... முற்றத்தில் இறங்கிக்

கால்களைக் கழுவிக் கொண்டாள். குளியலறைக்கு விரைந்து வாளியில் நிரப்பி வைக்கப்பட்டிருந்த பச்சைத் தண்ணீரில் குளித்து விட்டு கொடியில் கிடந்த சேலையை எடுத்து உடுத்திக் கொண்டு முடியை வாரி முடிச்சிட்டு பொட்டு வைத்துக் கொண்டு சமையலறைக்குள் புகுந்தாள்.

அவள் வேலையினின்று வந்து சமைத்தால்தான் இரவு சாப்பாடு நடக்கும்.

அப்பாவுக்கு, சில ஆண்களைப்போல அடுப் பருகில் நின்று எதுவும் செய்யத் தெரியாது.

பாலை வாங்கி வந்து பால் பொட்டலத்தைப் பிரித்து, பாலைக் காய்ச்சி மேடை மீது இறக்கி வைத்து விடும் வேலையோடு... அவர் வெளியே வந்து விடுவார்.

கோதுமை மாவை அள்ளிக் கிண்ணத்தில் போட்டு நீர் ஊற்றி, துளி உப்பு போட்டு வேகமாகப் பிசைந்து உருட்டினாள்... கூடையில் கிடந்த வெங்காயத்தை நறுக்கி வைத்து விட்டு உருளைக் கிழங்கை வேகப் போட்டாள்.

அப்பா கூடத்தைக் கடந்து தமக்குள்ளே அபிராமி அந்தாதியை முணுமுணுத்துக் கொண்டிருந்த சமயம், அவள் சப்பாத்தியும் உருளைக்கிழங்கு மசாலாக்கறியும் செய்து முடித்து விட்டாள்.

வழக்கம் போலக் கூடத்துத் தரையில் இருவரும் சாப்பிட அமர்ந்திருந்தனர். அப்பாவுக்கு சூடாகச் சப்பாத்தியும், கறியும் பரிமாறிவிட்டு அவள் தன் தட்டுடன் உட்கார்ந்து கொண்டாள்.

அப்பா சாப்பிட்டு முடித்ததும்... கை கழுவி விட்டு... நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

சமையலறை வேலைகளை விரைவாக முடித்துக் கொண்டு, அவள் கூடத்துத் தரையில் படுக்கப் பாயைப் பரப்பிக் கொண்டு உட்கார்ந்தபோது அப்பா தொண்டையைக் கனைத்தார்.

''உன் அக்கா கடிதம் போட்டிருந்தாள்'' என்றார் மெல்லிய குரலில்.

''உம்!'' சூள் கொட்டினாள் அசட்டையாக.

''அவளுக்கு என்னவோ கொஞ்சநாளா· உடம்பு சுகமில்லையாம். இங்கே வந்து நம்மோட ஒரு மாதம் தங்கி வைத்தியம் செய்து கொள்ளப் போறாளாம்.''

திடுக்கிட்டுப் போனாள் ராதா. அக்கா வருகிறாள் என்றால் அதிகப்படியான செலவாயிற்றே என்ற பதட்டம்.

''பம்பாயில் இல்லாத டாக்டர்களா...'' ஏளனமாகக் கேட்டாள்.

''அங்கே அவளைப் பார்த்துக் கொள்ள யாரும் இல்லை. இங்கே என்றால் நானும், நீயும் இருக்கிறோமே- அதனாலே வருகிறாள்.''

''ஆபீசுக்குப் போகாமே நான் அக்காவைப் பார்த்துக் கொண்டு வீட்டோட இருக்க முடியுமா'' எரிச்சலோடு கேட்டபடி தலையணை மீது சாய்ந்தாள்.

அவளுக்கும், அக்கா மாலதிக்கும் இடையே சுமுகமானதொரு உணர்வு என்றும் இருந்ததில்லை.

அக்காவுக்கு அவள் மீது என்றுமே சிறிது பொறாமை.

தன்னைவிட ராதா படித்துவிட்டிருக்கிறாள் என்ற தொரு மனக்குறை. அழகாக இருக்கிறாள் என்றதொரு பொறாமை.

சின்ன வயதிலேயே அவள் தங்கையுடன் போட்டி போட்டவள். கல்யாணமாகி புக்ககம் போன பின்பு ஒரு தடவை அவள் பிறந்த வீட்டில் சீராட வந்த சமயம், அந்த வெறுப்பான நிகழ்ச்சி நடந்தபோது... அக்காதான் அண்ணனை ரொம்பத் தூண்டிக் கொடுத்து ஆர்ப் பாட்டங்கள் செய்து அவளை மிகவும் அவமானப் படுத்தினாள்.

அக்கா மாலதி... இப்பொழுது எதற்காக இங்கே வர வேண்டும்?... பற்களைக் கடித்துக் கொண்டு படுக்கையில் புரண்டாள்.

4

மறுநாள் காலை அவள் அலுவலகத்திற்குள் நுழைந்து தன் ஆசனத்தில் அமர்ந்தாள்.

பஸ் நிலையத்தினின்று வேகமாக நடந்து வந்த களைப்பை நிவர்த்தி செய்து கொள்ளுமுன்... அலுவலகப் பையன் ஓடி வந்து அழைத்தான்.

''தலைமைக் கணக்கர் அறை போனில் உங்களை யாரோ கூப்பிடுகிறாங்க... விருக்கென்று மற்ற ஊழியர்கள் அவளை நிமிர்ந்து பார்த்தனர். காலை வேளை. வேலை ஆரம்பிக்குமுன் அவளை யார்

அழைக்கிறார்கள்? அவர்களது தலையை ஆவல் குடைந்தது.

தலைமைக் கணக்கர்... மானேஜரின் அறைக்குப் போயிருந்தார்.

அவசரமாகப் போனைக் கையில் எடுத்தாள். மனம் பரபரத்தது.

வீட்டை விட்டு வரும்போது அப்பா... நன்றாகத் தானே இருந்தார்.

தொலைபேசியில் யாராவது அழைத்தால் அவளுக்கு எப்பொழுதும் அப்பாவைப் பற்றிய கவலைதான்.

''யாரோ லோகநாதனாம். உங்களுடன் பேச வேண்டுமென்று கூப்பிடுகிறார்.'' ரிசப்ஷனிஸ்ட்... மெல்லிய குரலில் தேனாகக் குழைந்தாள்.

அந்த வேளையில்... லோகநாதன் அவளை எதற்காக அழைக்க வேண்டும்? கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் ''சரி பேசுகிறேன் லயன் கொடுங்கள்'' என்றாள்.

''லோகநாதன் பேசறேன்... ஞாபகமிருக்கா... கரகரத்தது மறுபக்கம் அவனது குரல்.

'நன்றாக ஞாபகம் இருக்கு நான் இறக்கும்வரை மறக்கக்கூடிய பெயரா?...' வெடுக்கென்று சொல்ல வேண்டுமென்று ஆத்திரத்தில் குமைந்தாள்.

''ம்... என்று மெல்லிய குரலில் முணகினாள்.

''நேத்துக் கல்யாணத்திலே பார்த்தேன். பேசணும்னு ஆவலாக இருந்தது.''

'எனக்கு ஆவல் இல்லை. ஆத்திரமாக இருந்தது.' உரத்த குரலில் கத்த வேண்டும் போல எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது அவளுக்கு.

''எனக்கு வேலை இருக்கு. என்ன பேசணும்னு சட்டுனு சொன்னால்'' என்றாள் வெறுப்புடன்.

''உன்னை நான் சந்தித்துப் பலவும் பேச விரும்பறேன். எங்கே உன்னைப் பார்க்க முடியும்? ரொம்ப முக்கியம்...''

''அதற்கு அவசியம் இல்லேன்னு நான் நினைக்கிறேன். அவ்வளவுதானே?...'' போனை வைத்துவிட்டுத் திரும்பினாள்.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. லோகநாதனுக்கு வெட்கமே இல்லை... அத்தோடு அலாதி துணிச்சல்... என்று எண்ணியபடி தன் இருக்கையில் போய் அமர்ந்தாள்.

ஃபைல் ஒன்றை எடுத்துக் கொண்டபோது உள்ளங்கைகள் வியர்த்து விட்டிருந்ததை உணர்ந்தாள். இதென்ன புதுத் தொல்லை அவளுக்கு. இருக்கிற பிரச்சினைகள் போதாதா? வெகுண்டபடி வேலையைக் கவனிக்கத் துவங்கினாள். அந்த நிறுவனத்தில் வேலை ஏற்று வருடங்கள் ஆறு ஆகிவிட்டிருந்தன.

அவள் உண்டு அவள் வேலையுண்டு என்று அடக்கமாக நடந்து கொள்ளும் பெண் ஊழியர் என்ற பெயரை அவள் சம்பாதித்து விட்டிருந்தாள்.

யாரும் அவளிடம் வேடிக்கையாகப் பேச முன் வந்ததில்லை. அவளும் மற்றப் பெண் ஊழியர்களிடம்

நெருங்கித் தோழமை பூண்டு ஊர்க் கதைகளை அளந்து கொண்டிருந்ததில்லை.

ஆண் ஊழியர்களிடம் இன்னமும் கொஞ்சம் எட்டவே இருந்து பழகினாள்.

அலுவலக சம்பந்தப்பட்ட காரியங்களைப் பேசுவதைத் தவிர, இன்று வெய்யில் அதிகமாக இருக்கு என்று கூட அவள் பேச்சைத் தொடர்ந்ததில்லை.

ரொம்பக் கர்வம் பிடித்தவள் என்று மற்றப் பெண் ஊழியர்கள் நினைத்தனர்.

சரியான பத்தாம்பசலி... என்று ஆண் ஊழியர்கள் அவளை அளந்து வைத்தனர்...

எங்கேயோ டெல்லியில் வேலை செய்வதாக லோகநாதனைப் பற்றி எப்பவோ கேள்விப்பட்டிருந்தாள்.

இப்போது திடுதிப்பென்று அவன் ஏன்... சென்னைக்கு வந்தான் வந்தவன் அவளைத் தொடர்பு கொள்ள முயலுவதின் நோக்கம்... மனது குழம்பிக் கொண்டே இருந்தது. பகல் உணவு நேரத்தின்போது... சாப்பாட்டறையில் எப்பொழுதும் உட்காரும் மேஜை அருகே வந்து உட்கார்ந்து கொண்டு தோள் பையிலிருந்த டிபன் டப்பாவை எடுத்துத் திறந்தாள்.

காலை புறப்படும் முன் அவசரமாக டப்பாவுக்குள் எடுத்துப் போட்டுக் கொண்டிருந்த இட்டலிகள் மிளகாய்ப் பொடியும், எண்ணெய்யுமான அபிஷேகத்தில் சாப்பிடத் தயாரான பதத்தில்தான் இருந்தன.

ஆனால் அவளுக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது. ஒரு சிறு விள்ளல் இட்டலி தொண்டையை

அடைத்தது. சட்டென்று தண்ணீரை ஒரு வாய் குடித்து விட்டு டப்பாவை மூடிவிட்டு எழுந்தாள்.

கீழே இறங்கிச் சென்று அலுவலகத்துக்கு வாசற் பக்கம் வந்தாள். டப்பாவிலிருந்த இட்டலிகளைக் குப்பைத் தொட்டியில் போட அவளுக்கு மனமில்லை சிரமப்பட்டு சம்பாதித்த பணத்தைக் கொண்டு வாங்கிய பொருளில் தயாரித்த உணவு அது...

குப்பைத் தொட்டியை எட்டிப் பார்த்து ஏமாந்த வண்ணம் சுற்றிக் கொண்டிருந்த சொறி நாய் ஒன்றின் முன் அவைகளை எடுத்து விட்டெறிந்தாள்.

வாலை ஆட்டியபடி ஒரே பாய்ச்சலில் இட்டலி ஒன்றைக் கவ்வி வேகமாக விழுங்கிவிட்டு... மற்றதைத் தூக்கிக் கொண்டு அது... சாலை ஓரத்திலே விரைந்தது...

டப்பாவைக் கழுவித் துடைத்துப் பைக்குள் போட்டுக் கொண்டு, கையைக் கழுவிக் கொண்டு... தன் ஆசனத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள். பகல் நேர வேலை ஆரம்பிக்கும் வரை பொழுது நீண்டு, கனத்துத் தொலைத்தது...

5

அன்று மாலை அவள் வீட்டுக்கு வந்தபோது... முற்றத்தில் அக்கா உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

கடிதத்தில் கண்டபடி அவள் உடல்நலமின்றி இருக்கவில்லை.

அலுமினியத் தட்டு ஒன்றில் வேர்க்கடலையை நிறைத்து வைத்துக்கொண்டு, அவள்... சாவதானமாகக் கொரித்துக் கொண்டிருந்தாள். அப்பா ஆசைப்படுவார். நாளேடுகளைப் படிக்கும்போது நடுவே வாயில் இரண்டு கடலையை உறித்துப் போட்டு மென்றபடி, ஊர் சங்கதிகளையும் சேர்த்து மெல்லும் பழக்கம் அவருக்கு. அப்பாவுக்காக அவள் இரண்டு தினங்களுக்கு முன் வழியில் சிறப்பு அங்காடியில் வாங்கி வந்த வேர்க் கடலையை வறுத்து ஒரு டின்னில் போட்டு வைத்திருந்தாள்.

வந்ததும் வராததுமாக அக்கா அடுப்பங்கரையைத் துருவிப் பார்த்து அதை எடுத்து வைத்துக் கொண்டு தின்று தீர்க்கிறாளே? ''அக்கா, எப்போ வந்தீங்க...'' கேட்டபடி... குடையை மடக்கிக்கொண்டு உள்ளே வந்தாள்.

''காலை வண்டிக்கு வந்தேன். என்னோட கூட எங்களுக்குத் தெரிஞ்ச ஒரு குடும்பம் வந்தது அனுகூலமாகப் போச்சு.''

''அவங்களை அழைக்க... உறவினர் கார் கொண்டு வந்திருந்தார். அதிலே எனக்கும் இடம் கிடைச்சது கொண்டு வந்து வாசலில் விட்டுவிட்டுப் போனாங்க, ரொம்ப நல்லவங்க...'' அக்கா கடலையை அரைத்துக் கொண்டே பேசினாள்.

தனக்கு உதவி செய்கிறவர்கள் எல்லோரும் மாலதிக்கு மிகவும் நல்லவர்கள்.

உதவி செய்ய சாத்யப்படாதவர்கள் மகா பொல்லாதவர்கள். ''உடம்பு சரியில்லை டாக்டர் கிட்டே காட்டணுன்னு கடிதம் எழுதியிருந்தீங்களே...?''

விசாரித்தபடி கைகளைக் கழுவிக் கொண்டாள். ''இரத்த சோகைன்னு அங்கே பார்த்த டாக்டர் சொன்னார். அங்கே வைத்தியம் செய்ய சாத்தியப்படவில்லை. அதனாலே இங்கே புறப்பட்டு வந்திருக்கேன்.

''அப்பா இருக்கும் வரை பிறந்த வீடுன்னு நாம கொண்டாடிக்க முடியும். அதுக்குப் பிறகு...'' என்று பெருமூச்செறிந்தபடி எழுந்தாள். முன்னைவிட அக்கா மாலதி... ஒரு சுற்றுப் பருமனாகவே காணப்பட்டாள். கன்னக்கதுப்புகள் பளபளக்க... சொடுக்கினால் இரத்தம் தெரிக்கும் போன்று ஆரோக்கியத்தில் தெரிந்தாள்.

அக்கா வந்துவிட்டிருக்கிறாள் என்று ஆனந்தப் படுவதைவிட, அவளால் ஆகப்போகும் செலவைக் கணக்கிட்டு அவள் மனம் கலங்கியது. ''நல்ல பெண் நீ! அப்பாவுக்கு மட்டும் கொஞ்சம் சமைத்து வைச்சுட்டுப் போயிருக்கே வந்ததும் வராததுமா பசியிலே நான் துடிச்சுப் போனேன். அப்பாவும், நானும் இருந்ததைப் பகிர்ந்து கொண்டோம். ஆமாம்... காப்பிப் பவுடரை எங்கே வச்சிருக்கே? அப்பாவுக்கு வீட்டைப்பத்தி ஒண்ணும் தெரிலை... எனக்குப் பகல்பொழுது தலைவலி வந்துவிட்டது. பக்கத்து ஓட்டலிலிருந்து அப்பா எனக்குக் காப்பி வாங்கிக் கொண்டு வந்து தந்தார். டிபனுக்கு ஒண்ணுமில்லை. டப்பாவிலிருந்து பிஸ்கட் சிலதைத் தின்னேன்... பொழுது போகலை. வேர்க்கடலையைக் கொஞ்சம் அள்ளிப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தேன்.''

''இதோ வரேன்... என்றபடி குளியலறைக்குள் புகுந்தாள் ராதா. 'அழையாத வீட்டுக்கு நுழையாத விருந்தாளியாகப் புறப்பட்டு வந்திருக்கிறாள் அக்கா. போகட்டும், வந்தவள் வெட்டியாக உட்கார்ந்து

பொழுதை ஓட்டாது... அலுவலகத்திலிருந்து தங்கை களைத்துப் போய் வருவாளே என்று கவலைப்பட்டு இரவு உணவைத் தயாரித்து வைத்திருக்கக்கூடாதா?'

இப்படிப் படு சோம்பேறியாகவா இருக்க வேண்டும்?

பற்களைக் கடித்துக்கொண்டு பொங்கி வந்த தன் சினத்தை அடக்கியபடி வேகமாகக் குளியலை முடித்துக் கொண்டாள்.

மாற்றுடையில் கூடத்திற்கு வந்த சகோதரியைப் பார்த்து மாலதி புன்னகைத்தாள்.

''அம்மா போல நீ நல்லா ரசம் வைப்பே; இரயில் பயணத்திலே உடம்பு அடிச்சுப் போட்டாப்போல இருக்கு. கொஞ்சம் சீரக ரசம் வச்சு - அத்தோட கொஞ்சம் பருப்புத் துவையலும் செய்திடு...'' என்றாள்.

நாள் முழுவதும் உழைத்து, அலுத்துச் சலித்து வந்திருக்கும் அவளை, இப்போது அம்மியைப் பிடிக்கச் சொல்கிறாளே? ஆத்திரமாக வந்தது அவளுக்கு.

வந்ததும் வராததுமாக அவளோடு சண்டையை ஆரம்பிப்பதா? என்று எண்ணிக் கோபத்தை அடக்கிக் கொண்டு... சமையலறைக்குள் புகுந்தாள்.

''அப்பாடி! காரசாரமாக இது போல ரசம் சாப்பிட்டு எத்தனை நாளாச்சு?'' என்று சப்புக் கொட்டிக் கொண்டு கூடத்துத் தரையில் வந்து உட்கார்ந்துவிட்டாள்.

சமையல்றையை ஒழுங்கு செய்து கொண்டிருந்த தங்கைக்குக் கூட சிறிது உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணமே தோன்றவில்லை.

மாலதிக்கு எப்பொழுதும் சுயநலம் அதிகம். அது இப்போது இரட்டிப்பாகி விட்டிருந்தது.

பிறந்த வீட்டிற்கு வந்திருக்கிறார்... உடலை அதிகமாக அலட்டிக் கொள்ள விரும்பவில்லை.

ஒருவழியாக சமையலறைக் காரியங்களைக் கவனித்து விட்டு, மறுநாள் வேலைக்கு உடுத்த வேண்டிய புடவை ரவிக்கை இத்யாதிகளை எடுத்துத் தயாராக மேஜைமேல் வைத்து விட்டு... களைப்புடன் ராதா கூட்டத்திற்கு வந்தாள்.

மூலையில் சுருட்டி வைத்திருந்த பாயை எடுத்துத் தரை மீது தலையணையைப் போட்டாள்.

''எனக்கு வெறும் பாயில் படுத்தால் முதுகு வலிக்கும்... அதனால்'' என்று அக்கா முணகினாள்.

''என்னுடைய மெத்தையை எடுத்து அக்காவுக்குப் போடும்மா...'' அப்பா உள்ளேயிருந்த கட்டிலின் மீது கிடந்த தமது பஞ்சு மெத்தையை சுருட்டி வந்து தந்தார்.

ஜமக்காளம் ஒன்றை விரித்து மெத்தையைப் போட்டு சுத்தமான விரிப்பைப் பரத்தி-

அக்காவுக்குப் படுக்கை தயார் செய்து விட்டு உட்கார்ந்தாள் ராதா. அப்பா மின்விசிறியை மெல்ல சுழல விட்டார்.

''படுத்துக்கோம்மா இரயிலில் வந்து களைப்பு உனக்கு அதிகமாகவே இருக்கும்...'' உபசரித்தபடி உள்ளே திரும்பிய போது மகள்... அவரைக் கூப்பிட்டாள்.

''அப்பா உட்காருங்க உங்ககிட்டேயும், ராதாகிட்டேயும் கொஞ்சம் பேசணும்.

''பாவம் ராதா. நாளைக்கு சீக்கிரம் எழுந்து வீட்டுக் காரியங்களைக் கவனிச்சுட்டு வேலைக்குப் போகணுமே. முக்கியமான சங்கதியா?'' அப்பா அலுப்புடன் கேட்டபடி அருகில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தார்.

ராதாவின் உள்ளம் எச்சரித்தது. அக்கா உடம்பு சுகமில்லை என்பதற்காக வரவில்லை. வேறு ஏதோ காரணம். அவசரமாகப் புறப்பட்டு வந்திருக்கிறாள்.

சுவற்றில் சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டாள்.

தொண்டையைச் செருமிக் கொண்டாள் தமக்கை. பீடிகை பலமாகவே இருந்தது.

''அப்பா, ராதாவுக்கு எப்போ கல்யாணம் செய்வதாக உத்தேசம்.''

சட்டென்று கேட்டாள்.

லோகநாதனைப் பார்த்ததிலிருந்து அவன் குரலைத் தொலைபேசியில் கேட்டதிலிருந்து கோபமும், மனக்கசப்புமாகக் குழம்பிக் கொண்டிருந்த ராதா துணுக்குற்றுப் போனாள்.

அவள் கல்யாணத்தைப் பற்றி அக்காவுக்கு இந்தத் திடீர்க் கவலை ஏன்?

''வேளை வந்தா... தானே கல்யாணம் நடக்கும். ஏம்மா இந்தக் கேள்வி'' அப்பா சலித்துக் கொண்டார்.

''நான் அதைப் பத்திக் கவலைப்படலை அக்கா. நீங்க ஏன் விசாரப்படணும்?'' எரிச்சலோடு கேட்டாள் தங்கை.

''அப்பாவுக்கு வயசாகிறது. அவருக்கு ஏதாவது நேர்ந்தால் நீ தன்னந்தனியாகிப் போயிடுவியே மேலும் வயது ஏறிக்கொண்டே போகிறது...

''போகட்டும்...''

''தன்னந்தனியாகி விட்டால் நீ என்ன பண்ணுவே...''

''உங்களோடு வந்து தங்கிக்கிறேன். கழுத்தைப் பிடிச்சா தள்ளுவீங்க.''

''அது எப்படி சாத்தியப்படும். என் வீட்டில் உன்னை வச்சுக்க என் புக்ககத்தார் சம்மதிப்பாங்களா பார்க்கத் தான் நன்றாக இருக்குமா?''

''சரி. வேற தெரிஞ்சவங்க வீட்டிலே போய் தங்கிக்கிறேன்.''

''நாடோடி போல நீ வசிக்க முடியுமா? எங்களுக்கு கௌரவக் குறைவாயிடாதா...''

''இதைக் கேட்கவா நீங்க பம்பாயிலிருந்து புறப்பட்டு வந்தீங்க?''

வெடுக்கென்று திரும்பித் தங்கையைக் குரோதத் துடன் பார்த்தாள். ''உனக்கு வாய் அதிகமாயிட்டது. எல்லாம் அப்பா கொடுக்கிற இடம்'' என்று உரத்த குரலில் இரைந்தாள்.

''ஏன் இப்படி கோபப்படறே? சொல்ல வந்ததை நிதானமா சொல்'' என்று அப்பா இடைபுகுந்து சமாதானம் செய்தார்.

''அப்பா... நீங்க உங்க பொறுப்பைத் தட்டிக் கழிக்கக் கூடாது. ராதாவுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்கணும். அதுக்கு முன்னாடி உங்க சொத்து விவகாரத்தை ஒழுங்கு செய்யணும். உங்களுக்குப் பின் நாங்க ரெண்டு பேரும் சண்டை போட்டுக் கொண்டிருக்க முடியாது...''

''சொத்தா? என்னம்மா சொல்றே? ஏதோ ஒரு வாய்க் கஞ்சி குடிக்கக் கொஞ்சம் காசு என் பேரில் வங்கியில் இருக்கு. நாளைக்கு நான் பெரிசா உடம்புக்கு வந்து படுத்தா மருந்து வாங்கவும், டாக்டர் பில்லுக்கும் கூட பத்தாத பணம்... என்னம்மா சொல்றே?''

''உடம்பைப் பார்த்துக்கணும் வைத்தியம் செய்துக்கணும்... உங்களோடு சில நாள் தங்கி யிருக்கணும்னுதான் வந்தேன். அப்பா, என் கணவருக்குத் தெரிஞ்ச ஒரு காண்டிராக்டர் இங்கே இருக்கார். அவர்தான் என் கணவருக்குக் கடிதம் எழுதியிருந்தார்.''

''என்ன எழுதியிருந்தார்?''

''இந்தப் பக்கத்திலே மனைகள் விலை ரொம்ப ஏறிக் கிடக்காம், உதாரணமாக நம்ப வீட்டை வித்தா இரண்டு இலட்சத்துக்கு மேலே கிடைக்குமாம்.''

''பத்து இலட்சம் பெறுமானமாக இருக்கட்டும். இப்ப சத்தியா தலைக்கு மேலே ஒரு கூரைன்னு தஞ்சம் கொடுக்கிறதே. பட்டினியாப் படுத்துக் கொண்டாலும் இருக்க ஓர் இடம் உண்டுன்னு மனசிலே தெம்பு இருக்கே...''

''உங்க காலத்திலே வீட்டை ஒரு விலைக்கு வித்துட்டா நல்லா இருக்கும் அப்பா. அந்தக் கான்டிராக்டரை வரச் சொல்றேன். பேசுங்க. வீட்டை நல்ல விலைக்கு வித்து... எங்க ரெண்டு பேருக்கும் அந்தப் பணத்தைப் பிரிச்சுக் கொடுத்துடுங்கோ...

''ஏன் அக்கா... நாங்க இருக்கிற வீட்டை வித்து எங்களை நடுத்தெருவில் ஓட்டத்தான் பம்பாயிலிருந்து பரபரப்பா வந்தீங்களோ?''

''அப்படியே ராதாவுக்குக் கல்யாணம் பண்ணி முடிச்சுடுங்கோ. உங்க கடமை முடிஞ்சுடும்.''

''நல்ல யோசனைதான். ஆனால் அது, இப்போது நடக்காது.''

''எனக்கு அவசரமா பணம் தேவைப்படுகிறது அப்பா. நாங்க மாதுங்காவில் இருக்கிற ஃபிளாட்டை விலைக்கு வாங்கிட்டோம். அதுல கடன் கொஞ்சம் இருக்கு... என் கணவர் தான் உங்ககிட்ட பணம் கேட்டு வரச் சொல்லி அனுப்பினார் வந்திருக்கேன்.''

''எங்கிட்டே பணம் ஏதும்மா. உன் கல்யாணத்தின் போது அவங்க கேட்ட வரதட்சணை - சீர் எல்லாத்தையும் குறைவில்லாம கொடுத்து முடிச்சுட்டேன் இனிமேலே செல்லாக் காசுகூட என் கையில் கிடையாது.''

''வீட்டை வித்து என் பங்கைக் கொடுத்துடுங்கோ.''

''ராதாவின் வாழ்க்கை ஒரு வழியாக ஒழுங்காகிற வரை நான் வீட்டை விற்கமாட்டேன்.''

''ராதாவுக்குத் தக்க இடத்தில் கல்யாணம் செய்கிற பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டால்?... அப்பா... நல்லா யோசியுங்கோ. ராதாவின் கல்யாணமும் நடக்கும் வீட்டை விற்று எல்லோரும் பணத்தைப் பங்கிட்டுக் கொண்டு சுகமாக வாழ முடியும் எல்லாத்துக்கும் ஒரு நல்ல முடிவோடத் தான் வந்திருக்கேன் அப்பா. யோசிச்சுப் பாருங்க. இந்த வீட்டை இப்படியே வச்சுக்கொண்டிருக்க முடியாது- ஒரு பெருத்த மழை அடிச்சா தொப்புனு விழுந்துடும்... ஏகப்பட்ட பழுது இருக்கு - அதை சரி செய்ய உங்ககிட்ட பண வசதியில்லே. ராதா இப்படியே இருந்தால் அவ கதி?''

''வீட்டை விற்று விடுங்கள். பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்துடுங்கோ. பிறகு நீங்க... ரொம்ப நாளா பிரியப்படற சுற்றுலா பயணங்களில் ஈடுபடலாம், அதுக்குப் பிறகு நாங்க விட்டு விடுவோமா? பத்து நாள் என் வீட்டில் பம்பாயில் வந்து தங்கலாம். ராதாவின் வீட்டில் கொஞ்ச நாள் இருக்கலாம். மீதிப் பொழுதை கோயில் குளம்னு கழிக்கலாம்... யோசிச்சுப் பாருங்கோ அப்பா. வீட்டை வாங்க காண்டிராக்டர் தயாரா இருக்கார். அதுபோல் ராதாவைக் கல்யாணம் செய்துக்க ஒரு வரன் கைவசம் இருக்கு.''

''இத்தோட நம்ம விவாதம் இருக்கட்டும். எனக்குத் தூக்கம் வருது. நாளைக்குப் பேசிப்போம்.'' அப்பா குழல் விளக்கை அணைத்துவிட்டு. விடிவிளக்கை எரிய விட்டு விட்டு அறைக்குப் போய்ப் படுத்துவிட்டார்.

சுவர்ப்பக்கம் திரும்பிக் கண்களை மூடிக்கொண்ட ராதாவுக்கு உறக்கமே வரவில்லை.

வீட்டை விற்க நிர்பந்திப்பதாவது ஓரளவுக்குப் பொருந்தும். ஆனால் தங்கைக்குக் கல்யாணம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்த அக்காவுக்கு என்ன உரிமை?

கையில் ஒரு வரன் வைத்திருக்கிறளாமே? யார் அந்த வரன் அக்காவுக்குப் பிடித்திருக்கும் அந்த வரன் தங்கைக்குப் பிடிக்க வேண்டாமா? ராதா ஒன்றும் அக்கா ஆட்டிப் படைக்க விரும்பும் ஒரு கைப்பொம்மையல்ல... இருக்கட்டும்; விஷயம் முழுவதும் நடுவீதிக்கு வரட்டும். அப்போது பேசிக் கொள்ளலாம்... கருவிக்கொண்டே படுக்கைமீது நிம்மதியின்றிப் புரண்டாள்.

6

மறுநாள் காலை.

விடியுமுன்பே எழுந்திருந்து ராதா குளியலை முடித்துக் கொண்டு பரபரப்பாக எல்லோருக்கும் காப்பி, பலகாரம் தயார் செய்தாள்.

''வெந்நீரில் குளித்துப் பழக்கமாகிவிட்டது ரத்த சோகை வேறே தொல்லை கொடுக்கிறது என்னால் பச்சைத் தண்ணீரில் குளிக்க முடியாது'' எழுந்திருக்கும் முன்பே அக்கா புலம்பினாள்.

கோபத்தை அடக்கிக் கொண்டு ராதா அவளுக்குக் கொஞ்சம் சுடுதண்ணீர் காய்ச்சிக் கொடுத்தாள்.

கைக்குழந்தை போல மாலதி மிகவும் சிரமப் படுத்தினாள். அப்பாவுக்கும், அவளுக்கும் காப்பி பலகாரம் கொடுத்து உபசரித்துவிட்டு அவர்கள் இருவரும் பகலில் சாப்பிட உணவைத் தயார் செய்து வைத்துவிட்டுத் தன் டிபன் டப்பாவில் தயிர் சோற்றை அடைத்துக்கொண்டு ராதா கிளம்புவதற்குள் வியர்த்து விருவிருத்துப் போனாள்.

தெருக்கோடி வரை மகளுடன் கூட வந்த அப்பா தாழ்வான குரலில் சொன்னார்.

''எனக்குத் தெரியும். இது மாப்பிளையின் சூழ்ச்சி. உன் அக்காவை ஏவிவிட்டுப் பணம் திரட்டிக் கொண்டு வர இங்கே அனுப்பியிருக்கான். அப்படி நான் ஒன்றும் முட்டாள் அல்ல. இந்தச் சமயம் வீட்டை விற்க நான்

ஏமாந்தவன் இல்லை. நீ கவலைப்படாமல் வேலைக்குப் போய் விட்டு வாம்மா... இன்று வரை நான் போனால் போகிறதுன்னு நீ சிரமப்பட்டதைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்து விட்டேன். மாலதி இங்கே வந்து ராணிபோல தர்பார் நடத்துவதை நான் அனுமதிக்க மாட்டேன்'' என்றார்.

அப்பாவை நிமிர்ந்து பார்த்தாள் ராதா. வேதனை அவளது நெஞ்சை இறுக்கியது.

அம்மாவுக்கும், அண்ணனுக்கும் பின்னர்... அப்பா அவளுக்காகவே ஒவ்வொரு நிமிஷமும் வாழ்ந்தவர்.

தமது தள்ளாத காலத்தில் ஆண்மகனைப் போல சம்பாதித்துப் போட்டு தம்மையும், வீட்டையும் பாதுகாப்பதுடன் - நண்பனைப் போல - தாயைப் போல, தன்னிடம் நேசமும் பாசமும் காட்டிய சின்ன மகளை அவர், ரொம்பவே நேசித்தார்.

ராதாவுக்கு அப்பாவின் மீது உயிர். அந்தப் பரிதாபமான சம்பவம் நிகழ்ந்தபோது வீட்டில் ஏற்பட்ட அமர்க்களத்தில் பெருத்த பங்கு கொண்டு அண்ணனுடன் ஆடியவள் அக்கா மாலதி.

அவமானமாய்ப் பேசி அவளை வார்த்தைகளால் குத்திக் குதறியவளும் அவள்தான். கோபத்தில் அண்ணன் தன் இடுப்பு பெல்ட்டால் அடித்து நொறுக்கினான் என்றால், மாலதி அவளை சாடித் துவட்டினாள். அம்மா மருகி மருகி அழுதாள். ஆனால் அப்பா...?

எண்ணியபோதே அவள் கண்களில் நீர் பனித்தது.

''என்னம்மா...? யோசிச்சுக் கொண்டே ரோடைப் பார்க்காமே நடக்காதே... வந்த காரியம் நடக்காவிட்டால்

அக்கா ரொம்ப நாள் தங்கியிருக்க மாட்டாள். புறப்பட்டு விடுவாள்'' சமாதானமாக சொல்லிவிட்டு தெருமுனையில் அவளுக்கு விடை கொடுத்தார்.

பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டவள் நினைப்பெல்லாம் அப்பா மீதுதான் இருந்தது.

சமீப காலமாக அவரது உடல் நலம் அவ்வளவு சுகமாக இல்லை.

ஒரு சிறு மழையைக்கூடத் தாங்காது, அவருக்கு அடிக்கடி சளி நோய் வந்து தொந்திரவு கொடுத்தது.

முன்போல உணவை ரசித்துச் சாப்பிட முடியாது, கடமையே என்று சாப்பிட்டார் உடம்பு இளைத்துக் கொண்டே வந்தது.

பாவம் அப்பா என நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

இந்த இரண்டு நாட்களாக அலுவலகத்தில் அவள் வேலை குழப்பத்திலேதான் நடந்து கொண்டிருந்தது.

தேனீர் இடைவேளையின்போது அலுவலகப் பையன் அவள் மேஜை மீது ஒரு கோப்பை டீயை வைத்துவிட்டு, கூட ஒரு கடிதத உறையையும் வைத்துப் போனான். திடுக்கிட்டுப் போனாள் அவள்.

அவளுக்கு அலுவலக முகவரிக்குக் கடிதங்கள் வருவதே கிடையாது.

எப்பொழுதாவது கல்யாண அழைப்பிதழ்கள்... அபூர்வமாக அந்த முகவரிக்கு வரும்...

யார் எழுதிய கடிதம்! கவலையும் வியப்புமாக... மெல்ல எடுத்துப் பார்த்தாள்.

இந்த கையெழுத்தை எப்பொழுதோ பார்த்த நினைவு...

தேனீரைப் பருகிவிட்டு வாயைத் துடைத்துக் கொண்டு, கடித உறையுடன் அவள் எழுந்து கழிவறைப் பக்கம் சென்றாள்.

எல்லார் முன்னிலையிலும் கடிதத்தைப் பிரித்துப் படிக்க அவளுக்குத் துணிவிருக்கவில்லை.

அவள் மனதிலே பளிச்சிட்ட சந்தேகத்தை உறுதிப்படுத்தியது கடிதம்.

அவளுக்கு லோகநாதன் எழுதியிருந்தான்!

''அன்புள்ள ராதாவுக்கு,

''நான் சென்னைக்கு வந்ததிலிருந்து உன்னைத் தொடர்பு கொள்ளப் பலவிதத்திலும் முயலுகிறேன் என்றால் உனக்கு ஆச்சர்யமாக இருக்கலாம். பல ஆண்டுகள் டெல்லியிலும், பின்னர் பம்பாயிலும் வேலை பார்த்துக் கொண்டிருந்த எனக்கு இப்போது சென்னைக்கு மாற்றலாகி விட்டிருக்கிறது. வேலை உயர்வு சம்பள அதிகரிப்புமாக நான் இங்கே வந்திருக்கிறேன்.

''எங்கள் கம்பெனியில் நான் விற்பனைப் பகுதியில் ஒரு முக்கிய அலுவலராக உயர்த்தப்பட்டிருக்கிறேன். வீட்டு வாடகை கார் வசதி போன்ற சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன. சில தினங்களுக்கு முன்னர்தான் வசிக்க வீடு ஒன்றை மங்களா நகரில் ஏற்பாடு செய்து முடித்தேன்.

''இந்த சில வருஷங்களில் என் வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டு விட்டிருக்கின்றன. என் தந்தையும்,

அம்மாவும் நான் பம்பாயிலிருக்கும்போதே இறந்து போய்விட்டனர். திருமணமான ஒரு சில மாதங் களிலேயே என் மனைவி பத்து நாள் காய்ச்சலில் இறந்து போய்விட்டாள். அதற்குப் பின் நான் தனிக் கட்டையாகவே வாழ்கிறேன். உயிரோடு இருந்த வரை என் பெற்றோர்கள் என்னை மறுமணம் செய்துகொள்ள மிகவும் வற்புறுத்தினார்கள். நான் மறுத்துவிட்டேன்.

''உன்னை நான் சந்தித்துப் பேச விரும்புகிறேன். தயவு செய்து மறுக்காது எனக்கு ஒரு வாய்ப்புத் தரவேண்டும். உன்னுடைய வீட்டுக்கு வந்து சாவகாச மாகப் பலவும் பேசி அந்தச் சம்பவத்தினால் உனக்கு என் மேல் ஏற்பட்டிருக்கும் கசப்பைப் போக்க விரும்பு கிறேன். ராதா! அப்போது நான் ஒரு பொறுப்பில்லாத இளைஞன்... இன்று நான் என் கடமைகளை நன்கு உணர்ந்து கொண்டுள்ள ஒரு மனிதன். வாழ்க்கையில் பெற்ற அனுபவங்கள் என்னை முற்றிலும் மாற்றி விட்டிருக்கின்றன. தயவு செய்து என்னை மன்னித்து, விபரமாக எல்லாம் பேசித் தெளிவு கொள்ள ஒரு சந்தர்ப்பம் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்ஙனம் அன்புள்ள லோகநாதன்.

கடிதத்தின் இறுதியில் அவனது வீட்டு முகவரியை யும் வேலை செய்யும் கம்பெனியின் விலாசத்தையும் தொலை பேசி எண்ணையும் குறிப்பிட்டிருந்தான்.

மூக்கும், முகமும் சூடாகிப்போன உணர்வில் நெஞ்சு தீவிரமாகத் துடிக்க... அவள் கோபத்துடன் அந்தக்கடிதத்தை சுக்கல் சுக்களாகக் கிழித்து... கழிவறைப் பீங்கானுக்குள் போட்டு... தண்ணீர் இழுத்து விட்டாள்.

குழாயைத் திருப்பி பச்சைத் தண்ணீரைப் பிடித்து முகத்தை வேகமாகக் கழுவித் துடைத்துக் கொண்டாள்.

அவள் உடல் பதைத்துக் கால்கள் நடுங்கின.

மன்னிக்க வேண்டுமாம்... சாதாரணப் பிசகா அது?

ஒரு பெண்ணின் வாழ்க்கையையே திசை திருப்பி அவளைப் படுகுழியில் விழுந்து விடும்படிச் செய்ததொரு மாபெரும் பிசகு.

நல்லவேளை யார் செய்த புண்ணியமோ அன்று காலை அவள் சாரதாம்மாளை அங்கே சந்தித்தாள்.

இல்லாவிட்டால்...

ஆத்திரமும், அழுகையும் அவள் நெஞ்சை அமுக்கி... அவளை உணர்ச்சிக் கொந்தளிப்பில் உலுக்கின.

மெல்ல தன் ஆசனத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

தேனீர் இடைவேளையான அந்த அரைமணி நேரத்தில் அலுவலகத்து அந்தப் பகுதி பேச்சும், சிரிப்பும் அரட்டையுமாக... களை கட்டிக் கொண்டிருப்பது வழக்கம். அவளைப் போல மௌனமாக அவளது சக ஊழியர்கள் வேலையே கதியென்று கிடப்பதில்லை ஊர்வம்பும் விலைவாசியும் கொஞ்சம் உரத்த குரலிலேயே அலசப்படும் வேளை...

டைப்பிஸ்ட் சாரதா... தன் அருகிலிருந்த கணக்கர் சாந்தா மணியிடம் என்னவோ சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்துக் கொண்டிருந்தாள். அப்படி அவள் மனம் விட்டுச் சிரித்து எத்தனை காலமாச்சு!

அதற்குக் காரணமான லோகநாதன்... எத்தனை சுலபமாக ஒரு கடிதத்தை எழுதி அவளுடன் தொடர்பு கொள்ள முயலுகிறான்! இந்த அரை மணி ஓய்வு நேரத்தைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவது போல, அவள் வேண்டாத வேலைகளையெல்லாம் செய்து கொண்டிருந்தாள். மேஜை மேல் அடுக்கிக் கிடந்த ஃபைல்களைத் தட்டி... தூசு போக்க முயன்றாள். கூராக இருந்த பென்சில்களை மறுபடி சீவிக் கூராக்கி ஒரு பக்கம் வைத்தாள். நசுங்கிக் கிடந்த கார்பன் காகிதங்களை மடிப்பு செய்து... பிளாஸ்டிக் உறைக்குள் போட்டுப் பத்திரமாக வைத்தாள்.

அப்பாடா! யுகமாகத் தெரிந்த நேரம் முடிந்தது. மணியடித்ததும் தான் அவளுக்கு மூச்சு வந்தது.

தலைமைக் கணக்கரிடம் அவள் சேர்க்க வேண்டிய கடிதங்களை எடுத்து வைத்துக்கொண்டு டைப் யந்திரத்தை சரி செய்து அடிக்கத் தொடங்கினாள்.

விரல்கள் மரத்துப் போய்விட்டன போல் வேகமாக இயங்க மறுத்தன.

மீதி நேரம் போவது பெரிய சித்திரவதையாகத் தோன்றியது.

கடிதங்கள் பூராவையும் டைப் செய்து, அந்தந்த ஃபைல்களில் வைத்து, அவைகளை ஒட்டு மொத்தமாக அடுக்கி எடுத்துக்கொண்டு சென்று தலைமைக் கணக்கரது மேஜைமேல் வைத்துவிட்டு, அவள் தன் இருக்கைக்கு வருவதற்குள் பகல் உணவு நேரம் துவங்கி விட்டது.

பள்ளிக்கூட மாணவர்கள் போன்றதொரு பரபரப்புடன்... ஊழியர்கள் அலுவலக அறையினின்று வேகமாகக் கலைந்து வெளியேறினார்கள்.

மறுபடியும் பேச்சும் சிரிப்பும் கூச்சலுமாக அலுவலகம் கிடுகிடுத்தது.

வழக்கம் போன்று அவள் சாப்பாட்டறைக்குச் செல்லவில்லை. வேலை கொஞ்சம் அதிகமாயிருந்தால் அவள் அலுவலக அறையிலேயே டிபனை சாப்பிட்டு விட்டுத் தன் வேலையைத் தொடர்வது வழக்கம். மற்றவர்களுக்கு அதுவும் கேலி சங்கதியாகக்கூட இருந்தது. இவளது வாழ்க்கையில் ஏற்பட்ட அந்தக் கேலிக்கூத்தை விட இது ஒன்றும் பெரிதல்ல என்றுதான் எண்ணினாள். இவளது அலுவலகத்துப் பையன் எட்டிப் பார்த்தான். ''இங்கேயே சாப்பிடப் போறீங்களா... காப்பி வாங்கிட்டு வரட்டுமா'' அனுசரணையாக விசாரித்தான்.

வேண்டாமென்று தலையசைத்து விட்டு... அவள் பெண்கள் அறைக்குள் சென்று கையைக் கழுவிக்கொண்டு வந்து மறுபடியும் தன் ஆசனத்தில் அமர்ந்தாள்.

தோள்பையிலிருந்த டிபன் சம்புடத்தை எடுத்துத் திறந்தாள். காலையில் கலந்த தயிர் சாதம் புளித்து விட்டிருந்த வாசனை மூக்கில் மோதியது.

பையன் கொண்டு வந்து வைத்துப்போன தம்ளரிலிருந்து தண்ணீரை சிறிது ஊற்றி, சாதத்தைக் கலந்து கொண்டு சாப்பிடத் துவங்கினாள். தொண்டையில் இறங்க மறுத்த சாதத்தை சிரமத்துடன் விழுங்கினாள். வேலை செய்ய உடம்பில் தெம்பு வேண்டுமே. அவளால் பட்டினி கிடக்க இயலாதே.

அவளது வாழ்க்கையை வேம்பாக்கிவிட்ட லோகநாதன், மனக்கண் முன் தோன்றி மறைந்து கொண்டேயிருந்தான். எத்தனைதான் ஒதுக்கினாலும்... எப்பொழுதாவது அவளுக்கு நினைவு ஊட்டிய அதே சம்பவம்... இன்று மிகவும் புதிதாக... அவளது நெஞ்சத்திலே தொடர் சங்கிலியாக எழுந்து நின்று அச்சுறுத்தியது.

7

அப்போது அவளுக்கு வயது பதினெட்டு. பி.ஏ. படிப்பை முடித்து விட்டு தட்டெழுத்து சுருக்கெழுத்துக் கற்றுக்கொள்ள வீட்டின் அருகிலிருந்ததொரு தட்டெழுத்து நிறுவனத்தில் சேர்ந்து விட்டிருந்தாள்.

அக்காவுக்குக் கல்யாணமாகி விட்டிருந்தது. அண்ணன் வேலை செய்து கை நிறைய சம்பாதித்துக் கொண்டிருந்தார். அப்பா ஓய்வு பெற இன்னும் கொஞ்ச காலம்தான் இருந்தது. அப்போது அவர்கள் திருச்சியிலே வசித்தார்கள். நிம்மதியாக ஆனந்தமாக பற்றாக் குறையே தெரியாத தொரு வாழ்க்கை அது. அவர்கள் வசித்த வீட்டுக்குப் பக்கத்தில்தான் லோகநாதன் குடும்பம் குடி வந்திருந்தது.

அக்கம் பக்கத்தவர்களிடம் அனாவசியமாகப் பேசக் கொடுத்துத் தொடர்பு கொள்ளும் வழக்கம் அவர்களுக்குக் கிடையாது.

அம்மாவுக்கு உதவியாக அவள் காலை வேளையில் துணிகளைக் காயவைக்க மாடிக்குப் போவது உண்டு.

ஒரு நாள் காலை... மாடிக்குப் போனவள், துணி களைக் கொடியில் காய வைத்துவிட்டுத் திரும்பிய போது... அடுத்த வீட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டு தன்னையே வெறித்த அந்த வாலிபனைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனாள்.

கையில் ஒரு புத்தகத்துடன் அவன் மேலும் கீழும் உலாவிக் கொண்டிருந்தான். பரீட்சைக்குப் படிக்கிறான் போலும் என்று எண்ணியவள் சட்டென்று திரும்பிக் கீழே வந்து விட்டாள். ஆனாலும் அவனை மறக்க முடியாதது போல ஒரு பிரமிப்பு. ஒரே பார்வையில் அவன் உருவம் முழுவதும், மனதிலே பதிந்து கொண்டு விட்டது போன்றதொரு திகைப்பு.

சுருண்ட கிராப்பு முடியும் கூரான மூக்கும் பளபளத்த கண்களுமான அவனை மறுபடி பார்க்க வேண்டுமென்ற ஆவல்.

அதே எண்ணம் அவனுக்கும் இருந்தது.

அடுத்த நாள் அதற்கடுத்த நாள் என இருவரும் மாடியில் சந்தித்துப் பார்வையைப் பரிமாறிக் கொண்டனர். அவன் தான் முதலில் பேச ஆரம்பித்தான்.

''சுகுணா டைப்பிங் இன்ஸ்ட்டியூட்டில்தானே நீங்க சேர்ந்திருக்கீங்க.

''ஆமாம்.''

''நானும் பரீட்சை முடிந்ததும் சேரப்போறேன்.''

''என்ன பரீட்சைக்குப் படிக்கிறீங்க.

''சார்ட்டட் அக்கௌண்டன்சிக்குப் படிக்கிறேன். கடைசி பரீட்சை.''

''உங்களுக்கு வெற்றி கிட்டணும்னு பிரார்த்தித்துக் கொள்கிறேன்.''

புன்னகை சிரிப்பு பேச்சு என்று ஆரம்பித்த சிநேகிதம், கடும் காதலாக மாறியது. கடிதங்கள் கை மாறின. பல இடங்களில் சந்திப்புகள் தொடர்ந்தன.

உன்னையன்றி நான் வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன். நீ என் உயிருக்கு சமமானவள் என்று அவன் சத்தியம் செய்தான்.

அவனின்றி உலகமே இல்லை என்றுதான் அவள் அப்போது நினைத்தாள். கடைவீதியிலே கள்ளத்தனமாக அவனைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்ததை அண்ணன் பார்த்து விட்டார்.

ஆர்ப்பாட்டம் செய்து அவளை அடக்கி வைத்தார்.

அது போலவே அவனது பெற்றோர்களுக்கு, அடுத்த வீட்டுப் பெண் மேல் அவன் ஆசை கொண்டது தெரிந்து போனது.

அவர்கள் வீட்டையே மாற்றிக்கொண்டு போய் விட்டனர்.

ஆனாலும் என்ன அவர்களது காதலைப் பெரியவர்களால் மாற்ற முடியவில்லை.

ஜாதி வித்தியாசமில்லாத சௌகர்யமான காதல் என்றாலும், லோகநாதன் தாய்க்கு ராதாவை மருமகளாக ஏற்கப் பிடிக்கவில்லை.

தன் மகனுக்குப் பெரிய இடத்திலிருந்து கணிசமான வரதட்சணையுடன் பெண் எடுக்க முடிவு செய்து விட்டிருந்தாள்.

ராதாவுக்கும் அவளது அண்ணன் பரபரப்பாக மாப்பிள்ளை தேடிக்கொண்டிருந்தார்.

அந்தச் சமயந்தான் அவன் அந்த யோசனையைச் சொல்லிக் கொடுத்தான். இருவரும் பெரியவர்களுக்குத் தெரியாது சென்னைக்கு ஓடி விடுவது. அங்கு ஏதாவதொரு லாட்ஜிலோ ஓட்டலிலோ தங்கிக் கொண்டு அவனது நண்பர்கள் உதவியால் கோவிலில் திருமணம் செய்து கொள்வது - பின்னர் அதைச் சட்டப்படி பதிவுத் திருமணமாக்கிக் கொள்வது. ராதாவுக்கு அந்த துணிச்சல் இருக்கிறதா? அமுத்தலாக அவளை விசாரித்தான்.

கடைசி முறையாகக் கள்ளத்தனமாக அவர்கள் சந்தித்த போது அந்த முடிவு எடுக்கப்பட்டது.

இரண்டு நாள் பொறுத்து ராதா அண்ணன் வெளியூருக்கு வேலை சம்பந்தமாகப் போயிருக்கும் சமயம்... ஒரு சிறு பெட்டியுடன் வீட்டை விட்டு நழுவி விடுவது.

தயாராக சென்னைக்கு ரயில் பயணத்திற்கு டிக்கெட் வாங்கி வைத்துக்கொண்டு அவன் காத்திருப்பான்.

இருவரும் ஒரே பெட்டியில் ஏறக்கூடாது. ஆபத்தாகிவிடும். அவளைப் பெண்கள் பெட்டியில் ஏற்றி விட்டு அவன் வேறு ஒரு பெட்டியில் ஏறிக் கொள்ள வேண்டும்.

சென்னையில் இருவரும் எக்மோர் நிலையத்தில் சந்தித்துக் கொண்டு பின்னர் சாதிக்க வேண்டியதைப் பின்னர் கவனிப்பது.

மிகவும் துணிச்சலுடன் அவன் மேலிருந்த கட்டுக்கடங்காக் காதலினால் ராதா ஒப்புக் கொண்டாள். அதன்படியே அன்று மாலை ஒரு பெட்டிக்குள் தேவையான துணிகளையும், சாமான்களையும் அடுக்கி வைத்துப் பெட்டியை யாருக்கும் தெரியாது ஒரு புறம் மறைத்து வைத்திருந்தாள்.

இரவு எல்லோரும் சாப்பிட்டுத் தூங்கப் போனதும் மெல்லப் பெட்டியுடன் கதவை ஓசைப்படாது திறந்து கொண்டு... ஓட்டமும் நடையுமாகத் தெருவின் கடைசியில் காத்திருந்த அவனுடன் ஸ்டேஷனுக்கு விரைந்தாள்.

எல்லாம் திட்டப்படியே நடந்தது.

அவளை அவன் பெண்கள் பெட்டியில் ஏற்றிவிட்டான்.

வண்டி நகரும்போது எட்டிப் பார்த்தாள். அவன் வேகமாகப் பாய்ந்து ஒரு பெட்டிக்குள் தாவுவதைக் கண்டு திருப்தியடைந்தாள்.

இருவரும் துணிவுடன் காதலைக் காரணமாகக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டிருந்தனர்.

சாதாரண மொழியில்... ஓடிவிட்டிருந்தனர்.

விடிந்ததும் அவளை வீட்டில் காணாது அம்மா அலறுவாள் அப்பா திகைப்பார் ஊரிலிருந்து திரும்பி வரும் அண்ணனிடம் சொல்லி ஆர்ப்பாட்டம் செய்வார்கள்.

கிணற்றை முதலில் எட்டிப் பார்ப்பார்கள். பின்னர்... இங்கு மங்கும் தேடுவார்கள்.

அவன் வீட்டிலும் இதே கதைதான் அவன் வீட்டில் காணவில்லை என்றால்? அவர்களுக்குப் புரிந்துவிடும்.

சண்டாளி - குடும்பத்தின் கௌரவத்தை நடுவீதியில் உதறிவிட்டு காதலனுடன் ஓடிவிட்டாளே.

போலீசில் புகார் கொடுக்கலாம் என்றாலோ மேஜராகி விட்ட பெண். லோக நாதன் கடத்திக் கொண்டு போனதாகக் குற்றம் சாட்ட முடியாதே என்று அண்ணா அதிர்ந்து போய் விடுவார்.

பலபல எண்ணியபடி இரயிலில் அவள் நடுங்கியபடிதான் பயணம் செய்தாள்.

மறுநாள் பொழுது விடிந்தது. வண்டியும் எக்மோரை அடைந்தது.

பெட்டியுடன் நிலையத்தில் இறங்கியபோதுதான் உண்மை... தலையில் ஓங்கி சம்மட்டி அடித்தது போன்ற அதிர்ச்சியால் புரிந்தது.

8

சென்னை அவளுக்கு அப்போது பழக்கமில்லாத நகரம். பதினெட்டு வயது பருவத்தின் மிரட்சியுடன், சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டு வந்ததின் அச்சம் முகம் முழுவதும் பளிச்சிட குற்ற உணர்வு நெஞ்சை

இறுக்க அவள் நிலையத்தில் தன் பெட்டியுடன் இறங்கினாள்.

அவன் சொல்லிக் கொடுத்தது போலத் தன் பெட்டியில் பயணம் செய்த மற்றப் பெண்கள் யாரிடமும் அவள் பேச்சு வைத்துக் கொள்ளவில்லை. எதிரே உட்கார்ந்திருந்த ஒரு கிழவி பின்னிப் பின்னிப் பல தடவை அவளைக் கேட்டுப் பார்த்தாள்.

ஊகும்! ஒரு வார்த்தை கூடச் சொல்லாது அவள் உறங்குவது போலப் பாவனை செய்தாள்.

உறக்கம் ஏது? வழி நெடுகிலும் வீட்டின் நினைப்பு நெஞ்சில் பல பயங்கரங்களை உருவாக்கிக் கொண்டிருந்தது.

அவளை விட சில வயதே பெரியவனான லோகநாதன் சென்னையில் அவளை எங்கே அழைத்துச் செல்வான். கல்யாணமான பின்பு இருவரும் வசிக்கப் போகிறார்கள். செலவுக்குப் பணத்திற்கு என்ன செய்வான். கடைசிப் பரீட்சையை முடித்துவிட்டு அவன் ஒய்வாக வீட்டில் இருந்தான். படிப்பின்போது பயிற்சி எடுத்துக் கொண்டிருந்ததால் சொற்ப தொகைதான் கிட்டிக் கொண்டிருந்தது. அது அவனது போக்கு வரத்திற்கே போதுமானதாக இருக்கவில்லை. அவர்களது வருங்காலம் எப்படி இருக்கும் பணம் அதிகம் இல்லாமல் பட்டணத்தில் மிகவும் சிரமம் என்று கேள்விப் பட்டிருந்தாள். அங்கே அவளுக்குத் திருமணத்தின் போது உதவப்போகிற நண்பர்கள் யாராவது... பணம் தந்து உதவுவார்களா...?

இப்படிப் பல சிந்தனைகளில் குழம்பிப் போய் அவள் இரவு முழுவதும் உறங்காது... நடுவே வீட்டை நினைத்துக் கொண்டு தாங்க முடியாத துயரத்திலே கண்ணீர் வடித்து, கண்கள் சிவந்து, முகம் உப்பி முடி நெற்றியில் புரண்டு விழ கசங்கிய ஆடையுடன், தன்னைச் சுற்றிலும் பரந்து கிடந்த கட்டடத்தை மிரளப் பார்த்தாள்.

இரயில் வண்டியினின்று இறங்கிய அத்தனை பேரும்... வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தனர். இவளை சந்திப்பதாகச் சொன்ன லோகநாதனைக் காணவில்லை. நிமிஷங்கள் வேகமாக நகர்ந்து அரை மணிக்கு மேலாகிவிட்டது. அவனை எங்குமே காணவில்லை.

இது மாதிரிப் பொது இடங்களில் அவளைப் போன்ற பத்தாம் பசலிகள் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள் போலும்.

பிடி மீசையும், மல் ஜிப்பாவுமாக நின்றதொரு சந்தனப் பொட்டுக்காரர் அவளைப் பார்த்து விட்டார்.

அவருக்குப் பின்னால் ஒரு தோழன் நிழலாக வந்தான். இடுப்பிலே லுங்கியும், அரைக் கை பனியனுமாக பம்மென்ற தலையுடன் நின்ற அவனைப் பார்த்ததுமே பயத்தில் ராதாவின் குடல் புரண்டு போனது.

இருவரும் அவள் அருகே வந்தனர்.

மிகவும் தெரிந்தவர்கள் போலப் பற்கள் தெரிய முறுவலித்தனர். சந்தனப் பொட்டுக்காரர் அடிக்குரலில் அவளுக்கு மட்டும் கேட்கும்படி சொன்னார்.

''குட்டி எந்த ஊர்...? மச்சானைக் காணலையா?'' நிடுக்கிட்டுத் திகைத்துப் போய் அங்கிருந்து நகர்ந்து அப்பால் போக முயன்றாள். நெஞ்சு திக் திக் என்று அடித்துக் கொண்டது.

''பேசாம என்னோட புறபட்டு வா - உன்னை ஊட்டி யிலே கொண்டு விட்றேன்'' என்றான் லுங்கிக்காரன்.

''நீங்க யாருன்னு எனக்குத் தெரியாது. என் வீட்டிலிருந்து அப்பா வருவார். அதற்காக நான் காத்திருக்கேன். அப்பால் போங்க'' என்று சிறிது கோபத்துடன் சொன்னாள்.

தனியே செல்லும் பெண்களுக்கு இது மாதிரியான தொல்லைகள் ஏற்படும் என்று கேள்விப்பட்டிருந்தாள். இந்த அனுபவம் பயங்கரமாகத் தோன்றியது.

கட்டு மீசைக்காரன் கண்களில் தெரிந்த கேலிக்குறியை அவளால் சந்திக்க முடியவில்லை.

அவனால் ஏதாவது அபாயம் ஏற்படுமோ...

சுற்றிலும் கண்களை ஓட்டினாள். இரயிலில் வந்த பெருங்கூட்டம் கரைந்து இங்குமங்குமாகச் சிலர் மட்டும் இருந்தனர் - யாரும் யாரைப் பற்றியும் அக்கறை கொள்ளாது, அவரவர் காரியங்களில் கண்ணாக இருக்கும் சூழ்நிலை.

நகரு நகரு என்று கத்தியபடி கனத்த சாமான் களை அடுக்காக வைத்து வண்டியில் தள்ளிக் கொண் டிருந்த ஆட்கள் அவளைக் கண்டு கொள்ளவில்லை.

சற்றுத் தொலைவிலே நின்று கொண்டிருந்த ஆட்கள் அவளைக் கண்டு கொள்ளவில்லை.

சற்றுத் தொலைவிலே நின்று கெண்டிருந்த போலீஸ்காரரைக் கண்டதும் அவளுக்குத் தெம்பு ஏற்பட்டது.

அதை உணர்ந்தவன் போல லுங்கிக்காரன் சிரித்தான்.

''போலீஸ்காரரிடம் புகார் சொல்லலாம்னு நினைச்சா ஏமாந்து போயிடுவே. மரியாதையா எங்களோட வந்தா உனக்கும் லாபம் எங்களுக்கும் நல்லது. எங்க சித்தப்பா மக கொஞ்சம் புத்தி சரியில்லைன்னு சொல்வேன். இல்லாவிட்டா என் பெண்ஜாதி கோச்சுகிட்டு, தாலியைக் கழற்றி எறிஞ்சிட்டு கலாட்டா பண்றான்னு சொல்வேன். உன்னை எப்படியாவது எங்களோட கூட்டிக்கிட்டு போக முடியும். அதனாலே சத்தம் போடாம வா. வெளியிலே டாக்ஸி நிக்குது'' என்றான்.

''ஐயா அம்மா என்னைக் காப்பாத்த யாரு மில்லையா?'' என்று கிரீச்சிட்டு அலறவேண்டும் போன்று வாயைத் திறந்தாள்.

அச்சத்திலே வார்த்தைகள் தொண்டையிலே நின்று விட்டன.

அருகிலே நடந்த போலீஸ்காரர் காதில் படும்படி சந்தனப் பொட்டுக்காரர் இரைந்து சொன்னார்.

''அடா! இன்னிக்கு ரயில் கொஞ்சம் லேட்டு நான்தான் ஸ்டேஷனுக்கு வருவேன்னு தந்தி கொடுத் திருந்தேனே பாப்பா பயந்து போயிட்டியா?''

சொந்தம் போன்று குழைவான குரலில் சிரித்தார்.

'இதென்ன வம்பு... யார்டா நீ' என்று கத்த நினைத்தவள் கையிலிருந்த பெட்டியை சட்டென்று வலுக்கட்டாயமாக வாங்கிக் கொள்ளக் கரத்தை நீட்டினாள் லுங்கிக்காரன்.

''நான் தூக்கிட்டுவரேன். நீ டாக்சிக்குப் போம்மா... மிகவும் உரிமையோடு அதட்டினான்.

''நீங்கள்ளாம் யாரு. நான் உங்களோடு வரத் தயார் இல்லே... போங்கோ'' முடிவில் துணிவைத் திரட்டிக் கொண்டு அதட்டினாள் அவள்.

லுங்கிக்காரன் சிரித்தான். ''என்ன பாப்பா இப்படி தெரியாது போல கத வுடறே.''

''நீதானே எங்களை இங்கே வரச் சொன்னே.''

''வம்பு செய்யாம நீங்க போங்கோ. இப்போ எங்கம்மாவும் அப்பாவும் வந்தா வீண் விவகாரமாயிடும்'' துணிந்து அவளும் ஒரு பொய்யைச் சொன்னாள்.

''உன்னை எங்களுக்குத் தெரியாதா? பேசாமப் புறப்படு...'' அடிக்குரலில் சந்தனப் பொட்டுக்காரர் அதட்டினார்.

இதென்ன சோதனை? லோகநாதன் ஸ்டேஷனில் சந்திப்பதாகச் சொல்லி வரவேயில்லை. இந்த அயோக்கியர்கள் சொந்தம் கொண்டாடி வம்புக்கிழுக் கிறார்கள். அவள் வீட்டை விட்டுப் புறப்பட்டது பெருத்த பிசகு... ஐயோ அவளை யாரும் காப்பாற்ற மாட்டார் களா... தன்னுள் துயரத்தில் புலம்பியபடி தன் தெய்வங்களைப் பிரார்த்தித்துக் கொண்டு நின்ற அந்த சமயம் ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

அவளது ஆழ்ந்த பிரார்த்தனையின் பலன் அது என்று இன்றளவும் ராதா நம்புகிறாள்.

''யார் அது? இங்கே கூட்டம் போட்டுக் கொண்டு எங்கள் வீட்டுப் பெண்ணை வழி மறிக்கிறது...'' அமுத்தலான அதட்டலான ஒரு பெண்ணின் குரலைக் கேட்டு... அந்த இரு அயோக்கியர்களும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

அவளும் அதிசயமாக சத்தம் வந்த திசையை நோக்கினாள். அறுபது வயதைத் தாண்டிவிட்ட ஒரு அம்மாள் முன் நெற்றி முடி பட்டையாக நரைத்துப் போனவள் எளிய ஆடையில் கம்பீரமாகத் தெரிந்தவள் வேகமாக அவள் அருகே வந்து பெட்டியைத் தன் கையில் அழுத்திக் கொண்டாள்.

''வாம்மா - வண்டி தயாராக வெளியே நிக்குது. வா. உன்னைக் காணோமே என்று தேடிக் கொண்டிருந் தேன்... என்றாள்.

மல் ஜிப்பாக்காரர் அவளை சந்தேகத்துடன் பார்த்தார். தாங்கள் தட்டிக் கொண்டு போக இருந்த பெண்ணை, குறுக்கே வந்து தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்ல முயலும் அவளும் அவர்களைப் போல ஒரு தொழிலாளியோ?

கொஞ்சம் நாகரிகமான தோற்றத்திலே இந்தத் தொழிலை நடத்தும் வகையைச் சேர்ந்தவளோ.

''என்னம்மா இது... எங்க வீட்டுப் பெண்ணை நீங்க கூட்டிக்கிட்டுப் போகப் பார்க்குறீங்க. போலீசுக்கு நெட்டித் தள்ளிக்கொண்டு போய் மானத்தை வாங்கிரு வோம்'' உறுமினார்.

சாரதா அவர்களை வியப்போடு வெறித்தாள்.

''வாங்கோ, நாம எல்லோரும் சேர்ந்து போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவோம். இவள் யார் வீட்டுக்குச் சொந்தம்னு அங்கே புரிந்து விடும்'' என்றாள் அழுத்தலாக. எந்தக் காவல்துறை நிலையத்துக்குப் போனாலும் அங்கிருந்து தனக்கு அவ்வப்போது உதவும் நண்பர் மகன் ரங்கனைக் கூப்பிட்டுக் கொள்ளலாம் என்ற துணிச்சல்.

''ரங்கா பார்த்தியா. காவல் துறை அதிகாரிகள் கூட என்னை நம்பவில்லை. உன்னைக் கூப்பிட்ட பின்புதான் உண்மை வெட்ட வெளிச்சமாகியது'' என்று துணிச்சலாகப் பேச முடியும் என்ற தெம்பு.

சந்தனப் பொட்டுக்காரர் லுங்கிக்காரனை ஒரு மாதிரி பார்த்து ஜாடை செய்தார்.

''வேண்டாம் வம்பு கிளம்பு'' என்றது அவரது சங்கேதம்.

கையில் பிடிபட இருந்த புறாவைப் பறி கொடுத்து விட்டோமே என்ற ஏக்கத்துடன் இருவரும் நகர்ந்தனர்.

''ஏம்மா! நீ தனியாகவா சென்னைக்கு வந்தே? காதலனுடன் தானே புறப்பட்டு வந்தே, அல்லது வேலை தேடிக் கொண்டு வந்தியா'' கொஞ்சம் கோபத்துடன் அதட்டினாள். பக்கத்திலே வாட்டசாட்டமாக நின்ற அந்த அம்மாவின் துணை ராதாவுக்கு மெத்த துணிவைக் கொடுத்தது. பயத்தை விரட்டியது.

''உங்களுக்கு நன்றி அம்மா! சமயத்தில் வந்து என்னைக் காப்பாத்தினீங்க. நான் காதல் என்று நம்பி ஒருவரோடு புறப்பட்டு வந்தேன்.''

''முகம் உன் கதையைச் சொல்கிறதே. காதலனுடன் ஓடிவந்து கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று வந்திருப்பாய். அந்தக் காதலன் ஒரு காதகனாக மாறி வழியில் உன் நகைப்பெட்டியோடு மறைந்திருப்பான். அல்லது பயந்து கொண்டு உன்னைத் தனியே விட்டுவிட்டு மாயமாகி இருப்பான். முன்பின் தெரியாத சென்னையில் நீ இழித் தொழில் செய்யும் கூட்டத்தில் சேர்ந்து பெண்மை அழிந்து... திரும்பப் பெற முடியாத நரகத்தில் கிடந்து உழலுவாய். இது அடிக்கடி ஏமாந்த பெண்களுக்கு நடக்கும் விபத்து... நல்லவேளை நீ தப்பினாய்.

''திருச்சியிலிருந்து இந்த வண்டியில் வரவிருந்த ஒரு வயதான அம்மாவை சந்திக்க நான் வந்தது நல்லதாகப் போயிற்று. அவர்களைச் சந்தித்து அவர்களது பேரனிடம் ஒப்புவித்து வீட்டுக்கு அழைத்துப் போகச் சொல்லிவிட்டு, இந்தப் பக்கம் பார்த்தபோது நீ தனியாக விழிச்சுக் கொண்டு நிற்பதைப் பார்த்தேன். இந்த இரண்டு ஆசாமிகளும் உன்னிடம் வருவதைக் கவனித்தேன். உஷாராகினேன். காவல்துறை நிலையத்துக்கு இவர்கள் நம்மைக் கூட்டிப் போயிருந்தால் மிகவும் நல்லதா யிருக்கும். என் நண்பர் மகன் ரங்கன் இந்த நகரில் போலீஸ் இன்ஸ்பெக்டராகப் பணி புரிகிறான். அவனைக் கூப்பிட்டு உடனே வரச் செய்து இந்த ரெண்டு பேரையும் பிடித்துக் கொடுத்திருப்பேன். அவர்கள் அதிர்ஷ்டம் இப்போது தப்பிப் போனார்கள் சரி நீ இப்போது என்னோடு என் வீட்டுக்கு வா என் பெயர் சாரதா. இப்படி ஏதாவது பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளில் தலையிட்டு உதவ விரும்புவது எனக்கு மிகவும் பிடித்தமான காரியம்'' என்று புன்னகைத்தாள்.''

'அப்பாடா'- என்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டபடி ராதா அவளைப் பின் தொடர்ந்தாள்.

தன் ஃபிளாட்டுக்கு அழைத்து வந்த சாரதா அவளைப் பல் துலக்கி முகம் கழுவிக் கொள்ள உபசரித்து, பின்னர் சூடான காப்பி கொடுத்து... விபரத்தைக் கேட்டாள்.

தாயைப் போன்று தன்னிடம் பரிவுகாட்டிய சாரதாவின் அன்பில் கரைந்து போய்... விம்மலும் விசும்பலுமாகத் தான் வந்த காரணத்தை ஒளிவு மறைவில்லாது சொல்லி முடித்தாள்.

சாரதாவின் பிளாட்டில் அவள் இரண்டு நாட்களுக்கு மேல் தங்க நேரிட்டது.

தொலைபேசி மூலம் ராதாவின் அண்ணன் சண்முகத்தை அவள் தொடர்பு கொண்டாள்.

அப்பாவும் - சண்முகமும் அடுத்த நாளே புறப்பட்டு வந்து விட்டனர்.

சாரதா எத்தனையோ எடுத்துச் சொல்லி, அண்ணனது கோபத்துக்குப் பல சமாதானங்கள் கூறித்தான் அனுப்பி யிருந்தாள்.

ஆனாலும் அவருக்கு ஆத்திரம் அடங்கவேயில்லை.

வீட்டுக்குள் நுழைந்த மகளைக் கண்டதும் அம்மா குலுங்கி அழுதாள். அப்பா பேச முடியாத துக்கத்துடன் நின்றார். ஆனால் அண்ணன். அதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தைக் கட்டுப்படுத்த முடியாதவராக, இடுப்பு பெல்ட்டை அவிழ்த்துக் கொண்டு... வீட்டுக் கதவை சாத்தி விட்டு அடித்து நொறுக்கி விட்டார்.

முதுகு ரவிக்கை கிழிந்து... தோல் மீது பெல்டின் கோடுகள் ரணமாகி ரத்தம் பீறிட்டுக் கொட்டுமளவு அடித்தார்.

அன்று அவள் கதறிய கதறல்...!

அம்மா மட்டும் இடைபுகுந்து அவள் மேல் விழுந்து காப்பாற்றியிராவிடில் அவள் செத்து விட்டிருப்பாள்.

அப்படி செத்துப் போனாலும் நலம் என்று அவள் எண்ணும்படி பம்பாயிலிருந்து செய்தியை அம்மாவின் கடிதமூலம் தெரிந்து கொண்டு புறப்பட்டு வந்த அக்கா, அவளை வார்த்தைகளால் சாடி வதைத்தாள்.

''வெட்கம் கெட்ட பெண்ணே. எந்த முகத்துடன் வீட்டுக்குத் திரும்பி வந்தே...? வழியில் ரயில் தண்டவாளத்தில் தலையைக் கொடுத்து மடிஞ்சிருக் கிறதுக்கு என்ன...? நானாக இருந்தால் இத்தனை நேரம் தூக்கில் தொங்கியிருப்பேன்...'' என்று அவள் உதிர்த்த வசவு மொழிகள் - ஏளனப் பேச்சு - கணக்கில் அடங்காதவை.

இந்த அவமான செய்கையே அண்ணனது வாழ்க்கைக்கு உலை வைத்து விட்டது போலும்!

சென்னைக்கு மாற்றலாகித் தம் குடும்பத்துடன் வந்து தங்கிக் கொண்ட அண்ணன், அந்த அவமானத்தை மறந்து நிம்மதியாக அதிக காலம் வாழவில்லை. அந்தப் பேரிழப்பைத் தாங்க முடியாத தாய் அவரைப் பின்பற்றினாள்.

லோகநாதனைத் தெரியு முன்பு கலகலப்பாக இருந்த அவர்கள் குடும்பம், முடிவில் சோகத்திலே முழுகிப் போய்த் தந்தையும், மகளும் தனித்து விடப் பட்டனர்.

இத்தனைக்கும் காரணமாக இருந்த லோக நாதனுக்கு அவளை சந்திக்க வேண்டுமாம்...!

9

போதும்... அவனை சந்தித்துத் தெரிந்து கொண்டதினால் ஏற்பட்ட பலன்... கோபத்திலே கொதித்தவண்ணம்தான் அவள் வீட்டுக்குத் திரும்பி யிருந்தாள். அக்கா எங்கேயோ வெளியே போயிருந்து விட்டு, அவள் வந்த சமயம்தான் பின்னால் வீட்டுக்குள் நுழைந்தாள்.

முதல் நாள் போலவே அவள் கைகால் கழுவிக் கொண்டு சூடான தேனீர் வேண்டுமென்று தங்கையை உபத்திரவம் செய்தாள்.

அவசரமாக ராதா செய்து படைத்த இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு கூடத்தில் பாய் மீது வெற்றிலை பாக்குத் தட்டுடன் உட்கார்ந்து கொண்ட மாலதி பேச ஆரம்பித்தாள்.

''அப்பா, என் கணவர் என்னைச் சீக்கிரமாக ஊர் திரும்பும்படி சொல்லியிருக்கிறார்.''

''அப்படியென்றால் உன் சிகிச்சை என்னாவது?'' அப்பா அவளது பேச்சின் உள் அர்த்தம் புரியாதவர் போலக் கேட்டார்.

''நம் குடும்ப வைத்தியரைப் போய் இன்று பார்த்து விட்டு வந்தேன். அவர் என்னைப் பரிசோதித்து மருந்து எழுதிக் கொடுத்திருக்கிறார். நான் நினைத்தபடி எனக்கு அபாயமாக எந்தவிதமான நோயும் ஏற்பட்டு விட வில்லையாம்.''

''இதுக்கு டாக்டர் ஏன் சொல்லணும்? நானே பார்த்தவுடன் கண்டு பிடிச்சிட்டேன்'' ஏளனமாகக் கூறியபடி தங்கை வந்து கூடத்திலே அமர்ந்து கொண்டாள்.

தங்கையை எரிச்சலுடன் பார்த்தாள் தமக்கை.

''நான் பம்பாயிலிருந்து காரணமில்லாமல் புறப்பட்டு வரலை.''

''தெரியும். உங்க உடம்புக்கு வந்திருக்கிற வியாதியைப் பத்தி இங்கே உள்ள டாக்டர்கிட்டே காட்டி சிகிச்சை பெறவும் அப்படியே வீட்டை விற்றுப் பணத்தைப் பங்கு போட்டுக்கவும் வந்திருக்கீங்க.''

''அதைவிட ஒரு முக்கியமான காரியத்துக்காக நான் இங்கே வந்திருக்கேன் அப்பா.''

''என்னம்மா சொல்றே?'' அப்பா வியப்புடன் கேட்டார்.

''பம்பாயிலே என் கணவர் வேலை பார்க்கும் நிறுவனத்தில்தான் லோகநாதன் வேலை பார்த்து வந்தார். அவர் இப்போ சென்னைக்கு மாற்றலாகி வந்திருக்கிறார். பம்பாயில் இருந்த சமயம் அவர் கணவருக்கு நெருங்கிய தோழராகி விட்டார்.''

தாடை இறுக மௌனமாக இருந்தாள் ராதா. அவளுக்கு உணர்ச்சிக் கொந்தளிப்பில் மூச்சு முட்டியது.

அப்பா தொண்டையைக் கனைத்தார். பதில் பேசாது மூத்த மகளை ஊன்றிப் பார்த்தார்.

''நடந்த சங்கதி அனைத்தையும் லோகநாதன் என் கணவரிடம் சொல்லி விட்டார்.''

''அவர்மேல் பிசகு இல்லை. அப்போது அவர் பெற்றோர்களுக்கு அடங்கிய இளைஞர். உலக அனுபவம் இல்லாதவர் பயந்த சுபாவம் வேறே?''

''முழுவதையும் சொல்லு. அப்பா சிறிது கோபத்துடன் மகளை அதட்டினார்.

''அவர் அன்று நம் ராதாவுடன் வீட்டை விட்டுக் கிளம்பியபோது, உண்மையில் சென்னைக்கு வந்து அவளைக் கல்யாணம் செய்து கொள்வது என்கிற தீர்மானத்தில் தான் புறப்பட்டார். நடுவழியில் அவருக்கு வீட்டு நினைப்பும், பெற்றோர்களைப் பற்றிய பயமும் ஏற்பட்டு, தான்... ஒரு சிறு நிலையத்தில் இறங்கிக் கொண்டு விட்டாராம். தாம் செய்தது பிசகு என்று அவர் ரொம்பவே வருந்தினாராம்'' ராதாவின் முகம் கபகபவென்று எரிந்தது. அவள் மார்பு வேகமாகத் துடித்தது.

அந்த நிகழ்ச்சியைப் பற்றி அப்பா அவளிடம் அதற்குப் பின் பேசியதேயில்லை.

அக்கா விவரமாக இப்போது அலசுகிறாள். தங்கையின் மனப் போராட்டத்தைப் பற்றித் துளியளவும் சிந்திக்காத வீம்புக்காரி. உதட்டைக் கடித்துக் கொண்டு... விளக்கொளி முகத்தில் படாதவாறு சுவற்றில் சாய்ந்து கொண்டாள் ராதா.

''பெற்றோர்கள் நிர்ப்பந்தத்தில் லோகநாதன் அவர்கள் பார்த்து வைத்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டார். அவரது மனைவி நோயாளி ருமாட்டிக் காய்ச்சலில் சிறு வயதிலேயே இருதயம் பாதிக்கப் பட்டவள். பணக்கார இடம் என்று அதையொல்லாம்

பார்க்காது மகனை வற்புறுத்தி விட்டிருந்தார்கள் பெற்றோர்கள்... அவர் இல்வாழ்க்கையில் அகப்படவே யில்லை பாவம்!''

பற்களைக் கடித்துக் கொண்டாள் ராதா.

''அவன் செஞ்ச காரியத்துக்கு சரியான தண்டனை கிடைச்சிருக்கு. அவ்வளவுதானே?'' அப்பா சீறினார்.

''இல்லை அப்பா... அவர் தன் பெற்றோர்களுக்குப் பயந்து தவறு செய்து விட்டாரே ஒழிய அவருக்கு ராதா மேல்தான் ரொம்பப் பிரியம். இன்னமும் அவர் அவளை மறக்கலை. அவர் மனைவிக்கு இருதயக் கோளாறை சரி செய்ய அறுவை சிகிச்சை செய்தார்களாம். ஒரு வருஷ காலத்திற்குள் விஷக் காய்ச்சல் வந்து இறந்து போய் விட்டாள். இந்தக் கல்யாணத்திலே குழந்தை என்ற பந்தம் ஏதும் கிடையாது. பெற்றோர்கள் மறு கல்யாணத்துக்கு வற்புறுத்தினார்கள். அவர் மறுத்து விட்டார்.''

''அதுசரி... இவ்வளவு விரிவாக இந்த சங்கதியை ஏன் எங்களிடம் சொல்கிறாய்?'' அப்பா அதட்டலாகக் கேட்டார்.

''லோகநாதன் என் கணவருக்கு சிநேகிதராகி விட்டாரென்று சொன்னேனே? சென்னைக்கு மாற்றலாகியதும் அவர் புறப்படும் முன் எங்களைச் சந்தித்தார் அப்போ ரொம்ப மனம் உருகி என் கணவரிடம் கேட்டுக் கொண்ட வேண்டுகோள்.''

''என்ன கேட்டுக்கொண்டார்'' சீறினார் அப்பா.

''அந்தப் பழய சம்பவத்தை மறந்து விட்டு ராதா அவரைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். அவர்

நேரே வந்து கேட்க விரும்புகிறாராம். நான் சிபாரிசு செய்ய வேண்டுமாம். எப்படியாவது ராதாவுக்குக் கல்யாணம் நடந்தால் சரி என்கிற நல்ல எண்ணத்தோடு என் கணவர் அதைப் பற்றிப் பேசி முடிக்க அனுப்பினார்... அப்பா.''

''அதில் நான் தலையிட முடியாது - ராதா இப்போது விபரம் தெரியாத சின்னப் பெண்ணில்லை. தன் விருப்பு வெறுப்புகளைத் தானே ஆராய்ந்து தெரிந்து கொள்ள புரிந்து கொண்ட வயதை எட்டி விட்டவள்.''

''தெரியும். ராதாவுக்கு இருபத்தாறு வயசு ஆச்சுன்னு நல்லாத் தெரியும் கல்யாணத்தைப் பத்தி நினைக்காம இருந்தா விரைவா முப்பது, முப்பத்தஞ்சுன்னு வயசு ஏறிக் கொண்டே போயிடும். அதுக்குப் பிறகு வரன் கிடைப்பது கொஞ்சம் சிரமம்தான்.''

''ஏன் அக்கா... லோகநாதன் விஷயத்தில் உனக்கு இத்தனை அக்கறை?''

''பாவம் மனிதன் தவறு செய்து விட்டு அதுக்குப் பிராயசித்தம் செய்ய முன்வந்திருக்கார் அதனால் என் மனம் அவர் மேல் பரிதாபப் படரது. மேலும் நம்ம குடும்பத்துக்கு ஏற்பட்ட களங்கத்தை அவரை மணந்து கொண்டு நீ அழித்து விடலாம் இது உனக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம். லோகநாதன் நல்ல வேலையிலிருக்கிறார். வீடு கார் என்ற வசதி இருக்கு.''

''புரிகிறது அக்கா... எனக்குக் கல்யாணமாகி நான் புக்ககத்துக்குப் போய்விட்டால் இந்த வீட்டை விற்று நீங்கள் பங்கு போட்டுக்கொள்ள முடியும். ஒரு கல்லில் இரண்டு மாங்காய். ஆனால் பாவம் அப்பாதான்

நடு வீதியில் பிறகு நிற்க நேரும். அவரைப் பற்றிக்கூட நீங்கள் ஒரு திட்டம் போட்டிருப்பீர்களே அதையும் தெரிஞ்சுக்கலாமா.''

''முன்னைவிட நீ ரொம்பப் பேசக் கத்துக் கொண்டிருக்கே. பரவாயில்லை. நான் ஒரு நல்ல காரியத்தை உத்தேசித்து வந்தேன். அதை முடிச்சிட்டுப்போனால் போதும்.'' என்றாள் கோபம் நிறைந்த குரலில் மாலதி.

''லோகநாதன் மேல் அப்போ இருந்த ஆத்திரமும், ஆவேசமும் இப்போ எனக்கு அடங்கிப் போய்விட்டது. நம் தலை விதி... இப்படி ஒரு சம்பவம் நடந்ததுன்னு நான் அதை மறந்தே போயிருந்தேன். இப்போ நீ நினைப்பூட்டினே. அதைப் பற்றி வருத்தப்படலை. லோகநாதன் தான் செய்தது தப்புன்னு வருந்தி ராதாகிட்ட மன்னிப்புக் கேட்டு அதை நிவர்த்தி செய்கிற வழியில் அவளை மணந்து கொள்ள முன் வந்திருப்பதைப் பற்றி சந்தோஷம். பெற்றவனுக்கு இதைவிடத் திருப்தி தரக் கூடிய சங்கதி வேறு எதுவுமில்லே. ஆனால் அதைப்பத்தி தீர்மானிக்க வேண்டியவ ராதா!'' அப்பா பெரு மூச்செறிந்தார்.

''வீட்டை விற்பதற்குத் தீர்மானிக்க வேண்டியவர் நீங்க இல்லையா அப்பா?'' மாலதி ஆவலுடன் கேட்டாள்.

''அதைப் பற்றிய முடிவை உன்கிட்டே சொல்லறேன். வீடு இப்போதைக்கு என்ன விலை போகும்னு மதிப்பிட்டு... அதை மூன்று பங்காகப் போட்டு, ஒரு பங்குக்கு உண்டான விலையை ரொக்கமாக உன்னிடம் கொடுத்துட்டு நானும், ராதாவும் இதே வீட்டில் தொடர்ந்து வசிப்பது என்பது என் முடிவு.''

''ராதா திருமணம் செய்து கொண்டு விட்டால்?...''

''என் பங்குக்கு உண்டான பணத்தில் பாதியை உனக்குக் கொடுத்துவிட்டு... என் வீட்டில் வாசல் புறத்து அறையில் நான் கடைசிவரை தங்கியிருப்பது... மீதிப் பகுதியில் ராதா தன் குடும்பத்துடன் வாழ்வது என்று முடிவு செய்துவிட்டேன்.''

''இந்த ஓட்டை வீட்டைக் கட்டிக்கொண்டு போராடணுமா அப்பா...''

''என் சொந்த வீட்டில் கடைசி மூச்சுவரை நான் வசிக்கப் பிரியப்படுகிறேன். அவ்வளவுதான்... ராதாவுக்கு இஷ்டமில்லாது வீட்டைவிட்டுக் கிளம்பினால், அவளுக்கு உண்டான தொகையைக் கொடுத்துவிட்டு அந்தப் பகுதியில் ஒரு குடி வைத்து விடுவேன்.''

''அத்தனை பணத்துக்கு எங்கே போவீங்க?''

''வீட்டின்மேல் கடன் வாங்குகிறேன்னு வச்சுக்கோயேன்.''

''உங்களுக்கு ரொம்பப் பிடிவாதம் அப்பா.''

''அது ஒண்ணுதான் இப்போ என் மானத்தைக் காக்கிற சொத்து.''

''உங்க இஷ்டப்படி செய்யுங்கோ அப்பா. எனக்கு இப்போ வீட்டின் ஒரு பங்குக்கு சேரவேண்டிய பணம் தேவை.''

''அவசரப்படாதே மாலதி. பணம் உடனடியாகக் கொடுக்க முடியாது. உனக்குச் சேரவேண்டியதை கல்யாணத்தின்போது கொடுத்தாச்சு. இனி நான் தருவது ஒரு பெரிய போனஸ் போல. நீ உரிமை பாராட்டி என்னிடம் கேட்க முடியாது. இப்போ நான் கொஞ்சம்

வங்கியில் வச்சிருக்கும் பணம் ராதாவின் திருமணத்திற்குத் தேவைப்படும். அதனால் பணம் என்கிற பேச்சை மறந்துடு'' என்றார் கடுமையாக.

''ராதாவின் திருமணத்தைப் பற்றியாவது ஒப்புக் கொண்டீங்களே... மகிழ்ச்சி... லோகநாதனை எப்போ சந்தித்து இது சம்பந்தம் பேசப் போறீங்க'' ஆத்திரத்தை அடக்கமாட்டாது உரத்த குரலில் கேட்டாள் மகள்.

''அது ராதாவைப் பற்றிய சங்கதி. அவள்தான் அவனை சந்திக்க ஒப்புக் கொள்ளவேண்டும். இருவரும் மனம் விட்டுப் பேசித் தீர்மானிக்க வேண்டும். இதில் என் வற்புறுத்தலுக்கு இடமே இல்லை.''

கோபத்துடன் தங்கை பக்கம் திரும்பினாள் மாலதி.

அப்பா முடிவாகச் சொல்லிவிட்டார். ''உன் அபிப்பிராயத்தை நான் தெரிஞ்சுக்கலாமா?''

''தெரிஞ்சுக்கலாம் அக்கா. நான் அவரை சந்திக்க வேண்டுமானால் இங்கே வீட்டில் வச்சுப் பேசப் போவதில்லை...''

''கடற்கரை சினிமா கொட்டகை என்று ஏதாவது ஒரு தனிப்பட்ட இடத்தில் சந்தித்துப் பேச விரும்பு கிறாயா?... அவருக்கு அதைப் பற்றி மறுப்பு இருக்காது.''

''அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நான் நேரம் இடம் குறிப்பிட்டு சந்திக்கச் சொல்கிறேன் சரிதானே'' எரிச்சலை அடக்கிக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டாள் ராதா.

''அவர் தொலைபேசி எண் உனக்கு எப்படித் தெரியும்'' வியப்புடன் கேட்டாள் மாலதி.

''அவரை மூன்று நாட்களுக்கு முன்னர் எங்கள் நிறுவனத் தலைவர் வீட்டுக் கல்யாணத்தில் சந்தித்தேன். பேசவில்லை.

''அவர் அடுத்த நாள் தொலைபேசியில் என்னுடன் என்னவோ முக்கிய சங்கதி பேசவேண்டும் என்றார். நான் பிடி கொடுக்கவில்லை.

''இன்று ஒரு கடிதம் எனக்கு எழுதியிருந்தார். அதில் தொலைபேசி எண் குறிப்பிட்டிருந்தார். அக்கா, நீங்கள் சொல்லிய இத்தனை சங்கதியும் எனக்குத் தெரிந்த பழைய கதை. போதுமா.''

''நல்ல வேளை. அம்மா ராதா... யாருக்கும் தெரிவிக்காமல் ஏதாவது ஒரு கோவிலில் கல்யாணம் செய்து கொண்டு வந்துவிட்டு, அவருடன் நீ ஆசி பெற வீட்டுக்கு வந்து நின்றாலும் ஆச்சரியப்பட மாட்டேன்.''

''உனக்கு ரொம்பவே துணிச்சல் உண்டு என்பது தெரிந்த சங்கதிதானே'' அக்கா குரோதமாகக் கூறிவிட்டு படுக்கையில் சாய்ந்து கொண்டாள்.

10

மாலைப் பொழுது மஞ்சளாகி விட்ட நேரம். வாயில் அழைப்பு மணி பலமாக ஒலிக்கவே சாரதா கதவைத் திறந்தாள். முதன் முதலாகப் பார்த்த போதிலும் வந்தவனை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது.

ராதாவின் கசப்பான அனுபவத்தைக் கேட்ட பின் - அவனைப் பற்றி மனதிலே கற்பனையில் சித்தரித்துக்

கொண்டிருந்த உருவத்திற்கும், அவனுக்கும் அதிக வித்தியாசமில்லாதிருப்பதைக் கண்டு வியந்தாள்.

''நான்தான் லோகநாதன். என்னை இங்கே வந்து, காத்திருக்கும்படி ராதா சொல்லியிருக்கிறாள்'' மென்று விழுங்கினான் அவன்.

உயரமாக மெல்லிய தோற்றமுடைய பத்தாம் பசலித்தனமானதொரு கிழவியை அவன் எதிர்பார்த்தான்.

வாட்டசாட்டமாக வயதிற்கு ஏற்றதொரு கம்பீரத் துடன் கண்களில் கண்டிப்பு... மிதக்க வாயிற்படியருகே நின்றவளைக் கண்டு நெஞ்சு துணுக்குற்றாள்.

''ராதா சொல்லியிருக்காள். உள்ளே வந்து உட்காருங்கோ'' வழியை விட்டாள் சாரதா.

நெற்றியில் பூத்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு... முன்னறையில் அவள் காட்டிய தொரு இருக்கையில் அமர்ந்தான்.

பரீட்சைக்கு உட்காரும் மாணவன் போல மனதிலே ஒரு பதைபதைப்பு.

''அலுவலகத்திலிருந்து ராதா வீட்டுக்குப் போய்விட்டு பிறகு இங்கே வரதாக சொல்லி யிருக்கிறாள். கொஞ்சம் நேரமாகலாம். தாகத்திற்கு ஏதாவது சாப்பிடக் கொண்டு வரவா?'' மெல்லிய குரலில் சாரதா கேட்டாள்.

''வேண்டாம்'' என்று தலையை அசைத்தான்.

பழக்கமில்லாதவர் வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறோமே என உள்ளூர அவன் கூச்சப் பட்டான். இந்த சாரதா அம்மாவுக்கும், ராதாவுக்கும் எந்த விதத்தில் உறவு அவனுக்குப் புரியவேயில்லை.

ராதாவின் அக்கா மாலதியின் கணவர் அவனுக்கு நெருங்கிய தோழர். அந்த தகுதியில், ராதாவுக்கு எடுத்துச் சொல்லி அவனுக்கு அனுகூலமாகக் காரியத்தை முடித்துக் கொடுக்க முன் வந்திருந்தார். தமது மனைவியைப் பிறந்த வீட்டிற்கு அதற்காகவே அனுப்பியிருந்தார். முதல் நாள் மாலை அவன் மாலதியை வெளியே சந்தித்துப் பேசிய போது, எல்லாம் நல்ல முறையாக முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. ஆனால் போனில் பேசிய ராதாவின் குரலில் ஏனோ உற்சாகமே சிறிதும் தொனிக்க வில்லை. தந்தை தமக்கை இருவர் முன்னிலையில்தான் அவன் தனது விருப்பத்தைச் சொல்லி விஷயத்தைச் சுருக்கமாக முடிக்க விரும்பினான். ஆனால் ராதா பிடிவாதமாக மாலை சாரதா அம்மாவின் ஃபிளாட்டில் சந்தித்துப் பேசிக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டாள். உறவினர்கள் முன்னிலையில் பேசி முடிக்க வேண்டிய அந்தரங்கமான சங்கதியை ஊரார் முன் அலசுவானேன். அவனுக்கு ராதா மீது உள்ளூரக் கொஞ்சம் மனத்தாங்கல்.

சுவற்றில் தொங்கிய கடிகாரத்தை மெல்ல நிமிர்ந்து பார்த்தான்.

அவனும் அலுவலகம் முடிந்ததும் வீட்டுக்குச் சென்று... குளித்து மாற்றுடை அணிந்து கொண்டுதான் வந்திருந்தான்.

ராதா ஏன் நேரம் எடுத்துக் கொள்கிறாள்?

அவனைப்போல் கார் வசதி அவளுக்கில்லையே. பஸ் பிடித்து வீட்டுக்குப் போய் திரும்ப வரவேண்டுமானால் நேரம் அதிகம்தானே ஆகும்?

தனக்குள் எண்ணியபடி சாரதா கொண்டுவந்து மேஜை மேல் வைத்த பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

திடீரென்று அழுத்தமாக அழைப்பு மணி சப்திக்க திடுக்கிட்டு நிமிர்ந்தான். நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

கதவைத் திறந்த சாரதாவின் மெல்லிய காலடி ஓசையும் இனிமையான... ராதாவின் பேச்சுக் குரலும் கேட்கவே இருப்புக் கொள்ளாது தவித்தான்.

சாதாரணமானதொரு நூல் சேலை அலங்காரத்தில் தான் ராதா வந்திருந்தாள்.

ஆனால் பளிச்சென்று அன்று கண்டு மனம் பறிகொடுத்த அதே இளம் பெண் ராதாவாக... இன்னமும் அவனுக்குத் தெரிந்தாள்.

''எல்லோரும் முதல்லே... சாப்பாட்டறைக்குப் போவோம். ஏதாவது கொஞ்சம் சாப்பிட்டுட்டு பிறகு பேசலாமே'' சாரதா சொல்லவே அவன் எழுந்திருந்தான்.

இந்த மாதிரியான சமயங்களில் சாரதா எப்பொழுதும் ஏதாவது சாப்பிட நல்ல ருசியான டிபன் எதையாவது தயாரித்து விடுவாள்.

தன்னிடம் வந்தவர்களுக்கு முதலில் வயிறு குளிர ஏதாவது தந்து பின் காது குளிர யோசனைகள் சொல்ல அவளுக்கு நிரம்பப் பிடிக்கும்.

சாக்லெட் பர்மியும் விஜிடபிள் பஃபும் தட்டுகளில் பரிமாறி, கோப்பையில் சூடான காப்பியை நிறைத்து வைத்துவிட்டு உட்கார்ந்தாள்.

''மெதுவாகச் சாப்பிடுங்கள்'' என்று உபசரித்தாள்.

''இதெல்லாம் எதுக்கு அம்மா... என்னால் நீங்க ரொம்ப சிரமப்பட்டுவிட்டிருக்கீங்க... கடிந்து கொண்டாள் ராதா.

''இல்லை. என் வீட்டுக்கு வருகிறவங்களுக்கு நான் எப்பொழுதும் இனிப்பும் காரமும் கொடுத்து உபசரிப்பது வழக்கம். இதில் சிரமம் ஒண்ணுமே இல்லை. உங்களைப் போல படிச்ச புத்திசாலிகளுக்கு, நான் என்ன ஆலோசனை சொல்ல முடியும் என்று நினைச்சுதான் சிரமமா இருக்கு'' சிரித்தாள்.

கையைக் கழுவிக்கொண்டு காலித்தட்டுகள், கோப்பைகளை எடுத்துக் கொண்டு போய்ச் சமையலறைக் குழாயில் கழுவித் துடைத்து வைத்துவிட்டு, முன்னறைக்கு சாரதாவுடன் வந்து உட்கார்ந்து கொண்டாள் ராதா.

தொண்டையைச் செருமிக்கொண்டான் லோகநாதன்.

சட்டென்று பேசமுடியாது உணர்ச்சிகள் நெஞ்சை அடைத்தன. ''நான் இங்கே எதுக்கு வரப்போறேன் என்பதை ஏற்கெனவே ராதா உங்ககிட்ட சொல்லியிருப்பாள்னு நினைக்கிறேன்.''

''ஆமாம். அன்றிலிருந்து இன்றுவரை ராதா என்கிட்டே எதுவுமே மறைச்சதில்லை... நேத்தே எல்லாத்தையும் சொன்னாள்.''

''நீங்க வயதிலும் அனுபவத்திலும் பெரியவங்க. நான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக நான் ராதாவைக் கல்யாணம் செய்து கொண்டு அவளுக்கு வாழ்வு கொடுக்க விரும்பறேன் நீங்க பெரியவங்க. நல்ல இந்த காரியத்திற்கு ஆதரவா இருக்கணும்'' சொல்லி முடிப்

பதற்குள் இருதயமே வாயில் வந்து விட்டதைப் போன்றதொரு அச்சம் அவனை ஆட்கொண்டது.

''எனக்கு எல்லாம் தெரியும். நீங்கள் அன்று செய்த அந்தப் பெரிய தவறை ராதா மறந்து மன்னிக்க நீங்கள் அவளுக்குக் கொடுக்க இருக்கிற வாழ்க்கையைப் பற்றி மகிழ்ச்சி. ராதாவின் விருப்பம் என்னன்னு கேட்டுட்டா நல்லது'' என்றாள் சாரதா.

''நான் சொல்லிடறேன் சாரதா அம்மா. இவர் அன்று செய்த தவறுக்கு வருந்தி என்மேல் பரிதாபப்பட்டு எனக்குப் பிச்சை போடராப்போல வழங்கவிருக்கும் திருமண வாழ்க்கையை நான் ஏற்க விரும்பலை. எனக்கு வேண்டாம்.'' அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டு, கோபம் பொங்கும் கண்களால் அவனை உறுத்துப் பார்த்தாள்.

திகைத்துப் போனான் லோகநாதன். அவன் இந்தப் பதிலை அவளிடமிருந்து எதிர்பார்க்கவே இல்லை.

ராதா பொருளாதார வகையில் அப்படி ஒன்றும் உயர்ந்து விடவில்லை. திருச்சியிலிருந்ததை விட அவர்களது குடும்பம் கொஞ்சம் சிரமமான நிலையில் இருக்கிறதென்பது அவனுக்குத் தெரியும். அப்போது அவன் அறிந்த பதினெட்டு வயதுப் பருவப் பெண் அல்ல அவள் இப்போது.

ராதாவுக்குத் திருமணம் என்பது இனி ஒரு பிரச்சினை தான். அப்பாவின் மறைவுக்குப்பின், தன்னந் தனியாக தவிக்கப் போகும் அவளுக்கு ஆதரவு காட்ட முன்வந்திருக்கும் அவனை துச்சமாக தூர ஒதுக்கு கிறாளே?

''காரணம் என்னன்னு சொல்ல முடியுமா?'' சாதாரணமாகக் கேட்டான் லோகநாதன்.

''உங்களுக்குத் தெரிஞ்ச காரணந்தான் சின்ன வயதிலே நான் என் மனசை உங்ககிட்ட பறிகொடுத்தது வசீகரமை தான். எனக்கு வாழ்வு தரப்போகிற புருஷோத்தமன் நீங்கதான்னு உங்களை மனசில் தெய்வமா நினைச்சுக் கொண்டிருந்தேன். பேதைத்தனமாக கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு ஒரே வார்த்தையில் என்னை மறுத்து விட்டிருந்தால் கூட நான் அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டிருப்பேன். பெற்றோருக்குத் தெரியாம ஓடிப்பட்டு வா. வெளியூரில் போய்க் கல்யாணம் செய்துப்போம் என்று ஆசை காட்டி மோசம் செய்த துரோகத்தை என்னால் மறக்க முடியாது.

''அன்னிக்கு மட்டும் சாரதா அம்மா' இரயில் நிலையத்திலே வந்து எனக்குத் துணையாகப் பரிவு காட்டியிருக்காவிட்டால், இரயிலடியிலேயே வந்து வம்பு செய்த இரண்டு முரடன்கள் என்னைக் கடத்திக் கொண்டு போயாச்... நினைக்கவும் பயங்கரமாக இருக்கு. இந்நேரம் நான் ஒரு சாக்கடையிலே அழுந்திக் கிடந்திருப்பேன். காதலித்தவளை இப்படிக் கை விட்டோமே என்று இந்தனை நாள் ஒரு துளி கூட நினைச்சுப் பார்க்காதிருந்தவர், இப்போ தனிமை வந்ததும் துணை நாடுகிறார். இவர் இழுத்த இழுப்புக்கெல்லாம் வர நான் ஒரு பொம்மையாளல்ல.''

''நீ என்னைத் தவறாப் புரிஞ்சு கொண்டு இப்படிப் பேசறே. உண்மையில் நான் உன்னைக் காதலிக்கின்றேன் மாதா.''

''போதும். உங்களது விசித்திரமான காதலுக்கு விளக்கம் தேவையில்லை. எனக்கு உங்க மேலே வெறுப்பு கழுத்து மட்டும் கசந்து வழிகிறது. இந்த நிலையில் நீங்க தரப்போகிற போக பாக்கியத்திற்காக ஆசையில்லாத இந்தத் திருமணத்தில் என்னால் ஈடுபட முடியாது. பணத்திற்கும் பதவிக்கும் ஆசைப்பட்டிருந் தால், நான் என்னையே வித்துக் கொண்டு வாழ்ந்திருப் பேன். உங்க தயவு எதுக்கு?''

''ரொம்பக் கோபத்தோடு பேசற கொஞ்சம் சிந்தித்துப் பார். நடந்ததை மறந்து என்னை மணந்து கொண்டால் உன் வருங்காலம் வளமாக இருக்கும்.''

''தேவையில்லை எனக்கு நீங்க ஒரு வளமான வருங்காலத்தை அமைச்சுக் கொடுக்க வேண்டாம் நான் வேலை செய்கிறேன். சம்பாதிக்கிறேன். என்னைக் காப்பாத்திக் கொள்ள முடியும். இந்த நிலையிலே எனக்கு யாரும் வந்து கை கொடுக்கத் தேவையில்லை.''

''உன் முடிவு'' சற்றுக் கோபத்துடன் கேட்டான்.

''ஒரே முடிவுதான். உங்களை நான் கல்யாணம் செய்து கொள்ள முடியாது. ஏற்கனவே உங்களைக் காதலித்தவள். உங்களுடன் ஓடிப் போகப் புறப்பட்டுச் சென்று பெயரைக் கெடுத்துக் கொண்டவள். அதனால், உங்களை மணந்து கொண்டு விட்டால் அந்த மாசு அழிந்து போகும் என்று சொல்லப் போகிறீர்கள். அதையும் நான் ஏற்க முடியாது.

''முரடனால் கற்பழிக்கப்பட்டவள் அவனையே கல்யாணம் செய்து கொண்டு வாழ்வதுதான் முறை என்று நினைப்பது எத்தனை அபத்தமோ அதேதான் இதுவும்.

''அன்று நான் செய்த பிழை இன்று உங்களை மணந்து கொள்வதால் மறையப் போவதில்லை. மனத்திற்கு நிம்மதி தரப்போவதில்லை.

''அந்தக் கசப்பை மனம் மறக்கவும் போவதில்லை.

''மற்றவர்களின் அபிப்ராயத்திற்காக நான் என் மன சாட்சியைப் பலி கொடுக்க முடியாது.''

''எனக்குத் திருமணம் வேண்டாம் எப்பவுமே வேண்டாம்.''

''மன்னிச்சுக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

திகைத்துப்போன லோகநாதன் சாரதாவைப் பார்த்தான். ''நீங்கள் ஒரு வார்த்தை சொல்லி அவள் மனதை மாற்றக் கூடாதா'' மெலிந்த குரலில் கேட்டான்.

''கல்யாணம் அவளது சொந்த விஷயம் அதில் நான் தலையிட முடியாது.

''பொதுவாக எல்லாவற்றையும் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்போது, அவள் முடிவு சரி என்று எனக்குப் படுகிறது. நீங்களே நன்றாக யோசித்துப் பாருங்கள்.

''உங்களையே நம்பிக் கொண்டிருந்த சின்ன வயதில் அவளுக்கு எத்தனை பெரிய அதிர்ச்சியை நீங்க தந்து விட்டிருக்கீங்க.

''அதனாலே அவள் உங்களை விஷமாக வெறுக்கிறா.

''அத்தனை வெறுப்போட அவள் உங்களை எப்படிக் கல்யாணம் பண்ணிப்பா? மென்மையான மலர் போன்றது பெண்ணின் மனம். அவமானப்பட்டு அது

புண்ணாகிப் போகும்போது கல்லாக மாறி விடுகிறது. அவ்வளவுதான்'' என்றாள் சாரதா.

மெல்ல எழுந்து தலையை ஆட்டிவிட்டு வெளியே நடந்தான் லோகநாதன்.

கொஞ்ச நேரத்தில் ராதா விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்தாள். சாலை விளக்குகள் பளீரென்று எரிந்து கொண்டிருந்தன.

கடற்காற்று நடைபாதையில் விற்பனையாகிக் கொண்டிருந்த மல்லிகைப் பூவின் மணத்தை வாரி முகத்தில் வீசியது.

அவள் தனியே தன் உழைப்பால் வாழ முடியும். துணை தேவையில்லை, என்ற நிறைவு நெஞ்சை இதமாகத் தடவ, மெல்ல பஸ் நிலையத்தை நோக்கி அமைதியாக நடந்தாள்.

★

ஸ்ரீகொடி பதிப்பகம்
ராகுராவின் திருமணம்
லக்ஷ்மி